உலக விவகாரங்கள்

ஆசியா ..... 10 — 30

எல்லையில் இரத்தம்
இனச் சுத்திகரிப்பு
துணிகரமான புதிய உலகம்
பயங்கரவாதத்தின் தொட்டில்
சீன விவசாயிகள் சினமடைந்துள்ளனர்
சமாதானத் திருப்பம்
ராபினின் சங்கநாதம்
அமைதியை நிலைநாட்டுவது யார்?

ஐரோப்பா ..... 31 — 50

ஐரிஸ் படைகள் தப்பிவிடும்போது
சிறெபிறேனிக்காவை இழந்தது யார்?
பிரியவேண்டிய நேரம்
கீவ்: ஆயுதக் கைமாற்றம்
நாடகத்தின் பின்
மேற்குக்கு கையசைப்பு
பற்பல யெல்சின்மார்

அமெரிக்கா ..... 51 — 70

சீ. ஐ. ஏ. இன் புதிய ஒற்றர்கள்
கிளின்ரனைப்பற்றிய உலகக் கணிப்பீடு
உலகளாவிய காவற்தொழில்
உண்மை வெளிவருகிறது

ஆபிரிக்கா ..... 71 — 75

அங்கோலாவில் பக்கமாற்றம்
புதிய நாட்டின் உதயம்
மரணம் சற்று ஒய்வெடுக்கிறது.
தென் ஆபிரிக்காவில் அரசியல்
இம்சை குறைகிறது.

வாணிகம் ..... 76 — 80

ஓர் ஆபத்தான புரட்சி
மூளை வலுவுள்ள ஆட்சேர்ப்பு
புதிய பொருளாதார ஒழுங்கு

மருத்துவம் ..... 81 — 89

எயிட்சின் எதிர்காலம்

விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் 90 — 98

டொக்டர் மிலிப்பருடன்
பங்கசிலிருந்து புற்றுநோயை
குணப்படுத்தலாம்
ருஷ்யாவிலிருந்து இறக்கைகளுடன்

பல்திணைப் பகுதி ... 2 — 9

புதியன அறிமுகம்
செய்திச் சரம்
பார்வைகள்
ஆசிரியர் கருத்து

37

பொதுசன நூலகம்
மாநகராட்சி மன்று
-4-9-1993
யாழ்ப்பாணம்

உலக உலா
144, அருச்சுனா வீதி,
யாழ்ப்பாணம்.

PUBLIC LIBRARY
JAFFNA
NALLUR BRANCH

தொடுகுறிக் கணனி

தற்போது வெளியிடப்பட்டுள்ள திரையில் தொட்டு இயக்கும் புதிய முறை கணனி ஒன்றை வைத்திருக்க நீங்கள் விரும்பினால் உங்களுடைய பழைய தனிப்பட்ட கணனியை (பிசி) எறியத்தேவையில்லை. பிரமின்காம் மசா சூசெற்சிலுள்ள விசேஜ் இன்க் என்னும் ஸ்தாபனம் எந்த விதமான பழைய தனிப்பட்ட கணனியையும் புதிய தொடுகுறிக் கணனியாக மாற்றி அமைக்கக் கூடிய சாதனம் ஒன்றைத் தயாரித்துள்ளது. இதன் பெயர் ரச்—மேற் (Touch–mate) இதன் நிறை 10 றாத்தல். இது அழுத்தத்திற்குக் கட்டுப்பட்ட 15 அங்குல சதுரம்,



இரண்டு அங்குல ஆழம் கொண்ட ஒரு தட்டாகும். இத்துடன் தொடுக்க உங்களுடைய கணனியை இந்தத் தட்டின் மேல் வைத்து கணனியிலுள்ள தொடுக்கும் துவாரங்களில் இதைச் செருகுதல் வேண்டும். பின்பு ஐந்து நிமிடங்கள் ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சி நிரலை (Programme) இயக்குதல் வேண்டும். வேறு தொடுகுறிக் கணனிகள் போல் இதில் இன்னும் வேறு '' திரையோ '' அனுமானிக்கும் சாதனமோ (Sensor) பொருத்த வேண்டிய அவசியம் இல்லை. மேற் குறிப்பிட்ட தட்டில் அனுமானிக்கும் கருவிகள் (Sensors) உள்ளன. அதிகாரத்திரையைத் (Monitor Screen)தொட்டவுடன் அழுத்தத்தைக் கணக்கெடுத்து தொடுமிடத்தைக் கண்டுவிடும் ஆற்றல் இவைக்குண்டு. தற்சமயம் கணனியில் பயன்படுத்தும் மௌஸ் (Mouse) எனப்படும் சாதனத்தை தொழிற்படுத்தப் பயன்படும் வின்டோஸ் (Windows) மற்றும் டொஸ் (Dos) எனப்படும் கணனியை இயக்கும் மொழிகளும் இதில் இணைக்கப்பட்டுள்ளது. சுட்டிக்காட்டக்கூடிய எந்தவிதமான எழுதுகருவியோ அல்லது எழுத்தாணியோ அல்லது மனித விரலோ இங்கு சுட்டிக் காட்டும் கருவியாக (Pointing devi –ce) பயன்படுத்தலாம். இதில் பாவிப்பதற்கு தடையாக உள்ளது என்னவெனில் 12 அங்குலத்திற்கும் 19 அங்குலத்திற்கும் இடைப்பட்ட தளக்கட்டங்களில் நேரிணையாத விளிம்புகளை இணைக்கும் கூட்டுத்தளம் கொண்ட திரைகளாகும் (Monitor's).அதன் நிறையும் 90 றாத்தல். செய்திப் பரிமாற்ற இடங்களிலும் காசாளர் நிலையங்களிலும். வேறு தட்டச்சு முறைக் கணனிகள் (Key Board Type) பாவிக்க முடியாத இடங்களிலும் இதைப் பயன்படுத்தலாம். இதன் அமெரிக்க நாட்டு விலை: டாலர் 895.

பாருமைய்யா! கம்பியொன்றும் இல்லை!

விற்பனைக்கெனத் தயாரிக்கப்பட்ட முதலாவது தனிநபர் தொடர்புச் சாதனம் (Personal Communications System)பி.சி.எஸ். தற்சமயம் ஐக்கிய அமெரிக்காவில் வெளிவந்துள்ளது. இது கம்பி இல்லாதது. இதன் பெயர் சுதந்திர இணைப்பு பி சி எஸ் (Freedom Link PCS) இதைப் பயன்படுத்தும் காரியாலய உத்தியோகத்தர்கள். தொழிற்சாலைகளிலும், கட்டடத் தொகுதிகளிலும் ஒரு தொலைபேசி அழைப்பையும் தவறவிடாது தங்கள் கடமையே கண்ணாக உலாவி வரலாம். இச்சாதனத்தை விற்பவர்கள்,தென்மேற்கு பெல் கொண்டு செல்லக்கூடிய சாதனங்கள் மற்றும் பனசோனிக் தொடர்புச் சாதன வர்த்தக ஸ்தாபனமுமாகும். (South Western Bell mobile systems and Panasonic Communications and Systems Co)



இதைப் பாவிப்பவர் தனது வேலை செய்யும் இடத்தில் உள்ள தொலைபேசிக்கு இந்தச் சாதனத்தை ஒரு நீட்டும் (Extension) கருவியாக பயன்படுத்துவார். அதாவது இவர் வேலை செய்யும் மேசையிலுள்ள சாதனம் இவருக்கு வரும் தொலைபேசி அழைப்பை இவர் கட்டடத்தின் அல்லது வாகனத்தில் எப்பகுதியில் இருந்தாலும் இவருக்கு எடுத்துத் தொடர்பு படுத்திவிடும். இவர் கொண்டு திரியும் பொக்கற் தொலைபேசி அவருடைய மேசையுடன் தொடர்புடையதாகும். இதன் மூலம் வழக்கமான தொலைபேசியுடன் இணைப்புவந்துவிடுகிறது.

மேற்கூறிய தென்மேற்கு பெல் சாதனங்களின் தலைவர் ஜோன் ஸ்ரூப்கா சொல்கிறார். ''இந்தச் சாதனம் எங்கள் வாழ்வை இன்னும் பயனுள்ளதாகச் செய்கின்றது. தனிநபர் தொடர்புச் சாதனம் வந்தே விட்டது'' ஒரு தொலைபேசி அழைப்பு வரும்போது மேசை மணியும் ஒரே சமயத்தில் அடிக்கும். அழைக்கப்படுபவர் மேசையில் அச் சமயம் இருந்தால், தான் விரும்பிய தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளலாம். பொஸ்ரன் நகர் நியூ இங்கிலாந்து டீக்கனெஸ் வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியர்களும் தாதிமார்களும் இதைப் பரீட்சித்துப் பார்த்து பொக்கற் தொலைபேசி மூலம் ஒருவருக்கொருவர் தொடர்பு கொண்டுள்ளனர்.

ஒரு நீட்டலை (Extension) இணைப்பதற்கு இதன் விலை அமெரிக்க டாலர் 1,800ல் இருந்து 2,500 வரை ஆகும். இன்னும் மாதமொன்றுக்கு நடைமுறைச் செலவு டாலர் 10ல் இருந்து 40 வரை அறவிடப்படும். வேலை செய்யும் இடத்திற்கு அப்பால் இருந்து வரும் தொலைபேசிக்கு பிரத்தியேகமான செலவுகள் உண்டு.

ஓட்டக் காலணிகள்

ஓட்டம் நல்லதோர் அப்பியாசம். ஆனால் முழங்காலிலும் கால்மூட்டுகளிலும் இது பெரும் அழுத்தத்தைக் கொடுக்கின்றது. வலியைக் குறைப்பதற்காக யூ. எஸ். வர்த்தக ஸ்தாபனமொன்று எக்ஸ்சர் லோப்பர் (Exerloper) என்ற பெயருடைய வினோதமான காலணியை விற்கின்றது. இதை அணிவோர்

உண்மையில் ஒடுவதில்லை. சந்திர மண்டலத்தில் நடப்பதுபோலத் தாவிச் செல்கின்றனர். இதைக் கண்டுபிடித்தவர் ருஷ்ய நரம்பியல் உடற்கூற்று நிபுணராகிய கிரகோரி லெக்ற்மன் என்பவராவார். இப் போது அமெரிக்காவில் இதை சஸ்கா, மினிசோட்டாவைச் சேர்ந்த நோடிக் ட்ராக் (Nordic Track)



என்ற நிறுவனம். விற்பனை செய் கின்றது. முட்டைவடிவமான ஒரு பிளாஸ்ரிக் சுருளுடன் இணைக்கப் பட்ட சாதாரண ஓட்டக் காலணி இதுவாகும். இதை விற்பனை செய்யும் ஸ்தாபனத்தின் பேச்சா ளன் இதை அணிபவர்கள் ஓடா மல் நிலையாக நிற்கும் போது அவர்கள் நிலத்திலிருந்து 10 சென் ரிமீற்றர் உயரமாக நிற்கிறார்கள். ஆனால் ஓடத் தொடங்கியதும் இது குலைந்துவிடும் என்கிறார். மேலும் அவர் தெரிவிக்கிறார் ''அணிபவர்கள் நிலை குலைய மாட்டார்கள். குறுகிய நேரத்தில் கூடுதல் தூரத்தைக் கடப்பதுதான் இதன் குறிக்கோள்'' சிபாரிசு செய் யப்பட்ட விலை:- அமெரிக்க டாலர்200.

பெரும் பிரிவு

இந்த நூற்றாண்டு முடிந்து அடுத்த நூற்றாண்டு பிறக்கும் போது சில ஸ்தாபனங்கள் தயா ரிக்கும் கணனிகள் பாவனையாளர் களுக்குத் தொல்லை கொடுக்கும் அதாவது 1999 முடிந்து 2000 பிறக்கும் போது 99 என்று வருடத் தின் சுருக்கத்தைப் பாவிக்க கண னிகள் 00 என்று 2000த்திற்குப் பதிலாகப் பாவிக்கமுடியாது. வட் டிக் கணக்கு போன்றவற்றை முன் கூட்டியே கணக்குப் பார்க்கும் போது இந்தக் குறைபாடு தெரிய வந்துள்ளது. உதாரணத்திற்கு 04-10-93 என்ற திகதியில் ஆறு எண்கள் இருக்கின்றன. 04-10-2000 என்ற திகதியில் எட்டு எண்கள் இருக்கின்றன. பெரும் பான்மையான கணனிகள் ஆறு எண்களுடன் நிற்பவையாகும். 2000ம் ஆண்டு வரும்போது இவை எட்டு எண்களுக்கு உகந்தவையல்ல. 1999ல் இருந்து 2000 வரும்போது ஒன்று கூடுகின்றது என்பதைக் காட்டுவதற்குப் பதிலாக இவை 99குறைந்ததாகக் கட்டும். புது நூற்றாண்டை எதிர்கொள்ள சான்பிரான்சிஸ்கோ கணனி நிறுவ னம் டிரான்சென்சுரி டேற்றா சிஸ் ரம்ஸ் எட்டு எண்களைச் சமாளிக் கும். ''றூட்டீன்'' எனப்படும் சாதனத்தைத் தயார் பண்ணியுள் ளது. இது தற்போதைய பாவனை யிலுள்ளவற்றுடன் இணைக்கலாம் அல்லது இப்போதைய கண்டுபிடிப் பான தனிநபர் தொடர்புச் சாத னங்களுடனும் இணைக்கலாம். இதன் விலை டாலர் 18,000.

முற்னேற்றமான தொலைபேசிகள்

தொலைபேசிகளும் கணனிகளும் ஒரே மாதிரியாகச் செயலாற்றவும் பார்வைக்கும் ஒரே மாதிரியாக இருக்கவும் தொடங்கிவிட்டன. தொலைபேசி ஸ்தாபனங்கள் வீடு களுக்கும் தொழில் நிலையங்களுக் கும் விஞ்ஞான முன்னேற்றமுள்ள எளிதாக இயங்கக்கூடிய தொடர் புச் சாதனங்களை வினியோகிக்க விரும்புகின்றன. இவ்வளவு கால மும் தொடட்டு இயங்கிவந்த தொலைபேசிகளுக்கு வயது வந்த



படியால், திரை ஒன்றுடன் கூடிய தொலைபேசியை இவர்கள் இப் போது விற்கத் தொடங்கி விட்ட னர். நெதர்லாந்து கணனித் தொழி லகம் – பிலிப்ஸ் துணைக்கருவிகள் கூட்டப்பட்ட தொலைபேசி, (Phill -ips Enhanced Telephone) ஒன் றைச் சந்தைப்படுத்தியுள்ளது. விற் பனைக்கு வந்துள்ள பல முன்னேற் றமானவற்றுள் இதுவும் ஒன்றாகும்.

தொலைபேசி எண்களை இயக்கு வதற்குத் தரப்பட்ட அமுக்கிகளு டன் (Keys) 13 சென்ரி மீற்றர் குறுக்களவுத் திரையும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இந்தத் திரையில் தேவையானவற்றைக் காண்பிக்கலாம். உணவக விளம் பரம், விமானசேவை நேர அட்ட வணை போன்றவை. செய்திகளைப் பதிவு செய்வதற்குதவிய தொலை பேசிக்குள்ளிருந்து இழுப்புக்கு வெளிவரும் பலகையும் இதில் பொருத்தப்பட்டுள்ளது. (Slide-out keyboard) பொருத்தப்பட்ட இந்த இரண்டு சாதனங்களும் விமா னங்களில் இடம்ஒதுக்கும் சேவைக்கு பெரிதும் உதவும் என்று பிலிப்ஸ் நம்புகின்றது. விமானச்சேவை முக வர்கள் தங்கள் கைவசம் உள்ள நேர அட்டவணையையும் வேறு புதினத்தையும் இவ்விரு சாதனம் மூலமாக முகவருக்கு உதவலாம். விமான இருக்கைப்பதிவும், செல வும், பிரயாணியின் பணஅட்டை (Credit card) இலக்கமும் இன்னு மொரு அட்டையில் பதிவாகும். இந்தத் திரை 16 வரிகள் ஆழமும் 40 எழுத்துக்கள் அகலமும் கொண் டதாகும். இதில் ஒடியோ கசற்றில் பதிவு செய்யப்பட்டவைகளையும் காண்பிக்கலாம். இதன் பாவனை அறிவுறுத்தல்களில் சில வேளைக ளில் சிக்கல்வர இடமுண்டு. உள் நாட்டுத் தொலைபேசி அழைப்புக்கு 1ஐ அமத்தவும், சர்வதேச அழைப் புக்கு 2 ஐ அமத்தவும், விமான வருகைச் செய்திக்கு 3 ஐ அமத் தவும்.

ஒடியோவிலிருந்து வீடியோவுக்கு மாற்றம் செய்வதற்கு இந்தத் தொலைபேசியில் ஒரு பொத்தான் (Button) இருக்கின்றது. சிறிய கண னியிலுள்ளது போன்று இது செய் திகளையும் (information) அம்சங் களையும் (Data) நாலுவரி ஞாபக அட்டையையும் (4 megabyte memo -ry card) தன்னகத்தே களஞ்சியப் படுத்தி வைத்திருக்கும் ஆற்றல் உள்ளது. இன்னும் இத்துடன் இணைப்பதற்குதவியாக செருகும் துவாரமும் உண்டு. உதவிச்சாத னங்களும் முழு உருவ கணனிகளும். இதன் விலை டாலர்: 639.

உதவிக்கு அழைத்தல்

தாக்க வருவோரை மிரட்டுவதற்கும் உதவுவோரை அழைப்பதற்கும் கையில் தூக்கிச் செல்லக்கூடிய ஒரு தனிநபர் பாதுகாப்புச் சாதனத்தை அற்லான்ரா, ஜோர்ஜிய தொழிலகம் ஒன்று தயாரித்துள்



ளது. தயாரிப்பாளரின் பெயர் சர்வதேச சந்தைப்படுத்தும் பங்காளர். (International Marketing Partners) தயாரிப்பின் பெயர் (Uni – Guard) என்பதாகும். இது 115 டெசிபல் காதைக் கிழிக்கும் ஒலி எழுப்பித் தன் வேலையைச் செய்யும். எளிதாக வெளியில் எடுக்க முடியாத அல்லது பலனற்றதாக்க முடியாத மின்கலனில் இது இயங்குகிறது. இதற்கு இரண்டு விதமான ஒலிகள் பொருத்தப்பட்டிருக்கின்றன. இதைப் பாவிப்பவர் தனது விருப்பம் போல இதை இயக்கவும் நிறுத்தவும் பொத்தான் பூட்டப்பட்டிருக்கும். பொத்தானை அமத்திய பின் ஆறு மணித்தியாலங்களுக்கு இது ஒலி எழுப்பிக்கொண்டிருக்கும். இதில் இணைக்கப்பட்ட மின்கலன் ஆறுமணித்தியால சக்திவாய்ந்ததென்று தயாரிப்பாளர் தெரிவிக்கின்றார். பொத்தானை அமுக்கி நிறுத்திய பின்பும் 90 நொடிகள் வரை இது ஒலி எழுப்பும். இதனுடைய ஒலி ஒரு கிலோ மீற்றர் சுற்றளவுக்குக் கேட்கும். சத்தத்தை தடை செய்யமுடியாதென்று தெரிவிக்கப்படுகின்றது. கையில் தொங்க விடக்கூடிய பட்டியுடன் இது வருகின்றது. இதன் நிறை நாலு அவுன்ஸ்களாகும். இதன் விலை டாலர் 30.

பூச்சிகொல்லி

திறந்த வெளியில் உணவருந்தும் போது இலையான், குளவி, வண்டு போன்றவற்றால் தொல்லைப்படுகிறீர்களா? லண்டன், இங்கிலாந்து நிறுவனமொன்று சூழலை மாசுபடுத்தாத, தொழில் நுட்பம் குறைந்த இந்தத்தொல்லைகளைக் கட்டுப்படுத்தும் முறையை அறிமுகம் செய்துள்ளது. இந்த நிறுவனத்தின் பெயர் காச்சென்ஷ்யர் (Catchensure) சீனித் தண்ணீரை ஒரு போத்தலில் விட்டுவைத்து இலையான் போன்றவற்றைப் பிடிக்கும் வழமையான பிரிட்டிஷ் முறையில் ஒரு முன்னேற்றந்தான் இந்தக் கண்டுபிடிப்பு. இதன் பெயர் வாஸ்பி. (Waspy) ஆறு அங்குல விட்டம் கொண்ட ஜாடி. அதை மூட ஆறு அங்குல முக்கோண வடிவுள்ள துவாரமுள்ள மூடி. ஜாடிக்குள் தேன், சீனி வேறு இனிப்புப் பதார்த்தம் போட்டு வைத்தால் இலையான், குளவி போன்றவை இதில் புகுந்துவிடும். பின்பு தப்பமுடியாது. காலப் போக்கில் இறந்துவிடும். விலை டாலர் 12.

குழந்தை பிரயாணம் செய்கிறது.

போகும் இடத்திற்குப் பிள்ளையை எடுத்துச் செல்வது பெரிய பிரச்சனையென்று எல்லாப் பெற்றாருக்கும் தெரியும். ஸ்ரெளற்ரனிலுள்ள றீபொக் சர்வதேசஸ்தாபனம், தனது சிறுபிள்ளைகளுக்கு உபகரணம் தயாரிக்கும் பிரிவு மூலம் உதவிக்கு வந்துள்ளது. லீபொக் என்ற இந்தப் பிரிவு பிள்ளைகளை வைத்துத் தள்ளும் வண்டியொன்றைத் தயார் பண்ணியுள்ளது. இந்த வண்டிலைக் கடைகண்ணிக்குள்ளும் வேறு வெளிப்பிரதேசங்களிலும் தள்ளிச் செல்லலாமெனத் தயாரிப்பாளர் தெரிவிக்கின்றனர். சாதாரண தள்ளுவண்டில்கள் போலல்லாமல் இதற்கு உருக்கிலான பெரும் அழுத்தத்தைத் தாங்கக்கூடிய சுருள் அதிர்ச்சி தாங்கிகள் (coil shock absorbers) பொருத்தப்பட்டிருக்கின்றன. இவை எந்தவிதமான மேடுபள்ளத்திலும் உருட்டிச் செல்ல உதவுகின்றன. மேலும் 12 அங்குல விட்டமுள்ள நூறைறப்பர் ரயர்கள் இதன் சில்லில் பொருத்தப்பட்டுள்ளன. இது உருட்ட எளிதாக இருக்குமென்று தயாரிப்பாளர் தெரிவிக்கின்றார். வேறு வண்டிகளைப் போல் இதுவும் சுருக்கி எடுத்துச் செல்லலாம். அண்மையில் குழந்தை பெற்றவர்களுக்கு உதவும் வண்ணம் உடலை வலுவாக வைத்திருப்பதற்கு வேண்டிய குறிப்புகளும் இதனுடன் தரப்படுகின்றன. மிகவும் வேகமாக உருட்டிச் செல்வோருக்காக இதில் நாடித் துடிப்பைக் கணக்கிடும் கருவியும். விசை காட்டியும் (pulse rate moni -tor and speedometer) இணைக்கப் பட்டுள்ளன. விலை டாலர் – 250.

மூக்கு விடுவதற்கு முகமூடி

நெருப்புச் சம்பந்தமான பல இறப்புக்கள் நச்சு வாயுக்களைச் சுவாசிப்பதால் ஏற்படுகின்றன. மேரிலன்ட், எல்க்ரன் நிறுவனமொன்று எடுத்துச் செல்லக்கூடிய பாதுகாப்பான தலைமூடியொன்றைத் தயாரித்துள்ளது. இதைப் பாவிப்பவர் 10 நிமிடம் சுத்தமான காற்றைச் சுவாசிக்கலாம். பெரும்பான்மையான நெருப்பிலிருந்து தப்புவதற்கு இந்த நேரம் போதும். ஆபத்தான வேளைகளில் பாவனையாளர்கள் தலையை மூடி பிளஸ் 10 பில்ரர் எனப்படும் இந்த மூச்சுவிட உதவும். அங்கியைப் போடவேண்டும். கூட்டாஹம், இரசாயனப் பொருட்களாலும் இது பாதிப்புறாது. நச்சுக் காற்றை வடிகட்டிச் சுவாசிக்க நல்ல காற்றைக் கொடுக்கும் இணைப்பு இதில் பொருத்தப்பட்டுள்ளது. இதுபாரமற்ற தென்றும் உருவில் சிறியதென்றும் தயாரிப்பாளர் தெரிவிக்கின்றார். இதன் விலை டாலர்: 195.

பிரித்தானியா

சுற்றுலாப் பயணிகளுக்குப் பொறிகள்

நீங்கள் பிரித்தானியாவில் சுற்றுலாச் செல்ல எண்ணினால் ஸுவெட்டர், குடை என்பவற்றுடன் ஒரு தீ அணைப்பியையும் கொண்டு செல்லுங்கள். சென்ற நவம்பரில், வின்சர் மாளிகையின் ஒரு பகுதியைத் தீ பரவி அழித்ததால் தூண்டப்பட்டு 'டைம்ஸ் ஒப் லண்டன்' ஏடு ஆய்வு ஒன்றை மேற்கொண்டு, "இங்கிலாந்தில் உள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் தீ ஆபத்திற்கு உட்பட்டவையாக உள்ளன" என்று வருத்தத்துடன் கூறியுள்ளது. ஏன் அத்தகைய இளக்கத்தன்மை வந்தது? மத்திய காலம் முதல் நிலவும் சட்டமொன்றின் ஓட்டைத் தன்மையால், அரசரும் அரசாங்கமும் 8000 க்கு மேற்பட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் தீப் பாதுகாப்புச் சட்ட விதிகளுக்கு உட்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்வதிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். மிகவாகச் சட்டத்தை மீறி நடக்கும் ஒரு இடந்தான் லண்டன் கோட்டை. அங்கே தீ எச்சரிக்கைச் சாதனமோ, தெளிப்பான்களோ, புகை கண்டுபிடிக்கும் பொறியோ கிடையாது. கோட்டை உத்தியோகத்தர்கள் தங்கள் அலுவலர்கள் அவசர நடவடிக்கைகளுக்குப் பயிற்றப்பட்டு உள்ளனர் என்று கூறுகின்றனர். அதனால் தானோ 'பீப்ஈடர்ஸ்' எனப்படும் அங்குள்ள பாரம்பரிய காவலர்கள் கோடரி தாங்கிநிற்கின்றனரோ...

வெளிநாட்டுக் கொள்கை

ஏவுகணை விடயம் ஒன்று

தென் ஆபிரிக்காவின் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பிக்போதா, இந்த வாரம் வாஷிங்டனுக்குச் செல்லும் பொழுது, பிரிடோரியாவின் ஏவுகணைத்திட்டம் நிகழ்ச்சி நிரலில் முக்கிய இடம் பெறும். ஐக்கிய அமெரிக்க அதிகாரிகள், தென் ஆபிரிக்காவை அதனது ஆர் எஸ் ஏ—1 என்ற நான்கு கட்டத்திட எரிபொருள் றொக்கட் அமைப்பைக் கைவிட்டு, ஏவுகணை உற்பத்தித் தொழில் நுட்பக் கட்டுப்பாட்டிற்கான பலதலைப் பட்ச ஒப்பந்தத்தில் சேரும்படி வேண்டுகின்றனர். தங்கள் ஏவுகணைத் தொழில் நுட்பத்தை ஒரு செய்மதி செலுத்தும் முறையொன்றுக்காகப் பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளதாகத் தென்னாபிரிக்கர்கள் கூறுகின்றனர். ஆனால் ஆர். எஸ். ஏ-4 வெற்றிகரமாக அமையாவிட்டால் பிரிடோரியா அதன் இராணுவ பாவனைகள் பற்றி ஆராய்ந்து ஏவுகணைகள் செய்து, சிலவேளை லிபியா, ஈராக் போன்ற நாடுகளுக்கும் கூட விற்கக்கூடும் என அமெரிக்க அதிகாரிகள் கவலைப்படுகின்றனர். ஆனால் பிரிடோரியாவோ எம் டீ ஆர் அமைப்பில் சேர்வதை மறுப்பதுடன் ஐக்கிய அமெரிக்கா தனது ஏவுகணைத் திட்டத்தைத் தடுப்பது செய்மதி செலுத்தல் விடயத்தில் அதற்கு மேலும் போட்டியாளர்கள் உருவாகுவதைத் தடுப்பதற்கே என்றுகூறுகின்றது.

பொஸ்னியா

"நாம் பெறுவதெல்லாம் கதை தான்"

உலகத்தின் மிகப்பெரிய முஸ்லிம் மதகுருக்களால் ஆளப்படும் நாடாகிய ஈரானுக்கு பொஸ்னிய பிரச்சனையில் ஓர் ஈடுபாடு உண்டு. மேற்கு நாடுகள் பொஸ்னியாவில் தலையிடா விட்டால் பொஸ்னிய முஸ்லிம் மக்களுக்கு உதவிசெய்யக் கெரிலாப்போராளிகளை அனுப்பப் போவதாக ஈரான் பயமுறுத்துகிறது. ஈரான் யாருக்கு உதவி செய்திருக்கிறது என்றால் அது சேபியருக்குத்தான் என்று தெகரானில் உள்ள மேற்குலக இராஜதந்திரிகள் கூறுகிறார்கள். ஈரான் தெடர்ந்து ரூமேனியா ஊடாக சேபியாவிற்கு அதிக அளவு பெற்றோலிய நெய்யை விற்பனை செய்கின்றது. தெகரானின் புழுகுக்குப் பதிலாக பொஸ்னியாவிற்கு அதன் உதவியின் ஒரேசான்றாக வழியில் மறிக்கப்பட்ட இரு கப்பல்கள் நிறைந்த ஆயுதங்களாகும் "ஈரானில் இருந்து நாம் பெறுவதெல்லாம் கதை தான்" என்றுபொஸ்னியாவின் பத்திரிகைப் பேச்சாளர் செனடா கிறெஸ்சோ கூறுகின்றார். அதிகமான முஸ்லிம் நாடுகள் இப் பிரச்சனையை மேற்குலக நாடுகளின் கைகளில் விடுவதில் திருப்திப்படுகிறார்கள். சரஜீவோக்கு 1992 இல் அனுப்பப்பட்ட 1747 ஆகாய விமானச் சுமைகளில் முஸ்லிம் நாடுகளில் இருந்து 30 மட்டுமே அனுப்பப்பட்டன.

எகிப்து

பிரதிமை அமைத்தல் முடிந்துவிட்டது

அண்மைக் காலத்தில் எகிப்துக்கு வருகை தருவோர் மீது தொடுக்கப்பட்ட தாக்குதல்களால், அங்கு வரும் சுற்றுலாப் பயணிகள் தொகை சரி அரைவாசியாகக் குறைந்து உள்ளதால், அரசாங்கம் வெளிநாடுகளில் உடைப்பு அடைந்துள்ள தன் பிரதிமையைத் திருத்த ஒரு விளம்பர முகவர் நிலையத்தை நாடியுள்ளது. இலண்டனைத் தளமாகக் கொண்ட 'சச்சி அன்ட்சச்சி' நிறுவனம், அந்தப் புராதன நாட்டின் "திட்டங்களும் சாத்தியங்களும்" என்ற அனைத்துலக விளம்பர வேலைத் திட்டம் ஒன்றை ஆரம்பித்து இருப்பதாக, அந்த நிறுவனத்தின் பேச்சாளர் ஒருவர் கூறினார். சுற்றுலாப் பயணிகள் வாகனங்களின் மீது பல ஒழிந்து நின்று நடத்தும் தாக்குதல்கள்



பற்றி அறியக்கிடைத்த பின்பு ஏற்கனவே வரத்திட்டமிட்டிருந்தோர் பெரும் விகிதத்தில் அந்தப் பதிவுகளை இரத்துச் செய்து உள்ளதாகச் சுற்றுலா நடாத்துனர்கள் கூறுகின்றனர். இஸ்லாமிய அடிப்படைவாதிகள் குழுவொன்று அனேகமான தாக்குதல்களுக்குப் பொறுப்பேற்று உள்ளது.

சிறிய யுத்தங்கள்

மறக்கப்பட்ட யுத்தங்கள்

பொஸ்னியாவில் நடை பெறும் சண்டை மக்கள் தொடர்புச் சாதனங்களில் முதலிடம் பிடித்துக் கொண்டது. பங்குனி மாதம் 1992 இல் இருந்து சண்டையோடு தொடர்புடைய வன்முறையில் ஏறக்குறைய 138,000 மக்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். உலகத்தின் மற்றைய யுத்தங்கள், பொஸ்னியா யுத்தம் போல் நாசம் விளைவிப்பனவாக இருந்தாலும் பத்திரிகைகளின் முற் பக்கங்களில் அதிகம் வருவதில்லை.

அரசாங்க மற்றும் தனியார் மதிப்பீடுகளின்படி கொல்லப்பட்டோர் பின்வருமாறு:

ஆப்கானிஸ்தான்:

முஸ்லிம் குழுக்கள் புதிய அரசாங்கத்தைக் கைப்பற்ற காபூலில் சென்ற வாரம் நடத்திய போரில் 1000 பேர்வரை கொல்லப்பட்டனர்.

அங்கோலா:

சென்ற ஐப்பசி மாதம் மீண்டும் அரசாங்கத்திற்கும் யூனிற்றா புரட்சியாளருக்கும் தொடங்கிய சண்டையில் 20,000 பேர் கொல்லப்பட்டு இரண்டு மில்லியன் மக்கள் இடம் பெயர்ந்துள்ளார்கள்.

லைபீரியா:

1990 முற்பகுதியில் இருந்து உள் நாட்டுப் போரில் 150,000 பேர் கொல்லப்பட்டும், 500,000 பேர் இடம் பெயர்ந்தும் உள்ளனர்.

ருவாண்டா:

ஐப்பசி 1990 க்குப் பின் கெரில்லா யுத்தத்தில் பல்லாயிரம் உயிர்கள் பறிக்கப்பட்டு 650,000 பேர் அகதிகளாக்கப்பட்டுள்ளார்கள்.

கொலம்பியா:

அரசாங்கப் படைகளுக்கும், கொமினிச கெரில்லாக்களுக்கும் இடையே ஏற்படும் மோதல்களில் இவ் வருடம் 1400 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

பொஸ்னியா

நட்சத்திர ஜெனரல்

முற்றுகையிடப்பட்ட பொஸ்னிய மக்களைப் பாதுகாக்க பிலிப்பே மொறியோன் ஆற்றிய வீரமுள்ள செயல்கள் அவரை ஓர் கதாநாயகனாக்கியது. ஆனால் முடிவில் அவரின் வீரமே அவரை வீழ்த்தியது. மிக அண்மையில் தனது பதவியில் இருந்து நீக்கப்படுவார் என்று ஐ.நா. அமைதிகாக்கும் படையின் 58 வயதுடைய ஜெனரலுக்குச் சென்ற வாரம் அறிவிக்கப்பட்டது. இவரின் உயிருக்கு ஆபத்து இருப்பதாகவும் கூடுதலாக அதாவது 13 மாதங்கள் இழு நிலையில் கடமை புரிந்ததாகவும் அதன் காரணமாகவே அவர் வேறு இடத்துக்கு மாற்றப்படுவதாகவும் பிரஞ்சு இராணுவ உத்தியோகத்தர்கள் பகிரங்கமாக கூறினார்கள். ஆனால் இவரின் சர்வதேச புகழ் அதிகரிப்பதே தலைமையை மாற்றுவதற்குரிய உண்மைக் காரணம் என்று அவதானிகள் கூறுகின்றார்கள். ஏறக்குறைய ஒவ்வொரு நாளும் பிரஞ்சு நாட்டுத் தொலைக்காட்சியில் இவர் தோன்றியதை அந்நாட்டு உயர் பதவி வகிக்கும் அரச அதிகாரிகள் விரும்பவில்லை. இராணுவ உத்தியோகத்தர்கள் அடக்கமாக இருப்பதை அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். தங்கள் அரசியல் எதிர்பார்ப்புகளை விட மக்களை ஈர்க்கும் கவர்ச்சியுடைய ஜனரலின் அரசியல் எதிர்பார்ப்புக்கள் அதிகரிப்பதை அவர்கள் உணர்ந்திருப்பார்கள். இவரின் வெளிப்படையான பேச்சு பொஸ்னியாவின் சேபியர்களை மேலும் தாக்குதலில் ஈடுபடத் தூண்டியது என பிரஞ்சு ஜனாதிபதி பிரசுன்வா மிற்றோனிடம் இராணுவத் தலைவர்கள் கூறி இவரைத் தம்பக்கம் சேர்த்துக்கொண்டனர்.

ஹைற்றி

நாட்டின் பிரமுகர்களை நோக்கிச் செல்லுதல்

ஹைற்றியின் இராணுவ ஆட்சியாளர்கள் ஐக்கிய நாடுகள் சபையால் ஏற்படுத்தப்பட்ட உடன் படிக்கையை ஏற்காமல் தள்ளும் பொழுது வாஷிங்ரன் பேச்சாளர் ஒருவர் கூறியவாறு நாடுகடத்தப்பட்ட ஜனாதிபதி ஜீன் பேற்றான்ட் அறிஸ்ற்றிடி, இராணுவத்தின் பணக்கார உதவியாளரை நோக்கிக் கை நீட்டுகிறார். நாட்டின் குறுகிய பிரமுகர் கூட்டத்தில் செல்வாக்குடைய மேல் குடும்பத்தின் பிரதிநிதிகளை வெளியேற்றப்பட்ட தலைவர் அமெரிக்காவினதும் வேறு நாட்டு இராஜதந்திரிகளாலும் பின்னே இருந்து தள்ளப்பட்டு இவ் வாரம் வாஷிங்ரனில் சந்திக்கிறார்.

ஓர் உடன்படிக்கைக்குப் பின் வாக்குறுதி செய்யப்பட்ட பல மில்லியன் டொலர் சர்வதேச உதவியைப் பெறும் நோக்குடன் பயமுறுத்தப்பட்ட பல புதிய பொருளாதாரத் தடைகளைத் தவிர்க்க ஹைற்றியின் பிரதான குடும்பங்கள் விரும்புகின்றன. விடாப்பிடியாக நிற்கும் இராணுவத்திற்கும் அதன் பண உதவியாளருக்குமிடையே முரண்பாடுகள் விரிவு படுவதை அறிஸ்ற்றிடியும் அவரின் ஆதரவாளரும் எதிர்பார்க்கிறார்கள்.

விற்பனைப் பொருட்கள்

அவர்கள் கொத்துகிறார்களா?

''எல் ஃபிஷ்'' என்று அழைக்கப்படும் ஓர் கணனி நிகழ்ச்சியை மொஸ்கோவில் உள்ள அனிமாரெக் என்ற ''சொஃப்ற் வெயார்'' ஸ்தாபனம் வடிவமைந்துள்ளது. ஓர் செயற்கைத் தாங்கியில், பாறைகள் தாவரங்கள் அமிழ்ந்த சிறிய கோட்டை வீடுகள் மத்தியில் உயிருட்டப்பட்ட வெப்பவலய மீன்கள் கணனித் திரையில் வளர்க்கப்படுகின்றன. மீன் தாங்கியில் மீன்களை ஆக்குவதற்கு ''எல்-மீன்'' நிகழ்ச்சியில் தரப்படும் இரு மீன்களை விளையாடுபவர் தெரிந்தெடுத்தபின் அவற்றைக் கணனி ஆராய்ந்து பெறக்கூடிய எண்ணில்லாக் குஞ்சுகளை உண்மையான பிறப்புரிமைத்துவத்தைப் பயன்படுத்தி ஆக்குகின்றது. கணனி நூற்றுக்கதிகமான அசையும் சட்டங்களை ஆக்கி முப்பரிமாணத்தில் இம்மீன்களை உயிருட்டுவதை காணலாம். மின்னியலில் ஈடுபடும் சோம்பேறிக்குக் கடுமையான விளையாட்டாகும். விலை டாலர் 60.

ஓர் ஒற்றர் குழுவின்
செயற்பாடு மூடி மறைக்கப்பட்டது

தோல்வியில் முடிந்த ஒற்றர் குழுவின் செயற்பாடு பற்றி நூற்றுக்கணக்கான இரகசிய ஆவணங்களை நியூஸ் வீக் பத்திரிகை பெற்றுள்ளது. பெரு நாட்டில் போதைத் தாவர வயல்களைப் பார்வையிட 1992இல் சித்திரை மாதம் 24ம் திகதி ஓர் அமெரிக்க சீ-130 ஏச் விசேட விமானம் 14 அமெரிக்க விமானிகளுடன் பனாமா நாட்டுத் தளம் ஒன்றில் இருந்து புறப்பட்டது. இராணுவ உதவி நிறுத்தப்பட்டதால் அமெரிக்காவுடன் கோபமுற்றிருந்த பெரு நாட்டு ஜனாதிபதி அல்பேட்டோ பியூஜிமொறி சந்தேகத்திற் கிடமாகப் பறக்கும் விமானங்கள் மீது கடுமையாகச் செயற்படும்படி உத்தரவு வழங்கினார். சீ-130 ஏச் விமானத்தைத் தடுக்க இரு பெருவிய நாட்டு எஸ்யூ-22 யுத்த விமானங்கள் மேலே எழும்பின. இவற்றை புறக்கணித்துவிட்டுதளத்திற்குதிரும்புமாறு பனாமா தலைமையகத்திலிருந்து சீ-130 ஏச் விமானத்திற்கு கட்டளை பிறப்பிக்கப்பட்டது. அமெரிக்க விமானத்தை நோக்கி பெருவிய விமானிகள் சுட்டகாரணத்தில் உள்ளே அமுக்கம் குறைந்து சார்ஜன்ற் யோசேப் பியேட் ஜூனியா என்பவர் வெளியே உறிஞ்சப்பட்டு விழுந்து இறந்தார். இறுதியாக அமெரிக்க விமானம் அவசரமாக நிலத்தில் இறங்கியது. ஓர் இரகசிய அமெரிக்க தூதரகச் செய்தியின்படி அமெரிக்க விமானத்தின் மீது சுடுவதாக பெரு நாட்டு விமானிகள் தெரிந்திருந்தனர். கண்ணால் பார்க்கக் கூடிய தூரத்தில் விமானங்கள் இருந்திருக்கலாம். போதைப் பொருள் கடத்தற்காரர் மீது சுடுவதாக தாம் எண்ணியதாகப் பெருநாடு வலியுறுத்தியது. உண்மை யாதாயினும் உண்மையான விடயத்தை இரு நாடுகளும் தங்களுக்குள்ளே வைத்திருக்கத் தீர்மானித்தன.

கியூபா
ஒருபார்வைப் பிரச்சனை

பொருளாதார வீழ்ச்சியுடன், இராஜதந்திர தனிமையுடன் உள்ள கியூபாவில் புதியதொரு அபாயகரமான பிரச்சனை தோன்றியுள்ளது. நாடு முழுவதும் இருட்டுத்தன்மையை உண்டாக்கும் கண் சம்பந்தமான நரம்பில் வீக்கம் தோன்றியுள்ளதாக அதிகாரிகள் கூறுகின்றார்கள். மக்களின் உணவில் ஏற்படும் விற்றமின் பி குறைபாடே இதற்குக் காரணம் என அறியப்படுகிறது. சோவியத் அணிநாடுகளின் உதவி வீழ்ச்சியடைந்த பின்பு இருவருடங்களாக அவ்விற்றமின்களைப் பெறக்கூடிய பால் இறைச்சி மற்றும் வேறு உணவுப் பொருட்கள் கியூபாவிற்கு கிடைக்கவில்லை ஹவானாவில் மட்டும் 12,000 மக்கள் இந்நோய்க்குச் சிகிச்சை பொறுகிறார்கள். இங்கே இந்நோய்க்குச் சிகிச்சையளிக்க விசேட பிரிவுகள் வைத்தியசாலையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கியூபாவிலிருந்து வெளியேறிய மக்கள் தமது உறவினர்களுக்குக் கப்பல் மூலம் விற்றமின்களை அனுப்புவதற்கு மனிதாபிமான ரீதியாக அமெரிக்கா வர்த்தகத் தடைக்கு விலக்களித்துள்ளது.

அமெரிக்க யாங்சி வீட்டுக்குத்
தொலைபேசித் தொடர்பு கொள்ளவும்

பாதுகாப்பு இலாகா முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. ருஷ்யாவிலுள்ள ஐக்கிய அமெரிக்காவின் யுத்தக் கைதிகளை விளம்பரத்தின் மூலம் கண்டுபிடிக்க வாஷிங்டனில் உள்ள அமெரிக்க பாதுகாப்புப் படைத்தளபதிகளின் தலைமைப் பீடமாகிய பென்ரகனுடைய விளம்பரம் ஒன்று ருஷ்யப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இவ் விளம்பரத்தில் ஐக்கிய அமெரிக்க இராணுவத்தினர் யாராவது தமது விருப்பத்திற்கு மாறாகச் சோவியத் இராச்சியத்தின் கட்டுப்பாட்டில் அகப்பட்டிருந்தால் மொஸ்கோவில் உள்ள ஐக்கிய அமெரிக்க உத்தியோகத்தருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. அவர்கள் ஐக்கிய அமெரிக்க பிரஜாவுரிமையை வேண்டாமென விட்டு நீங்கியிருந்தாலோ அல்லது சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்தாலோ அச்சமின்றி அவர்களுடன் தொடர்பு கொள்ளலாமென அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது. அவர்களுடைய குடும்பத்தவர் அவர்கள் இல்லாமையின் தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

மாதக்கணக்கில் முன்னைய சோவியத் யூனியனில் இருக்கக்கூடிய அமெரிக்க யுத்தக் கைதிகளைப் பற்றிய தகவல்களைப் பெற பென்ரகன் முயற்சி எடுத்துக் கொண்டுள்ளது. சாகசங்கள் மூலம் கெரிலாப் போரின் போது பிடிக்கப்பட்ட சில அமெரிக்கர்களை சோவியத் குடியரசிற்கு மாற்றப்பட்டதாகத் தெரியவந்துள்ளது. அரசு இலாகாவின் சாசனங்களின்படி 138 ஒற்றர் விமானங்கள் சோவியத் குடியரசின் மீது சுட்டு வீழ்த்தப்பட்டதாகக் கூறப்படுகின்றது. ஆனால் இச் சம்பவங்களை ஏற்றுக் கொள்ள வாஷிங்டன் முன்வரவில்லை. யுத்தக் கைதிகள் எவரேனும் இதுவரையில் விளம்பரத்திற்குப் பதில் போடவில்லை என்று ஒரு பென்ரகன் பேச்சாளர் பெண்மணி தெரிவிக்கிறார். ஆனால் சில ருஷ்யர் பிரயோசனப்படக்கூடிய தகவல்களை அளித்துள்ளனர்.

PUBLIC LIBRARY
JAFFNA

வாக்கியங்கள்

★ ''ஒரு முஸ்லீம் என்னைக் கொன்றால் அது ஒரு நல்ல சாவாக இருக்காது. ஒரு பலமான நாட்டிற்கெதிராகப் போராடி நான் இறந்தால் – கிளின்ரனுடன் அல்லது அமெரிக்காவுடன் போராடி இறந்தால் – நான் ஒரு கதாநாயகனாவேன்.''

முன்னைய யூகோஸ்லாவியாவில் அமெரிக்க தலையீடு பற்றி பொஸ்னியாவிலுள்ள சேர்பிய போராளியான, 'பிரான்கோ மார்கோவிக்'.



★ ''லெஜிஸ்ரைன் போன்று நாங்கள் அங்கீகாரம் பெற வேண்டும்.''

-பிரான்சினதும் ஸ்பெயினினதும் புராதன உறவுகளை முறித்துக்கொண்ட ஐரோப்பாவின் புதிய நாடான அண்டோராவின் தலைவர், 'ஒஸ்கார் ரிபான்'.

★ ''எமது வேலை வழிகாட்டி போன்றது. ஆனால் எமது நிலைமைகள் அறியாது யாராவது நடக்க முற்பட்டால் நாம் கடுமையாக நடக்க நேரிடும்.''

-அநாகரிக உடையில் நடமாடிய 802 ஆண், பெண்களைக் கைது செய்த போது தெகரான் காவல்துறை அதிகாரி ஜெனரல், 'அப்துல்லா இக்பைய்.'



★ ''எனக்கு ஆச்சரியமாக உள்ளது. நான் அதிக பிழை விடவில்லை. அந்த வினாக்கள் குழப்பத்தை உண்டுபண்ணுகின்றன''

-நாட்டின் சாரதிகளிற்கான புதிய பரீட்சையை எழுதிய பின்பு இத்தாலிய நாட்டுப் போக்குவரத்து அமைச்சர், 'ராவே::ல் சொன்ட்'.

★ ''நான் பெரிதும் முகஸ்துதி செய்யப்பட்டுள்ளேன்''

-பிரித்தானியா ஜூரி அலெக்சா காம்லி, 22 நீதிமன்றப் பார்வையாளர் பகுதியிலிருந்து இவரைப் பார்த்து விசிலடித்த ஒருவனை 14 நாட்கள் காவலில் வைக்குமாறு நீதிமன்றம் கூறியது. பின்பு இத்தீர்ப்பு மாறியது.

★ ''நான் நல்ல வேலைகளில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு எதிரானவன் அல்லன் ஆனால் படுகொலைகளையும் பாரிய அனர்த்தங்களையும் புரிபவர்களுக்கே எதிரானவன்''.

—கம்போடிய சக ஜனாதிபதி கன்சென் கமறூர்சுடன் உடன்பாட்டிற்கு வரும்போது—

வணக்கம். உலக உலா எனும் சமூக, அரசியல், விஞ்ஞான தொழில் நுட்ப மாத இதழினூடாக உங்களைச் சந்திப்பதில் நாம் பெருமகிழ்வுறுகின்றோம்.

சிங்களப்பேரினவாத அரசினால் தமிழ்த் தேசியத்தின் மீது கட்டவிழ்த்து விடப் பட்டுள்ள தேசிய இனப்படுகொலையின் ஓர் அம்சமாக எமது கல்வி திட்டமிட்டு அழிக் கப்படுகிறது. கல்வியும், மொழியும், பண்பாடும், நிலமும் எமது இன அமைப்பினைத் தாங்கி நிற்குந் தூண்களாகும். இந்தத் தூண்களைத் தகர்த்து விட எதிரி முனைகி றான். இனத் தனித்துவத்தை அழிப்பதே அவனது நோக்கமாகும். சிங்கள அரசானது இராணுவ நடவடிக்கை, பொருளாதார நெருக்கடி, போக்குவரத்துத்தடை எனும் ஆயு தங்களைப் பயன்படுத்தித் தமிழீழ மக்களின் பெரும் சொத்தான அறிவுச் செல்வத்தைச் சிதைத்து வருகிறது. இதன் விளைவாகத் தமிழீழப் பகுதிகளில் கல்வித்துறைச் சீரழி வும் அறிவியல் வறுமையும் தாண்டவமாடுகின்றன.

இவ்வாறான நெருக்கடிகளுக்கும், இடர்களுக்கும் இடையே மக்களும், மாணவ சமூக மும், கல்வியிலும், அறிவியலிலும் பெரும் வேட்கை கொண்டு அவை தொடர்பான தேடலில் பெரும் ஆர்வமாக உள்ளனர் என்பது உணரக்கூடியதாக உள்ளது.

இதனைக் கருத்திற்கொண்டுதான் தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்கள், தமிழீழ மக்களுக்கும், மாணவ சமூகத்திற்கும் உலகளாவிய ரீதியில் சமூக, அரசியல், விஞ்ஞான, தொழில்நுட்ப அறிவினை வளர்த்துக்கொள்ளுமுகமாக இத்துறை கள் அடங்கிய இவ்விதழை வெளிவரச் செய்துள்ளார்.

அனைத்துலக சஞ்சிகைகளான 'நியூஸ்வீக், ஏசியாவீக், டைம், (F) வார் ஈஸ்ரேன் எக்கனமிக் ரிவியு, த எக்கனமிஸ்ட், லைவ்' ஆகியவற்றிலிருந்து தெரிவு செய்யப் பட் டுள்ள கட்டுரைகளை இவ்விதழில் வழங்கியுள்ளோம்.

மாத இதழாக உலாவரவுள்ள "உலக உலா" பற்றிய உங்களது கருத்துக்களை யும், எண்ணங்களையும் தவறாது எழுதியனுப்புங்கள். உங்கள் விமர்சனங்கள்தான் இவ்விதழின் வளர்ச்சிக்கு வழிகாட்டியாக இருக்கும் என நாம் நம்புகிறோம்.

— நன்றி —

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

ஆசிரியர் குழு.

எல்லையில் இரத்தம்–

சுடுவதில் நாட்டமுடைய படைவீரர் செயற்படும்பொழுது காஷ்மீரில் சூடுபிடிகின்றது

யுத்தத்தினால் பொருளாதாரத்தில் சீர்குலைந்த ஸ்ரீநகரில் முகம்மது ஆஷ்ரப் எப்பொழுதும் கையில் வேலையாக இருக்கிறார். நகரத்தின் பட்மலூ மாவட்டத்தில் உள்ள காவல்துறைக் கட்டுப்பாட்டு அறையின் வாகனங்கள் நிற்பாட்டப்படும் பகுதியில் அவரின் தற்காலிக கடை அமைந்துள்ளது. போரில் இறப்போரின் சடலங்களை மூட அவர் வெள்ளைத்துணி விற்கிறார். காலையில் ஏறக்குறைய 40 அல்லது 50 மீற்றர் துணி கொண்டு வருவதாகவும் மாலையில் தனது கையிருப்பு முடிந்து விடுவதாகவும் கூறுகிறார்.

ஆஷ்ரப்பின் விற்பனை மேலும் அதிகரிக்கக்கூடும். இந்தியாவின் எல்லைப் பாதுகாப்புப் படையினரால் சென்ற மாதம் 200 பேருக்கு மேல் கொல்லப்பட்டுள்ளனர். தற்போதைய எழுச்சி 1988 இல் தொடங்கியபின் இந்தியாவின் ஆதிக்கத்தில் உள்ள காஷ்மீரில் பல்லாயிரம் பேர் இறந்திருக்கிறார்கள், 1947 லும் 1965 லும் நடந்த இந்திய பாகிஸ்தான் யுத்தங்களுக்குப் பின்பு இதேயளவுபதற்றத்தை தாங்கள் காஷ்மீரில் காணவில்லை என்று மக்கள் கூறுகின்றார்கள். இந்திய ஒன்றியத்தின் பூரண பகுதியாகக் காஷ்மீர் உள்ளது, என்று இந்தியா கருதுகின்றது. காஷ்மீர் மக்கள் சேரமுடியுமாயின் தங்களுடன் சேர்வார்கள் என்று பாகிஸ்தான் கணிக்கிறது. ஆனால் போராளிகள் இப்பொழுது சுதந்திரமாக இருப்பதையே விரும்புவதாகக் கூறுகிறார்கள்.

இந்தப் பதற்ற நிலையில் நியூ டெல்லியால் புதிதாக நியமிக்கப்பட்ட ஆளுநர் ஜெனரல் கே. வி. கிருஷ்ணராவ் ''அன்பும், அடக்குமுறையும்'' என்ற கொள்கையுடன் ஜம்மு காஷ்மீர் மாநிலத்திற்கு வந்துள்ளார். போராளிகள் மீது சூட்டை அதிகரித்துக் கொண்டு அரசியல் நடவடிக்கைகளை மீண்டும் தொடர்ந்து தொடங்க முயற்சிக்கிறார். ஆனால் இற்றை வரை சமாதான அறிகுறியான ஒலிவ் கிளையை வெப்பம் எரிக்கின்றது. காஷ்மீரின் பலமுள்ள அரசியற் சக்தியான தேசிய மாநாட்டுக் கட்சியின் பிரமுகர் சைஃபுடின் சொஸ், பாகிஸ்தானின் உளவுத்துறையின் பிடிக்குள் இந்திய படைகள் விழுவதாகக் கூறுகின்றார். பொது மக்கள் முன்னிலையில் சுட்டபின், தாறுமாறாகச் சுடுபடும் பொழுது மக்கள் இறந்தார்கள் என்று கூறுவதாகவும். எல்லைக்காவல் படைதான் பிரதான குற்றவாளி என்றும் கூறுகின்றார்.

ஸ்ரீநகர் நடுங்கக் கூடியவாறு சென்ற வாரம் காவல்துறையினர் ஓர் எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். நகர வெளிப்புறத்தில் அமைந்துள்ள ஹஸ்றட்பால் பள்ளிவாசலுக்குள் போராளிகள் இருப்பதாகச் செய்தி கிடைத்துப் படைவீரர் அதைச் சுற்றி வளைத்தனர். சரணடைய உத்தரவு இடப்பட்டதும் உள்ளிருந்து சரமாரியாகத் துப்பாக்கிக் குண்டுகள் வெளியேறி ஒரு படை வீரரைக் காயப்படுத்தியது. பள்ளிவாசல் தாக்கப்பட்டது என்ற குற்றச்சாட்டை தவிர்க்கும் முகமாக ஆளுநரின் ஆலோசகர் லெப். ஜெனரல் டி. டி. சக்லானி படை வீரரைப் பின்வாங்க உத்தரவிட்டார். பின்வாங்கும் பொழுது 'நியால் அகமது கானை' என்னும் காவல்துறை வீரரைத் தம்முடன் பிடித்துக்கொண்டு வந்தார்கள். நகருக்குள் மீண்டும் புகும்பொழுது கானை இறந்திருந்தார். ஏப்பிறில் மாதம் 22ம் திகதி 1000 காவல் துறை வீரர் காவல்துறை நிலையத்தைக் கைப்பற்றி அப்படையின் தலைமைப் பணிப்பாளரைப்பணயக் கைதியாகப்பிடித்து வைத்திருந்தார்கள். ஏப்பிறில் மாதம் 28ம் திகதி 500 எல்லைக்காவல் படையினர் காவல் நிலையம் மீது இரத்தம் சிந்தாத தாக்குதல் ஒன்றை நடாத்தி முற்றுகையை முறியடித்தார்கள்.

''கடவுளுக்கு நன்றி. யாதும் தட்டங்கலின்றி எல்லாம் முடிவடைந்துவிட்டன'' என்று அதிகாரி ஒருவர் கூறினார்.

ஆனால் இதேபோல் அதிஷ்டமுடையதாக நியூடெல்கி எப்போதும் இருக்கவில்லை. ஸ்ரீநகரில் நான்கு எல்லைக்காவல் படையினரைப் போராளிகள் கொன்ற பின்பு படையினர் தம்வசமிழந்தனர். பதிலடியாக 8 லட்சம் சனத்தொகையுடைய அழகான உல்லாசப்பிரயாணிகள் விரும்பும் நகரின் வரலாற்று முக்கியம் வாய்ந்த 'லால் சௌக்' பகுதியைத் தீயிட்டுக் கொளுத்திவர். படையினர் போராளிகளைக் குறை கூறினார்கள். ஆனால் காலையில் நான்கு பேர் இறந்திருந்தார்கள். 200 கடைகளும், 50 வீடுகளும் எரிந்து சாம்பராயின. மேலும் இரண்டு நாட்களுக்குச் சண்டை நீடித்தது. 75 பேர் கொல்லப்பட்டனர். ஜனவரிமாதம் சோபோ நகரில் ஏற்பட்ட தீயில் 43 பேர் கொல்லப்பட்ட நிகழ்வின் பிரதிபலிப்பே ஏப்பிறில் மாதம் ஏற்பட்ட தீயாகும், ஸ்ரீநகரில் தனது வீடு எரிக்கப்பட்ட நிலையில் 65 வயதுடைய கோபாம் முகம்மது கான் கூறுகிறார். '' இக்கொடூரத்தில் இருந்து எங்களைக் காக்கக்கடவுளை நோக்கித்தான் கையை நீட்டுகிறோம்''

ஆனால் இந்நிகழ்வுகள் வழமைக்குமாறானவை அல்ல என்று சிலபேர் கூறுகின்றார்கள். முன்னாள் புலனாய்வுத்துறைத் தலைவரும் காஷ்மீர் ஆளுநருமாக இருந்த கிரிஷ் சக்ஸேனா ''வெற்றியும் தோல்வியும் சந்தர்ப்பவசமானவை'' என்று கூறுகின்றார்.

3000 ஆயுதந்தாங்கிய போராளிகள் இருக்கலாம்'' என்று மதிப்பிடுகிறார். ஆனால் அவர்கள் தங்கள் பிரிவினைக் கோரிக்கையில் வெற்றியடையப் போவதில்லை. என்று கூறுகிறார். போராளிகள் ஆட்சேர்ப்பது வீழ்ச்சியடைவதாகவும் தாமாகவே புலனாய்வுத்துறையுடன் தொடர்பு கொள்பவர்கள் அதிகரிப்பதாகவும் கூறுகின்றார். எனினும் அதிகப்படியாகச் சிலவிடயங்கள் நடைபெற்றதை அவர் ஒத்துக்கொள்கிறார். ''இவ்வகையான சந்தர்ப்பங்களில் கெட்ட பெயர் ஏற்படாமல் உலகத்தில் வேறு நாடுகள் இவ்வகைப் பிரச்சனைகளைக் கையாண்டிருக்கின்றனவா?'' என்று கேட்கிறார்.

கைஃபுடின் சொஸ் கூறுகிறார் '' உண்மை தான். போராட்டத்தினால் மக்கள் அலுப்படைந்து விட்டார்கள். ஆனால் அது இந்தியாவுக்கு நயம் அல்ல, கண்ணீரைத் துடைக்க ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை.'' பஞ்சாப் மாநிலத்தில் வெற்றியடைந்த இராணுவத்தீர்வை காஷ்மீரில் எதிர்பார்ப்பது புத்திசாலித்தனமானதா என்று பலர் கேட்கிறார்கள். எதிர்க்கட்சிப் பாராளுமன்ற அங்கத்தவர் ஜோர்ஜ் பெனான்டெஸ் கூறுகின்றார், ''வித்தியாசமானது யாதெனில், இங்கே நூறுவீதம் மக்கள் சுதந்திரத்தை அல்லது பாகிஸ்தானுடன் சேருவதை விரும்புகிறார்கள். பஞ்சாப்பில் பத்து வீதமக்களே புரட்சியில் ஈடுபட்டார்கள். 1990 இல் 70 போராளிக்குழுக்களும் மேலாண்மை பெற்ற தீவிரவாதி ஷிஸ்புல் முஜஹிடீன் என்பவரும் தோன்றியபின்பே காஷ்மீர் நிலைமை மேலும் மிக மோசமடைந்தது. ஒரு நிலையில் போராளிகளை அரசாங்கத்துக்குள் கொண்டு வரவேண்டும். எவ்வாறெனினும் அவர்களே இன்றைய தலைவர்கள்.''என்றுபெனான்டெஸ் கூறுகின்றார்.

அத்திசையில் தான் இந்திய அரசாங்கம் சென்று கொண்டிருந்தது. ஆனால் டிசம்பர் 6 ம் திகதி உத்தரப்பிரதேசத்தில் அயோத்தியில் உள்ள பாபர் பள்ளிவாசலை இந்துத் தீவிரவாதிகள் இடித்தபின்பு நிலைமை மாறிவிட்டது. உள்நாட்டு அமைச்சின் அதிகாரி ஒருவர் கூறுகின்றார், ''மதத்தின் பேரால் பள்ளிவாசல்களை உடைக்கும் நாட்டில் எனக்கு ஓர் எதிர்காலம் உண்டா என்று சிந்திக்கும் மதச் சார்பற்ற ஓர் காஷ்மீரி முஸ்லிமைக் குறை கூறமுடியாது'' இந்து எதிர்க்கட்சியான பாரதிய ஜனதா கட்சியின் தலைவர் எல் . கே . அத்வானி போராளிகளுடன் எதாவது உடன்படிக்கையில் ஈடுபடுவதை எதிர்க்கிறார். அது இந்தியாவிற்குப் பாதகமான விளைவுகளை எற்படுத்தும் என்று கூறுகிறார்.

எனினும் முன்னாள் காஷ்மீர் முதல் அமைச்சர் பாரூக் அப்துல்லாவின் ஆலோசனைப்படி அரசாங்கம் தனது கொள்கைகளை முன்னெடுத்துச் செல்கின்றது. அவர்களின் புகழ் மங்கி அடங்கியிருந்தாலும் பாரூக்கும் அவரது தேசிய மாநாட்டுக் கட்சியும் காஷ்மீரில் பலம் வாய்ந்த வேரூன்றிய ஒரே ஒரு சக்தியாக இருக்கின்றார்கள். மிதவாதியான ராவ் அவர்களை அழுநராக நியமித்ததைப் பாரூக் விரும்பினார்.

காஷ்மீர் மக்கள் தேர்ந்தெடுக்கக் கூடிய மூன்று தெரிவுகள் உண்டு. இந்தியாவுடன், அல்லது பாகிஸ்தானுடன் அல்லது சுதந்திரமாக இருப்பது. 1940 களின் பிற்பகுதியில் காஷ்மீருக்காக முதல் யுத்தம் நடைபெற்றபொழுது யுத்தத்தை நிறுத்த ஏற்பட்ட உடன்படிக்கையின் படி ஐ. நா, வந்தபின் முதல் இரு தெரிவுகளும் இடத்தில் உள்ளன. எந்நாட்டுடன் காஷ்மீர் சேர்வது என்பதை ஐ. நா. நடத்தும் வாக்கெடுப்பில் மக்கள் தீர்மானிக்க வேண்டும். சுதந்திரம் இத்தெரிவுகளில் ஒன்றாக இருக்கவில்லை. யுத்தத்திற்கு முன்னே இருந்த எல்லைக்குப் பாகிஸ்தான் பின்வாங்காத படியால் இவ்வாக்கெடுப்பு நடாத்திக்கொள்ள இந்தியா அனுமதிக்கவில்லை.

ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணி (ஜே கே எல் எவ்) இன் அங்கத்தவர் ஹிஜாஸி கூறுகிறார் '' 1947 ஒக்கஸ்ட் 14ல் இருந்த எல்லைகள் வரைக்கும் மீண்டும் காஷ்மீர் மாநிலம் அமைய வேண்டும். பாகிஸ்தான் வைத்திருக்கும் பகுதியுடன் சேர்ந்து அதன் நிலப்பரப்பு 217, 560 சதுரகிலோ மீற்றராகும். சீனா தாஜிகிஸ்தான், ஆப்கானிஸ்தான், இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளுடன் எல்லையுடைய ஓர் முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் காஷ்மீர் அமையும்.''

ஏப்பிறல் 2ல் ஏற்பட்ட உடன்படிக்கையின்படி பாகிஸ்தானுடன் சேரும் கொள்கையை விட்டு ஜே. கே. எல். எப்ஃ உடன் சேர்ந்து சுதந்திரத்திற்காகப் போராடுவதெனச் சக்தி வாய்ந்த ஹிஸ்புல் முஜாஹிடீன் முடிவு செய்தது, '' பூரண சனநாயகத்தில் ஒவ்வொரு கட்சியும் தனது கொள்கைகளைப் பரப்ப உரிமையுண்டு', என உடன்பாடிருப்பதாக ஹிஜாஸி கூறுகிறார், பாகிஸ்தான் இராணுவத்தில் உள்ள தீவிரவாதிகள் ஹிஸ்புல் கட்சிக்கு ஆதரவு வழங்குவதாகக் கூறப்படுகின்றது. 50 வயதுடைய ஜே. கே. எல் எப்ஃ தலைவர் அமானுல்லா கான் அவ்வாறான காஷ்மீர் நாடு ஆசியாவின் சுவிஸ்செலன்ட் நாடாகவும் பூரண நடுநிலைமை நாடாகவும் அமையும் எனக் கூறுகின்றார்.

இந்தியாவை வாக்கெடுப்பு நடாத்த ஒத்துழைக்கும் படி பாகிஸ்தான் அழைப்பு விட்டுக் கொண்டு இருக்கின்றது. காஷ்மீரி மக்கள் தங்கள் முஸ்லீம் அயல் நாட்டுடன் அணைய விரும்புவார்கள் எனப் பாகிஸ்தான் நம்புகிறது. சென்ற கிழமை கராச்சியில் நடந்த வெளிநாட்டமைச்சர்களின் இஸ்லாமிய மகாநாட்டிலும் இதேதீர்மானியில் பாகிஸ்தான் வேண்டுகோள் விடுத்தது. காஷ்மீரில் ஆதரவு தராவிடின் பாலஸ்தீன் பிரச்சனையில் மேற்காசியாவுக்கு ஆதரவு தரமுடியாது என சமூகமளித்த பிரதிநிதிகளுக்கு இஸ்லாமபாத் கூறியது. ஆனால் இந்தியாவுடன் பகைப்பதைச் சவூதி அரேபியாவும் மற்ற நாடுகளும் விரும்பவில்லை. காஷ்மீர் மற்றும் எகிப்து, அல்ஜீரியா ஆகிய நாடுகளில் போராளிகளுக்குப் பாகிஸ்தான் ஆயுதம் வழங்குவதான குற்றச்சாட்டுகளுக்கு மத்தியில் பாகிஸ்தானின் நிலை பலவீனமடைந்து விட்டது. அத்துடன் ஜனாதிபதி குலாம் இஷாக்கான், நவாஸ் ஷெரிப் இன் அரசாங்கத்தை பதவி நீக்கம் செய்தபின் நாடு உறுதியற்ற நிலையில் உள்ளது.

பெஷாவார் இல் இருந்து வெளி வரும் 'புறன்ரியர் போஸ்ற்' என்ற பத்திரிகையில் ஆசிரியர் காலித் அகம்மது கூறுகின்றார். '' ஐ. நா. விற்குச் சென்று காஷ்மீரின் சுதந்திரத்தைப் பற்றிப் புதிய தீர்மானம் ஒன்றைக் கேட்பது பாகிஸ்தானுக்கு நன்மை பயக்கும். அவ்வாறான தீர்வுக்குச் சர்வதேச ஆதரவு உண்டு '' நாட்டுத்துரோகக் குற்றச் சாட்டில் மூன்று வருடங்கள் சிறை வாசம் அனுபவித்த பௌதிகவியல் பேராசிரியர் முகம்மது ஆஷ்ரப் பாராப்ஃ கூறுகிறார். '' போராளிகள் உறுதியாக நிற்கின்றார்கள். எமது இயக்கம் போய்க்கொண்டே இருக்கும். சவச்சீலை விற்பனை செய்யும் ஆஷ்ரப் பணக்காரனாக முடியும்.

மீண்டும் வருதல்

சிங்கத்தின் மகன்

பாரூக் அப்துல்லா ஓர் சூஷியான பேர்வழி என்று மாநிலத்தின் முதன் மந்திரியாக மீண்டும் அவரை நியுடெல்கி நியமித்தால் அவர் தனது முன்னைய தோற்றத்தை அழிக்க வேண்டிவரும். அவரின் முன்னாள் அரசியல் நண்பர் ஒருவர் கூறுகின்றார். ஆரம்பத்தில் அவரை மக்கள் விரும்பினார்கள் நண்பரொருவரைச் சைக்கிளில் ஏற்றிச் சந்தை ஊடாகக்கொண்டு செல்வதை அல்லது மோட்டார் சைக்கிளில் மரக் கடத்தற்காரனை விட்டுக் கலைப்பதைக் காணலாம். தல் ஏரியின் கரையில் கொல்ப்ஃ விளையாட்டிற்கு ஓர் மைதானம் அமைப்பதற்கு ஓர் வெளிநாட்டு நிபுணரை அழைத்ததைப் பலர் ஞாபகத்தில் வைத்துள்ளார்கள். இராணுவ அரச அதிகாரிகள் மட்டுமே அம்மைதானத்தில் இன்று விளையாடுகிறார்கள். அவரின் நண்பர் கூறுகிறார், '' அவர்மீது மக்கள் காட்டிய பேரன்பு வெறுப்பாக மாறி விட்டது.'' என்று.

வைத்தியராகப் பயிற்சி பெற்ற பாரூக் எப்பொழுதும்தானேசலுகைகள் அனுபவித்தவர் அல்லர். காஷ்மீருக்குத் திரும்ப 1974ல் தனது வைத்தியத் தொழிலை இங்கிலாந்தில் துறந்தார். செப்ரம்பர் மாதம் 1982ல் அவரின் தந்தை ஷேக் முகம்மது அப்துல்லா, 'சிங்கம்' எனப் பட்டம் சூட்டப்பட்டவர், இறந்த பின்பு மாநிலத்தின் அரசாங்கக் கட்சியான தேசிய மாநாட்டுக் கட்சியின் தலைமைப் பதவியைப் பரம்பரை வழியாகப் பெற்றார். இந்திரா காந்தியின் காங்கிரஸ் கட்சிக்கு எதிராக 1983ல் தேர்தலில் போட்டியிட்டார். தற்போதைய பிரச்சனைக்குப் பின் ஆரம்பம் என்று பலராலும் கருதப்படும் விதத்தில் காந்தி மதச் சார்புள்ள தேர்தல் பிரசாரத்தில் இந்துப்பிரதேசமான ஜம்முவில் ஈடுபட்டார். ஆனால் கூடிய முஸ்லீம் மக்களையுடைய காஷ்மீர் பள்ளத்தாக்கு பாரூக்கை வெற்றியீட்டச் செய்தது.

தந்தையைப் போலல்லாது இளம் சிங்கம் தேசிய அரசியலில் இறங்கப் பார்த்தது. 1984ல் முதன்மந்திரிப் பதவிக்கு இருந்த காந்தி இவரை இறக்கினார். 1987ல் மீண்டும் பதவிக்கு வந்தார். ஆனால் காந்தியின் மகன் ராஜீவ் உடன் சேர்ந்த காரணத்தினால் மக்கள் ஆதரவை இழந்தார். இத்தருணத்தில் புரட்சிகரமான கட்சிகளை மக்கள் வரவேற்றார்கள். உணர்ச்சிமிக்க எல்லை மாநிலத்தை ஆளுவதிலும் பார்க்க டிஸ்கோ நடனத்தில் சிறந்தவர் எனப்பலர் பாரூக்கை வர்ணித்தனர். ஜனவரி 1990 இல் வி. பி. சிங் அரசாங்கம் அவரைப் பதவி இறக்கியது. அதன்பின் அவருடையஆங்கிலேய மனைவியுடனும் நான்கு பிள்ளைகளுடனும் லண்டனிலும் நியூடெல்லியிலும் மாறிமாறி காலங் கழிக்கிறார். 55 வயதில் பாரூக் மீண்டும் வருவாரா? அரசியலில் மீளவும் பதவிக்கு வரும் பொழுது வீதியில் இடி பாடுகளும் சில வேளைகளில் கண்ணீவெடிகளும் நிறைந்திருக்கும் என்று கூறுகிறார், ஓர் டெல்கி அதிகாரி. ஆனால் கேள்வியாதெனில் '' கடுமையான நிலபரத்தில் பாரூக் இயங்கத் தொடங்குவாரா''?

இனச்சுத்திகரிப்பு

நாட்டிலுள்ள வியட்நாமியரை அழித் தொழிப்பதன் மூலம் மீண்டும் நண்பர் களைச் சம்பாதிக்க முயலும் கம்போடியா வின் கமரூச் புரட்சியாளர்கள்.

கிடைக்கும் வழிகளனைத்தையும் பிரயோகித்து அவர்கள் ஓடித்தப் புகிறார்கள். அனேகர் ஆட்டங் கண்ட பழைய சிறிய வள்ளங்களிலே நிரம்பிப் பயணம் செய்கிறார்கள். சிலர் லொறிகளிலும், சிலர் மாட்டு வண்டிகளிலும் கூடப் பிரயாணம் மேற்கொள்ளுகிறார்கள். சென்ற மாதம் தொடக்கம் 10,000க்கும் அதிகமான வியட்நாமியர்கள் கம் போடியாவை விட்டுப் பெரிய அள வில் வெளியேறிக்கொண்டிருக்கி றார்கள். அகதிகளுள் மீன் பிடிப் போர், கட்டட நிர்மாணப் பணி யாளர்கள், அங்காடி வியாபாரிகள், விபச்சாரிகள் எனப்பலரும் உள்ள னர். இவர்களில் அனேகர் தமது வாழ்நாள் முழுவதுமே கம்போடி யாவில் வாழ்ந்தவர்கள். பலர் சுக மான வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும் நம்பிக்கையோடு சில மாதங்களுக்கு முன்னர்தான் வியட் னாமுக்குள் வந்து சேர்ந்தவர்கள். இங்கூயன் தைலோய், கம்போடியா விலேயே பிறந்தவர்களுள் ஒருத்தி. நொம் பென்னுக்குத்தெற்கே மெக் கோங் ஆற்றில் தமது குடும்பத் துக்குச் சொந்தமான மீன்பிடிக்குப் பயன்படுத்தும் சிறிய ''சம்பான்'' எனப்படும் வள்ளத்தில் அவளு டைய கணவன், மூன்று பிள்ளை கள், தாய், இரண்டு சகோதரிகள் என்பவர் சகிதம் அமர்ந்திருக்கி றாள். ''வியட்னாமுக்குப் போக நாங்கள் விரும்பவில்லை. ஆனால், நாங்கள் இங்கிருந்தால் இறக்க நேரிடும்'' என்கிறாள் அவள்.

கம்போடிவைக் கம்போடியர்க ளுக்கு மட்டுமேயான ஒரு நாடாக மாற்றும் கமரூச்சினரின் தொடர் முயற்சியே இவர்களின் வெளியேற் றத்துக்குக் காரணமாகும். துப் பாக்கி ஏந்திய குழுவினர் மார்ச் மாதத்தின் ஓர் இரவு நேரம் ரோன்லே சப் வாவியின் வட முனையிலே உறக்கத்திலே இருந்த வியட்னாமிய இன மீனவர்கள் கிராமத்தைத் தாக்கியதிலிருந்து இது ஆரம்பமானது. 10 குழந்தைகளுட் பட 33 பேரைத் துப்பாக்கியா ளர் கொன்றொழித்தனர், இரண்டு வாரங்களின்பின் வாவியின் தென் புறத்தில் இன்னொரு மீதக்கும் கிராமத்தில் எட்டு இனவழி வியட் நாமியர்கள் படுகொலை செய்யப் பட்டனர். நாட்டை விட்டு வியட் நாமியரை ஒட்டுமொத்தமாக விரட் டியடிக்கும் நோக்கத்தோடு ஒவ் வொரு புதிய தாக்குதலும் வியட் நாமிய எல்லைக்கு அண்மையில் வாவியின் தொங்கல் பகுதியிலேயே நடைபெற்று வருகிறது. அடுத்த பயங்கரவாதச் செயல் நொம்பென் னில் வியட்னாமியருக்குச் சொந்த மான 4 சிற்றுண்டிச்சாலைகளை யும் அவற்றின் அண்மித்த பகுதிக ளையும் ஒரே நேரத்தில் கமரூச் போராளிகள் எனச் சந்தேகிக்கப் படுவோர் எறிகுண்டுகள் கொண்டு தாக்கியழித்ததாகும். கம்போடியா வில் வாழும் ஏறத்தாழ 6000,000 வியட்னாமிய வம்சத்தினருள் இந்த தத் தாக்குதல்கள் ஒரு விதமான புதிய அச்சத்தைத் தோற்றுவித் துள்ளது. இது ஒரு இனச் சுத்திக ரிப்பாகும்.

கமரூச் புரட்சியாளர்கள் மத் தியில் வியட்னாமியருக்கெதிரான ஒரு ''செனோபோபிய'' வகையி லான வெறுப்புணர்வு தோன்றியுள் ளது. 1970ன் பிற்பகுதியில் மாவோ ஆதரவாளர்கள் கம்போ டியாவை ஆண்டபோது ஆகக் குறைந்தது (10,00,000) பத்து லட்சம் கம்போடியர்கள் வியட் னாமிய செல்வாக்கை அழிதொழிப் பது என்ற பெயரில் சித்திரவதை, பட்டினி, அதிக வேலைப்பளு என் பன மூலம் கொல்லப்பட்டனர். 1978ம் ஆண்டிலே கம்போடி யாவை வியட்னாமியர்கள் ஆக்கிர மித்து நொம்பென்னில் கம ரூச்சை வீழ்த்தி ஹனோய் சார் பான அரசு ஒன்றை உருவாக்கிய போது பகையுணர்வு ஆழமாகியது. இந்தக்குழுவினரின் வியட்னாமிய எதிர்ப்புணர்வைப் பெரும்பான்மை யான கம்போடியர்கள் பகிர்ந்து கொள்ளுகின்றனர். செழிப்பு வாய்ந்த மெக்கோங் கழிமுகம் 18ம்



ஒரு கமரூச் போராளி

நூற்றாண்டில் வியட்னாமியரால் கையகப்படுத்தப்பட்டபோதே போர்க்குணம் கொண்ட கிழக்குப் புற அயலவர்கள் மீது இந்தக் காழ்ப்புணர்வு ஆரம்பித்துவிட்டது. இந்த இன எதிர்ப்புத்தான் கம்போடியாவில் மே 23ம் நாள் நடக்க இருக்கும் ஐ. நா. வின் ஆதரவிலான கம்போடியாவின் தேசிய பொதுத் தேர்தலை கெமர்ரூச் ஏற்காமைக்குக் காரணமாகும்.

ஐ. நா. வின் தேர்தல் திட்டம் ''வியட்னாமியருக்கு எமது நாட்டைத் தாம்பாளத்தில் வைத்துக் கொடுப்பது போலாகும்'' என்றார் கமறூச்சின் அரசியல் தலைவரான கியூ. சம்பான், தேசத்துரோகிகளே இந்தத் தேர்தலை ஆதரிக்கிறார்கள் என்று அந்தக் குழுவின் வானொலி அறிவித்தது. 1970களில் பொல்பொட்டின் தலைமையில் நடந்த இன ஒழிப்பு நடவடிக்கைக்கு முந்திய ''தூய்மைப்படுத்துவதான'' வாக்குச் சாதுரியத்தின் மயிர்க் கூச்செறியும் திரும்பவும் காட்டும் பணிதான் இதுவாகும்.

இவ்வாறான எதிரொலிப்புகள் அனேகமான கம்போடியர்களை எதுவும் செய்வதில்லை.

பொதுமக்கள் ஆதரவைத் திரட்டுவதற்காக வியட்னாமியர் விவகாரத்தைப் பயன்படுத்துகிறார்கள் கமர்ரூச்சினர், என்பது பௌத்த லிபறல் ஜனநாயகக் கட்சியின் துணைத்தலைவரான லெஜ் மவுலியின் கருத்தாகும். எந்த ஒரு கம்போடியனுக்குத்தானும் பாரிய அளவில் இந்த நாட்டில் வியட்னாமியர்கள் வாழ்வதில் விருப்பில்லை என்கிறார் அவர். அமைதி காக்கும் அதிகாரி ஒருவர் ஏமாற்றத்துடன் இதனை ஒப்புக்கொள்கிறார். ''வியட்னாமியர்கள் கொல்லப்படும்போது கம்போடியர்களின் கவலை குறைவானதல்ல'' சென்ற வாரம் இனரீதியான வியட்னாமியக் கிராமங்களின் சனத்தொகையினர் அனைவரும் மெக்கோங் ஆற்றிலே நொம்பென் ஊடாக ஓலையால் வேயப்பட்ட கூரைகளைக்கொண்ட சம்பான் எனப்படும் மிதக்கும் வள்ள வீடுகளை ஒன்றிணைத்து இழுவைத்தோணிகளால் இழுத்து வரப்பட்டனர். சில மிதக்கும் வீட்டு இணைப்புக்கள் 500 வள்ளங்களைக் கொண்டதாகும். இரண்டு அல்லது மூன்று இலோ மீற்றர் நீளமான மிகவும் இறுக்கமான கயிறுகளால் அவை பிணைக்கப்பட்டிருந்தன. எதிரிகளின் ஊர்வலம் தாண்டிச் செல்ல, 25 வயது நிரம்பிய திடா என்ற பல்கலைக்கழக மாணவன் பார்த்துக்கொண்டு நின்றான். ''அவர்கள் நாட்டைவிட்டுச் செல்வது கண்டு மகிழ்வெய்துகிறேன்'' என்றான். ''இது எனது நாடு'' ஆற்றில் ஒரு பாலத்தின் கீழால் இந்த வள்ளங்கள் போய்த் தனது பார்வையிலிருந்து மறையும் வரை மனத்திருப்தியோடு அவன் பார்த்துக் கொண்டு நின்றான்.

அசைய விரும்பாதோர்:-

கம்போடியாவில் வாழும் வியட்னாமியர் அரைப்பங்கினர் அங்கேயே பிறந்து வளர்ந்தவர்கள். வியட்னாமுடன் தொடர்பு இருந்தாலும் மிகச் சிறிய அளவிலே உள்ளவர்கள் அவர்கள். அவர்களுக்கு வீடில்லை, வேலையில்லை, பீளக்குடியமர உதவுவதற்கு நெருங்கிய உறவினருமில்லை. சிலர் எதிரிகளாகிவிட்டனர். இது ஒரு மாற்று வாழ்க்கை முறைமை என்று ஏற்றுக்கொள்ளவும் அவர்களிற் சிலர் விரும்பவில்லை. இதனால் இப்போதைக்கு அசையாமல் இருந்து வருகிறார்கள். நொம்பென்னிலே பிறந்து வளர்ந்த வியட்னாமியப் பெண்ணான இங் கூயன் தீவுயி நகரத்தின் சும்பா அம்போஷ சந்தையில் கோழி வியாபாரம் செய்கிறார். ''எனக்கு ஓடுவதற்கு இடமில்லை என்கிறார் அவர். ரொன்லே சம் வாவியில் இரண்டாவது படுகொலை நடந்த இடமான கம்பொங்சினாங்கில் டாங் தி உட்சின் அயலவர்களில் அனேகர் எல்லையை நோக்கி ஓடும் பல்லாயிரவரோடு சேர்ந்துவிட்டனர். ஆனால் அவளும் கணவனும் போவதில்லை என்று தீர்மானித்துள்ளனர். ''இரவில் நித்திரை கொள்ள முடியாத அளவிற்குப் பயந்துபோயிருக்கிறேன். வியட்னாமுக்குச் சென்று வீடில்லாமலிருப்பதைவிட இங்கேயே இறப்பதை விரும்புகிறேன்'' என்று அவர் சொல்கிறார்.

பேராசைத் துப்பாக்கியாளர்:-

இவ்வளவிருந்தும் நொம்பென்னைச் சென்றடையும் வியட்னாமியர்கள் அதிஷ்டசாலிகளேயாவர். நொம்பென் அரசின் படையத்தினரும், பொலிஸாரும் ஆற்றின் நெடுகிலும் சோதனை நிலையங்களை அமைத்துள்ளனர். ஒடிவரும் வியட்னாமியர்களிடம் பணம் கறப்பதே அவர்களது நோக்கமாகும். 35 வயதுடைய இங்கூயன் வாஹு ரோன் லேசம் வாவியிலமைந்திருந்த தன் வீட்டையும் துறந்து கையிலே செப்புக்காசு கூட இல்லாமல் நொம்பென் சென்றடைந்துள்ளார். வழியில் 20 சோதனை நிலையங்களை அவர் கடக்கவேண்டியிருந்தது. ஒவ்வொரு வள்ளத்திற்கும் 5 டாலர் வரை பணம் அறவிடப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட பேராசை கொண்ட சீருடையணிந்த துப்பாக்கியாளர் குழு வள்ளமொன்றிற்கு 20 டாலர்கள் தருமாறு வற்புறுத்துகிறார்கள். நொம்பென்னுக்கு வெளியே நங்கூரமிட்டுள்ள அச்சம் கொண்ட இந்த மீன்பிடிகாரரும், குடும்பமும் இதற்குமேல் பிரயாணம் செய்ய வழியற்றுத் தவிக்கிறார்கள். ''கமர்ரூச் எங்களைக் கொல்லப்பார்த்தது. நொம்பென் படையினர் எங்களைக் கொள்ளையடித்து விட்டனர். எமக்கு வாழ வழியேதுமில்லை'' என்று நம்பிக்கையிழந்த நிலையில் தலையை ஆட்டுகிறார் அவர்.

நகரங்களில் சுழன்று வரும் கம்போடியாவின் பொருளாதாரக் கவர்ச்சியால் உந்தப்பட்டு அனேக வியட்னாமிய இளைஞர்கள் வெளியேறாமல் இருக்கிறார்கள். தாக்கப்படக் கூடிய நிலையில் உள்ளவர்கள் முதலில் வெளியேறுகிறார்கள் என்கிறார் 70 வயதினரான இங்கூயன் வான் இங்கியெம். முதலாவது பிரதான வீதியூடாக வியட்னாமுக்குள் தப்பிச் செல்வதற்காக நொம் பென்னில் வாடகைக்கமர்த்திய ஒரு வாகனத்தில் தன் குடும்பப் பொருட்களையெல்லாம் ஏற்றிக் கொண்டிருந்தார் அவர். அவருடைய மூன்று மருமக்களும், ஐந்து பேரப்பிள்ளைகளும் செல்வர். ''கடைசி நிமிடம் வரை



ஆட்டங்கண்ட பழைய சிறிய வள்ளங்களில் நிரம்பி பயணஞ் செய்யும் வியட்நாமியர்.

வேலை செய்வதற்காக என் மூன்று மக்களும் இங்கே தங்கியிருப்பர்'' என்றுசொல்கிறார். அந்தக் கிழவர் நகரத்தின் 11 சந்தையில் வசித்து வரும் வாடிக்கையாளர்களுக்குச் சூப் தயாரித்து விற்பனை செய்கிறார். 20 வயதினரான யம் திஹா, அவருடைய சகோதரர், வாசனைத் திரவியங்கள் விற்கிறார். அவர்களின் சிறிய தாயார் உருண்டை மாப்பண்டம் தயாரித்துக்கொண்டிருக்கிறார். இலாபம் அச்சத்தைப் பார்க்கிலும் அதிக நிறையுடையதாக இருக்கிறது என்று அந்த இளம் பெண் தெரிவிக்கிறார். '' 10 ஆண்டுகளுக்கு வியட்னாமில் உழைப்பதைவிட அதிக பணத்தை ஒரு ஆண்டிலே இங்கே சம்பாதித்துள்ளோம் '' என்றும் கூறுகிறார்.

வியட்னாமிய எதிர்ப்பு அதியாயங்களுக்கு எதிராக கமறூச்சைச் சாராத அரசியல் தலைவர்கள் அனேகமாக மிகக் குறைந்த அளவு எதிர்ப்பையே தெரிவித்து வந்துள்ளனர். '' வியட்னாமிய சனத் தொகையினரின் படுகொலைகளையும் பாரிய அளவிலான வெளியேற்றத்தையும் கண்டு பத்திரமான மகிழ்ச்சியை அவர்கள் அடைகிறார்கள் போலத் தெரிகிறது.'' என்று ஐ. நா. அமைதிப்படைப் பேச்சாளர், எரிக் போல்ற் கூறியுள்ளார். ஐ. நா. வின் அகதிகளுக்கான தூதுவர் சடாக்கோ ஒகாட்டா சென்ற வாரம் நொம் பென்னுக்கு நேரடியாகப் பயணம் ஒன்றை மேற்கொண்ட பின்னர் இளவரசர் நொறோடோம் சிஹானோக் உட்பட அரசியற் தலைவர்கள் அனைவருமே வியட்னாமிய குடிமக்களின் மனித உரிமைகள் பற்றிப்பேச ஆரம்பித்துள்ளார்கள். அது பயனளிக்கப்போவதில்லை. கொலைகளை எதிர்க்கும் கொள்கையை ஒருசில கம்போடியர்களே அக்கறை கொண்டு பார்க்கிறார்கள்.

மே மாதத்துத் தேர்தலில் எந்த அரசு பதவிக்கு வந்தாலும் வியட்னாமியக் குடியேற்றம் ஒரு பிரச்சனையாகவே இருக்கப்போகிறதென்றே அநேகமான கம்போடிய அரசியலாளர்கள் கருதுகிறார்கள். கம்போடியாவில் பிறந்த வியட்னாமியரை அங்கேயே தங்கவிட்டுப் புதிதாக வந்தேறியவர்களை ஐ. நாவின் அகதிகளுக்கான தூதுவரின் மிகக் கவனமான மேற்பார்வையின் கீழ் நாடு கடத்துவதே சிறந்தது என்பதே பலரின் அபிப்பிராயமாகும். இவ்வாறான குடியியற் பண்பாட்டிற்குத் தேவையான பொறுமையோ அல்லது ஈடுபாடோ கமர்றூச் தலைவர்களுக்குக் கிடையாது. நொம் பென் செய்தி ஏடொன்றிற்குச் செவ்வி வழங்கிய கியூ சம்பான், ''வியட்னாமிய மக்களுக்கெதிரான தாக்குதல்கள் தொடரும்'' என்று உறுதியளித்துள்ளார்.

'' நொம் பென்னிலுள்ள வியட்நாமியர்களுக்கெதிரான கைக்குண்டெறிதல் போன்ற நிகழ்வுகள் நிச்சயமாக இடம்பெற்றுக்கொண்டேயிருக்கும். நிலைமை சாத்தியமற்றதாகவும், பாதுகாப்பற்றதாகவும், மிகவும் சிக்கல் நிறைந்ததாகவும் இருக்கும் என்று எதிர்பார்க்கலாம்'' என்று ஆருடம் கூறியுள்ளார் அவர். கம்போடியாவில் சமாதானம் என்பது துரதிஷ்ட வசமாக கமறூச்சின் நிலைப்பாட்டிற்கே ஒரு அச்சுறுத்தலாகும். ஆனால், அமைதியாக மரணிக்கும் நோக்கம் அதற்கில்லை. ●

நொம்பென்னில்
நொன்மொறேயூ.

அமைதியைக் குலைக்கும் சதி

சென்ற வாரம் பூட் ரோஸ் காலி நகரத்தில் செலவிட்ட 30 மணித் தியாலங்களும் நொம் பென் தொல்லைகளுக் காகக் காத்திருந்தது. ஐ. நாவின் கவசவாக னங்களும் போராயத்த நிலையிலான அதன் படையணிகளும் பகலிர வென்றில்லாது கம்போ டியத் தலைநகரில் காவ லுலா வந்து கொண் டிருந்தனர். தமது தலைமைச் செயலகத் திற்கு வெளியே சீமெந் துச் சுவர்களுக்கு மேலே மிகமிக அவசரமாக, உயரமான வேலியமைத் தனர். சட்டத்திற்குள் நுழைய விரும்பும் எவ ரும் பாதுகாப்புச் சோத னைகள் பலவற்றைக் கடக்க வேண்டியிருந் தது. ஐ. நா. செயலா ளர் நாயகத்தின் வரவுக் கான வெளிப்படைக் காரணம் ''பக்கச்சார் பற்ற சூழ்நிலை'' யை உருவாக்குவதில் அமைதி காப்போர் எந்த அளவு முன்னேறியுள்ளனர். என்பதைக் கண்டு கொள்வதாகும். இது அடுத்த மாதம் நடை பெறவுள்ள தேர்தலுக் கான தாகும். இதற் கான விடையை மேல திக பாதுகாப்பு நடவ டிக்கைகள் பொய்ப் பித்துவிட்டன. அதிலே அவர்கள் தோல்வியே கண்டனர்.

இதைவிட வேறுவித மாக எவ்வாறு அவர் கள் செய்திருக்கக்கூடும் என்பது கற்பனைக்கெட் டாத விடயம் நொம் பென்னில் வியட்நாமி யர்களால் அமைக்கப் பட்ட அரசோடு 18 மாதங்களுக்கு முன்னர் கமர்ரூச்சினர் அமைதி காக்கச் சம்மதித்த போது மாவோப் புரட் சியாளர்களின் இந்த முடிவு தம்மைச் சுதா கரித்துக் கொள்வதற்கா னது எனப் பல பார் வையாளர்கள் சந்தே கித்தனர். இந்தக் குழு ஆயுதங்களைக் களைய மறுத்தபோதும், பின் னர் சம்பிரதாய பூர்வ மாகத் தேர்தல் நடவ டிக்கைகளைப் புறக்க ணித்தபோதும் மேற் சொன்ன சந்தேகம் வலுப்பெற்றது. பொல் பொட் 1985 ல் உத்தி யோகபூர்வமாகப் பதவி விலகிய பின் கமரூச் சின் பெயரளவிலான தலைவராகவுள்ள கியூ சம்பான் தேர்தல்களைக் குலைப்பதற்கான தனது நோக்கத்தைச் சென்ற வாரம் உறுதிபட வெளி யிட்டார்.

நாட்டின் சகல இடங் களிலும் கடந்த சில வாரங்களாகக் கிளர்ச்சி யாளர்கள் தொடர்ச்சி யாக இனவழி வியட் னாமியர்களையும், கம் போடிய குடிமக்களை யும் அமைதி காக்கும் குழுவின் உறுப்பினர்க ளையும் தாக்கியும் கொன்றுமுள்ளார்கள். சென்ற வாரத்தில் 6. ஐ. நா. பணியாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். பூட்ரோஸ் காலி வந் திருந்தபோது கொம் போங் தொங் மாநிலத் தில் மிகத் துலாம்பர மாக ஐ. நா. அடையா ளம் இடப்பட்ட வாக னத்தில் சென்ற யப்பா னிய தேர்தல் மேற் பார்வையாளரைக் கம ரூச் துப்பாக்கியாளர் கள் பதுங்கியிருந்து சுட் டுக்கொன்றனர். இவ் வகையான பணிகளில் ஈடுபடுவோர் துப்பாக் கிச் சூட்டின் போது இடைநடுவே அகப்படும் சந்தர்ப்பம் அதிகமா .கும். ஆனால் ஐ. நா வின் முயற்சியின் உறுப் பினர்கள் சிலர் வேண் டுமென்றே இலக்குவைக் கப்படுகிறார்கள். இந்த மாதத்தின் முற்பகுதி யில் நொம் பென்னிலி ருந்து 70 கிலோமீட்ட ருக்கப்பால் பல்கேரியா வைச் சேர்ந்த அமை திக் குழுவினர் இரண்டு கமரூச் படையி னரை இரவுணவுக்கு அழைத்துள்ளனர். அந்த இரண்டு விருந்தி னரும் உணவருந்தி வெளியேறும் வரை அவ் வைபவம் வெற்றிகரமா கவே நடந்தேறியது. அவர்கள் சென்று திரும் பியபோது மேலும் 10 துப்பாக்கியாளர் உடன் வந்து சுடத்தொடங்கிய தில் 3 விருந்தளித்த பல்கேரியர்கள் உயிர் துறக்க நேரிட்டது. கொலையாளிகள் இரு ளில் தப்பிவிட்டனர்.

இதுவரை அமைதி ஒப் பந்த விதிகளை நிறை வேற்றும் விடயத்தில் அமைதிகாப்போர் உறு தியாகவுள்ளனர். ''ஐ. நா. வைப் பயமுறுத்த முடியாது'' என்று பூட் ரோஸ் காலி சென்ற வாரம் அறிவித்திருந் தார். ''தேர்தல்கள் நடந்தேயாகும்'' என் றார் அவர். நாட்டின் ஏறத்தாழ 2000 வாக் குச்சாவடிகள் உத்தி யோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட் டிருக்குமோ, என்னவோ கவனமாகத் திட்டமிடப் பட்ட பயங்கரவாதத் திட்டங்கள் அநேகமான வாக்காளர்களை அச்சு றுத்தி வாக்களிப்பு முடி வுகளைப் பொருளில்லா ததாக்கிவிட முடியும். ''அதிகம் தேவை யில்லை. 20 கைக்குண்டு வரையில் சரியான இடங்களில் வெடிக்க வைக்கப்படுமானால் தேர்தலை இல்லாமற் செய்துவிட முடியும்', என்பது ஒரு மூத்த ஐ. நா. அதிகாரியின் கருத்தாகும்.

துப்பாக்கிச்சூடு

அச்சமடைவதற்காக சாதாரண கம்போடி யர்களைக் குறைகூறு தல் சரியல்ல, சென்ற மாதம் கொம்போங் தொம் மாநிலத்தில் திரைப்டம் பார்க்கச் சென்றவர்கள் மீது கமரூச் போராளிகள் எனச் சந்தேகிக்கப்படு வோர் சுட்டதில் 29 பேர் மாண்டனர். நொம்பென் அரசுப் அர சியல் வன்முறைகளில் ஈடுபட்டுவரும் விடயம் வாக்காளர்களாக வர விருப்பவர்களுக்கு ஆறு தல் தருவதாக இல்லை. 7 மாதகாலப் பகுதியுள் 50 எதிர்க்கட்சி ஊழி யர்களின் மரணத்திற்கு அரசே காரணம் என்று குற்றம் சாட்டப்படுகி றது. ''மார்ச் திங்க ளில் போலவே ஏப்ரலி லும் வன்முறைகள் தொடருமாயின் மே மாதத்தில் எவ்வாறு

தேர்தலை நடத்த முடியும் என்பது புரியவில்லை'' என்கிறார் ஐ. நா. அதிகாரி ஒருவர்.

இவ்வளவிருந்தும் மரணங்களும், ரேசின் தந்திரம் மிக்க வாக்காளருக்கெதிரான பயமுறுத்தல்களும் கடந்தவாரம் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்ட தேர்தல் பிரசுரங்களைப் பாதிக்கவில்லை. அரசின் கம்போடிய மக்கள் கட்சி நொம்பென்னில் வெறித்தனமான தேர்தல் கூட்டமொன்றை நடத்தியது. கட்சியின் பிரதான கொள்கையை அன்றைய கூட்டத்தின் பிரதான பேச்சாளரான கட்சித்தலைவர் சீசிம் அறிவித்தபோது ஆதரவாளர்கள் கரகோஷம் எழுப்பி ஆரவாரித்தார்கள். கமரூச்சை மட்டுப்படுத்த இப்போதைய அரசால் மட்டுமே முடியும் என்பதே அவரது அறிவிப்பாகும். ''இனப்படுகொலைக் காரரான பொல்பொட்டிடமிருந்து உங்களைக் காத்தது எந்தக் கட்சி?'' பொல்பொட் திரும்பவராமல் தடுக்கும் துணிவும் நம்பிக்கையும் எந்தக் கட்சியிடம் உண்டு? என்ற வினாக்களை எழுப்பினார் அவர்.

ஏனைய 19 கட்சிகளுட் பல சிறிய அளவிலேயே பிரசார உத்திகளை மேற்கொண்டன. நொம்பென்னைச் சுற்றி பிரச்சாரச் சுவரொட்டிகளை ஒட்டினர். தேர்தல் அறிக்கைகள், அறிவிப்புகளை விநியோகித்தனர். பயங்கரவாதிகளின் தாக்குதலுக்கு அஞ்சி வேட்பாளர்கள் பொதுக் கூட்டங்கள் நடத்துவதிலிருந்து பின் வாங்கிவிட்டனர். எல்லோருக்கும் தெரியக் கூடியதான விதிவிலக்காக இருந்தவர் இளவரசர் நொறோடோம் சிஹானூக்கின் மகனான இளவரசர் நோறோடோம் ரணாரித்ஆவார் மிக அண்மைக்காலத்தில் சிஹானூக் நாட்டுக்கு வெளியே தான் காலம் தள்ளியுள்ளார். சென்ற வாரம் பூட்ரோஸ்காலியை வரவேற்பதற்காக நாடுதிரும்பினார். சுருக்கமாகப்'பன்சின்பெக்' என அழைக்கப்படும் சுதந்திர நடுநிலை அமைதிக் கூட்டுறவுக்கான சிஹானூக்கின் ஆதரவுக் கட்சியான ஐக்கிய முன்னணியைக் கொண்டு செலுத்தும் பொறுப்பு ரணாரித்தின் தலையிலே சுமத்தப்பட்டது. கம்போடியாவில் 50 லட்சம் வாக்காளருள் 400,000 பேரைத்தன் கட்சி உறுப்பினராக்கியுள்ளதாக அவர் சொல்கிறார்.

சிஹானூக் கட்சியினரின் சவாலையே அரசு மிகுந்த கவனத்தோடு நோக்குகிறது. சென்ற சில மாதங்களில் கொல்லப்பட்ட அரசியல் பணியாளர்களிற் பலர் பன்சின்பெக்கைச் சேர்ந்தவர்கள். கமரூச்சின் தலைவர்கள் தமது கட்சியைப் பக்கச்சார்பில்லாத அமைதி வழிக்குத் திருப்ப முயன்று வந்திருக்கிறார்கள். கியூ சம்பான் சமீபத்தில் ரணாரித்தையும் ஏனைய முக்கிய தலைவர்களையும் சந்தித்துத் தேர்தல் போட்டியிலிருந்து அவர்களை விலகச் செய்யச் சினேக வழியில் முயன்றிருக்கிறார். நாட்டின் பதிவு செய்யப்பட்டவர்களுள் 13 லட்சம் வாக்காளர்கள் வியட்னாமிய சட்டவிரோதக் குடியேற்றக்காரர்கள் என்றும், அவர்களது வாக்குக்கள் இப்போதே சீபீபீயின் சட்டைப்பைக்குள் உள்ளதென்றும் கமரூச்சின் தலைவர் அவர்களிடம் கூறியுள்ளார். இது ஒரு மதிகெட்ட மதிப்பீடுதான் என்றாலும் மறுக்கவோ, உறுதிப்படுத்தவோ முடியாத ஒன்றாகும். இத்தத் தில்லுமுல்லுகள் நிறைந்த தேர்தலில் பங்கு கொள்வதென்பது சீபீபீயின் தவிர்க்கமுடியாத வெற்றிக்குச் சட்டபூர்வ அந்தஸ்து வழங்குவது போலாகும் என்று கியூ சம்பான் விவாதித்துள்ளார். தேர்தலிலிருந்து விலகிக்கொள்ளும் எந்த ஒரு குழுவிற்கும் 60 லட்சம் டாலர்கள் சன்மானம் தருவதாக அவர் உறுதியளித்ததாகவும், அந்தக் கவர்ச்சிப் பொருளை எவருமே ஏற்றுக் கொள்ளவில்லை என்றும் வதந்தி உலவுகிறது. ''சமாதான உடன்படிக்கைக்கும் தேர்தல் வழிக்கும் பன்சின்பெக் மிகவும் தீவிர இணக்கப்பாடுடையது' என்கிறார் ரணரித். ''நாங்கள் விலகிக் கொள்ளப் போவதில்லை'' என்பது அவரது முடிவு.



பூட்ரோஸ் காலியை (கண்ணாடியோடு இருப்பவர்) சிஹானூக் (அறிமுகப்படுத்துபவர்) சந்தித்தபோது, நொம்பென்னில் ஐ.நா. பணியாளர்கள் வாக்காளராகப் போகிறவர்களுக்கு வாக்களிக்கும் முறையை பயிற்றுவிக்கிறார்கள்.

கமரூச்சின் இந்த மனோவியாதியின் பின்னால் கடுகளவு நியாயமும் மறைந்துள்ளது. 1978 ல் கமர்ரூச்சைப் பதவியிலிருந்து இறக்கியபின் வியட்னாமியரால் கட்டியேற்றப்பட்ட நொம்பென்னிலுள்ள அரசு நாட்டின் பலம் வாய்ந்ததும் நவீன ஆயுதபலம் மிக்கதுமான இராணுவத்தின் பெரும் பகுதியையும் 80 விழுக்காடு கிராமப்புறங்களையும் தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ளது. எதிர்க்கட்சிகளை அநுகூல மற்ற நிலையில் வைத்திருக்கக்கூடிய வகையில் இப்போதுள்ள அரசு அதிகார துஷ்பிரயோகங்களில் ஈடுபட்டு வருகிறது. என்பதற்கு அதன் சமீபகால நடவடிக்கைகள் சான்று பகர்வனவாகும்.

கமரூச்சின் இப்போதைய நிலைப்பாடு அவர்களுக்கு அதிக பயனளிக்கப் போவதில்லை. சமாதான உடன்படிக்கையைப் பின்போடச் செய்து தமது அதிஷ்டத்திற்குக் காத்திருக்க

வேண்டும். மிகக் கவனமாக வரையறுக்கப்படும் பயங்கரவாத நடவடிக்கை அவர்களுக்குத் தேவைப்படும் காலஅவகாசத்தையளிக்கக்கூடும். 16,000 படையினரோடும் 3500 பொலிஸாரோடும் அமைதி காப்போர் சகல இடங்களிலும் கண்காணிப்பு நடத்திக்கொண்டிருக்க முடியாது. ''ஒவ்வொரு படை வீரனை விட்டு வைக்குமளவிற்கு எம்மிடம் படையணி இல்லை.'' என்கிறார் கம்போடியாவிலுள்ள ஐ. நா. படையின் துணைத் தளபதியான பிரிகேடியர் ஜெனரல் றொபட் றிடியூ. எங்கு வன்முறை அதிகரிக்கக் கூடும் என்று அஞ்சப்படுகிறதோ அங்கே தமது படைவலுவைக் கூட்டுவதே அமைதி காப்போரின் நோக்கமாகும். அரசியல் தொல்லைகளும், பயமுறுத்தல்களும் நிகழக்கூடிய இடங்களை ரோந்துப் படையினர் கண்காணிப்பர். இதற்குமேல் ''பேச்சுவார்த்தை, தூண்டுதல், கருத்துப்பரிமாறல், இராசதந்திரம்'' என்பனவே உதவக்கூடியவை என்பதே சென்ற வாரம் பூட்ரோஸ் காலி வழங்கிய ஆலோசனையாகும். கம்போடியாவில் வளர்ந்து வரும் வன்முறைகள் மத்தியில் இந்த வார்த்தைகள்முன்னெப்போதையும் விடப் பலவீனமானவையாகும்.

நொம்பென்னில்
றொன்மொறேயு
றியூஸ்வீக் ஏப், 19, 1993

துணிகரமான புதிய உலகம்

தேர்தல் முடிந்தது கம்போடிய மக்கள் எதிர்காலத்துக்கு முகங்கொடுக்கிறார்கள்

இளம் கமரூச் போராளிகள் வாக்குச்சாவடியில் தங்களுடைய வாக்குகளைப் போடுவதற்குக்காத்துக்கொண்டு நிற்கின்றார்கள். தாய்லாந்து நாட்டு எல்லையில் உள்ள வாக்குச்சாவடியில் தங்களுடைய வாக்குகளைப் போடுகின்றார்கள். தாங்கள் எதிர்த்த தேர்தலில் நிர்வாகத்தை அழிப்பதற்குச் சபதம் இட்ட சில தளபதிகள் வாக்குப் போடுவதற்குப் போராளிகளை அனுப்பிவைத்துள்ளனர்.



ஐ. நா. வின் மாற்றத்தை உருவாக்கும் அதிகாரசபைக்கு மே 23, 28 ம் திகதிகளில் மிகவும் அமைதியாக நடைபெற்ற தேர்தல் 22 ஆசனங்களைக்கொண்ட இவர்களுக்குச் சந்தோஷமான அதிர்ச்சியைக்கொடுத்தது. இரண்டு மில்லியன் டொலரில் உருவாக்கப்பட்ட அமைதித் திட்டம் வெற்றிகரமாக முடியும் என நம்பப்பட்டது. 4.2 கோடி கம்போடிய மக்கள் இந்த ஜனநாயக முயற்சியில் பங்குபற்றினார்கள். பொல்பொட் என்னும் மிகவும் கொலையாளியின் அச்சுறுத்தலுக்கு முகம் கொடுத்தார்கள். தனது 1975 தொடங்கி 1978 வரையான ஆட்சிக் காலத்தில் இலட்சக் கணக்கான கம்போடிய மக்களைக் கொன்றொழித்த கமரூச், ''இந்தத் தேர்தல் ஐ. நா. வினதும், வியட்நாமினதும் ஹனோயின் நொம்பென் ஆட்சியையும் கம்போடிய மக்கள் கட்சியையும் (CPP) சட்டபூர்வமாக்குவதற்கு மேற் கொள்ளப்பட்ட ஒரு திருக்கூத்தே'' என்று குற்றஞ்சாட்டியுள்ளது. போராளிகள் வன்செயலை முற்றாகக் கைவிடவில்லை. இவர்களின் வன்செயலினால் ஒரு UNTAC அங்கத்தவர் உட்பட 17 பேர் கொல்லப்பட்டனர். இதற்கிடையில் நடந்த தாக்குதல்கள் தேர்தலைக் குழப்பி அடித்தன. ஆனால் அவதானிகள் இத் தேர்தல் சுதந்திரமாகவும் ஜனநாயகமாகவும் நடந்ததாக அறிவித்துள்ளார்கள். நாடாளுமன்றம் கெதியில் கூடிச் செப்ரெம்பர் மாதம் அளவில் புதிய யாப்பை உருவாக்கும் முயற்சியில் ஈடுபடும். இக்காலகட்டத்தில் ஐ. நா. அமைதிகாக்கும் குழு நாட்டைவிட்டு வெளியேறும். இத் தருணத்தில் நொம்பென், நாட்டில் 15 வீதப் பகுதிகளை கமரூச் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் என்ற உண்மைக்கு முகம்கொடுக்கவேண்டும். இத் தேர்தல் சுதந்திரமாகவும் ஜனநாயகமாகவும் நடைபெறவில்லை என்றும் தாங்கள் தொடர்ந்தும் போராடுவோம்

எதிர்ப்பவர்களது திரளணி

என்றும் வானொலி மூலம் அறிவித்தார்கள். ஆனால் இப் போராட்டம் தொடர்வதற்குரிய தந்திரோபாயங்களைக் கையாண்டார்கள். ஒரு நகரில் 500 கமரூச் போராளிகள் ஏ. கே. 47 ரக ரைபிள்களைக் கைவிட்டு சுலோக அட்டைகளுடன் சென்று தங்கள் எதிர்ப்புக்களைத் தெரிவித்தார்கள். ஆனால் UNTACயின் வேண்டுகோளுக்கு அமைய அமைதியாகக் கலைந்து விட்டார்கள். சீயெம் ரீப் என்னும் நகரில் மிகவும் பயங்கரமான தளபதி ராமொக்கிற்கு விசுவாசமான போராளிகள் மக ஜர் மூலம் தேசியசமாதான அரசாங்கத்தின் கீழ் திரும்பத் தேர்தல் நடாத்தப்பட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்கள். கமரூச் என்ன செய்ய எத்தனித்தார்? சிலர் நினைத்தார்கள் பொல்பொட்டின் சகாக்கள் அணியைவிட்டுப் பிரிகின்றார்கள். ஆனால் கடைசி நிமிட முயற்சியில் கம்போடியாவின் அரசியல் எதிர்காலத்தில் பங்கு பெறுவதற்கு ஈடுபட்டார்கள். சீ பீ பீ யின் நொம்பென் பிரதமர் கன்சன் ஆட்சியின் இளவரசர் நொரோடும் ரனரிட்டினுக்கும் கமரூச் அரசாங்கத்தில் இடம் கொடுப்பதாகத் தெரிவித்துள்ளார்கள். சீபீபீ தாங்கள் வெற்றியடைந்தால் கமரூச்சை விட்டு வைக்கப்போவதில்லை என்று கூறியிருந்தார்கள். ''எங்களுடைய வாக்குக்கள் பன்சின்பிக் கட்சிக்குக் கொடுப்போம்'' என இப் புரட்சிக்குழு கூறியுள்ளது. கமரூச் புத்திசாலிகள். தேர்தலில் பங்கு பற்றினால் மிகவும் சொற்ப ஆசனங்களைப் பெற்றிருப்பார்கள் ஆனால் பன்சின்பிக்கு தங்களுடைய வாக்குகளைக் கொடுப்பதானால் கம்போடிய அரசாங்கத்தில் இணைவதற்கு அது ஒரு நல்ல நிலையிலுள்ளது என்று தாய்லாந்தின் மிகப் பெரிய புதினப்பத்திரிகையான ரைநாக் கூறியுள்ளது. புரட்சிக் குழுவிற்கு சாதகமான நிலையும் உண்டு. அப்பகுதிக்குச் சென்றவரும் பயணிகள் அப்பகுதிகள் நல்ல முறையில் நடத்தப்படுகின்றன என்றார்கள் நொம்பென் ஆட்சிக்குள் இருக்கும் பிரதேசத்தில் உளவுகள் தலையிட்டாடுகின்றன. புதிய கம்போடியா கமரூச் அரசுக்குப் பகைவனாகத் தான் அமையும். தங்களுடைய கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உலோகப் பொருட்களும், மரவகைகளும் நிறைந்திருந்தாலும் நாட்டில் கெல் விளையும் முக்கிய பிரதேசத்தில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டதாக அமையும். சர்வதேச நெருக்கடியினால் தாய்லாந்தின் தளபதிகள் கமரூச்சுடன் நடத்திக்கொண்டிருக்கும் மரக்கட்டை, வைரம் போன்ற வியாபாரங்களைக் கைவிடவேண்டிவரும்.



இளவரசர் ரணரீட்

உண்மையாக வெளிக்காணிகள் கம்போடியாவில் அமைதிக்குச் சாதகமாகவுள்ளன. தாய்லாந்து, வியட்நாம் உறவுகளும், வாணிப வளர்ச்சியும் கடந்த வருடம் நடந்த ராஜதந்திரப் பயணங்களால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. ஹனோய் ஏசியனில் சேர விரும்புகின்றது. கமரூச்சின் கட்டுப்படுத்தப்பட்ட சீ. பீ. பீ எடுக்கும் முயற்சிகளுக்கு இராணுவ நடவடிக்கைகளைக் கைவிட்டு இராசதந்திர நடவடிக்கையில் ஈடுபடுவதை ஆதரிப்பார்கள். இவர்கள் கம்போடியாவில் இருந்து வெளியேறுவது கன்சன் புதிய அரசாங்கத்தில் தலைமையை வகித்தாலும் நொம்பென்னை ஏசியன் ஆதரிப்பதற்கு வழிவகுக்கும்.

கமரூச்சின் ராணுவ நடவடிக்கையின் மூலம் கொடுக்கவேண்டி வந்தால் ஒக்டோபர் மாதத்திற்கு முன்னால் நடைபெறமாட்டாது. அனேகமாகப் போராளிகள் மாரி காலத்தில் இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை. ஆனால் இப்படியொரு நிலையான செயலில் ஈடுபடுவார்களா என்பது ஒரு கேள்விக்குறியாகும். இவர்களுடைய நீண்டகால நண்பனாகச் சீனாவும், வியட்நாமும் போலச் சர்வதேச உறவுகளில் ஈடுபட்டிருந்தாலும் சீனாவின் இராணுவ உதவிகள்



கன்சன்

ஒரு முடிவிற்குக் கொண்டு வந்துள்ளது. யூ. என், ரீ, ஏ. சி. அமைதிக் குழுவில் அங்கம் வகித்துள்ள சில அங்கத்தவர்களை கடந்த மாத கமரூச் தாக்கியது. இவ் உதவிக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டது. மே மாதம் 3ம் திகதி செம்றிப்பில் கமரூச் நடாத்திய தாக்குதல் இவர்கள் கெரில்லா நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர் எனவும் தாங்கள்கைப்பற்றும் பிரதேசங்களைத் தாங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள முடியாது எனவும் வெளிக்காட்டுகின்றது.

கமரூச் அரசாங்கத்தில் பங்கு பெற முடியாமல் போனதினால் கம்போடியா மிகவும் நெருக்கடியான நிலைக்குச் சென்றுகொண்டிருக்கின்றது. ஆனால் இதைச் செய்யக் கூடிய ஒரே நபர் இளவரசர் நொராடும், சிகானோக் அவர்களுமே இந்நாட்டு மக்களின் தர்மராசாவே ஒர் நீதியான ஆட்சியாளர் தற்போது நாட்டின் தேசிய

அரசியலில் தலைவிரித்தாடும் ஊழல்கள் அத்தனைக்கும் அப்பாற் பட்டவர். எப்படி அரசாங்கம் அமைந்தாலும் யார் பிரதமராக வந்தாலும் சிகனோக் நாட்டின் முதல்வராக பதவியில் அமர்த்தப் படுவார். இவர் நாட்டின் மிகவும் செல்வாக்குடையவராகவும் இருப்பார். 1975ல் கமரூச் அரசாங்கத்திற்கு வந்தநேரம் நாட்டின் சின்னமாக விளங்கியவர். தொடர்ந்தும் திகழுவார். 4 வருட காலம் தன்னுடையஅரண்மனைக் கைதியாக வைத்துக்கொண்டு தன்னுடைய நாட்டுமக்களையும் தன்னுடைய குடும்ப அங்கத்தவர்களையும் வெட்டிக்கொன்றதும் இவருக்கு ஒரு கசப்பான சம்பவமாக இருக்கும். முன்னாள் கமரூச் அரசாங்கத்தில் சேர்த்துக் கொள்ளக் கொடுத்த வாக்குகளை மாற்றிக் கொண்டார்.

காலம் புரட்சிக்குழுவின் பக்கம் உள்ளது. தாங்கள் கைப்பற்றிய பிரதேசங்களை வைத்துக்கொண்டு தங்களால் ஒத்துக்கொள்ளக்கூடிய நிர்ப்பந்தங்களைக் கொடுக்கும் வரை நொம்பெனுக்கு தொல்லை கொடுத்துக் கொண்டிருக்கலாம் தேர்தலும் முடித்துவிட்டது. யூஎன்ரீஏசி வெளியேறும் நிலையும் வந்துவிட்டது. ஆனால் போராளிகளை அழித்தொழிக்கக் கூடிய ஒரு ராணுவம் இல்லை. என்பதும் போராளிகளுக்குத் தெரியும் ஆனால் ஒரு முழுமையான உள்நாட்டு யுத்தம் நடைபெறுவதற்கான சாத்தியக்கூறுகளும் இல்லை. 15 மாதம் ஐ.நா அமைதி காக்கும் குழு கம்போடியாவில் தங்கியிருந்தபோது பலவிதமான சம்பவங்களுக்கு முகம் கொடுக்க வேண்டியிருந்தது. அவைகளில் சாளிசப்ளின் திரைப்படங்கள், உல்லாசப்பயணங்களும், விபச்சாரமும், கட்டுப்பாடில்லா வாணிபமும் தாங்கள் உலகத்தில் தனித்தவர்கள் இல்லை என்ற உணர்வும் தற்போது கம்போடிய மக்கள் ஒருவரோடொருவர் நடந்துகொள்ள வேண்டும் என்ற தேவை அண்மையில் நடந்து முடிந்த தேர்தல் நாட்டின் பிரச்சனைக்கு ஒரு திடீர்தீர்வைக்கொண்டுவரப்பேவாதில்லை. ஆனால் கொலைக்களங்கள் சரித்திரமாகி விட்டன.

ஏசியாவீக், ஜூன் 9, 1993

பயங்கரவாதத்தின் தொட்டில்

தம்நாடு கடந்து வந்த முஸ்லிம்கள் பெஷாவர் நகரை வீறுகொண்ட ஆயுதந்தாங்கிய இஸ்லாமின் புதிய தலைநகராக்கி உள்ளனர்

தனியொரு விவாத்தை விட, அந்த பாக்ஸ் (FAX) செய்தி வழமையான பயங்கரவாதிகளின் மிரட்டலாகும். எகிப்தின் தடைசெய்யப்பட்ட கமா அல் இஸ்லாமியா (இஸ்லாமியக் குழு) வின் பெயரால் அந்தச் செய்தி முதலீட்டாளர்களை எச்சரிக்கை செய்துள்ளது. எகிப்தில் முதலீடு செய்துள்ள வெளி நாட்டில் வதியும் எகிப்தியர்கள், அரேபியர்கள் மற்றும் பிறநாட்டோர் யாவரையும் எகிப்திலுள்ள தங்கள் முதலீடுயாவற்றையும் அப்புறப்படுத்தும் படியும், அந்த எச்சரிக்கை கூறிற்று. மேலும் எகிப்தில் வதியும் தங்கள் குடிமக்களைத் திருப்பி அழைக்கும்படி பிறநாட்டரசுகளை அந்தச் செய்தி அறிவுறுத்தியது. இதற்குச் செவிசாய்க்கத் தவறின் ''சட்டபூர்வமான தண்டனையை'' எதிர்பார்க்கும் படியும் அச்செய்தி சொல்லிற்று. கடந்த சில மாதங்களாகக் கமா அல் இஸ்லாமியா எகிப்தில் பயங்கரவாதத்தைப் பரப்பியுள்ளது. பல ''டசின்'' கணக்கான காவல்துறையினரை அது சுட்டுக்கொன்றது. வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகள் பலரைத் தாக்கி, இதுவரை மூவரைக் கொன்றுள்ளது. அந்தப் பாக்ஸ் செய்தியிலுள்ள விசித்திரமென்னவென்றால் அது எகிப்தின் தலைநகர் கெயிரோவில் உற்பத்தியாகவில்லை என்பது தான். அது 2,300 மைல்களுக்கப்பால் பாகிஸ்தான் நாட்டில் பெஷாவர் நகரிலுள்ள எல்லோருக்கும் பொதுவான தொலைபேசிக் காரியாலயத்தில் இருந்து கிளம்பியுள்ளது. நாலு வாரங்களாகப் பிறநாட்டு உளவு ஸ்தாபனங்களின் உதவியுடன் அச்செய்தியை அனுப்பியவர் யாரென்பதை ஆராய்ந்த பாகிஸ்தான் அதிகாரிகள் தோல்வியைச் சந்தித்துள்ளனர் மூத்த பாகிஸ்தான் அதிகாரி ஒருவர் ''பெஷாவர் மகாணக் காவல்துறையினர் அயராது உழைக்கின்றனர்'' என்றார். ஆனால் அந்தச் செய்தியை அனுப்பிய பாக்ஸ் இயந்திரத்தை இயக்குபவருக்குக்கூட செய்தியை அனுப்பியவரின் அடையாளம் தெரியவில்லை.

துப்புத் துலக்குவோருக்குப் பெரும் தடங்கலாக இருப்பது பெஷாவரில் பெருந்தொகையான சந்தேக நபர்கள் இருப்பதுதான். கமா அல் இஸ்லாமியா இந்த நகரத்தில் தனது கிளையை வைத்திருக்கின்றது. இஸ்லாமிய உலகில் உள்ள இதுபோன்ற ஒவ்வொரு குழுவும் தனது கிளையை பெஷாவரில் வைத்திருக்கின்றது. 1980ல் முற்பகுதியில் ஜோர்தான் நாட்டு இஸ்லாமியச் சட்டப்பேராசிரியர் அப்துல்லா அசாம் என்பவர் ருஷ்ய ஆக்கிரமிப்பாளருக்கெதிராக ஆப்கானியர் நடத்தும் யுத்தம் ''சுத்தமான புனித யுத்தம்'' என்று பிரகடனம் செய்தார். இதன்பின் முஸ்லிம் உலகில் நாத்திசையிலுமிருந்து ஆயிரக்கணக்கானோர்பெஷாவரிலுள்ள ஆப்கான் போராளிகளின் தலைமைச் செயலகத்திற்கு வரத்தொடங்கினர். மத்திய-கிழக்கு இந்தியா, பிலிப்பைன்ஸ், சீனா என்ற நாடுகளிலிருந்தெல்லாம்இவர்கள் இங்குவந்து குழுமினர் யுத்த முனையில் இவர்கள் காட்டிய வீரம்

ஆப்கானியர் வியக்கும் வண்ணம் இருந்தது 1989 ல் ரஷ்யா நாட்டை விட்டு விலகியபின் போராடி உரமேறிய இந்தப் போராளிகளிற் பலர் தங்களின் நாடுகளுக்குத் திரும்பி இஸ்லாமிய அடிப்படைவாதத்தை நிலைநிறுத்தப் போரிடத் தொடங்கினர் ஒருசில அடிப்படைவாதிகள் போரிடும் பிறநாடுகளுக்கும் ஆயுதம் ஏந்தச் சென்றனர். நியூயோர்க் நகரில் உலக வர்த்தக மையத்தில் நடந்த குண்டு வெடிப்பை ஆராய்ந்த புலனாய்வுத் துறையினர் குற்றவாளிகள் இருப்பிடம் பெஷாவர் என்றுள்ளனர்

சில தீவிரவாதிகளுக்கு வெளி நாடுகளில் இருக்கவேண்டிய நிர்ப்பந்தம் உண்டு. தடைசெய்யப்பட்ட இயக்கங்களுடன் இவர்களுக்குரிய தொடர்பால் இவர்கள் தங்கள் நாடுகளுக்குத் திரும்ப முடியாத அவலம். திரும்பினால் கைதாவது திண்ணம். எகிப்திய சட்டப்படி வெளிநாடுகளில் இராணுவப் பயிற்சி பெறுவது பெரும் குற்றமாகும். இதற்கு அச்சட்டம் மரண தண்டனை விதிக்கின்றது. புதிதாக இயற்றப்பட்ட இந்தச் சட்டம் ஆப்கான் யுத்தம் பயங்கரவாதிகளின் பயிற்சிப் பாசறை என்ற பயத்தால் உருவாக்கப்பட்டுள்ளது. பிறந்த நாட்டைப் பிரிந்து வாழும் இவர்கள் தங்கள் நாட்டை ஆளும் வர்க்கத்தின் மீது ஆறாச் சினம் கொண்டுள்ளனர். பெஷாவரில் தங்கியுள்ள இவர்களாற் பயங் கொண்ட மத்தியகிழக்கு அரசுகள் இவர்களை நாடுகடத்தும்படி பாகிஸ்தானைக் கேட்டுள்ளன- அதன்படியே பாகிஸ்தான் அரசும் பதிவற்ற வெளிநாட்டவரை பெஷாவரிலிருந்து வெளியேறும்படி கட்டளை இட்டுள்ளது. பல இஸ்லாமியப் போராளிகள் இதை யேற்று ஆப்கானிஸ்தானுக்குத் தங்குமிடத்தை மாற்றியுள்ளனர். ஆனால் ஒரு கணக்கின்படி 535 பிறநாட்டு முஸ்லிம்கள் தொடர்ந்தும் பெஷவரில் குடியிருக்கின்றனர். தாங்கள் ஒரு குற்றமும் செய்யவில்லையென்றும் தாங்கள் நிவாரணவேலையில் ஈடுபட்டிருப்பதாகவும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.

பல்நாட்டு முஸ்லிம் தீவிரவாதிகள் சந்திக்கும் இடமாகவும் பெஷாவர் பயன்படுகின்றது.சென்ற வாரம் முஸ்லிம் அடிப்படைவாதத் தூதுக்குழுவொன்று ஆப்கான் செல்லும் வழியில் பெஷாவரில் தங்கிச் சென்றுள்ளது. இந்தக் குழுவில் எகிப்தின் சட்டபூர்வமாகத் தடை செய்யப்பட்ட முஸ்லிம் சகோதரர் என்ற இயக்கத்தின் உபதலைவரும் சூடான் நாட்டின் இராணுவ அரசின் பின்னணியில் இயங்கும் றசான் அல்டுறாபி என்பவரின் தூதுவரும் அடங்குவர், அல்டுறாபி சூடான் நாட்டின் அதிசக்தி வாய்ந்தவராவார். இவர் ஈரானிய அரசின் நண்பருமாவார் அல்டுறாபி பல முறை பெஷாவருக்கு வந்துபோயுள்ளார். டுனீஷியா நாட்டின் தடைசெய்யப்பட்ட நஹ்தா கட்சியின் நாடு கடத்தப்பட்ட தலைதர் றஷ்த் கனூஷியும், யேமன் நாட்டின் மதவாத எதிர்க்கட்சித் தலவர் அப்துல் முஜீத் ஸின்டானியும் பெஷாவருக்குப் பரிச்சயமானவர்கள்.



"சுத்தமான" புனித யுத்தத்தின் பேரால் பாகிஸ்தானிலுள்ள சந்தையொன்றில் ஆயுதங்கள் விற்கப்படுகின்றன

ஆனால் இந்தத் தலைவர்கள் ஒருவராவது சில சாயம் பெஷாவருக்கு வருகை தரும் ஷேக் ஒமார் அப்துல்றஹ்மானை நெருங்கமுடியாது. பயங்கரவாதத்திற்கு அவர் அவ்வளவு பிரசித்தமானவர். இவர் ஒரு இஸ்லாம் மதப்போதகர். என்னதான் இவர் மறுத்தாலும் உலக வர்த்தக மையக் குண்டு தெடிப்பில் பொலிஸாரால் சந்தேகிக்கப்படுவோரில் பலர் இவருடைய ஆதரவாளர்களே என்று அமெரிக்கா நம்புகிறது. இவருடைய சிஷ்யர்கள் உலகெலாம் பரவிக் கிடக்கின்றனர். இவர்களெல்லோரும் கமாஅல் இஸ்லாமியாவுடன் தொடர்புபட்டவர்களாவார். இடத் தொடர்புடைய குற்றங்களில் எகிப்திய ஜனாதிபதி அன்வர் சதாத் அவர்களுடைய கொலை பிரதானமானது. ஆனால் ஒரு எகிப்திய நீதிஸ்தலம் அப்துல் றஹ்மானை இந்தக் கொலையைத் தூண்டியவர் என்ற குற்றச்சாட்டிலிருந்து விடுதலை அளித்துள்ளது. தற்சமயம் இவரின் குழுவின் ஆப்கானிஸ்தான் பிரிவின் உபதலைவர் முகமட் ஷோக்கி இஸ்லாம்பூலி ஆவார். சதாத்தின் கொலையைச் செய்த கோஷ்டிக்குத் தலைமை தாங்கிய குற்றத்திற்கு இவருடைய சகோதரன் 1982 ல் எகிப்திய அரசால் நூக்கிலிடப்பட்டார். ஷோக்கி இஸ்லாம்பூலி நீதிஸ்தலத்திற்கு வராமல் தலைமறைவாயிருக்கவே விசாரிக்கப்பட்டு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டவராவார். இவர் மீது எகிப்திய கோட்டில் பல குற்றங்கள் சுமத்தப்பட்டுள்ளன. இவருடைய ஆப்கானிஸ்தான் தொடர்பு இதில் முக்கிமமானதாகும்

ஆப்கானிஸ்தானில் நடந்த ருஷ்யாவுக்கெதிரான யுத்தத்தில் போரிட்ட கமாஅல். இஸ்லாமியா அணியை எல்லோரிலும் பார்க்கவும் போர் வல்லமை படைத்தவர்களென்றும், யுத்தப் பயிற்சியில் அதிசிறந்தவர்களென்றும் பார்வையாளர்கள் தெரிவிக்கின்றனர். யுத்தத்தின் உச்சகட்டத்தில் ஆப்கான் கிழக்கு மாகாணம் ஆகிய நான்காரில் இவ்வணியைச் சேர்ந்த 300 வீரர்கள் களத்தில் நின்றனர். தற்போது நிற்பவர் 50 பேராகும். மிகுதிப்பேர் இரகசியமாக எகிப்திற்குச் சென்றுவிட்டனர். இன்னும்

சிலர் போருக்குத் தயாராக யுத்தப் பயிற்சியில் ஈடுபடுகின்றனர். இவ்வாறு ஒரு விஷயமறிந்த அரேபியர் கூறுகின்றார்.

அப்கானிஸ்தானைப் பொறுத்தவரையில் வெளிநாடுகளிலிருந்து தமக்காகப்போரிடவந்தவர்களிலும் பார்க்க வெளிநாடுகளிலிருந்து பணஉதவி செய்தவர்கள் தான் உயர்வாகத் தெரிகின்றது. உலக இஸ்லாமியக் கழகம் என்ற அமைப்பு யுத்தத்தில் நிதியுதவி செய்துள்ளவர்களில் முக்கியமான தாகும். இது அரசசார்பற்ற ஸ்தாபனம். இதன் பொறுப்பில் உள்ள நிதியின் பெரும்பங்கு சௌதி அரேபியாவின் எண்ணெய் வியாபாரத்தில் பெரும் பணம் படைத்த ஷேக்குகளின் கொடுப்பனவு ஆகும். உலக இஸ்லாமியக் கழகம் ஆப்கானிலிருந்து ருஷ்யா வெளியேறிய பின்பு தனது அலுவலகங்களை பொஸ்னியாவிலும் தஜிகிஸ்தானிலும் திறந்துள்ளது. தஜிகிஸ்தான் முன்பு சோவியத் ருஷ்யாவின் மாகாணமாக இருந்து விடுதலைபெற்றுள்ளது. முஸ்லிம் போராளிகள் இவ்வரசைக் கைப்பற்றப் போராடுகின்றனர். உலக இஸ்லாமீயக் கழகம் தனது நடவடிக்கையை விரிவுபடுத்தினாலும் ஆப்கானிஸ்தானுக்குரிய நிதியுதவி தடையில்லாமல் சென்றுகொண்டிருக்கின்றது.

பெரும் நன்கொடை கொடுக்கும் ஒரு சிலர் ஆப்கானுக்கு உதவி செய்வதை நிறுத்திக்கொள்ளத் தொடங்கியுள்ளனர். இவர்களிலொருவர் சௌதி அரேபியாவிலுள்ள பெரும் கட்டடமான ஸ்தாபனங்களில் ஒன்றின் சொந்தக்காரராகிய ஒசாமா பின் லமடின் என்பவராவார். போராளிகளுக்கு வாரிவழங்கியவர்களில் இவர் முன்னணியில் நின்றவராவார். ருஷ்யா வெளியேறிய பின்பும் போராளிகள் தொடர்ந்தும் அதிகாரவேட்டையில் இறங்கித் தங்களுக்குள் அடிப்பட்டுக் கொண்டபோது ஒசாமா பின்லாடின் பொறுமை இழந்தார். இருபோட்டிக் குழுக்களின் தலைவர்களாகிய கில்புடின் கெக்மற்றியார், அகமட் ஷா மசூத் என்ற இருவர்களையும் அவர் தன்வசம் அழைத்துத் தனது மனக் கிடக்கையைத் தெரிவித்தார். ''உங்களுக்கிடையில் போரிடுவதை நிறுத்துங்கள். தெருக்களைத் திருத்தவும் வேறு முன்னேற்றப் பணிகளுக்கும் தேவையான நிதியை நான் தருகிறேன். ஆனால் போராடுவதைநிறுத்துங்கள்', என்றார் ஆனால் போர் நிற்காமல் தொடர்ந்தது. பின்லாடின் உதவிகளை நிறுத்திக் கொண்டார். இப்போது அவர் சூடான் நாட்டுக்கு நிதியுதவி வழங்குகிறார். ஆனால் சென்ற மார்ச் மாதம் கெக்மற்றியார் தான் விரும்பிய பிரதமர் பதவியை ஆப்கான் மாற்று அரசில் பெற்றுக் கொண்டார்

பாகிஸ்தான் இந்தச் சிக்கலிலிருந்து தன்னைச் சுலபமாக மீட்கமுடியாது. சில பாகிஸ்தானிய உயரதிகாரிகளின் ஆசீர்வாதத்துடன் இன்னும் பல போராளிகள் பெஷாவர் போன்ற நகரங்களில் தங்கியுள்ளனர். இவர்களிற் பலரைக் காஷ்மீர் முனைகளிலும் காணலாம். வெளியேறாது பாகிஸ்தானில் தங்கியுள்ள முஸ்லிம் போராளிகளை நாடுகடத்துவது மிகவும் சாதுரியமாகக் கையாளவேண்டிய விஷயம் அவர்கள் அதிகாரப் பிரயோகத்தை துச்சமாக மதிக்கும் தன்மையுள்ளவர்களாவார்கள்.

ஸ்ரீவ் லெவைன் பெஷாவரிலிருந்து
நியூஸ்வீக், ஏப்ரல் 5, 1993

அமைதியாய் இரு, கிழக்குத் திமோர்!

ஒரு பிரிவினைவாதியை மௌனமாக்குதல்

கிழக்குத் திமோரில் எதிர்ப்பியக்கத்தின் தலைவரான—ஜோசே சனானாகுஸ்மாஒ (Jose Xanana Gusmao) தான் 17 வருடகாலமாக வழிநடத்திய எதிர்ப்பைக் கைவிட்டுள்ளார்—அல்லது தோற்றம் அப்படித்தான் தெரிகிறது. சென்றவருடம் இந்தோனேஷியாத் துருப்புக்கள் அவரைக் கைது செய்துள்ளன. இதன்பின் அவர் தனது பிறெற்றிலின் (Fretilin)இயக்கப் போராளிகளைச் சரணடையுமாறு கோரியுள்ளார். ஆயுதமேந்திய போராட்டம் நடத்திய குற்றத்திற்காகக்கூட்டில் நிறுத்தப்பட்ட அவர் நீதிபதியைப் பார்த்துப் பின்வருமாறு சொன்னார். ''நான் ஒரு இந்தோனேஷியப் பிரஜை'' என்று. தனிநாடான கிழக்கு திமோர் கனவை அவர் கைவிட்டதுபோல் இதிலிருந்து தெரிகிறது. ஆனால் இவருடைய ஆதரவாளர்கள் இதை நம்பவில்லை. அவர்மேல் இராணுவத்தால் பிரயோகிக்கப்பட்ட வன்முறைதான் இதற்குக் காரணம் அல்லது மொழிபெயர்ப்பாளர்கள் செய்த குழறுபடியால் இதுஇப்படித் தோன்றுகிறது. அவர்கள் வலியுறுத்திக் கூறுகிறார்கள். சென்ற வாரம் சனானா தனது சார்பில் வாக்குமூலம் அளிக்கும்போது திடுக்கிடும் விதத்தில் தனது பேச்சை மாற்றியுள்ளார். இம்முறை தனது முதல் மொழியாகிய போத்துக்கீஸ் மொழியில் தனது 50 பக்கப் பிரகடனத்தைச் செய்துள்ளார். இந்த வாக்குமூலம் அமெரிக்காவுக்குள் கடத்திக் கொண்டு வரப்பட்டுள்ளது. இதில் அவர் கிழக்கு திமோரை ஆக்கிரமித்த இந்தோனேஷிய இராணுவத்தின் செயல்''கோழைத் தனமானதென்றும், வெட்கக்கேடானதென்றும்'' குற்றம் சாட்டியுள்ளார், மேலும் அவர் சொன்னார் ''எனது மனச் சாட்சிப்படி நான் கிழக்கு திமோரின் பிரஜை'' என்று.

வழக்கை விசாரித்த நீதிபதி ஹியறோனிமெளஸ் கொடாங். (Hieronymous Godang) சானானா பேசுவதைப் பொறுமையாகக்

கேட்கவில்லை. இரண்டு நிமிடங்களின் பின் எதிரி வாய்மூடி இருக்கும்படி உத்தரவு இடப்பட்டுள்ளார். நாலு நாட்களின் பின் கொடாங் சனானாவுக்கு ஆயுள் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார். கொடாங் இவருக்குத் தூக்குத் தண்டனை விதித்திருக்கலாம். ஆனால் ஒரு தியாகியை உருவாக்க இது ஒரு சந்தர்ப்பமல்ல. 1991இல் நடந்தது போன்ற எதிர்ப்புப் பேரணிகள் நடப்பதைத் தடுக்க இந்தோனேஷிய இராணுவம் கிழக்குத் திமோரின் தலைநகர் டில்லியைத் தனது கட்டுப்பாட்டிற் கொண்டு வந்துள்ளது. 1991 இல் நடந்த பேரணிக்கெதிராக இராணுவம் சுட நேர்ந்ததும் இதனால் உலகெங்கும் கண்டனக் குரல் எழுந்ததும் நாம் அறிந்ததே. அந்த வருடம் நவம்பர் மாதத்தில் அரச ஆதிர்ப்புப் பேரணியின் சவ ஊர்வலத்தில் கலந்த மக்களை நோக்கி இராணுவம் சுட்டதில் 150க்கு மேற்பட்டோர் உயிர் இழந்தனர். இதனால் அரசுக்குக் கொடுக்கப்பட்ட வெளிநாட்டு உதவியும் குறைக்கப்பட்டுள்ளது. அண்மையில் அரசு சனானா அந்தப் பேரணியை ஒழுங்கு செய்தார் என்று குற்றம் சாட்டியுள்ளது. சனானாவைத் தண்டிக்கும்போது நீதிபதி கொடாங் தனது தீர்ப்பை ஏழு மணித்தியாலங்கள் படித்தார். அவர் சொன்னார் ''சனானாவின் செயற்பாடுகள் மக்கள் மத்தியில் அமைதியின்மையை ஏற்படுத்திய கிழக்குத்திமோரின்கட்டுப்பாட்டைச் சீர் குலைத்துள்ளது என்று''.

நீதிபதியின் கூற்றில் உண்மையுண்டு. 1975ஆம் ஆண்டு தொடக்கம் பிறெற்றிலின் இந்தோனேஷிய இராணுவத்துடன் போராடி வருகின்றது. அவ்வருடம் போர்த்துக்கல் தனது ஆட்சியை முடித்துக் கொண்டு வெளியேற இந்தோனேஷியா தனது இராணுவம் மூலம் கிழக்குத் திமோரை ஆக்கிரமித்துள்ளது. போராளிகளின் தொகை பல்லாயிரமாயிருந்து இப்போது 200 ஆகக் குறைந்த இவ்வேளையில் சனானாவின் கைது இயக்கத்திற்கு பேரிடியாக வந்துள்ளது. என்றாலும் வெளியுலகில் இப்போதும் இவர்களுக்கு ஆதரவு உண்டு. ஐக்கிய நாடுகள் இந்தோனேஷியாவின் உரிமைக் கோரிக்கையை ஒருபோதும் ஏற்கவில்லை. கிழக்குத் திமோர் எதிர்ப்பியக்கத்தின் முக்கிய வெளிநாட்டுப் பிரதிநிதி ஜோசே ரமோஸ் ஹோர்ட் (Jose Ramos Horta) ஐக்கிய நாடுகள் மன்றத்தில் கூட்டிய பத்திரிகையாளர் மாநாட்டில் சனானாவைத் தண்டித்த நீதிமன்றத்தை அநீதியான ''கன்காரு நீதிமன்றம்' என்று வர்ணித்துள்ளார். விசாரணையின்போது வெளிநாட்டுப் பார்வையாளர்களைத் தடுத்ததற்கு மனித உரிமைக்குழுக்கள் அரசைக் கண்டித்துள்ளன. அரசால் நியமிக்கப்பட்ட எதிரிதரப்பு வக்கீல் சாட்சிகளை அழைக்காமல் அரசுடன் ஒத்துழைத்தார் என்று அவர் கள் குற்றம் சுமத்தினார்கள். சிட்னி நகரிலிருந்து சர்வதேச மன்னிப்புச் சபை சனானாவின் தண்டனையை 'நீதியின் சரிவு' என்று கூறியுள்ளது.

மூற்றுப்பெறாத பிணக்கு

சனனாவின் வக்கீல் ஜனாதிபதி சுகார்ட்டோவிடம் மனுச்செய்யத் திட்டமிட்டுள்ளார். கிழக்கு திமோரில் நடந்த கலவரங்களைச் சாந்தப்படுத்தச் சுகார்ட்டோ முயன்றுள்ளார். உள்நாட்டவரை ஆளுநராக இவர் நியமித்துள்ளார். உள்ளூர் வளர்ச்சித் திட்டங்களுக்குப் பணம் ஒதுக்கியுள்ளார். மேலும் 1991 ல் நடந்த அனர்த்தங்களுக்குக் காரணமான சிலரைத் தண்டித்துள்ளார். ஆனால் பிறெற்றிலின் இயக்கம் சுயாட்சி ஒன்றைத் தவிர வேறொன்றையும் ஏற்கத் தயாராயில்லை. ஆனால் சுகார்ட்டோவோ இதைப் பற்றிப் பேசச் சம்மதிக்கமாட்டார். இது ஒரு முற்றுப்பெறாத பிணக்குப் போல் தோன்றவில்லையா? ரமோஸ் ஹோர்ட்ரா சொல்கின்றார்'' எவ்வளவு காலம் என்றாலும் கைதிக் கூண்டில் இருக்கச் சனானா விரும்புகின்றார்'' என்று.

நோனி எசமான்.
நியூஸ்வீக், மே 31, 1993

சீன விவசாயிகள் சினமடைந்துள்ளனர்.

பீஜிங் தலைநகரில் அவர்கள் பயப்பிராந்தியைக் கிளப்பியுள்ளனர்.

சீன உயரதிகாரிகள் ''விவசாயிகள் பிரச்சினை'' ஒன்று இருப்பதாகக் கண்டுபிடித்துள்ளனர். இவ்வளவு காலமும் அதைக் காணத் தவறியது தான் அதிசயம். பீசிங் தலைநகரிலுள்ள புகையிரத நிலையங்களில் வந்து இறங்கும் கமத் தொழிலாளர்கள் பெருந் தொகையினராவார்கள். தலைநகரிலிருந்து ஷங்காய் வரையுள்ள நகரங்களில் வசிப்போர் இந்த இடம் பெயர்வோர் திருடுகின்றனரென்றும், பிச்சைபோடும்படி வற்புறுத்துகின்றனரென்றும் முறையிடுகின்றனர். மேலும் இவர்கள் தெருக்களை அடைத்து வாகனப் போக்குவரத்துக்கு இடஞ்சல் செய்கின்றனர் என்றும் முறைப்பாடுகள் வந்துள்ளன. தேசிய மக்கள் காங்கிரஸ் மகாநாட்டில் கிராமப் புற அதிருப்தியால் நாட்டின் அமைதியே கெடப்போகின்றது என்று பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது. சீனப்பொதுவுடைமைக் கட்சிச் செயலாளர் நாயகம் ஜியாங் சிமின் இந்தப் பிரச்சினை சீர்ப்படுத்தப்படாவிடின் விளைவுகள் பயங்கரமாகவிருக்கும் என்று எச்சரித்தார்.

காலஞ்சென்ற மாவோ விவசாயிகளை ஒன்று சேர்த்துத் தனது வெற்றிக்கு அடிகோலினார். அதே போன்று தற்சமயம் அதிகாரம் வகிக்கும் சீனத் தலைவர்களை வீழ்த்த மீண்டும் ஒரு முறை இவ் விவசாயிகள் ஒன்று சேர்வார்களோ என்றால், அது சந்தேகம். ஆனால் அவர்கள் சீனத்தொகையின் 80 வீதத்தினர் ஆவர். ஒன்று உண்மை அவர்கள் மிகவும் சினம் கொண்டுள்ளனர். இன்று நடக்கும் சீனப் பொருளாதார மலர்வால் வரும் வருவாயில் அவர்களுக்கு ஒரு பங்கு கிடைக்க வாய்ப்பில்லை. இவர்களுடைய வருடவருமானம் டாலர் 136 என்று கணக்கிடப்பட்டுள்ளது. இது நகரவாசிகளின் வருடா வருமானத்தில் மூன்றில் ஒரு பங்காகும். இந்த வித்தியாசம் இன்னும் கூடிக் கொண்டேபோகின்றது. இதனால் முறுகல் நிலை கூடிக்கொண்டு போகின்றது. அதிகார பூர்வமான கணக்கீடுகளின் படி 60 மில்லியன் நாட்டுப்புற வாசிகள் கரையோரத் தொழிலகங்கள் நிறைந்த நகரங்களை நோக்கிப் படையெடுக்கத்தொடங்கியுள்ளனர். மத்திய சீனா பின் தங்கியுள்ளது. இங்கு வருமானமும் வேலை வாய்ப்பும் குறைவு, கரையோர நகரங்கள் மத்தியப் பிரதேச வாசிகளைக் கவரந்திருப்பதில் அதிசயமொன்றும் இல்லை. மேற்கூறிய காங்கிரஸ் மகாநாட்டில் உப பிரதமர் றியான் ஜீயூன் கூறினார். 'கிராமப் புறங்களிலுள்ள பிரச்சினைகள் நீடிக்குமானால் இப்போதிருக்கும் தலைமைப்பீடம் நிலைப்பது அபூர்வம்'' என்று.

எதிர்காலமற்றது

டெங் சியாவோபிங் ஆட்சிக் காலத்தில் விவசாயிகளுக்குக் கூட்டுப்பண்ணை முறையில் நிலப் பிரிவினை செய்யப்பட்டது. 1970 தொடக்கும் ஒரு குறுகிய காலத்திற்கு விவசாயிகள் பொருளாதார வளர்ச்சி பெற்றனர். ஆனால் விவசாயிகள் தங்கள் கிராமங்களில் விளையும் பொருள்களைக் குறைந்த விலையில் அரசுக்கு விற்றே ஆக வேண்டும். அரசு குறைந்த விலையில் வாங்கி நல்ல நிலையிலுள்ள நகரவாசிகளுக்குக் கொடுக்கும். இதே சமயம் உரவகைகளும், விவசாய உபகரணங்களும் விலை யேறிக்கொண்டே சென்றன. இது அரசின் கொள்கையாலும் பெரும் இலாபம் சம்பாதிக்கும் இடைத்தரகர் கைங்கரியத்தாலும் நடந்தே



பெருந்தொகை இடம்பெயர்வு:- புதிதாக வந்திறங்கியவர்கள் பீசிங் புகையிரதநிலையத்தில் உறங்குகிறார்கள்.

றியது. இருபக்கமும் நசிபட்டதால் 1989 ம் ஆண்டளவில் விவசாயிகளின் வருடாந்த வருமானம் 3, வீதமாகத் தளரத்தொடங்கியுள்ளது. அதே சமயத்தில் நகரப் புறவாசிகளின் வருடாந்த வருமான வளர்ச்சி உச்ச நிலையை அடையத் தொடங்கியுள்ளது. இதை நோக்கிய ஹார்வாட் (Harvard) சர்வகலாசாலைப் பொருளாதார நிபுணர் டுவயிற் பேர்கின்ஸ் என்பார் ''விவசாயம் எதிர்காலமற்ற தொழில் என்று மக்களுக்குத் தெரியும்'' என்று கூறியுள்ளார்.

பலதசாப்தங்களாக இடம் பெயர்வது தடைசெய்யப்பட்டதால் கிராமப்புறங்களில் எப்போதும் மேலதிக கமத் தொழிலாளர் இருந்தனர், இவர்கள் 100 மில்லியன் வரை இருப்பர் என்கிறது ஒரு கணக்கீடு. சீனாவில் மாகாணங்களுக்குக் கூடுதல் அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளதால் மத்திய அரசின் பிடி நழுவத் தொடங்கியுள்ளது. பெரு நகரங்களில் உள்ள தொழில் வளர்ச்சியால் இவர்களுக்கு ஏதோ ஒரு வேலை கிடைக்கத்தான் செய்கிறது.

இதே சமயத்தில் கிராமப்புறங்களில் அரசால் நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிகளால் பிரச்சினைகள் தோன்றியுள்ளன. விவசாயிகளின் தொல்லைகளுக்குச் சிகரம் வைத்தாற்போல் இந்த அதிகாரிகளின் நடவடிக்கைகள் அமைந்துள்ளன, சென்ற ஜனவரி மாதம் சிச்சுவான் மாகாணத்தில் 1000 விவசாயிகள் ஒருபெருந்தெருக் கட்ட, தலைக்குப் 19 டொலர் கேட்ட அதிகாரிகளுக்குகெதிராகக் கிளர்ந்தெழுந்தனர். பிறிதிடங்களில் அதிகாரிகள் அரசு கொடுத்த பணத்தை நிலம் வாங்குவதிலும் பங்குச் சந்தையிலும் முடக்கிவிட்டு விவசாயிகளுக்கு வெறும் நோட்டுப் பத்திரம் கொடுத்துள்ளனர் இங்கும் பெரும்எதிர்ப்புகள்கிளம்பியுள்ளன.

இந்தப் பிரச்சனைக்குக்காரணம் ''அரைப் பங்குச் சந்தைப் பொருளாதாரம் அரைப் பங்கு திட்டமிட்ட பொருளாதாரம்'' என்ற இரண்டும் கெட்டான் நிலைதான் என்று சிச்சுவான் ஆளுநர் சீய்யோயாங் கூறியுள்ளார. அவர் மேலும் கூறுகிறார். ''உண்மையான சந்தைப் பொருளாதாரம் இருப்பின் இது நிகழாது'' என்று தற்சமயம் முன்வைக்கப்படும் சீர்திருத்தங்களில் சித்தாந்த இழுபறி காணக்கூடியதாக இருக்கின்றது. மேற்கூறிய மகாநாட்டில் பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. கிராமப்புற முதலீடு 610 மில்லியன் டொலரான அல்லது 9.3 வீதத்தால் உயர்த்தப்பட்டது. இதில் ஒரு பங்கு தானிய வகையின் விலையை உயர்த்தப் பயன்படுத்தப்படும் வருமானவரி கழித்தபின் விவசாயிகள் வருமானத்தில் 5 வீதத்திற்கு மேல் கேட்கக்கூடாதென்று அதிகாரிகள் பணிக்கப்பட்டனர். கிராமப்புறங்களில் வேலை வய்ப்பைக்கூட்ட சிறிய தொழிற் சாலைகள் ஆரம்பிக்கப்படும். காலப்போக்கில் பொதுவுடமைவாதிகள் சுதந்திரமான சந்தைப் பொருளாதாரத்தையும், போக்குவரத்துச் சுதந்திரத்தையும் ஏற்கத்தான் வேண்டும். அந்த நாள் வரும்வரை அவர்கள் கிராமப்புற மக்களை திருப்திப்படுத்த முயல்வார்கள்.

பீசிங் நகரிலிருந்து ரோணி எமர்சனும் காரி கூசும்

நியூஸ்வீக், ஏப்ரல் 5, 1993

பிலிப்பைன்ஸ்

ஏப்ரல் மாதத்து அதிசயத்துக்குச் சமாதானத் திருப்பம்

"எவ்வகையான அச்சுறுத்தலுக்கு எதிராகவும் எனது நாடு பாதுகாப்பாக உள்ளது" என்று தனது ஆறுநாள் சீன விஜயத்திற்கு முன் பிலிப்பின் ஜனாதிபதி பிடெல்ராமோஸ் கூறினார். மின்டனோவில் பிரிவினைவாத யுத்தம் மீண்டும் தொடங்கும் அறிகுறிகள் இருந்தன. மோரோ தேசிய விடுதலை முன்னணி (எம். என். எல். எப்ஃ) ஆயுதம் சேர்ப்பதில் ஈடுபடுவதாகவும் தென்பக்கத்தீவில் 'ஏப்ரல் மாத அதிசயம்' என்றழைக்கப்படும் தற்காலிக அரசாங்கம் ஒன்றைப் பிரகடனப்படுத்தப்போவதாகவும், செய்திகள் பரவின. ராமோஸ் தனது அதிசயத்தையும் வெளிக்காட்டினார். ஜகார்த்தாவில் ஏப்ரல் 14 தொடக்கம் 16 வரைக்கும் எம். என். எல். எப்ஃ உடன் பல காலமாகத் தாமதிக்கப்பட்ட இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தைக்கு உத்தரவிட்டார்.

புரட்சியாளரின் பதற்றத்தின் மத்தியில் பேச்சுவார்த்தை நடைபெற்றது. பசிலன் தீவில் நடைபெற்ற அண்மைக்கால ஆட்கடத்தல் சம்பவங்களுக்கு எம். என். எல். எப்ஃ இன் "இழந்த தலைப்பீடமும்" அபுசயாப்ஃ இன் இஸ்லாமிய அடிப்படைவாதக் குழுவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளார்கள். மார்ச் 18 தொடக்கம் கைதியாக வைத்திருக்கப்படும் ஸ்பானிய நாட்டு மதகுரு போனடோ பிளாங்கோவை விடுவிக்க ஏப்ரல் மாதம் 18 இல் மின்டனோயில் உள்ள ஜம்போங்கா நகருக்கு ஜனாதிபதி ராமோஸ் பறந்துசென்றார். இம் முயற்சி கடைசிநிமிடத்தில் கைகூடாமல் போய்விட்டது. பிளாங்கோவை விடுவிக்கும் படி எம். என். எல். எப்ஃ தலைவர் நூர் மிசாரியின் வேண்டுகோளைக் கடத்தியவர்கள் புறக்கணித்துவிட்டார்கள்.

ஜகார்த்தாவில் நடைபெற்ற கூட்டத்தின் வரவேற்பாளராக இந்தோனேஷிய ஜனாதிபதி விளங்கினார். இளைப்பாறிய ஜெனரலும் ராமோஸ் நண்பனுமான காங்கிரஸ் அங்கத்தவர் எடுஆடோ ஏமிற்றா பிலிப்பின் பக்கத்தலைவராகவும் எம். என். எல் எப்ஃ பக்கத்தலைவராக மிசாரியும் செயற்பட்டார்கள். இஸ்லாமிய மகாநாட்டுச் சபை மத்தியஸ்தம் வகித்தது. நேர்மையான ஆக்க பூர்வமான பேச்சுவார்த்தைகள் மூலம் பிரச்சனையைத் தீர்க்கும் படி ஓ. ஐ. சி. உபசெயலாளர் நாயகம் இப்ராகிம் பக்கீர் கோரிக்கை விடுத்தார். முஸ்லிம் மக்களைக் கூடுதலாகக் கொண்ட பதின்மூன்று மின்டனோ மாகாணங்களுக்குச் சுயாட்சி வழங்கும் 1976 திரிப்பொலி உடன்படிக்கையை முற்றாக நடைமுறைப் படுத்தும்படியும் கோரினார்.

1989 இல் நடைபெற்ற சர்வசன வாக்கெடுப்பில். முஸ்லிம் மின்டனோவின் சுயாட்சி பிரதேசத்தில் சேர நான்கு மாகாணங்கள் மட்டுமே வாக்களித்தன. அவ் வாக்கெடுப்பையும் பின்னர் நடைபெற்ற இரு தேர்தல்களையும் எம். என். எல். எப்ஃ பகிஷ்கரித்தனர். 1993 யூன் மாதம் 30 ம் திகதியில் அல்லது அதற்கு முன் திரிப்பொலி உடன்படிக்கைக்கு அமைவாகச் சம்பிரதாயமான சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடத்துவதென இரு சாரினரும் ஜகார்த்தாவில் ஒத்துக் கொண்டனர். ஏப்ரல் மாதம் 25 ம் திகதி பாகிஸ்தானில் நடைபெற்ற ஓ. ஐ. சி. கூட்டத்தில் எமிற்றாவும் மிசாரியும் மீண்டும் சந்தித்தார்கள். பிலிப்பின் நாட்டு மக்கள் பிரதிநிதிகள் சபையின் சபாநாயகர் ஜோசேடி வெனிசயா, "ஓர் பெரிய முன்னேற்றத்தை எதிர் பார்க்கிறோம்" என்று கூறினார். ஆனால் சென்ற வாரம் வரைக்கும் பேச்சுவார்த்தைகளைப் பற்றி அறிவித்தல் ஒன்றும் வெளிவரவில்லை.

பூரண அபிவிருத்தி மூலம் ஓர் முன்னேற்றத்தை ராமோஸ் எதிர்பார்க்கிறார். பலதடவைகள் தீவுக்குச் செல்லும்பொழுது மின்டனோ 2000 நிகழ்ச்சித் திட்டத்தைப் பற்றிப் பிரசாரம் பண்ணுகின்றார். அண்மையில் கொட்டபாட்டோ நகருக்குச் சென்றபோது 'மின்டனோவில் சமாதானமும் ஒழுங்கும் நிலவுகின்றன" என்று கூறினார். இழந்த தலைமைப் பீடமும் அபுசயாப்ஃம் இன்னும் பிரச்சனையாகவே உள்ளன. ஆனால் 1986 தொடக்கம் மணிலாவுடன் போர் நிறுத்தத்தை ஏற்படுத்திய எம். என். எல். எப்ஃ பகிரங்கமாகவே செயற்படுகிறது. சென்றவாரம் பாகிஸ்தானில் ஏசியா வீக் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில், ஜகார்த்தா பேச்சுவார்த்தைகள் வெற்றியடைந்தபடியால் ஏப்ரல் மாத அதிசயம் ஓர் சமாதான அதிசயமாக மாறியது என்று கூறினார்.

ஏசியாவீக், மே 5, 1993

இஸ்ரேலிய பிரதமர்
ராபினின் சங்கநாதம்

தனது நாட்டு மக்கள் தங்கள் தோள் வலிமையைக் காட்ட வேண்டுமென்று ராபின் நினைக்கிறார்.

இஸ்ரேலின் மக்கள் மென்மையாகி விட்டார்களா? இஸ்ரேலில் பிரதமர் யிற்சாக் ராபின் இப்படித்தான் நினைக்கிறார். அரேபியர்களின் பலாத்காரத்திற்கு முகம் கொடுக்க இஸ்ரேல் பத்திரிகைகளும் பொது மக்களும் உடல் வலுவையும் மன உறுதியையும் பெருக்க வேண்டுமென்று அவர் விரும்புகிறார். அரேபியர்கள் சுடுவதிலும் கத்தியால் குத்துவதிலும் தங்கள் இஸ்ரேல் எதிர்ப்பைக் காட்டுகின்றனர். மார்ச் மாதத்தில் மாத்திரம் பதின்மூன்று இஸ்ரேலிய மக்கள் இறந்துள்ளனர். இஸ்ரேல் அரசு தங்கள் மக்களைக் காக்கத் தவறி விட்டதென்று பெரும் கூச்சல் எழுந்துள்ளது. இன்னும் பலர் இராஜினாமாச் செய்ய வேண்டுமென்று கோரியுள்ளனர். இந்தக் கொலைகளால் வேதனைப்பட்டாலும் ராபின் இறங்க மறுத்துள்ளார். 1948 ம் ஆண்டில் எப்படி ஐந்து அராபிய இராணுவங்களைப் போராடித் தனது இறைமையைக் காப்பாற்றிக் கொண்டதோ அதுபோன்று இன்னும் தனது மக்கள் எதிரியைச் சமாளிக்க வேண்டுமென்று அவர் தெரிவித்துள்ளார். தான் இளைஞனாக இருக்கும் போது செய்த வீரதீரச் செயல்களை நினைவு கூர்ந்து அவர் இன்றைய இளைஞர்கள் நேருக்கு நேர் ஆயுதமின்றிப் போராடுதல் கத்தியுடன் வரும் எதிரியை மடக்குதல் போன்ற பயிற்சி பெறவேண்டுமென்று அவர் விரும்புகிறார். இஸ்ரேலிய மக்கள் எதிர்த்துப் போரிடும் உறுதியை இழந்து விட்டாரோ என்று கூட அவர் மனம் கொதித்தார். தான் 1948 ம் ஆண்டுத் தலைமுறையைச் சேர்ந்தவன் என்பதை அவர் ஞாபக மூட்டுகிறார் இன்றைய மக்களைப் போல் அன்று இருந்திருந்தால் நாடு அழிந்தேபோயிருக்குமென்று இவர் சுட்டிக்காட்டுகிறார்.

சென்ற வருட யூலை மாதத்தில் அவர் பதவிக்கு வந்தார். தான் இஸ்ரேலைச் சுற்றியுள்ள நாடுகளுடன் சமாதானம் செய்யப் போவதாகத் தனது கொள்கை விளக்கத்தில் தெரிவித்தார். என்றாலும் போராடத் தயங்காதவர் என்பதை அண்மையில் காட்டியுள்ளார். இந்த மாதத்தில் இரண்டாவது முறையாக அவர் தனது துருப்புக்களை காசா பிரதேசத்தை வெளித் தொடர்பு இல்லாதவாறு துண்டிக்கும்படி கட்டளை இட்டுள்ளார். காசா பிரதேசம் இஸ்லாமிய அடிப்படைவாதிகளின் இராணுவ நடவடிக்கைகளுக்கும் இஸ்ரேலிய குடியேற்ற வாசிகளுக்கெதிரான நடவடிக்கைகளுக்கும் பிரசித்தமானதோர் இடம். இஸ்ரேலின் வட மத்திய நகராகிய ஹடேராவில் இரண்டு இஸ்ரேலிய காவல் துறையினர் கொல்லப்பட்டபோது அவர் இஸ்ரேலின் கட்டுப்பாட்டிலுள்ள மேற்குக்கரைப்பிரதேசத்தையும் அவ்வாறு துண்டிக்கும்படி உத்தரவிட்டுள்ளார். அவருடைய கூற்றின்படி இந்த நடவடிக்கையின் குறி '' இஸ்ரேலின் கட்டுப்பாட்டிலுள்ள 120, 000 அரேபியத் தொழிலாளர்களுக்கும். இஸ்ரேலியக் குடிமக்களுக்குமிடையில் வரும் சச்சரவைத் தவிர்ப்பதற்கே'' பிரதமர் ராபின் பாதுகாப்பு மந்திரிப்பதவியையும் தன்னகத்தே வைத்துள்ளார். காசா பிரதேசமும் மேற்குக் கரைப் பிரதேசமும் அவருடைய பொறுப்பில் உள்ளன. இந்த இரண்டு இடங்களையும் அவர் இஸ்ரேலிய துருப்புக்களால் நிரப்பியுள்ளார். ஆயுதம் தாங்கிய அரேபியர்களைக் கண்ட மாத்திரத்தில் சுடும்படி அவர் உத்தரவிட்டுள்ளார்.

சென்ற டிசம்பர் மாதம் அவர் 400 முஸ்லீம் அடிப்படை வாதிகளை நாடு கடத்தினார். இது இஸ்ரேல் அரபுப் பேச்சுவார்த்தைக்கு முட்டுக்கட்டை போட்டது. அதேபோல் அவருடைய இந்த நடவடிக்கையும் கசப்புணர்வையும் சமாதானப் பேச்சுவார்த்தையில் குழப்பத்தையும் ஏற்படுத்தியுள்ளது. 400 பேரையும் நாடுகடத்திய அதிர்ச்சியிலிருந்து பலஸ்தீனியர்கள் இன்னும் மீளவில்லை. இப்போது ராபினுடைய காசா மேற்குக் கரை நடவடிக்கையால் சமாதான முயற்சிகள் நிரந்தரமாகக் குழம்பிவிடும் போல் தோன்றுகிறது. பலஸ்தீனியக் குழுவின் தலைவர் றானான் அஷறாவி சென்ற வாரம் ராபின் இந்த இரண்டு பிரதேசங்களையும் ஒருபெரும் மறியற் சாலையாக மாற்றிவிட்டார். என்று குற்றம் சாட்டினார். சில இஸ்ரேலியர்கள் கூடி பலஸ்தீனிய அரேபியர்களுடைய போக்குவரத்தையும் வேலை செய்யும் உரிமையையும் தடுப்பதால் இன்னும் பரஸ்பர உறவுகள் பாதிக்கப்படுமென்றும் சமாதான முயற்சிகள் தோற்கும் வாய்ப்புகள் இதனால் கூடுமென்றும் பயப்படுகின்றனர். யூத குடியேற்றவாசிகள் சுதந்திரமாக நடமாடுவதைக் கண்ட பலஸ்தீனிய அரபியர்கள் கூடிய பலாத்காரத்தில் இறங்கலாமென்றும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.

இஸ்ரேலியர்களிலும் பார்க்கப் பாலஸ்தீனிய அரேபியர்களே கூடிய தொகையில் இறந்துள்ளனர். ஆனால் இஸ்ரேலிய பத்திரிகைகள் நாட்டுக்கும் இனத்திற்கும் ஆபத்து வந்துவிட்டதுபோன்று தலையங்கம் தீட்டத்தொடங்கியுள்ளன. யெடியொட், அக்கிறநொட், மாறிவ் என்பவை இஸ்ரேலியின் இரண்டு முன்னணிப் பத்திரிகைகள். இவைகள் இறந்த இஸ்ரேலியர்களின் படங்களைப் பிரசுரிப்பதிலும் இன அழிவு நெருங்கிவிட்டது போன்ற செய்தியை

வெளியிடுததிலும் ஈடுபட்டுள்ளன. ஒருமுறை இஸ்ரேல் பேரூந்து ஒன்றில் குண்டு வெடித்துப். பலர் இறந்துள்ளனர். என்று இஸ்ரேல் வானொலி அலறியது. பின்பு பார்த்தால் அந்த வண்டியின் ரயர் தான் பெருஞ்சத்தத்துடன் வெடித் துள்ளது என்பது தெரியவந்துள் ளது. ராபினே முணுமுணுக்க ஆரம் பித்துள்ளார். ஆறுநாள் யுத்தத்தை நினைவூட்டும் வகையில் பத்திரிகை கள் செய்தி வெளியிடுகின்றன என்று சில பத்திரிகையாளர்கள் இவைகளைப் பார்த்து மனவேத னைப்படுகின்றனர்.

காசாவிலும் மேற்குக் கரையி லும் நடக்கும் பலாத்காரங்கள் இஸ்ரேலிய வலது சாரிகளுக்குச் சாதகமாக அமைந்துள்ளன. இவர் கள் பலகாலமாகப் பாலஸ்தீனியர் களை இரும்புக்கரங்களால் நசுக்கும் படி கூறிவந்துள்ளனர். சமாதானப் பேச்சுக்களை நிறுத்தும்படியும் 'பயங்கரவாதிகளுடன்' பேசுவது அர்த்தமற்றது என்றும் இவர்கள் பிரதமருக்குச் சொல்லத் தொடங்கி யுள்ளனர். சில 1948 ம் ஆண்டுத் தலைமுறையினர் இஸ்ரேலிய மக் கள் மென்மையான போக்குடைய வர்களாக மாறவில்லையென்றும். தலைமைபீடமே இப்படி மாறவிட் டதென்றும் கூறுகின்றனர். உதார ணத்திற்கு கினெசற் என்ற இஸ்ரே லியப் பாராளுமன்ற அங்கத்தவர் கொயிலா கோகென் என்பார் தனது தீவிரவாதக் கருத்துக்களை அண் மையில் தெரிவித்துள்ளார். இந்தப் பெண்மணி இஸ்ரேலில் சுதந்திரத் துக்காகப் போராடியவர்களில் ஒருவராவர். சுதந்திரப் போரில் பிரிட்டிஷ்காரால் கைது செய்யப்பட்டு அடைபட்டவர். இவர் சொல்கிறார் ''எங்கள் சரித் திரத்தித்தில் இதிலும் பார்க்க எத் தனையோ பயங்கரமான நாட்களை நாங்கள் கண்டிருக்கிறோம். ஆனால் ராபின் செய்த பிழை என்னவென்றால் பலஸ்தீனிய அரேபியர்களுக்கு ஒரு எதிர்கால முண்டு என்ற சிந்தனையை அவர் கள் மனதில் வளர்த்தது தான். இந்தச் சிந்தனைதான் அவர்களை எங்களைக் கொல்லும்படி தூண்டு கின்றது.'' என்று

இஸ்ரேலிய சமாதானப் பிரி யர்களும் இதுபோன்று பாலஸ்தீனி யர்களுடன் ஒரு உடன்பாட்டிற்கு வருவதுதான் சிறந்த வழியென் றும் இது நாட்டின் எதிர்காலத் திற்கு நல்லதென்றும் கூறுகின்ற னர். பிரதமர் சமாதானப் பாதை யில் பின்தங்கிவிட்டார் என்று இவர்கள் குற்றம் சாட்டுகின்றனர். அரேபியர்கள் மத்தியில் யூதக் குடி யேற்றம் செய்வதால். இன்னும் குரோதத்தை வளர்க்கிறாரென்றும் அரேபியர்களுக்குக் கொடுக்கப் படும் ஆட்சி உரிமைகள் போதா தென்றும் இவர்கள் வாதிடுகின்ற னர். 1948 ம் ஆண்டுத் தலை முறையினர் சிலர் இப்போதைய நடப்புகளை அக்காலத்துடன் ஒப்பி டுவது தேவையில்லாததோர் வாதம் என்கிறார்கள். யேகோ ஷுவா என்ற இஸ்ரேலிய நாவலா சிரியர் பின்வருமாறு ஒப்பிடுகிறார் ''48 ல் நாங்கள் எங்களை அழிக்க வந்த எதிரியுடன் போராடினோம். இன்று நாங்கள் ஒரு அடிமை களின் புரட்சியைத்தான் சந்திக்கி றோம்'' இவருக்கு 1948 ல் 12 வயது. மேலும் இவர் சொல்கிறார் ''48 ல் நாங்கள் போராடும் போது எங்கள் பக்கம் நியாயம் இருந்தது. 67 ம் ஆண்டு யுத்தத் திலும் அப்படியே நியாயம் எப்பக் கம் உண்டோ அப்பக்கம் பலம் வாய்ந்ததாகும். தர்மம் தான் பலம்'' யூரி அவ்நேரி என்ற பத் திரிகையாளன் இந்த ஒப்பீடுகளை வரவேற்றுள்ளார். இவர் 1948 ம் ஆண்டு யுத்தத்தில் காயப்பட்ட வர், 14 வயதில் ஆயுதம் தாங்கி யவர். தற்சமயம் பேனாவைத் தூக்கியுள்ளவர் இவர் உணர்ச்சி பூர்வமாகச் சொல்கிறார்'' அன்று எப்படி நாங்கள் இருந்தோமோ அப்படித்தான் இன்று பாலஸ்தீனிய அரேபியர்கள் இருக்கிறார்கள். அன்னியனால் நசுக்கப்படும் ஒவ் வொருவனும் போராடத்தான் செய்வான்.''

காசாப் பிரதேசமும் மேற்குக் கரைப் பகுதியும் இஸ்ரேலின் பிடி யில் வந்து இருபத்தைந்து வரு டங்கள் ஆகிவிட்டன. இது இஸ் ரேலுக்கு ஒரு சாபக்கேடாகும்.



முடிவுறாத பலாத்காரம்;– இஸ்ரேலிய இராணுவ வாகனத்தின் மீது கல்வீசும் அரேபிய இளைஞர்கள்

அதே சமயத்தில் ஒருவரப் பிரசாதமு மாகும். இந்த இரண்டு பிரதே சங்களும் அவர்களுக்கு இராணுவ ரீதியில் தேவைப்பட்டதோர் நிலப் பரப்பாகும். மேலும் இவை யூதப் பிரதேசம் என்று பைபிள் சொல் கிறது. மீண்டும் தங்கள் கட்டுப் பாட்டில் இவை வந்ததை இஸ்ரே லியர் பெருமிதத்துடன் வரவேற் கின்றனர். ஆனால் இன்ரிபாடா (Intifada) என்று அரேபிய மொழி யில் சொல்லப்படும் பாலஸ்தீனிய அரேபிய எதிர்ப்பியக்கம் இஸ்ரே லுக்குப் பெரும் தலைவலியைக் கொடுத்துள்ளது. இன்ரிபாடா ஆரம்பமாகி ஐந்து வருடங்கள் சென்று விட்டன. இன்னும் அது கொதி நிலையில் இருக்கின்றது. அரேபியர்கள் கடமையுரியும் யூதத் தொழிற்சாலைகளில் அமைதி இல்லை. குறைந்த ஊதியத் திற்குக் கஷ்ட வேலைகளை அரேபியர்

களைக் கொண்டு செய்வித்து வந்த யூதமுதலாளிகள் தவிக்கிறார்கள். அரேபிய தொழிலாளர்கள் இல்லாமல் பெரும் விவசாயப் பண்ணைகள் கட்டடவேலைகள் இயங்கமுடியாது. சென்றவாரம் காசாப் பிரதேசத்தை வெளித் தொடர்பு இல்லாதவாறு துண்டிக்கும்படி போடப்பட்ட உத்தரவு யூத முதலீட்டாளர்களைப் பாதித்துள்ளது. அரேபியர்கள் தொழிற் சாலைகளுக்கும், பண்ணைகளுக்கும், கட்டடங்கள் கட்டப்படும் இடங்களுக்கும் செல்ல முடியாதவாறு இந்த உத்தரவு தடுத்துள்ளது. இஸ்ரேலியக் கிராமங்களில் தொழிலாளர்கள் இல்லாத குறையால் பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இதை ஈடுசெய்வதற்கு இஸ்ரேலிய மாணவர்களும், ஓய்வு பெற்ற இராணுவத்தினரும் முன்வந்துள்ளனர். ஆனால் இது போதவில்லை. அழிவுகள் தொடருகின்றன. தக்காளிப்பழத் தோட்டங்களில் பழங்கள் பறிக்கப்படாமல் நாசமாகின்றன. தென்கிழக்காசிய நாடுகளிலிருந்து தொழிலாளர்களை இறக்குமதி செய்வது பற்றிக்கூட சிந்திக்கப்படுகின்றது. குறிப்பாகத் தாய்லாந்து நாட்டுத் தொழிலாளர்களைச் சில பண்ணை முதலாளிகள் விரும்புகின்றனர். அரேபியர்கள் சில சமயம் முதலாளிமார்களையும் குடியேற்றக்காரர்களையும் கொலை செய்துள்ளனர், ஆசிய நாட்டவர் அப்படிச் செய்ய மாட்டார்கள் என்றோர் நப்பாசை.

அண்மையில் இஸ்ரேயில் தொலைக்காட்சியில் தோன்றி ராபின் வருமாறு பேசியுள்ளார்.'' இஸ்ரேலிய மக்கள் ஆத்மீகத் தொய்வு அடைந்துவிட்டதாகவும், எதிரிகளைச் சமரில் தோற்கடிக்கவேண்டுமென்ற உறுதி தளர்வுறத்தொடங்கி விட்டதென்றும்'' அவர் கூறினார். எமது எதிரிகள் நாம் வலிமையை இழந்து விட்டோம் என்று எண்ணாவண்ணம் எமது மனோசக்தியையும் உறுதியையும் நாம் வளர்க்க வேண்டுமென்றும் 1948 ஆம் 1967 ஆம் ஆண்டுகளில் போராடிய போது ஆயுதங்கள் மாத்திரமல்ல எமது ஆத்மீக சக்தியும் சேர்ந்தே போரில் வெற்றி ஈட்டித்தந்ததென்றும் இவர் சுட்டிக்காட்டினார். இஸ்ரேலியர்கள் இதை மறந்து இப்போது லௌகீக விஷயங்களுக்கு முதலிடம் கொடுக்கின்றனரென்றும் பணம் பொருள், வாழ்க்கையில் உயர் நிலை போன்றவற்றிற்காகவே வாழ்கின்றனரென்றும், அரசு தங்கள் வாழ்வு சிறக்கச் சகலதும் செய்யவேண்டுமென்று அவர்கள் எதிர்பார்க்கிறார்களென்றும் அவர் கவலைப்பட்டார். நாட்டுக்காகவும் இனத்திற்காகவும் உயிர்த்தியாகம் செய்யும் மனப்பக்குவம் அவர்களிடமிருந்து மறைந்து விட்டதென்றும் அவர் வருந்தினார். தங்கள் பிள்ளைகளுக்குப் பொருளும், செல்வமும் சேர்க்கும் அவர்கள் பிள்ளைகளுக்கு யுத்தப்பயிற்சி கொடுப்பதைத் தவிர்க்கின்றனர் என்றெல்லாம் அவர் குறை பட்டார். ரொம் சேகேவ் என்ற சரித்திராசிரியர் ''நாட்டுக்காக கனவு காணும் நிலையிலிருந்து தூரம் சென்றுவிட்டார்கள்'' என்கிறார் இன்று அவர்களுடைய கனவெல்லாம் ஸ்திரமான சுகமான வாழ்வு ஒன்று தான் என்பது இவருடைய வாதம். ஆனால் யுத்தத்தை விரும்பும் கழுகுகள்; அரேபியர்களுடன் போராடியே தீரவேண்டுமென்கிறார்கள். சமாதானப்புறாக்களோ எதைக் கொடுத்தும் அமைதியைப் பெறவேண்டுமென்கிறார்கள். பழம் பெரும் யுத்த வீரனாகிய இஸ்ரேலியப் பிரதமர் யிற்சாக் ராபினுக்கு நாட்டில் அமைதியும் சமாதானமும் கொண்டு வருவது தான் மிகப் பெரிய போராட்டமாக இருக்கப் போகின்றது.

ஜெருசலாம் நகரிலிருந்து
ஜெம்றே பார்தோலெற்

நியூஸ்வீக், ஏப்ரல் 12, 1993

வியட்நாம் விடுபட்ட விபரங்கள்

காணாமற்போன அமெரிக்கப் பாதுகாப்புப் படையினர் சம்பந்தமாகச் சென்றகிழமை கனோயில் இருக்கும் அமெரிக்க வியட்னாம் படைகள் ஒன்றுசேர்ந்து இத் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபடும் என்பது இரு நாடுகளின் நட்பையும் சீரமைவுறச் செய்ய உதவும் என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் ''விடுபட்ட மனிதர்கள்'' என்ற நூலின் பிரகாரம் அமெரிக்க செனட் தெரிவுக் குழுவை யுத்தக்கைதிகள் சம்பந்தமான தொடர்பில் கண்டித்து காணாமற்போன இராணுவத்தினர்களைப் பற்றி ஒரு குழப்பம் மிக்க தகவல்களைக் கொடுத்ததின் மூலம் காணாமல்போன படையினரின் குடும்பங்களுக்கு மேலும் புண்படுத்தக் கூடிய விதத்தில் அமைந்து இருக்கின்றது.

புலன் விசாரணை எழுத்தாளர்களுக்கான மார்க் சேரர்டர், ஜிம் சோன்டென் ஆகிய இருவரும் இப் புத்தகத்தில் அமெரிக்கப் போர்க்கைதிகள் ருசியாவுக்கு மாற்றப்பட்டு அங்கே இரசாயனப் பரிசோதனைக்கு உள்ளாக்கப் பட்டார்கள் என்று எழுதினார்கள். புதிய புலன் விசாரணையில் ஈடுபடுவதற்குப் புதிய தகவல்கள் அடிகோலியதாக அமைகின்றன.

—நியூஸ்வீக்,
ஜூலை 26, 1993

அமைதியை நிலை நாட்டுவது யார் பொறுப்பு?

மாறும் அமெரிக்கப் பாதுகாப்பு எண்ணங்களை ஆசியா மக்கள் கேள்வியுறுகின்றனர்

கிளின்ரன் நிர்வாகம் ஆசிய நாடுகளின் பாதுகாப்புப் பற்றி என்ன எண்ணம் கொடுத்துள்ளது என்பதை அறிய அந்த நாடுகளின் தலைவர்கள் பல மாதங்கள் காத்திருந்துள்ளனர். சென்ற வாரம் அவர்களுக்கோர் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. மேற்படி நிர்வாகத்தில் ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான வின்ஸ்ரன் லோர்ட் என்பார் முதன் முறையாக ஆசிய நாட்டு விஜயம் மேற்கொண்டுள்ளார். இவர் கிழக்கு ஆசியா மற்றும் பசிபிக் கடற்பிராந்திய விவகாரங்களுக்குப் பொறுப்பான உப-செயலாளராவார். இந்தச் சந்திப்பின் உச்ச நிலை சிங்கப்பூரில் நடந்தது. இங்கு ஆசியான் கூட்டு நாடுகளின் முத்த அதிகாரிகள் அமெரிக்கா, கனடா, ஜப்பான், தென்கொரியா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து மற்றும் ஐரோப்பிய நாடுகளுடன் பேசும் வாய்ப்பைப் பெற்றன. ஆசியாவின் மந்திரிமார் மட்டக் கூட்டமொன்று ஜூலைமாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளது. அதற்கு முன்பாக இந்தச் சிங்கப்பூர் சந்திப்பு பனிப்போர் முடிந்தபின் முதன் முறையாக இந்தப் பிரதேசத்திற்குரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை ஆராய்ந்தது.

ஆசியாவுக்குப் புதியதோர் பாதுகாப்பு ஒழுங்கின் தேவைனயப் பலரும் ஏற்றுக் கொண்டுள்ளனர். இப்பிரதேசத்திலிருந்து சென்ற வருடம் அமெரிக்கா தனது துருப்புக்களில் 25,000 பேரைத் திருப்பி அழைத்துள்ளது. பிலிப்பைன்ஸ் நாட்டு அமெரிக்கத் தளங்களாகிய கிளார்க், சுபிக்குடா போன்றவை முடப்பட்டதாலும் இது நிகழ்ந்துள்ளது. ஆனால் தென் கொரியாவில் கடமையிலிருந்த துருப்புக்களும் அழைக்கப்பட்டுள்ளனர். பெரும் பாலும் இது ஜனாதிபதி புஷ் நிர்வாகத்தில் நிகழ்ந்துள்ளது. ஆனால் கிளின்ரனும் இக் கொள்கையைத் தொடர்ந்து பின்பற்றுவாரெனப் பலரும் நம்புகின்றனர். தனது உள் நாட்டுச் செலவுகளுக்குப் பணம் புரணைநாட்டில் பேசும்போது திரு லோர்ட் இந்த ஒப்பந்தங்கள் அமெரிக்காவுக்கு மிகவும் முக்கியம் வாய்ந்தவை என்று அழுத்திக்கூறினார். ''எங்களுடைய பசுபிக் பிராந்தியப் பாதுகாப்பு விஷயங்களில் இதுபோன்ற ஒப்பந்தங்களிலும் பரஸ்பர உடன்படிக்கைகளிலும் தங்



பசுபிக் பிராந்தியத்தில் அமெரிக்க பலம் - பனிப்போர் முடிந்த பின்பும் தேவைப்படுகின்றது.

திரட்டக் கிளின்ரன் அமெரிக்க இராணுவம் வெளிநாடுகளில் இருப்பதால் ஏற்படும் செலவுகளைக் குறைக்கத்தான் பார்ப்பார். அமெரிக்கர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தக் கிளின்ரன் பல சமுதாயத் திட்டங்களை முன்வைத்திருப்பது பலரும் அறிந்ததே.

கிழக்காசியாவுக்கு அமெரிக்கா அளித்திருக்கும் பாதுகாப்பு, ஒப்பந்தங்களில் தங்கியுள்ளன. அவையாவன ஜப்பான், தென்கொரியா, தாய்லாந்து பிலிப்பைன்ஸ், அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, ஆகிய நாடுகளுடனான ஒப்பந்தங்களாகும். அவுஸ்திரேலியாவும், நியூசிலாந்தும் அமெரிக்காவும் கூட்டாக அன்சுஸ் (ANZUS) என்ற பரஸ்பர ஒப்பந்தத்தை வைத்திருக்கின்றன.

கியுள்ளோம்'' என்று அவர் குறிப்பிட்டார். ஆனால் அவர் பல நாடுகள் ஒன்றுகூடி பாதுகாப்பு ஒப்பந்தங்கள் செய்வதையும் வரவேற்றார். ''புதிய பிரதேச வரியான முரண்பாடுகள் உலக சமுதாயத்திற்குப் பெரும் சவாலாய் அமைந்துள்ளன. இதனால் நாடுகள் தமக்கு அண்மித்த நாடுகளுடன் பரஸ்பர பல்நாட்டு ஒப்பந்தங்கள் செய்வது சிறப்பு. நாலு தசாப்தங்களாக வல்லரசுப் போட்டிகளில் தோன்றாத பிரச்சனைகள் தற்சமயம் பிற தேசங்களில் தோன்றியுள்ளன'' என்றார் லோர்ட். ஹொங்கொங் நாட்டிலுள்ள சீனச் சர்வகலாசாலையில் கிழக்காசியாப் பாதுகாப்பு நிபுணராகப் பணிபுரியும் டேவிற் யூட்ஸ் என்பார்.'' நாங்கள் காண்பது ஒரு

புதிய மாற்றம். இது என்றோ நடந்திருக்கவேண்டியது. இப்போது அதிகாரத்தில் இருக்கும் ஜனநாயகக் கட்சி நிர்வாகம் இறுதியாக இந்த நிலைப்பாட்டை எடுத்துள்ளது'' என்று கூறியுள்ளார். புஷ் நிர்வாகம் பழைய 'இரண்டு நாடுகள்' ஒப்பந்தத்தில் நம்பிக்கை கொண்டிருந்தது. டேவிற்யூட்ஸ் தொடர்ந்து குறிப்பிடுவது பின்வருமாறு'' இது ஒரு சமனில்லாத ஒழுங்கு. ஐரோப்பிய பாதுகாப்பிற்கு அமெரிக்கா பல நாடுகளுடன் கூட்டு ஒப்பந்தம் வைத்திருக்கின்றது, ஆனால் இதுவரை இந்தக் கொள்கையை ஆசிய பசுபிக் பிராந்தியத்திற்கு அது புகுத்தவில்லை. இப்போதைய மாற்றம் என்றோ வந்திருக்கவேண்டியது.''

பெரும்பான்மையான நாடுகளுக்கிடையிலான ஒப்பந்தங்கள் 1950 களில் தொடங்கப்பட்டவையாகும். இவைகளின் நோக்கம் சோவியத் ருஷ்யாவின் பொதுவுடமை விரிவைத் தடுக்கவும் சிறிய அளவுக்குச் சீனாவின் ஆதிக்கத்தைக் குறைக்கவும் ஆகும். ருஷ்யப் பொதுவுடமையின் வீழ்ச்சியால் இந்த நோக்கம் பெரும்பான்மையாகக் குறைந்துவிட்டது. ஆனால் ஆசிய நாட்டுத் தலைவர்கள் அமெரிக்கா இந்தப் பிரதேசத்தில் தொடர்ந்து இருப்பதையே விரும்புகின்றனர். அமெரிக்க வெளியேற்றத்தால் ஆதிக்க வெறுமை தோன்றிவிடும். வடகொரியாவில் அணு ஆயுத உற்பத்தியும் ஸ்பிறாற்லி தீவுகளுக்கு நாடுகளுக்கிடையிலான சொந்தம் பாராட்டும் முரண்பாடுகளும் சில முக்கிய பாதுகாப்புத் தலைவலிகளாகும். ஆனால் பெரும்பான்மையான ஆசியத் தலைவர்கள் புதியதோர் பாதுகாப்பு ஒழுங்கில் சீனாவும் ருஷ்யாவும் சம்பந்தப்படுவதைப் பெரிதும் விரும்புகின்றனர்.

இப்படிச் சீனாவையும் ருஷ்யாவையும் இழுப்பது சுலபமான தொன்றல்ல, யூட்ஸ் சொல்கிறார் ''இந்த இரு நாடுகளும் வருவதை இவர்கள் விரும்புகிறார்கள். ஆனால் சீனா ஒரு மாபெரும் நாடு. ஒப்பந்தத்தில் சீன ஆதிக்கம் பெருக வாய்ப்புண்டு. இந்தப் பயம் உண்மையானதொன்று. இன்றைய நிலையில் ருஷ்யாவின் பார்வை ஐரோப்பாவை நோக்கியே இருக்கின்றது'' என்று. ஆசியன் நாடுகளின் கவலை அமெரிக்கா இந்தப் பிரதேசத்தை விட்டு வெளியேற பிராந்திய வல்லரசுகளான சீனாவும் ஜப்பானும் சர்வதேச கண்ணோட்டத்தை விடுத்து தங்களுடைய குறுகிய நலன்களையே கவனிக்கத் தொடங்கிவிடும் என்பதே.

ஜூலை மாதத்தில் நடக்கவிருக்கும் ஆசியன் நாடுகளின் அமைச்சர்களுக்குப் பின்பான கூட்ட நிகழ்ச்சி நிரலில் பாதுகாப்பும் பிரதானமான விடயமாகும். இந்த விடயம் பிரதானமாகக் கருதப்பட்டு ஆய்வுக்கொடுக்கப்படுவது இதுவே முதற்தடவையாகும். வழைமைபோல் இம்முறையும் 'ஆறும் ஏழும்' என்ற வேலைதிட்டப்படி கூட்டம் நடைபெறும் அதாவது ஆறு ஆசியன் அங்கத்துவ நாடுகளும், கலந்துரையாடலுக்கு அழைக்கப்பட்ட ஏழு நாடுகளும் இதில் பங்குபற்றுவர். சீனா அல்லது ருஷ்யா அழைக்கப்படுவர். ஆனால் பார்வையாளராக மாத்திரமே. சிங்கப்பூர் தேசிய சர்வகலாசாலையின் முத்த அரசியல் விஞ்ஞானப் பேராசிரியர் பில்வீர் சிங் அது ஓர் நம்பிக்கையைப் பொறுத்தவிஷயம் என்று சொல்கிறார்.'' மேலும் ஆறும் ஏழும் என்ற நாடுகளுக்கிடையில் பொதுவானவை அனேக முண்டு. ஆனால் பாதுகாப்புக் கலந்தாலோசனைகளில் ருஷ்யா, இந்தியா, சீனா, போன்றவை வழமையாக இன்னும் சேர்க்கப்படவில்லை. சீனாவைக் கலந்தாலோசிக்க வேண்டுந் தான். ஆனால் உடனடியாக அதைச் செய்ய முடியாது. அவர்கள் வருகையில் பாதுகாப்புக்கலந்துள்ளது, இது பில்வீர் சிங் அபிப்பிராயமாகும்.

பலநாடுகள் சேர்ந்த கூட்டுப் பாதுகாப்புக்காக இரு நாடுகள் பாதுகாப்பு ஒப்பந்தத்தைத் தள்ளி வைக்க ஆசிய நாடுகள் தயாராகவில்லை. சிங்கப்பூரில் ரொம்மிகோ சொல்கிறார் ''இந்தச் சந்திப்பைத் தனது ஒப்பந்தம் மூலமாகச் செய்யப்பட்ட நட்புறவின் முக்கியத்தை வலியுறுத்தப்பயன்படுத்தவேண்டும்'' என்று சிங்கப்பூர் தனது இராணுவத்தளப் பாவிப்புரித்தை அமெரிக்காவுக்குக் கொடுத்துதவுகின்றது. முன்னாள் தூதுவராகிய ரொம்மிகோ ''இந்தப் பிராந்தியத்தை விட்டு அமெரிக்கா முற்றாக வெளியேறுவதால் வரும் வெறுமை விரும்பத்தக்கதல்ல, அதனால் ஆசிய நாடுகளுக்கிடையில் சண்டைகள் வரக்கூடிய வாய்ப்புண்டு'' என்றும் தொடர்த்து பேசியுள்ளார்.

சிங்கப்பூரில் நடக்கும் இச்சந்திப்பு இரகசியமாக நடக்கின்றது. கூட்டு அறிக்கை ஒன்றும் வெளியிடப்படமாட்டாது. அமெரிக்காவும் தனது நிலைப்பாட்டை வெளியிடவில்லை. ஆசியன் பிரதேச வாரியான கூட்டு, ஒப்பந்தங்களுக்கு ஓர் முன்மாதிரியானதாகும்.

ஏசியாவீக், ஜூன் 2, 1993

ஐரிஷ் குடியரசுப்படைகள் தப்பிவிடும்போது

பிரிட்டன் இக்கட்டான சூழ்நிலையில் பயங்கரவாதத்தோடு சண்டையிடுகிறதா?

அவர்கள் அவரை "வீஜீமி" கனிங் என்று அழைத்தார்கள். அவரது ஆசையோ பெரியதும் பயங்கரமானதுமாகும். லண்டனின் புற நகர்ப்பகுதியிலுள்ள நோதோல்ற்றில் வசிக்கும் அவருடைய அயலாரைப் பொறுத்தமட்டில் அவர் யாரையும் நோகச் செய்யாத நல்லமனிதர். பகலில் (கொல்ப்) குழிப்பந்தாட்டம் ஆடுவர். இரவில் அங்கேயுள்ள களியாட்ட அரங்கில் சிறிது செலவிடுவார். ஆனால் ஸ்கொட்லண்ட் பொலிசார் நன்கு அறிந்தமட்டில் அவரிடம் சிறிது இரக்கமற்ற குணாதிசயங்களும் காணப்பட்டன. அதாவது அவருடைய தலையணைக்குக் கீழ் ஒரு கைத்துப்பாக்கி, கட்டிலுக்குக்கீழே 'செம்ரெக்ஸ்', உடைகள் உடுத்தும் இடத்தில் வெடிக்க வைக்கும் பொருட்கள், வீட்டின் பின்புறத் தோட்டத்தில் முயல் வளர்க்கும் கூடுகளுக்குள் 6 கலாஸ்னிக்கோவ் துப்பாக்கிகள் ஆகியன காணப்பட்டன. இந்த ஆண்டு மூற்பகுதியில் 37 வயதான ஜேம்ஸ்கனிங்கிற்கு 30 ஆண்டுகாலச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. அப்போது அவர் எதிர்காலத்தில் லண்டனில் மேற்கு விளிம்பில் உள்ள பெக் படமாளிகைக்குக் குண்டு வைப்பார் என்றோ நகரின் மையத்தில் நடக்கும் தொடரும் பயங்கரவாதங்களுக்குத் தலைமை தாங்கும் அதிகாரியாக இருப்பார் என்றோ யாரும் தெரிந்திருக்கவில்லை. பிரிட்டனின் மேலாளர்களுக்கு அதிகப்படியான சிக்கலைக் கனிங் கொடுக்க ஆரம்பித்தார். அவரைக் கைது செய்துவிட்டால் பெரிய இரைகள் சிக்கக்கூடிய புலனாய்வு வழிகளை அவர்கள் இழக்கவேண்டி நேரிடலாம். கைது செய்யாது விட்டால் மிகப்பயங்கரமான குற்ற வியலாளன் சுதந்திரமாக இயங்குவான்.

இங்கிலாந்தின் பிரதான பூமியில் ஐரிஸ் குடியரசுப்படைகள் பாரிய விளைவுகளை ஏற்படுத்தும் தாக்குதலை மேற்கொள்ளும் போதெல்லாம் இவ்வாறான வினா எழுகிறது. ஏன் பிரிட்டன் ஐரிஸ் குடியரசுப் படைகளைச் செயலிழக்க வைக்கக் கூடாது? ஒருபுறம் பிரிட்டனின் மண்ணில் 30 மீகப் பயங்கரமான ஐ.கு.இ செயற்பாட்டினர் இரகசிய வதிவிடங்களில் வாழுகிறார்கள். மறுபுறம் புலனாய்வுப் பாரம்பரியத்தில் மீகவும் நவீனத்துவம் மிக்க ஐரோப்பிய வல்லரசு ஒன்று ஒரு ஆண்டிற்கு முன் எப்போதும் தற்காப்பை மட்டும் மேற்கொண்டிருப்பதில் பிரிட்டன் களைத்துப்போயிற்று. பணிப்போர் முடிந்தும், பணியில் இருந்து விடுவிக்கப்பட்ட உள்நாட்டுப் துபாகாப்பு முகவரான எம்.ஐ 5 பர். இந்தமுரண்பட்ட இலக்குகள் அமைப்புரீதியிலான வெடிப்புகளை ஏற்படுத்திவிடும்" என்கிறார் துப்பறியும் நாவலாசிரியரும் காம்பியல் நிபுணரும் கன்சர்வட்டிக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினருமான றூப்பட் அலசன்.

1991ம் ஆண்டில் புரூஸ் அன்றோயல்ஸ் "பாண்ட் வாத்தியக் குழுவைப்பார்த்து 300 மக்கள் ரசித்துக் கொண்டிருந்த ஒரு லண்டன் படமாளிகைக் கட்டடம் சிதறிச் சின்னாபின்னமாகாமைக்

ஐ.கு.இக்குள் ஊடுருவுவதற்காக ஸ்கொட்லண்ட் யாட்டிடமிருந்து "தலைமைத்துவப் பொறுப்பை" ஏற்பதாக உள்துறை அமைச்சர் கெனத்கிளாக் அறிவித்தார். பொலிஸ் கடமைகளை யாட் மேற்கொள்ளும் என்றும் பிரிட்டனின் மிகத்திறமைவாய்ந்த எதிர்வேவு நடவடிக்கைகள் ஐரிஸ் கரந்தடிப் படையினரின் செயற்பாட்டிற்குள் நுழைந்துவிடும் என்றும் நம்பிக்கை ஏற்பட்டது. புதிய உலகஒழுங்கின் ஏனைய பகுதிகளைப் போலவே இதன் பலாபலன்களும் ஏமாற்றமளிப்பதாகவேயுள்ளன. "குற்றவியலாளரைக் கைது செய்து சிறைகளிலடைக்கவே பொலிசார் விரும்புவர். பாதுகாப்புப்படையினர் புலனாய்வுத்தரவுகளைச் சேகரிப்



பரம இரகசியங்கள்: லண்டனில் ஏப்ரல் 24ல் நிகழ்ந்த குண்டுவெடிப்பின் பின் வாஷிங்டனில் துப்புத் தேடுகிறார்கள்.

குக் காரணம் வீ. ஜீ.மீ வைத்த 28 இறத்தல் செம்ரெக்ஸ் குண்டை வெடிக்கவைக்கும் கருவி சரிவர இயங்காமைதான். அவர் சென்ற ஆண்டு கைது செய்யப்பட்டு விட்டதால் மேலும் வெற்றிகரமான தாக்குதல்களை அவர் செய்யமாட்டார் என்பதற்கு உத்தரவாதமுண்டு. தீர்வு காணப்படாத ஐ. கு. இ இரகசியங்களின் தொந்தரவான எண்ணிக்கையைக் கொண்ட ஒரு நாட்டிலே பெறுமதிமிக்கக் கடுமையான கண்ணோட்ட இலக்கு இதனால் இல்லாமற் செய்யப்பட்டுவிட்டது. ஒரு மாதிரி குண்டு ஒன்று பாசறையைத் துளைத்துக்கொண்டு போன போது 1989 ல் கென்ற் முகாமில் இருந்த 11 படைய பாண்ட்வாத்திய இசைக்கலைஞர்கள் கொல்லப்பட்டமை 1990 ல் கார்க் குண்டினால் கன்சர்வெட்டிவ் கட்சிப்பாராளுமன்ற உறுப்பினர் அயன்கோவ் கொல்லப்பட்டமை, 1993 ல் வொறிங்டன் நகரின் வர்த்தக மையக்குண்டுவெடிப்பில் இரண்டு குழந்தைகள் கொல்லப்பட்டமை, பற்றிய இந்த வழக்குகளில் இதுவரை யாரும் கைதுசெய்யப்படவுமில்லை, தண்டனை பெறவுமில்லை. 1988 ம் ஆண்டிலிருந்து பிரிட்டனின் பிரதான பூமியில் ஐ. கு. இ மீளவும் ஆரம்பித்த இரத்த வேட்டையின் மொத்த விளைவு 28 பேர் இறந்துள்ளனர். 468 பேர் காயமடைந்துள்ளனர். இந்த எண்ணிக்கையின் 3/4 பங்கு கடந்த 18 மாதங்களில் நிகழ்ந்தவையாகும்.

முரண்படும் இலக்குகள்

பயங்கரவாதத்தை ஒழிக்கும்விடயத்தில் பிரிட்டனின் முயற்சிகளில் அமைப்பு ரீதியான தவறுகள் உண்டு என்று அலசன் மட்டும் கருதவில்லை. ஐ. கு. இ நடவடிக்கைகளில் தற்போது எம். ஐ. எஸ். இன் பிரதான புலனாய்வுப் பணியைத் தவிர ஸ்கொட்லண்ட்யாடின் இரண்டு பிரிவுகளும் 42 மாகாணப் பொலிஸ் படையும் பங்குகொள்ளுகின்றன. இவை ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு தலைமைக்காவலர் இருக்கிறார். துப்பறிபவர்களுள்ளனர். எல்லோரிடமும் இதற்கான அடித்தள அறிவுணர்வு முண்டு. மேலாழ்ந்தவாரியான ஆலோசனைகளுக்காகத் தொடர்ான பல பொலிஸ் அரச குழுக்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதைவிடத் தனக்கு இணைப்பாளர் தரத்திலான பதவி வழங்கப்பட்டுள்ளதாகத் தற்பெருமை பேசும் ஒரு ஸ்கொட்லண்ட் மேலாளரும் உள்ளார். ஆனால் அவருக்கு எந்த அதிகாரமும் இருப்பதாகத் தெரியவில்லை. ''இது ஒரு பாம்பும் ஏணியும் முறையிலான ஆணைக்குழுக்களும் முகவரங்களுமேயாகும்'' என்று அபிப்பிராயப்படுகிறார். ஸ்கொட்லண்டிலுள்ள புனித அன்ட்றூஸ் பல்கலைக்கழகத்தின் பயங்கரவாத நிபுணரான போல் வில்கின்சன் எம். ஐ. 5 இன் நகர்வு சென்றிருக்கும் தொலைவு போதுமானதல்ல எனக்கருதும் பலருள் இவரும் ஒருவர். ஐ. கு. இ. நிபுணர்கள் 300 அல்லது 400 பேரைக் கொண்ட தொகையினரை நாட்டின் மிகச் சிறந்த புலனாய்வாளர்கள் பொலிஸ் துறையினர் மத்தியிலிருந்து தெரிவு செய்து உயர் அதிகாரம் கொண்ட ஒரே அணியை உருவாக்கவேண்டும். இதுதான் வில்கின்சனின் தீர்வாகும். இவர்களனைவரும் ஒரே தளபதியின்கீழ் கொண்டு வரப்டவேண்டும். முகவர்களின் திறமைகள் இவரால் ஒருங்கிணைக்கப்படவேண்டும். பொலிஸ் புலனாய்வுத்துறையினருக்கு இடையில் முரண்பாடு தோன்றும்போது நடுவராகப் பணிபுரியும் நுண்ணறிவு இவருக்கிருக்கவேண்டும்.

குறிப்பாக றோயல் அல்ஸ்ரர் கொன்ஸ்ரபியூலரி எனப்படும் பொலிஸ் பிரிவின் தலைவரான சேர் ஹியூ அன்னெஸ்லி உட்படச் சில சட்ட அமுலாக்கல் மேலாளர்கள் ஒருமுகப்படுத்தப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புத் தொகுதி உருவாக்கப்படவேண்டும் என்றும் அதுவே முகவர்களுக்கிடையிலான உள்விட்டு மோதல்களைக் கட்டுப்படுத்தமுடியும் என்றும் கருதுகிறார்கள். அமைப்புரீதியான நிரந்தரத் தன்மை மீக்க பலம்வாய்ந்த ஒன்றாக இருந்து வருகிறது. 47 கோடி பவுண்கள் வரையில் சேத மடையக்காரணமான ஏப்ரல் 24 இன் லண்டன் நிதி மாவட்டக் குண்டுவெடிப்பின் பின்னர் மேலும் பல பாதுகாப்புப் புகைப்படக் கருவிகளும் மாவட்டத்திற்கான அதிகரித்த பொலிஸ் பாதுகாப்பும் வழங்குவது பற்றி ஆராயப்படுவதாக உள்துறை அமைச்சர் கிளாக் உறுதியளித்திருந்தார், ஒரே ஆண்டில் அங்கே இடம்பெற்ற இரண்டு குண்டுவெடிப்புகளில் இறந்தோர் நால்வர். காயமுற்றோர் 135 பேர். வர்த்தகம் செய்வதற்குச் சீர்திருந்திய இடம் லண்டன் என்ற பேரும் புகழும் சிதைந்து போய்விட்டது. ''வெகு விரைவாகவே லண்டன் மாநகரம் சாதாரண வாழ்க்கைக்குத் திரும்பிவிட்டது.'' என்பது கிளாக்கின் கருத்து. பயங்கரவாதத்திற்குப் பணிந்து போவதில்லை என்பது பிரிட்டனின் தொடர் நிலைப்பாடாகும். ஐ.கு.இ. எதிர் முயற்சிகள் பொறுமையிழந்த வன்முறைச் செயற்பாடுகளாலல்லாது, அவற்றின் சொந்த நிர்மான நிறைவினாலே தான் தோல்வியைத் தழுவப்போகும் விசித்திரமான அபாயம் தோன்றியுள்ளது.

லண்டன் டானியல் பெடேசன்.

—நியூஸ்வீக், மே 17, 1993

சிறெபிறேனிக்காவை இழந்தது யார்?

ஒரு நகரத்தின் வேதனை இருந்தும், கிழக்கு பொஸ்னியாவைச் சேர்பியர்களுக்கு விட்டுவிட கிளின்ரன் ஆயத்தமாகிறார் போலத் தெரிகிறது



போரின் அழிவு

இரண்டு மாதங்களுக்கு முன்னர் சிறெபிறேனிக்காவை எவருக்கும் தெரியாது. இன்று கிழக்கு பொஸ்னியாவின் கடைசி நிலைப் பாட்டின் அடையாளமாகவும் சேர்பிய ஆக்கிரமிப்பு விடயத்தில் மேற்குலகின் கையாலாகாத்தன்மையின் பிரதிபலிப்பாகவும் ஆகிவிட்டது. ஒரு ஆண்டு காலமாகத் தாம் முற்றுகையிட்டிருந்த இந்த நகரத்தைச் சேர்பியர்கள் சென்ற வாரம் எரிகணை கொண்டு தாக்கினார்கள். பாதுகாப்பிலுள்ள புகலிடம் அதுவென்று ஐ. நா. பாதுகாப்புச்சபையினர் பயனேதுமில்லாமல் பறைசாற்றிக் கொண்டு சேர்பியருக்கெதிராகக் கடுமையான தடைகளை விதித்திருந்தனர். நோய்வாய்ப்பட்டோரும் காயமடைந்தோரும் வயதில் இளையோரும், முதியோரும் என அதிஷ்டக்காரர்கள் சிலர் அண்மையில் உள்ள ருஸ்லா என்ற பாதுகாப்பான அந்நிய எல்லைக்குட்பட்ட சிற்றூருக்கு ஐ. நா. வாகனங்களில் கால்நடைகளைப் போல் கொண்டு செல்லப்பட்டனர். அநேகமாக எதிரிகளான 40, 000 லிருந்து 60,000 வரையிலான பொஸ்னியர்கள் அங்கேயே தரித்து நின்றனர். வார இறுதியில் யூகோஸ்லாவியாவிலுள்ள ஐ. நா. அதிகாரிகள் சேர்பியப்பிடியிலிருந்து பொஸ்னியர்களை மீட்டெடுக்கமுடியும் என்ற நம்பிக்கையளிக்கத்தக்க விதத்திலான ஒரு போர் நிறுத்தத்தைக் கடைசி நிமிடத்தில் ஏற்படுத்தினர். அந்தப் போர் நிறுத்தம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால் அதன் மூலம் ஐ.நா. படைகள் நகருக்குள் சென்று அங்கேயிருந்த பொஸ்னியப் போராளிகளை நிராயுதபாணிகளாக்கியிருக்க முடியும். நகரில் அகப்பட்டுத் தவித்துக் கொண்டிருந்த பல்லாயிரக் கணக்கான எதிரிகளுக்கும் பாதுகாப்பான வெளியேற்றத்திற்கு அது உதவியிருக்கும். மிருகத்தனமான ஒரு போரின் கெடுதல் மீக்க இரத்தப் பெருக்கையும் தடுத்திருக்கமுடியும். அப்படியிருந்தும் இந்த ஒப்பந்தம் எப்போதுமே சேர்பியர்கள் விரும்பி நின்ற ஒன்றை உறுதிப்படுத்தவே உதவியது. இப்போது ''இனச்சுத்திகரிப்புச் செய்யப்பட்டுள்ள'' அகண்ட பிரதேசம் அவர்களுக்கு இணைத்துக்கொடுக்கப்பட்டுள்ள பணியே நடந்துள்ளது.

பொஸ்னியாவின் மேல் விமானங்கள் பறக்கக்கூடாது என்ற நிலை நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தும் சிறெபிறேனிக்கா வீழ்ச்சியுற்றபோது மேற்குலகம் சும்மா பார்த்துக் கொண்டு நின்றது. பொஸ்னியாவைப் பற்றி பில் கிளின்ரன் மிகவும் கடின வார்த்தைப் பிரயோகம் செய்து கொண்டிருந்தார். நியூஸ்வீக்கிற்கு நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளபடி சண்டையில் தலையிடாமலே சேர்பியப்படையினருக்குக் கிழக்கு பொஸ்னியாவை விட்டுக் கொடுக்க அமெரிக்கா சம்மதமளித்திருக்கிறது. அதற்குப் பதிலாக சின்னாபின்னப்பட்டுள்ள, முற்றுகைக்குள்ளான பகுதிகளிலிருந்து குடிமக்களை அமைதியான வழியில் வெளியேற்றுவதிலேயே அமெரிக்க முயற்சி கண்ணுங்கருத்துமாயுள்ளது. ஒட்டுமொத்த அச்சுறுத்தல்களையும் பல்லாயிரக்கணக்கான பொஸ்னியர்களை நேட்டோ ஆதரவுடன் ஒழுங்கு முறையில் அகற்றும் மொஸ்கோ–பெல்கிறேட் திரைமறைவுப் பேச்சுவார்த்தைகளையும் அமெரிக்கா கவனித்துக் கொண்டிருப்பதாகவும் கூறப்படுகிறது. ஆட்களை வெளியேற்றும் விடயத்தில் அமெரிக்கா பங்கு கொள்ளக் கூடும். அட்றியாட்டிக்கில் தரை - நீர்வழியிரண்டிலும்பயன்படும் போர்த்திறன் கொண்ட கப்பல்களில் உலங்குவானூர்திகள் அதன்வசமுள்ளன.டிறினா ஆற்றுப் பள்ளத்தாக்கிலும், சரஜேவோவிலும் படைப்பலப் பிரயோகம் கடைசி ஆயுதமாகவே உபயோகிக்கப்படும். சேர்பியர் ''இந்த நிலைப்பாட்டை அறிந்து நடக்கத்தவறின்'' சிறெபிறேனிக்காவிலும் எனைய கிழக்கு பொஸ்னியாக் கிராமங்களிலும் தாக்குதல்களைத் தொடர்ந்தால் ''குண்டுவீச்சு நடத்துவதொன்றே வழியாகும்'' என்று ஒரு அமெரிக்க அதிகாரி தெரிவித்தார்.

கிளின்ரன் நிர்வாகம் இந்த முடிவுக்கு எப்படி வந்தது? இதுவரை தோல்விகண்ட ராசதந்திர முலோபாயங்களிலே அமெரிக்கா நம்பிக்கை வைத்திருந்தது. எந்த நன்மையும் நிகழமுடியாது என்ற இறுதி நிமிடத்திலேதான் அது மிகப் பாரதூரமான படை நடவடிக்கைப் பக்கம் கவனத்தைச் செலுத்தியது. விமானத்தாக்குதல்களால் விளையக்கூடிய நிச்சயமற்ற நன்மைகளையும், அது சேர்பிய

முன்னேற்றத்தைத் தடை செய்வதை விட்டுத் துன்பக்கறையையே வீளை விக்கும் என்பதையும் இதனால் தவிர்க்கமுடியாத விதத்தில், தரைப்படையை அனுப்பவேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகுமென்பதையும் ஏற்றுக் கொள்ளத்தக்கவிதமாகக் கூட்டுத் தளபதிகளின் தலைவர் ஜெனரல் கொயின்பவல் சுட்டிக் காட்டியிருந்தார். கடைசிவரை தரைப்படையை அனுப்புவதில்லை என்பது கிளின்ரனின் கட்டாயமான முடிவாகும்.

கிழக்குப் பொஸ்னியாவைக் கைவிட்டுவிடக் கிளின்ரன் எடுத்த முடிவு அவரை ஒரு இக்கட்டான நிலையில் வைத்துள்ளது. அவருடைய பிரச்சார உரைகள் பொஸ்னியக்குடியரசுக்கு உதவப்போவதாகவே அமைந்திருந்தது. புஷ் இவ்வாறு உறுதியேதும் வழங்கவில்லை. தன்னுடைய முன்னவர் புஷ்ஷைப் போலல்லாது கிளின்ரன் இந்தப் பிரச்சினையை மனிதாபிமான நிலையிலிருந்து அமெரிக்க மூலோபாய நலனுக்குரிய ஒன்றாக உயர்த்திவிட்டார். எமது எல்லையிலிருந்து இந்தப் போரரட்டம் தொலைவிலிருக்கலாம் ஆனால் எங்கள் அக்கறையிலிருந்து அது தொலைவிலில்லை. பனிப்போருக்குப் பின்னர் இன—மதவழிச்சிறுபான்மையினரின் விடயங்களில் உலகம் எவ்வாறு அக்கறை காட்டப்போகின்றது என்பதை முந்தைய யூகோஸ்லாவியாவில் ஏற்பட்டுள்ள வன்முறையில் அது நடந்துகொள்ளும் விதத்திலிருந்து கண்டறியலாம்'' என்று பெப்ரவரி 10ல் நிருபர்களிடம் வெளியுறவு அமைச்சர் வோறன் கிறிஸ்தோபர் கூறினார். வன்முறையை நிறுத்த அது அறிவித்த தொடர்ச்சியான நடவடிக்கைகள் மூலம் வெள்ளை மாளிகை தனது கௌரவத்தையே பொஸ்னியாவில் கோடிட்டது.

பெரும்பாலும் தொடர்பின்மை

எல்லாவகையாலும் அவை கோழைத்தனமானவையேயாகும். பெல்கிறேடுக்கு எதிரான தடைகளை இறுக்குவதில் ஈடுபட்டார்கள். மனிதாபிமான வான்பொதி விநியோகங்களை ஒழுங்குசெய்வதில் உதவினார்கள். தொடர்பில்லாத விமானப் பறப்புத்தடையை அமுல் செய்தார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக கடந்த ஒரு ஆண்டுகாலப் போரில் பிரதானமாகப் பலியாகிய முஸ்லிம்களுக்கு இது நன்மையயக் காது என்று கிறிஸ்தோபர் அறிவித்த சமாதானத்திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கினார்கள். ராசதந்திர மூலோபாயம் ஓரளவு வெற்றியளித்தது. பொஸ்னியாவை 10, ஓரளவு சுயநிர்ணய உரிமைகளுள்ள பிரதேசங்களாகப் பிரிக்கும்சைரஸ் வான்ஸ்—ஓவன் பிரபுத் திட்டம் சிறிது முன்னேற்றகரமானதாகும். இந்த ஒப்பந்தத்தில் முஸ்லிம்கள் குறோஷியர்களுடனிணைந்து ஒப்பமிட்டுள்ளார்கள். இதேபோன்று சேர்பியர்களும் செய்யமாட்டார்கள் என்பதை நிர்வாகம் முன்கூட்டியே தெரிந்திருக்கவில்லை. சர்வதேச சமூகம் மேலும் கடுமையாகத் தம்மைத் தனிமைப்படுத்தும் என்ற எச்சரிக்கை அவர்கள் மனத்தை மேலும் இறுக்கமாக்கியது. வான்ஸ்—ஓவன் திட்டத்தை முத்தரப்பினரும் ஏற்றுக் கொண்டால் அதைத் தொடர்ந்து தனது விரிவான பங்களிப்புப் பற்றி அமெரிக்கா கோடி காட்டியது. குறிப்பாக நேட்டோவின் சமாதானப் படையின் அளவு பற்றியதாகும் அது. இவ்வளவிருந்தும் பேச்சுவார்த்தைகள் முறிவடையும் சந்தர்ப்பம் உண்டு என்பது பற்றி அமெரிக்க அதிகாரிகள் சிந்திக்கவேயில்லை. ''மற்றைய வழிகளெல்லாம் சிறிது கடினமானவையாக இருந்தமையால் ராசதந்திர வழியிலேயே நாங்கள் கவனம் செலுத்தினோம்'' என்கிறார் அவர்களைச் சேர்ந்த ஒருவர்.

இரண்டு வாரங்களுக்கு முன்னர், தமது மூலோபாயங்கள் செயற்படவில்லை என்பதைக் கிளின்ரனின் அதியுயர் அதிகாரிகள் உணர்ந்தனர். தனித்துவிடப்பட்டபோதும் சேர்பியர்கள் பணிந்துவரத் தயாராக இருக்கவில்லை. திட்டத்தை ஏற்காமல் நிராகரித்த உடனேயே கிழக்கு பொஸ்னியா மீது தாக்குதலை ஆரம்பித்தனர். ஜனாதிபதியின்



முக்கியஸ்தர்கள் குழுஉறுப்பினர்கள் பழைய நடவடிக்கை பற்றி மீளாய்வு செய்ய ஒன்று கூடினர். கிறிஸ்தோபர் பாதுகாப்பு ஆலோசகர் அந்தனி லேக், ஐ.நா.வுக்கான தூதுவர் மடெலின் அர்பிறைற் ஆகியோர் அவர்களுடனங்குவர். அவர்கள் முன் தெரிவுக்கிருந்த விடயங்கள் பொஸ்னியாவுக் கெதிரான ஆயுதத்தடை நீக்கம், சரஜேவோ முற்றுகையை முடிவுக்குக் கொண்டுவர வான் தாக்குதல், சேர்பியா மீது குண்டு வீச்சு பொஸ்னியாவில் காப்பான புகலிடங்களை உருவாக்குதல் ஆகும்.

ரஷ்ய ரத்ததிகாரப் பிரயோகம்

ஆழ்ந்து பார்க்குமிடத்து அனைத்து வழிகளும் சுமை கூடியவையாகவே இருந்தன. முதலில் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் உள்ள நட்புநாடுகளை



சேர்பிய படையினர்

அமெரிக்கா தன் வழிக்குக் கொண்டு வர வேண்டியிருந்தது. அமைதி காக்கும் படையில் உள்ள தங்கள் வீரர்கள் விரிவடையும் போரில் மேலும் நாக்குதலுக்காளாகக்கூடும் என்ற அச்சம் காரணமாகப் பிரிட்டனும் பிரான்சும் பொஸ்னியாவுக்கான ஆயுத விநியோகத்தை எதிர்த்தன. கடுமையான செயற்பாடுகளுக்கு அவை ஏன் இணங்க வேண்டும்.? படைப்பலம் உபயோகிக்கும் விடயத்தில் ரஷ்யா ஒரு பெரிய தடைக்கல்லாக இருக்கிறது. ரஷ்யாவில் வரலாற்று ரீதியிலும் சேர்பியர்களோடு தொடர்புடைய கடும் போக்காளரின் எதிர்ப்பைச் சந்திக்கும் யெல்சின்னுக்கு ஒரு சிறு சலுகையாக எப்ரில் 25 இல் நடை பெறவுள்ள ரஷ்ய கருத்துக்கணிப்பு வரையில் பெல்கிறேடுக்கெதிரான புதிய தடைகளை அமுல் நடத்துவதைப் பாதுகாப்புச்சபை பின்போட்டது. படைப்பலத்தை உபயோகித்தற்கான அதிகாரம் வழங்கும் ஐ.நா. தீர்மானம் பனிப்போருக்குப் பின்னான ரஷ்யாவின் முதல் ரத்ததிகாரத்திற்கு வழிவகுக்கும்.

சக்தி விவகாரம் அதனிலும் கூடிய கவனத்தை ஈர்ப்பதாகும். அங்கே நிகழும் பல விடயங்கள் பற்றியும் கொயின் பவலின் ''அப்படியானால் என்ன''? என்ற வினாவுக்கு கிறிஸ்தோபரின் அனுதாபம் இருப்பதாக மூத்த நிர்வாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். பொஸ்னியாவில் தெரிவு செய்யப்பட்ட இடங்களில் அமெரிக்கா குண்டு வீச்சு நடத்தினால் எஞ்சியுள்ள சேர்பியப் படையினர் சிறெபிறேனிக்கா போன்ற நகரங்களில் பதில் நடவடிக்கையிலிறங்கினால் என்னாவது? அவருடைய கனரக ஆயுதங்களை வெளிக்கொணர்வதால் அந்திய எல்லைக்குட்பட்ட சிற்றூர்களைச்சேர்பியர்கள் சிறுபீரங்கிகள் கொண்டு தாக்குவதைத்தடுத்துவிட முடியாது. இச்சிறுபீரங்கிகளை மறைப்பதும் சுலபம் என்பதோடு வானத்திலிருந்து கண்டு கொள்வதும் கடினமாகும். தரைச் செயற்பாட்டில் உள்ள யதார்த்த நிலை என்வெனில் ''எதிர்த்தாக்குதலைச் சமாளிப்பதற்குத் தரைவழிப்படையும் அவசியமாகும்'' என்று பென்ரகன் விளக்கம் தருகிறது. சேபியா மீது குண்டு வீச்சு நடத்துவதென்பதும் குறைவான பலனையே அளிக்கவல்லதாகும். அமெரிக்கவிமானங்கள் கேந்திர முக்கியத்துவம் மிக்க சேர்பியத் தளவாடக்கிடங்குகளையும் தொடர்புச் சாதனங்களையும் அழித்தபின் சேர்பிய ஜனாதிபதி சுலோபோடன் மிலோசெவிக் பெரிய அளவில் இனவழி அல்பேனியர்கள் வாழும்அந்நியர்கள் எல்லைச் சிற்றூர்களுக்கு நகர்ந்துவிட்டால் எது நடக்கும்? இரத்தக் களரியை நிறுத்துவதற்கு அமெரிக்கா தரை வழிப்படையை உட்புகுத்தக் கட்டாயப்படுத்தப்படும்.

''சக்திமிக்க தூண்டுதலாளர்''

அமெரிக்காவுக்குப் பொஸ்னியாவின் முக்கியத்துவம் பற்றிய ஒரு நிலையை உருவாக்கியுள்ளதால் கிளின்ரன் ஏதாவது செய்தாக வேண்டும். ஜனாதிபதி நினைத்தால் சிறெபிறேனிக்கா போன்ற முஸ்லீம் சிற்றூர்களைப் பாதுகாப்பது என்று காரணங்காட்டி மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான படையணித் தலையீட்டை ஏற்படுத்தி அமெரிக்கர்களை விற்றுவிடலாம் என்று சில நிர்வாக அதிகாரிகள் நம்புகின்றார்கள். ''தொலைக்காட்சி ஒரு சக்திமிக்க தூண்டுதலாளர்'' என்று பால்கன் போரில் வெவ்வேறு தோற்றப்பாடுகளைப் பற்றிக் குறிப்பிடும் போது ஒரு அதிகாரி தெரிவித்தார்.

தனது உள்நாட்டுத்திட்டங்களுக்காகவும் பொஸ்னியாவின் தலைவிதியிலும் பார்க்க இந்த நாட்டின் மூலோபாய நலன்களுக்கு அத்தியாவசியமான ரஷ்யாவுக்காகவும் பில் கிளின்ரன் தனது அரசியல் மூலதனத்தை தக்கவைக்கவே விரும்புகிறார். படை நடவடிக்கை பற்றி அமெரிக்க அதிகாரிகள் தொடர்ந்தும் எச்சரிப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை அதேவேளை முற்றுகைக்குள்ளாகியிருக்கும் முஸ்லீம்களை வெளியேற்றும் விடயத்தை வெளிநாட்டுக் கொள்கையின் தோல்வி என்றில்லாமல் மனிதாபிமான முயற்சியின் வெற்றி என்று காட்டுவார்கள். ஆனால் நிர்வாகத்திலுள்ளேயே எதிர்க்குற்றச்சாட்டுகள் ஆரம்பித்துள்ளன. ''சுட்டுவிரல் இப்போதே நீளுகிறது'' என்று கூறுகிறார் ஒரு உள்விட்டுக்காரர். ''யாரோ ஒருவர் சிறெபெறேனிக்காவை இழந்தது யார்? என்ற வினாவை எழுப்பக்கூடும்'' என்று வெள்ளைமாளிகை அஞ்சுகிறது. இறந்தோரினதும், காயமுற்ற குழந்தைகளினதும் படங்கள் முடிவில்லாமல் வந்து கொண்டிருக்கும் வரை அமெரிக்கப் பொதுமக்களும் இதே வினாக்களைத் தொடுத்துக் கொண்டேயிருப்பர்.

வாஷிங்டனில் ஜோன் பரி
மாகறற் கறாட் வோணருடன்
ரொம் போஸ்ற்,
ருஸ்யாவில் சார்ல்ஸ் யேன்
ஐ.நா. வில் றொபின் ஸ்பாக்மன்

நியூஸ்வீக், ஏப்ரல் 26, 1993

பிரியவேண்டிய நேரம்

பொஸ்னியா – ஹேர்சிகோவினாவைப் பிரிக்கும்படி கோர்பச்சேவைக் கேளுங்கள்

அது ஒரு நாடல்ல, அது ஒரு இடம். முன்னொரு காலத்தில் அதை அரசாண்ட ஹப்ஸ்பேர்க் அரசர்கள் வைத்த எல்லையையே பின்பு வந்த ஜனாதிபதி ரிற்ரோவும் ஏற்றுக்கொண்டார். அவருக்குத் தெரியும் இரண்டும் பிரிவதென்றால் ஒரு யுத்தம் நடந்தே ஆகவேண்டும் என்று. மார்ஷல் ரிற்ரோ இறக்கும்போது ஒரு யுத்தம் வராது என்ற சிந்தனைவயப் பட்டவராய் இருந்தார். யூகோசிலாவியா நாட்டிற்குள் இருந்த பல இனங்கள் வாழும் பிரதேச எல்லைகளுக்கமைய உள்நாட்டு எல்லைகளை வகுப்பது சுலபமாக இருக்கும். இதற்குப் பதிலாக குறோசிய எல்லைக்குள் சேபியர்கள் வாழும் இடங்கள் விடப்பட்டுள்ளன. ஹேர்சிகோவினா வாழ் குறோசியர்கள் பிறிதோர் இடத்தில் விடப்பட்டுள்ளனர். அரச பீடத்தில் இருந்த ரிற்ரோவே ஒரு ஹேர்சிகோவினா குறோசியர் ஆவர். அவருடைய தீர்மானம் என்னவென்றால் சமய, மொழி, சரித்திர ஒருவரை ஒருவர் நம்பாமை போன்ற இன்னோரன்ன வித்தியாசங்கள் இருப்பினும், யாவரும் ஒன்றாகவே வாழவேண்டும். அதை மகிழ்ச்சியாகவும் ஏற்கவேண்டும் என்பதே. பல் இனங்கள் வாழும் ஒரு பிரிக்கமுடியாத தனிநாடு என்று வெளியுலகத்தாரை நம்பவைத்தார் ரிற்ரோ. ஆனால் உண்மையில் அது பல்வேறு நாடுகள் கொண்ட ஒரு கூட்டாகும். நாளடைவில் இனக்கலப்பு ஏற்பட்டுள்ளது உண்மைதான். ஆனால் அண்மைக்கால அரசியல் பிழைகள் இவர்களைப் பிரித்துவைக்கவே செய்கின்றன.

அமெரிக்காவின் அரசு இலாகாவும் இங்கிலாந்தின் வெளிவிவகார இலாகாவும் இவைகளை அறிந்திருக்கவேண்டும். அமெரிக்காவின் சைரஸ் வான்சுக்கும் இங்கிலாந்தின் ஓவன் பிரபுவுக்கும் இவைகள் கட்டாயமாகத் தெரிந்திருக்கவேண்டும். ஆனால் ரிற்ரோ விட்டுச்சென்ற யூகோசிலாவியாவை மறுசீரமைப்பது மிகவும் பயங்கரமானதாகும். சிதறிக் கிடக்கும் சேபியர்களை ஒன்றுசேர விடுவதாயின், உலகப் பரப்பில் இவ்வாறு சிதறிக்கிடக்கும் வேறு இனங்களும் ஒன்றுசேர விடப்பட வேண்டும். இதுவரை இந்த அர்த்தமற்ற யுத்தத்தில் பல்லாயிரக்கணக்கானோர் இறந்துள்ளனர். பிரதான வல்லரசுகள் துணிந்து இந்த பொஸ்னியா—ஹேர்சிகோவினா நாட்டைப் பிரித்துவிடாது வாளா இருந்ததால் இந்தக் கொடுமை நடக்கின்றது. யூகோசிலாவியருக்கே உரித்தான கொடூரத்துடன் இப்போது இரு நாடுகளும் பிரிந்துவிட்டன. இரண்டு ஜனநாயக நாடுகளின் பதிலென்ன? சைரஸ் வான்சும் ஓவன் பிரபுவும் இரண்டு நாடுகளும் மீண்டும் ஒன்றாக இருக்கவேண்டு என்ற பைத்தியக்காரத் திட்டத்தைக் கொண்டு வந்துள்ளனர்.

ஐக்கிய நாடுகளின் கடமை என்னவென்றால் சேர்பியர்கள் தங்கள் இஷ்டம்போல் நாடு பிடிப்பதைத் தடுக்கவேண்டும் என்பதே. வெறுப்பான மோசமான கொள்கைகளையுடைய அவர்களுடைய அரசியல்வாதிகளும் இராணுவ அதிகாரிகளும் எப்படி இருப்பினும் பொஸ்னியாவின் சேர்பியர்களுக்கு தங்கள் தலைவிதியைத் தாங்களே நிர்ணயம் பண்ணும் சகல உரிமையும் உண்டு. 1990 ம் ஆண்டின் பின் ஜெர்மனியர்களுக்கு ஒன்று சேர உரிமையுண்டென்றால், 1776 ம் ஆண்டின் பின் அமெரிக்கர்களுக்குச் சுதந்திரப்போர் நடத்தும் உரித்துண்டென்றால், பொஸ்னிய சேபியர்களுக்கும் அத்தனை உரிமையுண்டு. மே. 16 ல் நடந்த கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பில் சேர்பியாவுடன் சேரத் 95 வீதமான பொஸ்னிய சேர்பியர்கள் வாக்களித்துள்ளனர். இதே வாக்களிப்பில் வான்ஸ்ஓவன் திட்டத்தையும் நிராகரித்துள்ளனர் தன்னை ஜனநாயகவாதி என்று கூறும் ஒருவராவது இந்தக் கருத்துக்கணிப்பைப் பாராமுகமாக இருக்கமுடியாது. ஆனால் ஓவன் பிரபு ஒரு கையசைப்புடன் கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பை ஒரு புறம் தள்ளியுள்ளார். சமாதானம் கொண்டுவரும் பொறுப்பு ஐ. நா. வைச் சேர்ந்ததாகும், ஒரு தனி நாடாவது இதில் தலையிடப் போவதில்லை. அவர்கள் கவலையெல்லாம் மனித உரிமை பற்றியதாகும். இரண்டாவது உலக யுத்தத்தில் இந்த நாட்டில் காணப்படும் மலைப்பிரதேசத்தில் யூகோசிலேவியப் போராளிகள் 200,000 ஜேர்மன் துருப்புக்களை அசையாமல் தடுத்து வைத்திருந்தனர். இதற்கு நன்றிக் கடனாக அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் இந்த உள்நாட்டுப் போரில் தனித்துத் தலையிடமாட்டார்கள் போலும். அப்படி இருப்பின் யார்தான் முதலடி எடுத்து வைப்பது?

ஐ. நா. ஒரு வருடத்திற்கு முன்பே நடவடிக்கை எடுத்திருந்தால் முஸ்லிம்களுக்குச் சுயாதிக்கம் உடைய பொஸ்னியக் குடியரசை சேர்பிய எல்லைக்குள் ஸ்தாபித்திருக்க முடியும். அவர்கள் வெளியுறவு விவகாரம், பாரிய பொருளாதார நடவடிக்கை போன்றவற்றை சேர்பியாவுக்கு விட்டுக் கொடுக்கவேண்டி இருந்தாலும் அவர்கள் நிம்மதியாக வாழ முடிந்திருக்கும். இந்தப் பொஸ்னியக் குடியரசு ஐந்து ஒன்றுக்கொன்று தொடர்பற்ற பகுதிகளைக் கொண்டதாக இருக்கும் ஏனென்றால் அவர்கள் வாழும் இடங்கள் அப்

படி. இப்படி ஐ. நா. ஆதரவுடன் நிகழ்ந்திருந்தால் ''இனச்சுத்தப் படுத்தல்'' நடக்காது. சிறுபான் மையினர் நிம்மதியாக இருந்திருப் பார்கள். இப்போது பொஸ்னியா வுக்குக் கொடுக்கக்கூடியதெல்லாம் பல நிலப்பரப்புகளாற் சூழப்பட்ட



தீவு போன்றதோர் நாடு. இதனு டைய பெருந்தெரு, புகையிரத விமானத் தொடர்புகள் சர்வதேச ஒப்பந்தம் மூலம் நிட்சயப்படுத்தல் வேண்டும்.

இப்படியானதோர் தீர்வைக் கொண்டு வருவதற்கு ஐ. நா. வெறும் சமாதானம் செய்யும் ஸ்தாபனமாக இருக்காமல், சமா தானத்தை அமுல்செய்யும் ஸ்தாப னமாக இயங்க வேண்டும். இன அழிப்பு நடந்து கொண்டிருக்கும் போது உணவு உதவி வழங்கும் சக்தியற்ற பார்வையாளனாக ஐ. நா. இயங்குவதில் பயனில்லை. ஐ. நாவுக்கு இராணுவப் பலமும் அதைப் பயன்படுத்தும் வலுவும் வேண்டும். ஐ. நா. வுடைய மனி தாபிமானச் சேவைகள் செஞ்சிலு வைச் சங்கம் போன்ற வற்றிற்குக் கொடுக்கப்படல் வேண்டும். எல் லைகள் நிர்ணயம் பண்ணும் போது நிலப்பேராசை பிடித்த சேபி யர்களை பின்னுக்குத் தள்ளத் தான் வேண்டும். ஆனால் மேற்கு பொஸ்னியாவிலும் கிழக்குக் குறோ சியாவிலும் வாழும் சேபியர் கள் சேர்பியாவுடன் தொடர்பு வைக்கப் போதுமான பாதைகள் வைக்கப்படல் வேண்டும். தவறின் வருங்கால யுத்தமொன்றுக்கு இது காரணமாகிவிடும். ஹேர்சிகோ வினா வாழ் குறோசியர்களை குறோசியாவுடன் இணைப் பது சுலபம், இவை இரண்டும் பக்கம் பக்கமாக இருப்பதால், இப்படியானதோர் செயற்பாட் டிற்கு வான்சும் ஓவன் பிரபுவும் பொருத்தமற்றவர்கள், முன்னாள் சோவியற் ருஷ்ய ஜனாதிபதி மிக் கேயில் கொர்பச்சேவ் தான் இதற் குச் சாலத் சிறந்தவராவர். பொஸ் னியா வாழ் சேபியர்கள் இவரு டைய தேவையை உணர்ந்துள்ள னர். இவர் மேற்கு நாடுகளின் நம்பிக்கைக்குப் பாத்திரமான வர். ருஷ்யர் ஆனபடியாலும் பொதுவுடமை வாதியானபடியா லும் சேர்பியா இவருடைய தஞ்ச யீட்டை வரவேற்கும். ஸ்லாவ் இனவாதி அல்லாதபடியால் குறோ சியர்களும் இவரை வரவேற் பார்கள். ஒரு பரந்துபட்ட நாட் டைத் துண்டங்களாக்கிப் பல நாடுகள் பிறக்கக் காரணமான வரானபடியால் சுயாட்சிக்குத் தவிக் கும் பொஸ்னிய முஸ்லிம்களுக்கு இவர் ஓர் இரட்சகன் ஆவார்.

ஏசியாவீக், ஜூன் 9, 1993

இத்தாலி கிறிஸ்தவத்தில் இருந்து விலகுதல்

சென்ற வருடம் இத் தாலிய கிறிஸ்தவ ஜன நாயகக் கட்சிக்கு ஆண் டவனின் அநுக்கிரகம் கிடைக்கவில்லை. இந் தக் கட்சியின் முதிய பல உறுப்பினர் மீது லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக ளும், களங்கம் உள்ளவர் கள் வலையில் சிக்கியுள் ளார்கள் என்ற குற்றச் சாட்டுக்களும் சுமத்தப் பட்டன ஆதலால். இந்தக் கட்சி மக்கள் மத்தியில் அபகீர்த்தி யடைந்து தோல்வியைத் தழுவிக்கொண்டது. தற்பொழுது கட்சி உறுப் பினர் கட்சியைப் புனர் ஸ்தானம் செய்து, புதிய நடைமுறைகளைக் கையாண்டு புதிய அமைப்பாகக் காட்சிய ளித்து வருங்காலத்தில் நல்ல எதிர்காலத்தை உருவாக்கும் பணியில் சிந்திக்கிறார்கள். தற் பொழுது இத்தாலியில் ஆக 24 வீத மக்களே மாசுக்குச் செல்கிறார் கள்.

கிறீஸ்தவ ஜனநாயகக் கட்சியில் இருந்து கிறீஸ் தவம் என்றதை விலக்கி னால் பின்பு கிறீஸ்து வம் என்ற நிலையே அற் றுப்போகும் என மக்கள் நினைக்கிறார்கள். ஆத லால்தான் மக்கள் கிறீஸ் துவம் என்ற சொல் லைக் கட்சியில் இருந்து நீக்க வேண்டாம் எனக் கேட்கிறார்கள். பிர தான மத குருவின் எச்ச ரிக்கை மத்தியிலும் கட் சியில் இருந்து கிறீஸ்து வம் என்னும் சொல் நீங்க வேண்டும் என வருகிற செப்டெம்பர் மாதக் கட்சிப் பிரத்தி யேகக் காங்கிரஸ் கூட் டத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.

★

கீவ் ஆயுதக் கைமாற்றம் கட்டுக்கடங்காது போகிறது

அமெரிக்க ஐக்கியநாடு தனது 'பங்காளி'யும் தங்கள் ஆயுதக் குவியலைக் கைவிடவேண்டும் என்கிறது



சென்ற ஆண்டு ருஷ்யாவுக்கு அணு ஆயுதத்தை ஏற்றுமதி செய்தல்

வாஷிங்ரனின் விசேட தூதுவர் ஸ்ரோப் ரல்பொற் சென்ற மே, மூன்றாம் வாரத்தில் கீவ் நகருக்கு விஜயம் செய்தார்; உக்ரேயின் நாட்டுக்கும் ஐக்கிய அமெரிக்காவுக்கும் இடையிலான உறவுகளைத் திருத்துவதே அவர் நோக்கம்; சென்ற காலத்தில் சோவியத் குடியரசுகளில் ஒன்றாயிருந்த உக்ரேயினுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே, முன்னர் சோவியத் குடியரசின் அணுசக்தி ஆயுதக் களஞ்சியம் குறித்து ஏற்பட்ட கடும் பூசலைச் சரிசெய்ய என்றே அவர் அங்கு சென்றார். அவர் உக்ரேனிய பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியின் உரையாடலின் போது ''எமது பக்க அகராதியில் 'அழுத்தம் கொடுத்தல்' என்ற சொல் இருக்காது. நாம் அதற்குப் பதிலாகப் 'பங்குடமை' என்ற பதத்தை உபயோகிப்போம்'' என்று கூறினார். அத்திறமைமிக்க ராஜதந்திரியும் உக்ரேயின் ஜனாபதி லியோனித் கிரவ்சுக்கும் நிகழ்த்திய பேச்சுக்களில் ரல்போட் வாஷிங்ரனின் சீவகரமான 'தாக்குதலை' வெற்றிகரமாக நிறைவேற்றியது மட்டுமல்லாமல் ருஷ்யாவுக்கும் உக்ரேயினுக்கும் இடையில் சோவியத் சொத்துக்களையும் உலோக உற்பத்திப் பொருட்களையும் பங்கீடு செய்வது பற்றி ஏற்பட்ட தகராறைச் சுமுகமாகத் தீர்க்கவும் உதவுவதாகக் கூறியுள்ளார். ரல்பொற் தம்முடைய விஜயத்தினால் வாஷிங்ரனுக்கும் கீவுக்குமிடையிலான தொடர்பில் ஒரு புதிய அத்தியாயம் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகப் பிரகடனம் செய்துள்ளார்.

இது நிஜமான நிலையா? அல்லது வெறும் 'காசு சுரண்டும்' விளையாட்டா? ரல்போட் கிறிவ் சுக்கைச் சந்தித்து, பாராளுமன்றம் கேந்திரிய முக்கியமான ஆயுதக் குறைப்புச் சம்பந்தமான உடன் படிக்கை (START-I) அணு சக்தி விஸ்தரிப்பைத் தவிர்க்கும் ஒப்பந்தம் ஆகியவற்றைக் குறித்து ஆமை வேகத்தில் பாராளுமன்றம் செயற்படுவதைத் தாண்டும் பொருட்டுப் பேரம் பேசி வெற்றி பெற்றார். ஆனால் ஐ. அமெரிக்க ஸ்தானிகர் றோமன் பொப்படியூக் தீவிர முயற்சி செய்தே இந்தப் பயன் கிடைத்தது. ஏனெனில் கிறவ்சுக் பழிக்குப்பழி வாங்கும் மனப்பான்மையுடன் செயற்பட்டார். அவருடைய பிரதம மந்திரி லியோனிப் குச்மா ஏப்ரல் மாதம் வாஷிங்ரனுக்குப் போனபோது, அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் அவரைச் சந்திக்க மறுத்து விட்டார். அதனால் குச்மாவும் பாராளுமன்றத் தலைவர் ஜவன் பிளியுஷ்சும் ரல்பொற்றைச் சந்திக்க மறுத்தனர். இவ்வாறு கிளின்ரனின் விருந்து புறந்தந்த செயல் தமக்கு வெறுப்பூட்டியது என்பதைத் தொடர்ந்து உக்ரேயின் தலைவர்கள் காட்டி வருகின்றனர்.

உக்ரேயினிய உயர் அதிகாரிகள் வாஷிங்ரன் ருஷ்யா பக்கம் சாய்ந்த கொள்கையை ஜோர்ஜ் புஷ் காலத்திலிருந்து கிளின்ரன் வரை கடைப் பிடிப்பதால் தமக்கு நடுநிலையான தீர்ப்பு வழங்கத் தவறிவிட்டதாக நிச்சயித்துள்ளனர். அமெரிக்கர் இடைவிடாது அணு ஆயுதப் பிரச்சனையை அடித்தடித்துச் சொல்வது அவர்களது எரிச்சலைக் கிளப்புகிறது. ''எமது நாடு பௌதிக வியல் அடிப்படையில் செயல்புரிகிறது, எவ்வளவுக்கு அழுத்தம் அதிகமோ அவ்வளவுக்கு எதிர்ப்பும் அதிகரிக்கும்'' என்கிறார். சூழல் மந்திரி யூரி கொஸ்ரெங்கோ. கீவ் தனது (யுத்த தந்திர) குறுகிய தூரஞ் செல்லும் ஆயுதங்களை மொஸ்கோவிடம் சென்ற ஆண்டு கையளித்தது. உத்தியோக முறையில் அது தன்னிடமுள்ள மொத்த அணு சக்தி ஆயுதப் பண்டகசாலையையும் ருஷ்யாவுக்குக் கொடுத்து விடுவதாக வாக்களித்து விட்டது. ஆனால் பல உக்ரேயினியர் இது பற்றி இரண்டாம் முறை சிந்திக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். சென்ற மாதம் 450 பாராளுமன்ற உறுப்பினரில் 162 பேர், தமது மண்ணில் மீந்திருக்கும் அணுசக்தி ஆயுதங்களைத் தமது உடமை என அறிவிக்க வேண்டும் எனக் கோரியுள்ளனர். 176 கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகளில் (ஐ.சி.பி.எம்) பொருத்தப்பட்டிருக்கும் 1804 போர்க் குண்டுத் தலைகள், 42 கேந்திரியக் குறிபார்த்துத் தாக்கும் போர் விமானங்கள் ஆகியன அவற்றுள் அடக்கும். அறிவித்தபின்னரே, கீவ் அவற்றைக் கையளிப்பதற்கு முன் பெரும் தொகை நிதி உதவி கைமாற வேண்டும் என்கின்றனர் பாராளுமன்றத்தினர். அபிப்பிராய வாக்கெடுப்பின் படி

36 வீதம் உக்ரேயினியர். அணு ஆயுதங்களை வைத்திருப்பதை ஆதரிக்கின்றனர். ஓராண்டுக்கு முன் இதில் பாதிப் பேரே இந்த அபிப்பிராயம் கொண்டிருந்தனர்.

வாஷிங்ரனின் உதாசீனப் போக்கும் அழுத்தமும் இக்கருத்து மாற்றத்துக்குக் காரணம் எனினும் அணுஆயுத மில்லையேல் மேற்குலகம் தங்களைப் புறக்கணிக்கும் என்ற அச்சமும் உக்ரேயினியர் மனத்தில் உள்ளது. அவர்கள் ருஷ்யாவின் உட்பூசல் காரணமாகப், பல நூற்றாண்டுகளாக ருஷ்ய ஆதிக்கத்திலிருந்து வந்த தமக்கு விடிவு வரும் வேளையில், திடீரெனக் காற்று மாறி அடிக்கலாம் என்ற அச்சமும் உடையவர்களாகக் காணப்படுகின்றனர். ''நாம் யெல்சினை நம்புகிறோம். ஆனால் அவர் பலவீனர்'' என்கிறார் பாராளுமன்ற உறுப்பினர் ஷெர்ஹிஹெலொவற்றி, ''அவரிடத்தை நிரப்புபவர் யார்? (உபஜனாதிபதி) றுற்ச்கோய் அல்லது வேறொரு 'பித்துப் பிடித்த' ருஷ்ய தேசியவாதி?''.உக்ரேயினின் முன்னைநாள் பொதுவுடைமைத் தலைவர்கள் மிக மெல்லவாகச் சந்தைச் சீர்திருத்தங்களைப் புகுத்தியுள்ளனர். ஆதலினால் பொருளாதாரம் ருஷ்யாவின் பொருளாதாரமளவுமோசமாக, அல்லது இன்னும் குறைவாகவே இயங்குகிறது. உற்பத்தி வெளியீடு, தலை கீழாகக் குத்துக்கரணம் அடித்து அடித்து அடிமட்டத்துக்குப் போய்விட்டது. பணவீக்கம் மாதத்துக்கு 50 வீதத்தை எட்டிவிட்டது.

சில அமெரிக்க அதிகாரிகள் தாம் உக்ரேயினின் விசாலமான பிரச்சனைகளைக் கவனத்துக்கு எடுக்காத குற்றத்தைச் செய்துள்ளதாகக் குறிப்பிடுகின்றனர். ''அந்தக் கொள்கைத் திட்டம் ஒரு மலைச்சுரங்கப் பாதை போன்றது. அதை நேரே அந்தம் வரை பார்த்து உரிய வற்றைச் செய்திருக்க வேண்டும்'' என்ற குறிப்பைக் கூறுகிறார் ஒரு அமெரிக்க அதிகாரி. அணுசக்திப் பிரச்சனையை மட்டும் கவனத்தில் கொண்டு,மற்ற அகன்ற பிரச்சனைகள் விடயத்தில் பாராமுகமாயிருந்தது பிழை என்பதைக் குறிப்பிடுகிறார். ரல்பொற் தமது விஜயத்தின்போது, கிளின்ரனின் நிர்வாகம் ஒரு விஸ்தீரணமான இராஜதந்திர அணுகு முறையைக் கடைப்பிடித்தது என்றும், உக்ரேயினின் மிக நீதியான மேலாதிக்கப் பாதுகாப்புத் தேவைகளைக் கருத்தில் கொண்டுள்ளது என்றும் வற்புறுத்தினார். இதற்குச் சாதகமான போக்கை அனுசரிப்பவராகக் காணப்பட்ட கிரவ்சுக் தாம் தம்மால் இயன்ற வரை பாராளுமன்றத்தைத் தூண்டி, கேந்திரிய அணு ஆயுத உடன்படிக்கை 1 ஐ விரைவில் நிறைவேற்றித் தருமாறு கேட்கப் போவதாக வாக்களித்துள்ளார். இந்த முதனிலை நடவடிக்கையைப் பூர்த்தி செய்தால் மட்டுமே, வாஷிங்ரனும் மொஸ்கோவும் பேசி உடன்பட்ட அடுத்த கட்ட ஆயுதக் குறைப்பு முயற்சியைத் தொடங்கலாம். **பாதுகாப்புப் படையினரின் ஆதரவு** இல்லை. ஆனால் உக்ரேயினிய அதிகாரிகள் ரல்பொற் அமெரிக்கா ருஷ்யருடன் பரிந்து பேசி உக்ரேயினுக்கு உதவமுன்வந்ததைப் பற்றி அதிக கவனம் செலுத்தவில்லை; ஏனெனில் அவர்கள் தாமே ருஷ்யாவுடன் நேரடிப் பேச்சுவார்த்தைகளை வைத்துக் கொள்ள முடியும். உக்ரேயினியர் மேற்குலகிடமிருந்து பாதுகாப்பு வாக்குறுதிகளை உத்தரவாதங்களைப் பெற்றுவிட எத்தனித்தும் அதிக பலன் கிடைக்கவில்லை. அமெரிக்கரோ முதலில் அணு ஆயுதங்களைக் கைவிட வேண்டும் என்கின்றனர். தங்களுக்கு முன்னோடியுதாரணமாக உக்ரேனியர் ஆஸ்திரியா நாடு தமது பிரதேச எல்லைப் பாதுகாக்கப்படும் என்ற வாக்குறுதியை அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், சோவியத் யூனியன் ஆகிய நாடுகளிடமிருந்து பெற்ற பின்னரே அணு ஆயுதக் கைவிடுதலை ஒப்புக் கொண்டனர் என்ற விடயத்தைச் சுட்டிக் காட்டுகின்றனர். 1955 ல் தம்மீது மேலதிக்கம் புரிந்த ரஷ்ய நாடுகள் அதிகாரத்தைக் கையளித்து வெளியேறு முன் ஆஸ்திரியா பெற்றுக் கொண்ட இவ்வாக்குறுதியால் அது நடுநிலையைப் பேணும், பூரண சுதந்திர முள்ள நாடாக மலர்ச்சியுற்றதன்றோ? ''அப்படி எல்லாம் சந்தர்ப்பத்தை எதிர்நோக்கியிருக்கலாகாது, அப்போது காலம் வேறு, சூழ்நிலை வேறு'' என்கிறார் ஒரு அமெரிக்க அதிகாரி.

இருதரப்பிலும் கூடிய விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை இல்லாவிட்டால், இரு ஆயுதக் கட்டுப்பாட்டு உடன்படிக்கைகளையும் உக்ரேயினிய பாராளுமன்றம் ஏற்றுக் கொள்ளும் என்பது கடினமான காரியமே, அப் பாராளுமன்ற வெளியுறவுக் குழுவின் தலைவர் டிமிற்றோ பவ்லிச்சோ நிச்சயமாகச் சொல்கிறார். ''மேற்குலகம் பாதுகாப்பு உத்தரவாதம் ஏதாயினும் அளிக்காவிட்டால் அணு ஆயுத விஸ்தரிப்புத் தடை உடன்படிக்கை பாராளுமன்ற அங்கீகாரம் பெறமாட்டாது. உடன்படிக்கை இல்லையேல், விஸ்தரிப்புத் தடை உடன்படிக்கை (NPT) யும் இல்லை'' என்கிறார் அவர் இரத்தினச் சுருக்கமாக. அதுதான் நிகழப் போவதானால் உக்ரேயின்சோவியத் தொல்மரபு ஒன்றைப் புதுப்பிக்கலாம் – ''னீயெற்'' இல்லை என்பதைச் சொல்லி விடுதல்.

மொஸ்கோவிலிருந்து அன்ரு நாகோஸ்ன்கி

கீவிலிருந்து றொபேர்ட்சூலி

பேராபத்தான ஆயுதக் குவியல்கள்

நாடு	அணு ஆயுதப் போர்த் தலைகள்
அமெரிக்க ஐக்கிய நாடு	9000
ருஷ்யா	6737
உக்ரேயின்	1804
கஸக்கிஸ்தான்	1410
பிரான்ஸ்	525

நியூஸ்வீக், மே 24, 1993

நாடகத்திற்கு பின்பு

அதிகார உட்பூசலில் இருந்து யெல்சின் பிழைக்கிறார்

ஆனால் இக்கட்டான நிலை ரஷ்சியா பிளவுபடும் வேகத்தைக் காட்டுகின்றது

பொறிஸ் யெல்சின் நாடாளுமன்றத்துடன் போராடியதை உலகம் மிகவும் ஆர்வத்தோடு பார்த்துக் கொண்டு இருந்தது. ஆனால் அதிகார உட்பூசல் வேறு இடத்தில் நடைபெற்றது.

முதல் இரவு, மக்கள் பேரவையின் பிராந்தியப் பிரதிநிதிகள் மொஸ்கோவில் ஒன்று கூடித் தங்களுடன் உரையாட யெல்சினை அழைத்தார்கள். தங்களுடைய சைபிரியாப் பிரதிநிதிமேல் யெல்சின் சீற்றம் கொண்டதையிட்டு ஆத்திரம் அடைந்தார்கள். இவர்களிடம் மன்னிப்புக் கோருவதற்கு நெருக்கடி உருவாகியது.

தன்னைத் திசைதிருப்பிய அதிகாரிகளுக்குத் தண்டனை விதிப்பார் என்று யெல்சின் கூறினார். ஜனாதிபதியை மேற்பார்வை செய்யவும், அவருடைய முடிவுகளைக் கட்டுப்படுத்தவும் பிராந்திய பிரதிநிதிகளை உள்ளடக்கிய சமஷ்டிச் சபை ஒன்றை அமைப்பதற்கும் இணங்கினார். இதற்குக் கைமாறாக ஜனாதிபதியை பதவியில் இருந்து தள்ள மக்கள் அவையில் எடுத்த முயற்சியைக் கைவிட ஒத்துக் கொண்டார்கள். ஆனால் இப்படி ஒரு அவமான நிகழ்ச்சியின் பின் தான் வெற்றி அடைந்தார் என்றும் அவரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

சென்ற வாரம் மொஸ்கோவில் ஒரு வரும் வெற்றி பெறவில்லை. கடைசி நிமிட இணக்கத்தோடு ருஷ்ய ஜனாதிபதியும், அவருடைய முதல் எதிரியும் மக்கள் அவைத் தலைவருமான ருஷ்லான காஷ்புலற்ரோவும் சமாதான ஒப்பந்தத்துக்கு இறங்கினர். யெல்சின் மக்கள் அவையை முற்றாகப் புறக்கணிக்க உதவும் 'விசேட ஆட்சி' என்ற தனது முன்னாள் கோரிக்கையைக் கைவிட்டார். மக்கள் அவைத் தலைவர் காஷ்புலற்ரோவ் தொலைக்காட்சியில் தோன்றி, ஜனாதிபதி ஒரு தேசிய ஒற்றுமை அரசாங்கத்தை அமைக்க வேண்டும் என்றும் அதேவேளை ஜனாதிபதியை ஆட்சியில் இருந்து நீக்கும் நடவடிக்கையில் தாம் ஈடுபடவில்லை ஏனென்றால் இம்முயற்சியில் வெற்றியீட்டுவதற்குப் போதிய அளவு வாக்குகள் இல்லை என்றும் கூறினார்.

மக்கள் அவை ஜனாதிபதியின் தேர்தலையும் நாடாளுமன்றத் தேர்தலையும் நடத்த ஏற்றுக்கொண்டால் தான் வகுத்த அபிப்பிராய வாக்கெடுத்தலைக் கைவிடுவதற்கு ஏற்றுக்கொண்டார். யெல்சினுக்கு உடனடியாக இருந்த அச்சுறுத்தல் தளர்ந்ததாகக் கருதலாம். தொடர்ந்து இருக்கும் நிகரற்ற நிலையிலும் ருஷ்ய ஜனாதிபதி விரைவில் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டனை வன்கூவரில் சந்திப்பதற்கு நம்பி இருந்தார். ஜனாதிபதிக்கும், நாடாளுமன்றத்திற்கும் அதிகாரத்தைச் சமனாகப் பகிர்ந்துகொள்ளும் நிலைப்பாடு முற்று இல்லாமல் இருந்தது. ஆனால் ஒன்று மட்டும் தெளிவு. ஜனாதிபதியோ, நாடாளுமன்றமோ அதிகாரத்துக்குப் பொறுப்பில்லையென்பது. மத்திய அதிகாரம் ஆச்சரியமான வேகத்தில் பிரிவினையடைகிறது. மாநிலங்கள் தங்களுக்கு அதிகாரத்தைத் தரும்படி கூக்குரல் இடுகிறார்கள். அபிப்பிராய வாக்கெடுப்பைக் கைவிடும்படி கேட்கிறார்கள். பிராந்தியத் தலைவர்கள் தங்களை வற்புறுத்துவதையும் அதிர்ச்சி அடைகிறார்கள். மொஸ்கோவில் நடைபெறும் மோதல் கீழ் மட்டத்திற்கும் பரவும் என்று சில பிராந்தியத் தலைவர்கள் கருதுகின்றார்கள். யெல்சினும் மக்கள் அவைத் தலைவரும் பிராந்திய மட்டத் தலைவர்களின் ஆதரவை நாடும் போது சோவியத் யூனியனுக்கு நடந்த கதியே ருஷியாவுக்கும் நடக்கும். இதை யெல்சின் உணர்கின்றார். இரானுவத் தளபதிகளுக்கு விருந்து, உபசாரம் அளித்ததை இந்த நிலைப்பாட்டை எடுத்துக்காட்டி இப்படி ஒரு நிலை ஏற்பட்டால் ருஷியா 50, 60 ஆட்சிசிப் பகுதிகளாக பிளவுபடும். போர் ஒரு 1000 வருடங்களுக்குத் தொடரும் என்கிறார்.

ரஷ்யாவின் மாநிலங்கள் தங்களுக்குப் பெரிய பகுதிச் செயற்பாடுகளைத் தரும்படி கேட்கின்றன சோவியத் யூனியனைப்போல்ருஷியாவும் 100க்கு மேற்பட்ட இன மக்களை உள் அடக்கிய தேசம். இவர்களை மொஸ்கோ ஒரு இரும்புக் கையால் ஆட்சி நடாத்தியது. மொஸ்கோவில் அதிகாரம் பெற்ற பிராந்திய அரசாங்கங்கள் பெரிய அளவில் அதிகாரத்தைக் கையேற்கிறார்கள். கிரம்பிளினைத் தன்னுடைய அரசியல் குழப்பத்தில் தளவிட்டு பிராந்திய அரசாங்கங்கள் உள்நாட்டு வருமானங்களை தங்களிடம் வைத்துக்கொண்டு வெளிநாட்டு வியாபாரத்தில் ஈடுபடுகின்றார்கள். ருஷியா பிளவுபடுவது முன்னோடியாகவே தீர்மானமாகிவிட்டது. ஆனால் சில மாதங்கள் எடுக்கும் சமஸ்டிச் சட்ட விதிகள் அனேகமான பிரதேசங்களில் அமுலில் இல்லை.

யெல்சினுக்கும் காஸ்புலாட்ரோவுக்கும் இடையில் நடக்கும் போர் பிராந்தியத்தலைவர்களுக்கும் சாதகமாக அமைந்துள்ளது. இருவரும் பிராந்தியத் தலைவர்களின் ஆதரவை பெற்றுக் கொள்வதற்கு இரு பகுதியினரும் தாராளமாகப் பிராந்திய சுயாட்சியை வழங்குகின்றார்கள். ஒரு சந்தர்ப்பத்தில் மக்கள் பிரதிநிதி அவையில் பிராந்திய வருமானத்தில் முன்னதாக 30 விகிதத்தில் இருந்ததை 50 விகிதமாக வைத்துக் கொள்வதற்கும், வரும் காலத்திற்கு

60 விகிதத்திற்கு வைத்துக்கொள்ளவும் ஏற்றுக்கொண்டார்கள். இதற்கிடையில் பிரதமர் பிராந்தியத் தலைவர்களைச் சந்தித்து அவர்களுடைய குறைபாடுகளைக் கேட்டறிந்து அவர்களுக்கு உதவி செய்வதற்கும் உறுதியளித்தார். பிராந்தியத் தலைவர்கள் மொஸ்கோவிடம் இருந்து கூடுதலான சலுகைகளைக் கேட்டு நின்றார்கள். யெல்சினின் புதிய பிரதமர் விற்றலி போட்ரினிக்கோவுக்கு கூடுதலான வெளி வியாபார சுயாட்சியைக் கொடுக்க மறுத்தார். ஆத்திரமடைந்த சைபீரிய மக்கள் இனியும் மத்திய அரசு சைபீரியாவை அடிமைப் பிரதேசமாக நடாத்துவதை ஏற்றுக் கொள்வதை மறுத்தார்கள்.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி காஸ்புலாட்ரோ சைபீரியாவுக்கு விரைந்தார். அங்கு பிராந்தியத் தலைவர்களைச் சந்தித்துத் தேசிய வரவு செலவுத் திட்டத்தை அங்கீகரிக்கக் கேட்டுக்கொண்டார். இதற்கு கைமாறாகப் பிராந்தியத் தலைவர்கள் ஜனாதிபதியின் அபிப்பிராய வாக்கெடுப்புக்கு எதிராக ஓர் அறிக்கையை கைச்சாத்திட்டார்கள். ஆத்திரமடைந்த ஜனாதிபதி சைபீரியாவின் நொவேசிபிசிக்கின் பிராந்தியத் தலைவர் பிற்ராலி முக்காவேயைப் பதவியில் இருந்து இறக்கினார்கள். சீற்றம் அடைந்த முக்காவேயின் சகாக்கள் ஜனாதிபதிக்கு ஆத்திரமூட்டிக் கடிதங்களை எழுதினார்கள். தோல்வி அடைந்த ஜனாதிபதி இம் மாற்றத்தை வரபஸ் பெற்றுக்கொண்டார். இப்பிராந்தியத்தில் ஆதரவை வெல்லமுயன்ற ஜனாதிபதி அவர்களுடைய கைதியாகினார்.

அதிகாரத்தில் வீழ்ச்சி அடையும் பிரதேசங்களை மொஸ்கோவுடன் ஒப்பிடும் போது இந்த நல்லுறவு இது பிரதேசத்தைப் பொறுத்தது. மொஸ்கோவுக்கு சவால் விடும் அநேகமானவர்கள் பழைமைவில் ஊறியவர்கள். இவர்கள் சோவியத் யெல்சினின் சீர்திருத்தங்கள் நடைமுறை செய்ய விரும்பாதவர்கள். பிராந்திய வருமானத்தைத் தங்கள் வசம் வைத்துக்கொண்டு பிராந்திய அபிவிருத்திப் போர்வையில் தங்களுடைய அபிவிருத்தியையும் மோசடி ஊழல், லஞ்சம் ஆகியவற்றின் மூலம் பணம் உழைப்பவர்கள். பிராந்தியத் தலைவர்கள் தங்களுடைய அதிகாரத்தைப் பலப்படுத்த முயற்சிக்கின்றார்கள் என்று இங்குள்ள மேற்கத்திய ராஜதந்திரி ஒருவர் கூறுகிறார். மத்திய அதிகாரத்திற்குச் சவால்விடுவது கெடுதியைக் கொண்டு வராது. மாறாக அளவுக்கு மேல் மையப்படுத்தியுள்ளதன் மூலம் பொருளாதாரத்தை பரவலாக்குவதன் மூலம் மாநில அரசாங்கங்களுக்கு சுவாசிப்பதற்கு ஓர் இடைவெளியைக் கொடுக்கும்.

தனியார் பொருளாதாரத்தை நடைமுறைப்படுத்துவதற்கு மொஸ்கோவிடம் போதிய சக்தி இல்லை. சில மாநில அரசுகள் அதிவேகத்தில் பொருளாதாரச் சீர்திருத்தங்களைக் கொண்டு வந்துள்ளன உதாரணமாக நிடஸனி நொவ்கு ரூட் தொழிற்சாலைகளையும், பெரிய கடைகளையும், வயல் நிலங்களையும் தனியார் மயப்படுத்தியுள்ளன இதற்கு உலக வங்கியின் நிபுணர் சேவையும், நிதி உதவியும் வழங்கப்பட்டுள்ளது. சமஷ்டி ருஷியா இச் சீர்திருத்தங்களுக்கு பொறுப்பாக உள்ளது. சுதந்திரமாக மாநில அரசின் இச் சீர்திருத்தங்களை கையாளுவதால் ருஷியா பிளவுபடாது என்று இவர்கள் வாதாடுகிறார்கள். பாட்டாளி மக்கள் அமைதியாகத் தொழில் செய்வதனால் நாட்டின் ஒருமைப்பாட்டை ஒரு 'சமூகங்கள் சமஷ்டி அமைப்பின் கீழ் நடந்தல்' என்று சில அரசியல் வாதிகள் கருதுகின்றார்கள். மத்திய அரசு மாநில அரசாங்கங்களுக்கு அதிகாரத்தைக் கொடுக்க மறுத்தோரே சோவியத் ஐக்கியம் பிளவுபடுவதற்கு காரணம். ருஷியா பிளவுபடுவதைத்தவிர்ப்பதற்குத்தான் நாங்கள் சீர் திருத்தத்திற்கு கொண்டு வருகிறோம். அமெரிக்கப் புரட்சியாளர் தேவை உற்பத்தியை பொஸ்டன் துறைமுகத்திற்குள் விசினரர்கள், அது போன்று டாட்டான் தங்களுடைய எண்ணெய் உற்பத்தியை வொல்காநதியில் விசுவதை தவிர்த்துக் கொள்ளுமானால் அவர்களுக்கு தன்னாட்சி ருஷ்யா வழங்கவேண்டும்.

பிரிவுப் பேச்சுவார்த்தை

டாட்டா தேசிய வாதிகள் ருஷ்யாவில் இருந்து பிரிவதற்கு ஆரம்பக்கட்டப் பேச்சுவார்த்தையில் கூடு பட்டுள்ளார்கள். 1552 இல் ருஷ்ய மன்னன் ஐவன் இன் நாட்டை ருஷ்யாவுடன் இணைத்துக் கொண்டான். அண்மையில் மாரரட் முளிக்கோவ் என்னும் டாட்டா தேசியவாதி. தலைநகர் காசானில் நடைபெற்ற கூட்டத்தில் தாங்கள் ருசியாவிடம் இருத்து பிரிய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். ருஷ்யா பிளவுபடுகின்றது. இக்காரணத்தை நாங்கள் தவற விடாமல் எங்களுடைய சுதந்திரத்தை ருஷ்யா அங்கீகரிக்க வேண்டும் என்று நாங்கள் செயல்படவேண்டும். கோடிக்கணக்கான டாட்டா மக்கள் ருஷ்யாவைச் சுற்றியும் விசேடமாக புராஸ்ரென் பகுதியிலும் வசிக்கின்றார்கள். எதிர்காலத்தில் இவர்கள் மோசமான பயங்கரவாதிகளாகமாறலாம்என்ற நிலைமை மொஸ்கோவுக்கு ஒரு பெரும் அச்சுறுத்தலாக இருக்கின்றது. ருஷ்யாவின் தெற்கிலும் கிழக்கிலும் வாழும் இஸ்லாமிய டாட்டா மக்கள் ருஷ்ய ர்வுக்கு எதிரான இஸ்லாமிய இயக்கத்திற்கு அடித்தள மக்களாக அமைந்திருக்கின்றார்கள். இந் நிலை ருஷ்யாவுக்கு ஒரு பெரும் பிரச்சனையாக அமைந்துள்ளது. தன்னாட்சி மாநிலமான வைஸ்கொடொன் டாட்டா விமான எரிபொருள் எண்ணெய் உற்பத்தியில் இப்பிரதேசத்தில் உள்ள முன்னணியில் நிற்கும் இரண்டு நாடுகளில் ஒன்று இச் செல்வாக்கைப் பயன்படுத்தித் தங்களுடைய உள்நாட்டில் வரியில் 10 விதத்தை ருஷ்யாவுக்குக் கொடுப்பதாக ஓர் உடன் பாட்டிற்கு கைச்சாத்திட்டார்கள். ஏனைய மாநிலங்கள் 70 விதத்தை ருஷ்யாவுக்குக் கொடுத்துக் கொண்டிருக்கின்றன. தங்களுடைய கேந்திர நிலையைப் பயன்படுத்தி வெளிநாட்டு வாணிகத்தைத் தங்களுடைய கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளும் உடன்பாட்டையும் செய்துள்ளார்கள். மொஸ்கோவின் ஆதிக்கம் நாளாந்தம் வற்றிக்கொண்டு போகிறது. சாக்கா மாநிலம் ருஷ்யாவின் வைரம் உற்பத்தி செய்யும் பிரதேசமாகும். ருஷ்யாவுக்கு வருமானத்தைக் கொண்டு வரும் பிரதேசங்களில் 4 - வது இடத்தில் உள்ளது. இப்பிரதேசம் தங்களுடைய எரிபொருள் தேவைக்கும் உணவிற்கும் மொஸ்கோவை அண்டி இருப்பதால் தன்னாட்சிச் செயற்பாட்

டில் இன்னும் ஈடுபடவில்லை. மொஸ்கோவின் செல்வாக்கு குறைந்து கொண்டு போவதால் காலப்போக்கில் பிரிந்துவிடும்.

உள்நாட்டு ஆதரவு அண்மையில் யெல்சினால் நடாத்த இருக்கும் அபிப்பிராய வாக்கெடுப்புத் தனக்கு சாதகமான பிரதேச மாநிலங்கள் வாக்களிப்பார்கள் என்று நம்பியிருக்கின்றார். இத்தருணத்தில் தான் ஒரு நிலையான அரசியலை நடாத்தக் கூடியவர் என்று வாக்காளர்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தலாம். ஆனால் இதற்கு மாறாக நாடாளுமன்றத் தேர்தலில் தற்போது புரட்சியில் ஈடுபட்டிருக்கும் மாநிலத் தலைவர்கள் இவருக்கு ஓர் இக்கட்டான நிலைமையை உருவாக்குவார்கள். இறுதியில் மொஸ்கோ மாநில ஆதிக்கத்தை இழந்து விடும். ஐக்கிய சோவியத் ருஷ்யா பிளவு பட ஆரம்பித்த வேளையில் இருந்தே ருஷ்யாவும் பிளவு படத் தொடங்கி விட்டது. மொஸ்கோ தன்னுடைய ஆதிக்கத்தை இழந்து கொண்டு வருகின்றது. யெல்சினும் காஸ்புலாட்டோவும் இதனால் பாதிக்கப்படுவார்கள்.

சோவியத் ருஷ்யாவுக்கு நடந்த கதியே ருஷ்யாவுக்கும் விரைவில் நடக்கும்

உள்ளூர் ஆசையும் கிரம்பிளின் கட்டுப்பாடும்



படம்—1:-

காறிலியா – யெல்சின் மார்ச் 2ல் நடாத்திய உரையை யாப்புக்கு முரணானது என்று வெளிப்படையாக நிராகரித்த முதல் மாநிலம். மரவளம் நிறைத்த இம்மாநிலம் தனக்குக் கூடுதலான பொருளாதார சுயாட்சி வேண்டுமென்று மொஸ்கோவுடன் பேச்சுவார்த்தை நடாத்திக் கொண்டு இருக்கின்றது.

படம்—2:-

பாட்டாறிற்றான் – எண்ணெய் வளம் நிறைந்த இப்பிரதேசம். தன்னை ஓர் ஈரப்பிரதேசமாக ருஷ்யா சமஷ்டி ஆட்சிக்குள் தன்னிச்சையாகத் தன்னை பிரகடனம் செய்து கொண்டது. கெர்சினியாவைப் போல் யெல்சினின் சமஷ்டி உடன்பாட்டில் கைச்சாத்திடமறுத்து பொருளாதார வளங்களும் அரசியல் திறமையும் கொண்டு இப்பிரதேசம் ருஷ்யாவின் ஒருமைப் பாட்டுக்கு மாபெரும் அச்சுறுத்தலாக இருக்கின்றது.

படம்—3:-

காக்கசோசஸ்–முன்னாள் கெச்சிட் இன்குஷ் இற்டா என்னும் இடம். மாநிலங்கள் தங்களை ரெச்சினியா என்னும் மாநிலமாக 1991 இல் ருஷ்யாவில் இருந்து தன்னிக்சையாகச் சுதந்திரப் பிரகடனத்தைச் செய்தது. இன்குஸ்சிற்டா பின்பு கெச்சினியாவில் இருந்து பிரிந்து தற்போது அயல் மாநிலமான வட ஒசிற்றியாவுடனும் ஒரு நிலப்பரப்பிற்குப் போராடிக் கொண்டிருக்கின்றது.

படம்—4:-

சக்கா – (யாக்குட்டியா மக்கள் குறைந்த மாநிலம்) வைரங்கள் நிறைந்த பிரதேசம். 3 லட்சத்து 60 ஆயிரம் யாக்குட்டிய இனத்தவர்களை விட 5 இலட்சத்து 50 ஆயிரம் ருஷ்ய இன மக்கள் முன்னணியில் நிற்கின்றார்கள். வைரத்தால் வரும் வரியில் கூடுதலான பகுதியைத் தம்வசம் வைத்திருப்பதற்கு ருஷ்யாவுடன் ஓர் உடன் பாட்டை செய்துள்ளார்கள். 1991-ல் தன்னுடைய சொந்த அரசியல் யாப்பை நிறைவேற்றியது.

படம்—5:-

சக்காலின்–இத்தீவு தன்னுடைய கடற்கரை ஒன்றை வாயு வள இருப்பின் பெரும் பகுதியை தன்னுடைய ஆதிக்கத்திற்குள் கொண்டு வந்துள்ளது. ஓர் உயர்ந்த அதிகாரி மொஸ்கோ தங்களை அடிமைகளாக கையளுவதை நிறுத்திக்கொள்ள வேண்டும். யெல்சின் ருஷ்யாவின் சுமுகமான நிலையை குழப்புகின்றார் என்று குற்றம் சுமத்துகின்றார்.

படம்—6:-

சைபிரியா இம் மாநிலத்தில் உள்ள அரசியல் தலைவர்கள் மற்ற மாநிலங்களுக்கு தங்களுடைய வளங்களைக் கையாளுவதற்கு கொடுக்கப்பட்டுள்ள சுதந்திர

அடிப்படையில் தங்களுக்கு தங்களுடைய வழக்கமாகக் கையாளுவ தற்குச் சுதந்திரம் கேட்கின்றார்கள். பொருளாதாரத்தைக் கையாளும் சிலர் சைபீரியாவை ருஷ்ய சமஷ்டிக்குள் ஒரு குடியரசாக வேண்டும் என்றும் வலியுறுத்துகின்றார்கள். இதே சமயம் சில தீவிரவாதிகள் சுதந்திரப் பிரகடனம் செய்ய வேண்டும் என்று கேட்கிறார்கள்.

படம்—7:-

தென் சைபீரியா குடி அரசுகள் தங்களுடைய இன அரசியல் தன்னாட்சியைப் பலப்படுத்தியுள்ளார்கள் அதே நேரம் ருஷ்யாவில் இருந்து பிரியும் ஆர்வம் இல்லை.

இன ரீதியில் ருஷ்ய மக்கள் அல்ல
இன ரீதியில் ருஷ்ய மக்கள்
முன்னைய சோவியந் குடி அரசுகள்.

மாநில குறிக்கோள்களும் கிரம்பிளின் கட்டுப்பாடும் மாநிலங்கள் பெரும் பகுதி செயல்பாட்டை கேட்கின்றார்கள். சோவியத்தைப் போல் ருஷ்யாவும் 100-க்கும் மேற்பட்ட இன மக்களை உள்ளடக்கிய நாடு. மொஸ்கோவின் ஆதிக்கம் குறைந்துகொண்டு போகும் வேளையில் அநேகமான மாநிலங்கள் அரசியல் ஆதிக்கத்தை பிடித்துக் கொள்கிறார்கள். கிரம்பிளின் அரசியல் குழப்பத்தில் மூழ்கிப் போக விட்டு மாநில அரசாங்கம் கூடுதலான வரி வருமானத்தையும் வெளிநாட்டு வாணிபத்தையும் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருகிறார்கள்.

அதிகாரத் தூண்டுகள்

மத்திய வங்கி நாடாளுமன்றக் கட்டுப்பாட்டுக்குள் உள்ளது. தேவைக்கு அதிகமான கடதாசிக் காசுகளை அச்சிட்டது அரசின் பெறுமதி குறைந்த ஒரு செயல் என வன்மையாகக் கண்டிக்கப்பட்டது. வங்கியை நிர்வாகத்தின் கீழ் கொண்டு வந்து இந்த நிலை நிறுத்துவதற்கு யெல்சின் விரும்புகின்றார்.

2. தொலைத்தொடர்பு சாதனங்கள். அண்மையில் இச்சாதனங்களை கஸ்விலாட்டோ நாடாளுமன்ற கட்டுப்பாட்டுக்கு கொண்டு வரவேண்டும் என்றார். இதை அடுத்து யெல்சின் ரேடியோ தொலைக் காட்சி நிலையங்களுக்கும் புதினப் பத்திரிகை ஸ்தாபனங்களுக்கும் பலத்த பாதுகாப்பு வழங்கி வெளியார் உட்செல்வதைத் தடுத்தார்.

3. அணு ஆயுதமும் தளபாடங்களும். இராணுவம் தற்போது உடைந்தும், முறிந்த நிலையிலும் உண்டு. இருந்தும் பாதுகாப்பு அமைச்சின் ஊடாக யெல்சின் ருஷ்யாவின் 19 ஆயிரம் இராணுவத் தளபாடங்களை தன்னுடைய கட்டுப்பாட்டில் வைத்துள்ளார்.

4. பந்தோபஸ்து அமைச்சு முன்னாள் கே. ஜி. பி. யின் வாரிசு இவமைச்சு இதன் தலைவர் விக்டர் வரானிக் கோவ் தற்போது நிலவும் நெருக்கடிக்கு தன்னுடைய அமைச்சை இழுக்க வேண்டாம் என்று மக்கள் அவையைக் கேட்டுக்கொண்டார். ஒரு புரட்சியை அடக்குவதற்கு தன்னை யெல்சின் அழைத்தால் தன்னுடைய இராணுவம் எந்த விதத்தில் கையாளும் என்பதை சொல்லவில்லை.

மொஸ்கோவிலிருந்து
டொரின்டா எலியட்,
அன்ரு நரகோர்ஸ்ரீ,
நடிசாலிம் பேட்புமா
கசனிலிருந்து கிளின்ரன் ஒபிரயின்.

நியூஸ்வீக், ஏப்ரல் 5, 1993.

ருஷ்யா எங்கே எனது கார்?

ருஷ்யத் தலைவர்கள் நினைத்தவுடன் தன் எதிரிகளை உடனடியாக இல்லாமல் செய்த காலம் இப்போ மலையேறி விட்டது. ஆனால் பொறிஸ் யெல்சின் தற்பொழுதும் தன் சிநேகமற்ற அதிகாரிகளை உற்சாகம் இழக்கும் முறையில் அடிக்கலாம். மீ கெயல் கொப்பச்சேவ் தான் யெல்சினால் முதலாவது பாதிக்கப்பட்ட மனிதர். கொப்பச்சேவ்வுடைய சிறப்பான வீடு, முடிய மோட்டார் வண்டி, பளபளப்பான காரியாலயம் அத்தனையும் இழந்தார். அடுத்ததாக உப ஜனாதிபதி அலெக்சாண்டர் றற்ச்கோய் முந்திய நண்பர்; ஆனால் யெல்சினின் மறுமலர்ச்சி அல்லது முற்போக்குக் கொள்கைகளுக்கு மறுப்புத் தெரிவித்தார். யெல்சின் இவருடைய தனிப்பட்ட வைத்தியரையும் அவரு படை பாதுகாப்பு உத்தியோகத்தர்களையும் விலக்கிவிட்டார். தற்சமயம் ஜனாதிபதி யெல்சின் (பழைமை விரும்பி) கன்சவேட்டிவ் ஆகிய பாராளுமன்ற உறுப்பினரான நஸ்வான் கஸ்புலரொவ் பக்கம் திரும்பியுள்ளார். நஸ்வான் கஸ்புலரொவ் காங்கிரஸ் மக்கள் சபையில் யெல்சினுக்கு எதிராகச் செயல்பட்டது குறிப்பிடத்தக்கது. சென்ற கிழமை கஸ்புலரொவை மொஸ்கோவுக்கு அருகாமையில் செக்கலோவன் விமானப்படைத் தளத்துக்கு செல்லுவதற்கு மறுக்கப்பட்டார்.

இவர் 1991 வரை தனது சொந்த வியாபார வேலைகளுக்கு இராணுவ போக்குவரத்து சாதனங்களை பயன்படுத்தினார் என்றும் மத்திய ருஷ்யாவில் உள்ள பென்சர என்னும் இடத்திற்கு ஒரு கூட்டத்திற்கு செல்லுவதற்கும் இருந்ததாக கூறப்படுகிறது. ''விமானத்தள வளங்களும்'' குறைகின்றன என ஜனாதிபதியின் தலைமை உத்தியோகத்தரான சோஜ் பிளாரொவ் சொன்னார் யெல்சின் மீகக் கொடூரமானவராகவும் இல்லை; ஏனெனில் கோப்பசெவ்வின் முடிய மோட்டார் வண்டியை எடுத்தாலும் சிறிய மோட்டார் வண்டியை கொடுத்துள்ளார்.



பள்ளிச் சிறுவர்களின் மத்தியில் கிளிங்ரனும், யெல்சினும்

மேற்குக்குக் கையசைப்பு

உச்சி மகாநாட்டில், அமெரிக்க பக்கம் யெல்சினின் பார்வையைத் திருப்ப கிளின்ரன் முயல்கின்றார்

எழுதியவர் — கறோல் பொகொட

ருஷ்யத் தேசியவாதிகள் ''அழுகைச்சுவர்'' என்று அதை அழைக்கிறார்கள். செயின்ற் பீற்றஸ்பேக் நகரின் புதுக் கட்டிடம் எழும்பும் பகுதிச் சுவரில் வலது சாரிகளின் அறைகூவற் சுலோகங்கள் எழுதப் பட்டுள்ளன, சியனிஸ (யூத)வாதிகளைக் கொல்லுங்கள் ''ருஷ்யா ருஷ்யர்களுக்காக'' என்று அந்த எழுத்துக்கள் தெரிவிக்கின்றன. தொலைந்த ருஷ்யாவின் ஆத்மாவுக்காக புலம்ப இடம்பெயர்ந்த ருஷ்யர்கள் இவ்விடத்தில் கூடுவார்கள். கொஞ்சத் தூரம் தள்ளி பெரும் கடை கண்ணிகள் உள்ள நெவ்ஸ்கி புறொஸ்பெக்ற் என்னும் பெரும் தெருவில் மினுக்கான மேற்குலகப் பாணிய ஸ்தாபனங்கள் வெளி உலகப் பொருட்களை டாலருக்கு மாத்திரம் விற்கின்றன. இது ஒரு நூற்றாண்டிற்கு மேலாக நடைபெறுகின்றது. ''மேற்குலகப் பொருளாதாரத்தையும் மேற்குலக கலாசாரத்தையும் அவர்கள் இங்கு கொண்டுவரப் பார்க்கிறார்கள்'' என்று ருஷ்யத் தேசியவாதத் தலைவர் கொன்ஸ்ரான்ரின் கொண்டிராட்டியெவ் முறையிடுகின்றார். என்றாலும் மேற்குலக இசையரசர்களாகிய பிங்க் புளேயிட், பீற்றில்ஸ் போன்றவர்களின் அபார விசிறி தான் என்பதை இவர் ஒத்துக் கொண்டுள்ளார். ஆனால் இவர் தொடர்ந்து சொல்கிறார். ''மேற்குடன் ருஷ்யா இரண்டறக் கலக்காது விடக்கூடாது'' என்று.

ஐரோப்பிய ஆசிய நாடாகிய ருஷ்யா உண்மையில் ஒருபோதும் மேற்குடன் ஒன்றாக மாட்டாது. ருஷ்யத் தேசியவாதிகள் மறுத்தாலும் அது மேற்குடன் நெருங்கி வருகிறது. கிளின்ரனும் இதை எதிர்பார்க்கவில்லை. சென்றவார இறுதியில் தனது பதவிக்காலத்தில் முதன் முறையாக மழைத் தூறல் நிறைந்த வன்கூவர் நகரத்தில் கிளின்ரன் யெல்சினைச் சந்தித்தார். மேற்குலகின் பிடிக்குள் ருஷ்யாவைக் கொணர்வது தான் கிளின்ரனின் குறி என்பது வெளிப்படை. ருஷ்யாவுக்கு அவர் டாலர் 1.6 பில்லியன் உதவியைக் கொடுக்க முன்வந்துள்ளார். யெல்சின் இதைப் பேருவகையுடன் ஏற்றுள்ளார். கனேடியப் பிரதமர் பிரையன் மல்றோனியுடன் மதிய உணவு அருந்தியபின் இரு தலைவர்களும் தனியே வனத்தில் நடை பயின்றனர். அப்போது அவர்கள் பொருளாதாரம் மாத்திரம் பேசவில்லை. முன்னாள் ருஷ்ய மாகாணமான தற்போதுதனிநாடாயுள்ள ஜோர்ஜியாவின் உள்நாட்டு விஷயங்களில் ருஷ்யா தலையிடுவதை அமெரிக்கா விரும்பவில்லை என்றார் கிளின்ரன். இதை நிறுத்துவதாக யெல்சின் பதிலளித்தார். பொருளாதார உதவிக்கும் ருஷ்ய குடியகல்வுக் கொள்கைக்கும் அமெரிக்கா முடிச்சுப்போடுவதையும், ருஷ்யாவை நீர்மூழ்கிக்கப்பலிருந்து அமெரிக்கா கண்காணிப்பதையும் தான் விரும்பவில்லை யென்றும் யெல்ற்சின் கூறினார். அமெரிக்க அரசாங்கப் பேச்சாளர் ஜார்ஜ் ஸ்ரெபானோ பூலோஸ் கிளின்ரன் அகமகிழ்வதாகக் கூறியுள்ளார். யெல்ற்சின் விட்டுக் கொடுப்பவரல்ல, அவரை நான் விரும்புகிறேன் என்று கூறியதாகவும் பேச்சாளர் தெரிவித்தார் யெல்சினும் இதையே எதிரொலித்துள்ளார். ''வயது வித்தியாசம் இருந்தாலும் எங்களுக்கிடையில நல்ல கருத்துப் பரிமாற்றம் இருக்கிறது'' என்று அவர் கூறியுள்ளார்.

ருஷ்ய பழைமைவிரும்பிகளும் தேசியவாதிகளும் மேற்குலக எதிர்ப்புக் கொள்கையைக் கடைப்பிடிக்கிறார்கள், அமெரிக்காவுடன் நெருங்கி நடப்பதால் யெல்சினுக்கு ஆபத்துவருமோ தெரியவில்லை, ஏப்ரல் 25 இல் ஒரு கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பை நடத்தப் பாராளுமன்றம் சிபாரிசு செய்துள்ளது. இதில் தோல்விகண்டால் யெல்சின் வெளியேறவேண்டியிருக்கும். அப்படி அவர் வெளியேறும் பட்சத்தில் ருஷ்யாவின் மேற்குலக சார்புக் கொள்கையும் கைவிடப்படுமா? யெல்சின் நிலை பெற்றாலும் பழைமை விரும்பிகளைத் தொடர்ந்தும் எதிர்க்க வலுவுண்டா? போன்ற கேள்விகள் எழுகின்றன.

நியூஸ் வீக் பத்திரிகையாளர் அன்டூரூ நாகோர்ஸ்கியுடன் பேசும் போது யெல்சின் நான் எதிர் நோக்கும் பிரச்சனைகளைப் பெரிது படுத்துவதில்லை. ''நான் அமெரிக் காவைக் கேட்பது ஒன்றுதான். பொதுவுடைமை ருஷ்யா என்று பேசு வதை நிறுத்துங்கள். பொதுவு டைமை இங்கு இல்லை. அது அற்றுப் போய்விட்டது'' என்றார் அவர். கிளின்ரன் இதை நம்ப விரும்பு கின்றார். உலகச் சச்சரவுகளைக் குறைக்கவும், உள்நாட்டுப் பிரச்ச னைகளைத் தீர்க்கவும் இது அவருக்கு உதவும். ருஷ்யாவின் ஒத்துழைப்பு அமெரிக்காவுக்குத் தேவை. ருஷ்யா வில் தேசியவாதிகளின் கையோங்கி னால் முன்னாள் யூகோசிலாவியா வில் மேற்கு நாடுகள் கொண்டு வரும்சமாதான முயற்சிகள் தோல்வி யடையும். ஏனென்றால் பிரச்ச னைக்குரிய சேபியர்களுக்கு ருஷ்யா வின் தேசியவாதிகளின் அனுதாப மும் ஆதரவும் என்றும் உண்டு. முன்பு ருஷ்யாவின் உதவியைப் பெற்று, பின்பு அதை இழந்த சதாம் ஹுசையின் மீண்டும் அதைப் பெறக்கூடும். ருஷ்யத் தேசியவாதி களையும், கடும் போக்குப் பொது வுடைமைவாதிகளையும், யெல்சின் எதிர்ப்பாளர்களையும் மொத்தமாக ''சிவப்பு–பழுப்பு நிறத்தவர்கள்'' என்று ருஷ்யர்கள் வர்ணிப்பார்கள். இவர்கள் யாபேரும் ருஷ்யா இழந்த வல்லாதிக்கத்தை மீண்டும் பெறல் வேண்டும் என்ற அவாக் கொண் டவர்கள். இவர்களுடைய தொகை மிகக் குறைவு சனத்தொகையில் பத்து வீதமிருக்கும். ஆனால் இவர் களுடைய கூச்சல் பலமாகவும், இவர்களுடைய வருங்கால வளர்ச்சி உயரக் கூடிய சாத்தியமும் உண்டு.

பொருளாதார நெருக்கடிகள் ருஷ்யாவின் எதிர்கால அரசியலை நிர்ணயம் பண்ணும் வல்லமை படைத்தவை, தேசியவாதிகள் ருஷ்யாவின் பொருளாதார வீழ்ச் சியை மேற்கு நாடுகளுடன் தொடர்பு படுத்துகின்றனர். ஏப் ரல் மாதம் 25 ஆம் திகதி நடக்க விருக்கும் கருத்துக்கணிப்பு வாக் கெடுப்பில் யெல்சினின் சமுதாயப் பொருளாதாரக் கொள்கைகள் ருஷ்ய மக்களுக்குஏற்புடையவையாக இல்லையா? என்பது தீர்மானிக்கப் படும். பதிவு செய்யப்பட்ட வாக் காளப் பெருமக்களில் யெல்சின் 50 மில்லியன் சாதகமான வாக்குகளைப் பெறல் வேண்டும். யெல்சினுக்கு எதிராக வாக்களிக்கும்படி தூண்டு மொருவர் ருஷ்யாவைச் சுரண்டும் மேற்குலக முதலீட்டாளர்களையும், ருஷ்ய மக்களுக்குரியதைக் கொள் ளையிடும் யெல்சின் ஆதரவாளர் களையும் சாடியுள்ளார்.

பொம்மை ஆட்டம்

இதுபோன்ற பேச்சுக்கள் பர வாமல், ருஷ்யாவின் பொரு ளாதாரத் தொல்லைகள் தீரக்கூடிய வழிகளைக்காணமேற்குநடவடிக்கை எடுக்கவேண்டியுள்ளது, அமெரிக் கப் பண உதவியைப் பெறுவது வெட்கம் என்று பல ருஷ்யர்கள் எண்ணுகிறார்கள். அண்மையில் நடந்த கருத்துக்கணிப்பில் 40 வீத மானோர் இப்படித் தெரிவித்துள் ளார்கள். சென்றவருடம் ஜனாதி பதி புஷ் தருவதாக வாக்களித்த 24 பில்லியன் டாலர் உதவி இன் னும் கைக்கெட்டவில்லையென்றும் பலர் மனம் வருந்துகின்றனர். கிளின் ரன் தருவதாகச் சொன்ன உத விக்கு அமெரிக்க காங்கிரசின் அங்கீ காரம் பெறத் தவறின் இதுவும் ருஷ்யாவுக்குக் கிடையாது. அப் போது தேசியவாதிகளின் கையோங்கும். ''நாங்கள் எங்கள் மானம் உட்பட எல்லாவற்றையும் மேற்குக்கு விட்டுக்கொடுத்தும் பெற்றுக்கொண்டதுஒன்றுமில்லை'' என்று கூச்சல் இடுவார் கள். யெல்சினின் முன்னாள் உதவியாளர் கலினா ஸ்ராறோ வேர்யிற்றோனா சொல்கிறார்: ''நாங்கள் கஷ்டப்படும் நேரத்தில் அமெரிக்காவும் ஐரோப்பாவும் எங்களைக் கைவிட்டு விட்டதாக உணர்கிறோம். எமது மக்கள் மேற்குமேல் கோபம் கொள்ள நியாயம் உண்டு. ருஷ்யாவில் அமெ ரிக்க சினிமாவிலிருந்து அவர்களின் பார்பி பொம்மைகள் வரை பெரி தும் வரவேற்கப்படுகின்றன. ஆனால் முன்பிருந்த மேற்குலகப் பொருட்கள் மீது இருந்த மோகம் தணியத்தொடங்கி விட்டது என்று. ஐந்து வருடங்கள் ருஷ்யாவில் வாழ்ந்து வரும் அமெரிக்கராகிய பெர்னாடின் ஜொஸ்லின் பின்வரு மாறு சொல்கிறார்: ''வெளிநாட்ட வர் மீது ருஷ்யர்கள் வெறுப்புக் காட்டத் தொடங்கிவிட்டனர். எங்களிலும் பார்க்க நீங்கள் எப்படி வசதியுள்ளவர்களாக இருக்கலாம்? என்று கேட்கத் தொடங்கி விட்டார்கள்.''

ருஷ்யர்களின் இந்தத் தனி மையை கிளின்ரன் அறிவார். உச்சி மாநாட்டுக்கு முன்பாக அனாப் பொலிஸ் நகரில் அவர் ருஷ்ய மக்களுடன் நேரடியாகப் பேசினார். ருஷ்யர்களுடைய சுய கௌரவத் தைத் தட்டியெழுப்பும் வகையில் அவருடைய பேச்சு அமைந்தது. ''நெப்போலியன், ஹிற்லர் போன் றோரின் கொலைகாரத் தாக்குதல் களை நீங்கள் முறியடித்துள்ளீர்கள். உங்களுடைய இலக்கியமும் இசை யும் எங்களுடைய கலாசாரத்தை வளர்த்துள்ளது'' என்று அவர் பேசினார். ருஷ்யப் புத்திஜீவிகளின் நெஞ்சம் நிறைந்த அனா அக்மரோவா என்ற கவிஞரின் கவிதை ஒன்றையும் அவர் தன் பேச்சில் மேற்கோள் காட்டினார். ''எங்கள் கடிகாரங்களில் தைரியத்திற்குரிய நேரம் காட்டப்படுகின்றது - தைரி யம் எம்மை விட்டு விலகாது'' என்பது கவிதை வரிகள்.

மேற்குலகத்தோருடன் தொடர் புகள் கொள்ளும்போது ருஷ்யர் களைப் பீடிக்கும் தாழ்வு மனப் பான்மையை கிளின்ரனாலும் ஒன் றும் செய்துவிட முடியாது. இது பல நூற்றாண்டுகளாக காணப்படும் உண்மையாகும். 300 வருடங் களுக்கு முன்பாகவே ருஷ்ய அரசன் பெரிய பீற்றர் மேற்கின் பல அம் சங்களை ருஷ்யாவுக்குள் புகுத்தி னார். அன்று தொடக்கம் இது நன்மைக்காக இல்லையா என்ற வாதம் தொடர்கின்றது. போல ந்து நாட்டைச் சேர்ந்த புத்திஜீவி 'ஆதாம் மிச்னிக்' என்ற பெயருடையவர். பல தடவை ருஷ்யாவுக் குப் போய்வந்ததின் கூறுகிறார்: ''இந்த வாதம் ருஷ்யாவை இரண்டு படுத்தியுள்ளது. இந்தப் பிரச்சினை பற்றி ஒவ்வொரு ருஷ்யனும் ஆழ மாகச் சிந்திக்கிறான்,'' தற்சமயம் மேற்கிற்குச் சாதகமான வர்கள் கூடுதலாக உள்ளனர். 65 வயதுக்கு மேற்பட்டோரில் 60 வீதத்திற்கு

மேற்பட்டோர் மேற்கு நாடுகள் ருஷ்யாவுக்கு எதிரென்றும் ருஷ்யா தோல்வி அடைவதை மேற்கு நாடுகள் விரும்புகின்றன என்றும் நம்புகின்றனர். 16 வயதுக்கும் 34 வயதுக்கும் இடைப்பட்டோரில் 66 வீதமானோர் மேற்கை வெறுப்போரை நம்பவில்லையென்றும், நாட்டின் முன்னேற்றத்திற்கு மேற்கு நாடுகளை நம்பியுள்ளனர் என்றும் அண்மையில் எடுக்கப்பட்டதோர் கணிப்புத் தெரிவிக்கின்றது. ஐம்பதிற்கு மேற்பட்ட வெளிநாடுகளுக்குப் பிரயாணம் செய்து திரும்பியுள்ள 22 வயது அலெக்சாந்தர் நியான்கின் மேற்குலக வெறுப்பாளர்களைப் பெரிதுபடுத்த வேண்டாமென்று கூறுகிறார். கட்டட மேற்பார்வையாளரான மக்கிஷிம் என்ற 24 வயது ருஷ்யர் ''அமெரிக்க உதைபந்தாட்டம் தான் நான் விரும்பும் விளையாட்டு'' என்று தனது சட்டையின் பின் புறத்தில் பொறித்துள்ளார். மேற்குலக வெறுப்பு அர்த்தமற்றது என்று இவர் கூறுகிறார். ருஷ்யாவின் தலைவிதி மேற்குடன் இணைக்கப்பட்டுள்ளது என்பது இவரின் நம்பிக்கை. ஆனால் மொஸ்கோ நகர பிதாக்களின் ஆணைப்படி அந்நிய மொழி (ஆங்கில) விளம்பரப் பலகைகளை தெருக்களிலிருந்து அப்புறப்படுத்தத் தொடங்கியுள்ளார்கள் என்பதும் உண்மை.

உயரமான காலணிகள்

தேசியவாதிகளின் மேடைப் பேச்சுக்கள் அச்சுறுத்தும் தன்மையுள்ளவை. சென்றவாரம் மொஸ்கோ நகர பிதா பதவிக்குப் போட்டியிடும் 34 அபேட்சகர்கள் நகர மண்டபத்தில் நடந்த நிகழ்ச்சியில் பின்வருமாறு பேசியுள்ளார்கள். விளாடிமீர் சிறினோவ்ஸ்கி தீவிர வலதுசாரி. ருஷ்ய அரசர் அமெரிக்காவிற்கு விலையாகக் கொடுத்த அலாஸ்கா மாகாணத்தைத் திரும்பவும் ருஷ்யா கைப்பற்றவேண்டுமென்று, என்றோ ஒருகாலத்தில் பேசியவர், தற்சமயம் சற்றே அடக்கமாகப் பேசத் தொடங்கியுள்ளார். வேறு பேச்சாளர்கள் அரச உடைமைகள் தனியார் துறைக்கு மாற்றப்படுவதை நிறுத்தவேண்டுமென்றும், உயரும் விலைவாசிகளையும் வரிகளையும் குறைக்க வேண்டுமென்றும், ருஷ்யாவின் பெருமையை நிலைநாட்ட மீண்டும் ருஷ்ய இராணுவத்திற்கு உதவ வேண்டுமென்றும் பலவாறாகப் பேசினார்கள். அபேட்சகர்களில் ஒருவர் மாத்திரம் பெண்மணி, இவர் யூதர்கள் தன்னைத் துரத்துகின்றனர் என்று புலம்பினார். இன்னுமொரு அபேட்சகர் கிராமப்புறத்து ருஷ்யாவின் தேசிய உடையில் உயரமான காலணிகளை அணிந்தபடி தோன்றி கிராமியப் பாடலொன்றைப் பாடினார். தான் பொதுவுடைமை வாதியுமல்ல, ஜனநாயகவாதியுமல்ல, தான் ருஷ்ய ஆத்மாவின் பிரதிநிதி என்று இவர் பிரஸ்தாபித்தார்.

தேசியவாதிகளிற் பெரும்பான்மையானோர் இதுபோன்ற பைத்தியங்கள் தான் என்பது உண்மையே. இவர்கள் அதிகாரத்திற்கு வருவது அபூர்வம் தான். ஆனால் இவர்களுடைய குரல் ஓயாதவரை ருஷ்ய அரசியல் ஒரு நன்மையான பாதையில் செல்வது தடைப்படும். தங்கள் மேல் கவனத்தைத் திருப்ப இவர்கள் மேற்கைத் தாக்கிப் பேசுவார்கள். யூதர்களால் ருஷ்யாவுக்கு ஆபத்து என்று உளறுவார்கள். மீண்டும் வல்லரசு ஆக வேண்டுமென்று முழங்குவார்கள், ஒரு சிலருடைய வாதங்கள் ருஷ்யாவின் முன்னேற்றத்திற்கு உதவலாம். மொஸ்கோ செய்தி என்ற வார இதழ் ஆசிரியர் டிமிற்றீ யக்குஷ்யின் சொல்கிறார்: ''ஒரு சிலருடைய வாதங்களும், சுலோகங்களும் நன்றாகத் தான் இருக்கின்றன.. ஆனால் குரல் கொடுப்போர் விரும்பத் தகாதவர்கள். இவர்கள் நம்பிக்கைக்கு உகந்தவர்கள் அல்லர். தேசியவாதம் இன மறியலில் முடிந்துவிடும். எங்கள் நாட்டுச் சரித்திரம் இப்படிச் சொல்ல வைக்கிறது'' என்று.

யெல்சின் வீழ்ந்து, சற்றே பழைமைவிருப்பும்அரசு வந்தாலும்? மீண்டும் வெளி உலகத் தொடர்பற்ற தனித்தியங்கும் ருஷ்யாவைக் கொண்டுவருவது இயலாத காரியம். பற்பல ருஷ்யர்கள் மேற்குலக வாழ்க்கைத் தரத்தைக் கண்டுவிட்டார்கள். ருஷ்ய வாழ்வு சிறந்தது என்ற பேச்சை நம்பவே மாட்டார்கள். ஒரு கையால் உதவியை வழங்கியபடி மறுகையால் ருஷ்ய சுயகௌரவத்திற்கு உற்சாகம் கொடுக்கும் கொள்கையால் கிளின்ரன் தான் ருஷ்யப் பிரச்சினையை நன்றாகப் புரிந்து கொண்டதாகக் காட்டியுள்ளார். ருஷ்யா மேற்குடன் நெருக்கமாக உறவாடும் அதே நேரத்தில் தனது தனித்துவத்தையும் காப்பாற்ற விரும்புகிறது.

அன்டூரு நாகோர்ஸ்கியுடன்
கிளின்ரன் ஒபிறையன்
மொஸ்கோவில் நடாஷா
வெஸிடேவா.

நியூஸ்வீக், ஏப்ரல் 12, 1993

அமெரிக்க உதவி

சிறிய உதவி வெகு தூரம் போகுமா?

பெருந் தொகை மக்களை ஐந்து றொட்டித் துண்டுகளையும் இரண்டு மீன்களையும் வைத்துக் கொண்டு இயேசுநாதர் பசி ஆற்றினார் என்பது பிரசித்தம். கிளின்ரன் தனது 1,6 பில்லியன் உதவி மூலம் இப்படியானதோர் அற்புதத்தைச் செய்ய முனைந்துள்ளார். இதில் ருஷ்ய சுயமுயற்சியாளர்களுக்கு 50 மில்லியன் டாலர் போய்ச் சேரும். 450 நாடு திரும்பம் ருஷ்ய இராணுவத்தினருக்கு வீடு கட்ட இன்னுமொரு பகுதி உதவி போகும். ருஷ்ய எண்ணெய்வாயுக் குழாய்களைத் திருத்த டாலர் 38 மில்லியன். இப்படிச் சிறிது சிறிதாகக் குறிப்பிட்ட வேலைத் திட்டங்களுக்கு இந்த உதவித் தொகையைக் கிளின்ரன் வழங்கியுள்ளார். பிரித்துப்பார்த்தால் ஒவ்வொரு ருஷ்யக் குடிமகனுக்கும் தலைக்கு டாலர் 11 தான் வந்து சேரும். இது மிகவும் குறைந்ததோர் உதவித் தொகை என்பது வெளிப்படை.

இது ஒரு வழக்கமான உதவியல்ல என்று கிளின்ரன் வாதிடுகிறார். இது ''மக்களுக்கு முதலிடம் கொடுக்கும்'' உதவித்திட்டமாகும் என்றார் அவர். முளை விடும் தனியார் துறைக்கு ஓர் உதவித் திட்டமாகும் என்றார் அவர். இந்த உதவித் தொகையில் முக்காற் பங்கு அரச உயர் நிர்வாகிகளின் கட்டுப்பாட்டின் கீழ் வர மாட்டாது. ஆனால் இப்பணம் ருஷ்ய மக்களைச் சென்றடையக் கூடிய விதத்தில் சில குறிப்பிட்ட வேலைத் திட்டங்களை மனதில் வைத்துக் கொடுக்கப் பட்டுள்ளன. இதனால் மக்கள் மேற்குலக அரச முறைகளின் நன்மைகளை உணர்வார்கள். இதற்கும் கூடுதலான தொகையையும் தான் அமெரிக்க காங்கிரசிடம் கேட்கப்போவதாகக் கிளின்ரன் யெல்சினுக்கு உறுதி அளித்துள்ளார். இந்த உதவியின் தொகை கொடுக்கப்படும் விதம் யெல்சினை மகிழ்வித்தது. ''கூடுதலான உதவி, பொதுவுடமை வாதிகளால் ருஷ்யாவுக்கு விற்பனையாகி விட்டது என்ற குற்றச் சாட்டிற்கு ஆளாகலாம்'' என்கிறார் யெல்சின்.

கிளின்ரன் கொடுத்த உதவியின் விதம் பெரும் பாலும் அமெரிக்க அபிப்பிராயத்தால் கட்டுப் படுத்தப்பட்டுள்ளது. உள் நாட்டில் சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும்படி கிளின்ரன் அமெரிக்க மக்களைக் கேட்டுள்ளார். அதேவேளை பெரும் தொகையைக் கடனாகக் கொடுப்பது நல்ல அரசியல்அல்ல. அதேசமயத்தில் ருஷ்யப் பொதுமக்களும் ''பெரும் தொகையைத் தருவதாக வாக்குக் கொடுக்கும் மேற்கு, ஒன்றும் கொடுக்காமல் விடுவதுதான் உண்மை'' என்று கேலி பண்ணுவார்கள். கிளின்ரன் உதவிசெய்யும் விதம் அவருடைய உள்நாட்டுப் பொருளாதாரக் கொள்கையுடன் ஒத்துப் போகின்றது. அவருடைய சித்தாந்தம் பின் வருமாறு; அரசு மக்களுக்குப் பெரும் தொகையைச் செலவு செய்யக் கூடாது. ஆனால் மக்கள் தங்களுக்குதவ அரசு ஆவன செய்தல் வேண்டும். ருஷ்ய உதவித்திட்டம் தயாரானபோது எப்படித்தனது நாட்டின் திட்டங்களில் நேரடிக் கவனம்செலுத்தினாரோ அதேபோன்று கிலும் தன்னை ஈடுபடுத்கினார். அமெரிக்க காங்கிரஸ் தலைவர்களையும், சர்வகலாசாலைப் பேராசிரியர்களையும் முன்னாள் ஜனாதிபதிகளையும், புத்திஜீவிகளையும், நண்பர்களையும் துருவி ஆராய்ந்து இந்த ருஷ்ய உதவிக் திட்டத்தைத் தயாரித்துள்ளார். வேறு ஜனாதிபதிகள் இவர்களைக் கலந்தாலோசிக்கும்போது பாதுகாப்பு, சம்பவப்பிரச்சினை போன்றவற்றில் கவனம் செலுத்தினர். ஆனால் கிளின்ரன் ருஷ்யத் தேசிய வருமானம் முதலீடுதரும் வருவாய் போன்ற வற்றில் அக்கறை காட்டுகிறார் என்று இவர்கள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர். உதவித் திட்டத்தின் ஒவ்வொரு அம்சத்தையும் அது எவ்வாறு தனியொரு ருஷ்யனின் வாழ்வைப் பாதிக்கப் போகின்றது என்று கேள்விக்கு மேல் கேள்வி கேட்காத அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

கிளின்ரன் ஒரே மூச்சில் சந்தைப் பொருளாதாரம், தனியார் துறை மேம்பாடு போன்றவற்றை ஜனநாயக முன்னேற்றத்துடன் சமன் செய்துள்ளார். ருஷ்யாவில் ஒரு தனியார் வியாபாரத் தொழில் துறை வளர அதுவே ஜனநாயகத்தின் அடிக்கல் என்று கிளின்ரன் நம்புகிறார். அனாப்போலிஸ் நகரில் அவர் பேசியவற்றில் ''இன்றைய கேள்வி ருஷ்ய தனியார் துறைப் பொருளாதாரமும் ஜனநாயகமும் நிலைக்குமா என்பதே. சுதந்திரத்தின் உருசியை அனுபவித்தவர்கள் அதை விடவேமாட்டார்கள்'' என்பவை சிலவாகும். ருஷ்யாவின் பொருளாதார மாற்றம் முன்னேறும், கட்டளைப் பொருளாதாரம் மீண்டும் வர வாய்ப்பில்லை. இளைப்பாறிய ருஷ்ய இராணுவ ஜெனரல் யூறிகிர்ஷின் சொல்கிறார்: ''மிகப்பெரிய அரச தொழிற் தாபனங்களே மேற்குடன் சம்பந்தம் வைக்க ஆவலாயுள்ளன.'' என்று.

உண்மையாய் இரு

ஆனால் மேற்குடன் பொருளாதாரத் தொடர்புவைக்க விரும்பும் ருஷ்யர்களெல்லோரும் ஜனநாயகப் பிரியர்களல்லர். ருஷ்யாவின் அரசியல் உருவமாற்றம் தோற்குமாயின் தனியார் முன்னேற்றம் அடைந்தவர்கள் மீண்டும் சர்வாதிகார கட்டளை அரசை ஏற்றுக் கொள்வார்கள். சர்வாதிகார அரசும் தனியார்துறையும் பேரம் பேசி தனியார்துறை இயங்க அனுமதி கொடுக்கப்பட்டதும் தனியார்

துறை சர்வாதிகார கட்டளை அரசமுறையை ஏற்றுக்கொள்ளும். இதுவே ஆர்ஜென்ரீனா தென்கொரியா, சீனா போன்ற நாடுகளில் நிகழ்ந்துள்ளது. நியூ ஜேர்சியின் செனெற் சபை அங்கத்தவர் பில் பிறாட்லி இதையே எச்சரித்துள்ளார். மேற்கு நாட்டு அரசியல் முறைகளை ருஷ்யா உள்வாங்கி விட்டதென்று நாங்கள் ஒருபோதும் காரணமின்றி ஏற்கக் கூடாது. ருஷ்யா பொருளாதார உன்னத நிலை அடைந்தும், அரசியலில் ஜனநாயகமற்ற நாடாகியிருந்தால் மேற்கின் நோக்கு எவ்வாறு அமையும் என்று அவர் கேட்கிறார்; விடையையும் அவரே சொல்கிறார். அப்படியானதோர் ருஷ்யாவுடன் உறவாடும் போது எங்களுடைய அரசியல் சித்தாந்தங்களுக்கு நாம் உண்மையாக இருக்கமுடியாது. கிளின்ரனின் அபிப்பிராயம் ருஷ்யாவில் பொருளாதாரச் சீர்திருத்தமும் அரசியலில் ஜனநாயக முன்னேற்றமும் ஒன்றாகச் செல்லும் என்பதே.

எழுதியவர்: கிளின்ரனுடன் மாக்கிறேற் கரராட் வார்ணர்.
—நியூஸ்வீக், ஏப்ரல் 12, 1993

ருஷ்யா

பற்பல யெல்சின்மார்

மொஸ்கோவில் ஜனாதிபதி புதிய யாப்பு எழுத என்று ஒரு சபையைக் கூட்டும் வேளையில் ருஷ்ய உபகுடியரசுகளின் தலைவர்கள் தாம் நினைத்த வழியில் செல்கின்றனர்

சரன்ஸ்க்கிலிருந்து — ஜோன் கொலறன்

வலிலி குஸ்லீயான்னிகோல், மொஸ்கோவுக்குத் தென்கிழக்கிலுள்ள மோர்டோவியாவின் ஜனாதிபதி. அவரது கந்தோரிலிருந்து பார்த்தால் பொன்னாக மின்னும் அரிவாளும், சம்மட்டியும் பொறித்த பாராளுமன்றக் கட்டடம் நன்றாகத் தெரியும். அச் சட்டசபையின் இல்லம் ''கண்ணுக்குத் தெரியாத'' ஒரு கோட்டினால் பிரிக்கப்பட்டுள்ளது. அக் கற்பனைக்கோடு எதனைக் காட்டுகிறது? 71 மில்லியன் சனங்கள் – ருஷியரும் பின்லாந்து-உக்ரேனிய இனத்தவரும் கூடி வாழும் மத்திய வொல்காநதிப் பிரதேசத்திலுள்ள இச் சின்னஞ்சிறு குடியரசின் தலைநகரான சரன்ஸ்க்கின் பிரதான சதுக்கத்தினூடாக ஓடும் அக் கற்பனைக் கோட்டுக்கு அப்பால், பாராளுமன்ற அங்கத்தவர் ஜனாதிபதிப் பதவியை ரத்துச் செய்யும் சட்டத்தை இயற்றித் தமது பழைமைக்கருத்தை வெளிப்படுத்தினர். இப்பால் பொதுசனங்கள் தேர்ந்தெடுத்த நிர்வாகியும் பொரிஸ் யெல்சினின் தீவிர ஆதரவாளருமான ஜனாதிபதி, அச் சட்டமியற்றுவோரைப் புறக்கணித்துத் தமது மந்திரிசபையின் உதவியுடன் ஆட்சியை நடத்துகிறார். இச் சின்னஞ்சிறு குடியரசை யார் ஆளுவது என்பது குறித்து மோர்டோவியாவின் அரசியல் வாதிகள் மத்தியில் நரம்புத்தளர்ச்சியுண்டாக்கும் கருத்துப்போர் உருவாகியுள்ளது.

குஸ்லீயன்னிகோல் பழைய ஆட்சிமுறையை ஆதரித்துப் புதிய சீர்திருத்தங்களை விரும்பாத தமது எதிர்க்கட்சியினர் தம்மைப் பதவியிலிருந்து இறக்குவதற்குக் கேவலமான முறைகளைக் கையாளுவதாகக் குற்றம் சுமத்துகிறார். தமது தொலைபேசியைத் துண்டிப்பது, காவற்படையினரை நீக்குவது, மோட்டார் நிலையம் மூடிவிடுவது போன்ற அற்ப செயல்களில் ஈடுபட்டனர் என்றும், வாட்டர்கேற் சம்பவம்போல உட்புகுந்து ஜனாதிபதி உத்தரவுகளைக் களவெடுத்தனர் என்றும் கூறுகிறார். ஆனால் மோர்டோவிய ஜனாதிபதி தொடர்ந்து பதவியிலிருக்கத் தான் போகிறாராம். ''மக்கள் என்மீது நம்பிக்கை வைத்தனர். நான் இப்போது பின்னடித்து இந்த நவ-பொதுவுடைமையாளன் அதிகாரத்தைக் கைப்பற்ற விடக் கூடாது'' பாராளுமன்றத் தலைவர் நிக்கொலாய் பிர்யுகோவ் எப்படியாவது குஸ்ல்யன்னிகோல் பதவியில்கவேண்டுமென்று பிடிவாதமாக உள்ளார். அவரது போக்குக்குக் காரணம் கூறும்போது அச்சிறு குடியரசின் குறுகிய கால ஜனாதிபதி ஆட்சிமுறை என்ற பரிசோதனையால் பொருளாதாரம் படுமோசமாக உடைந்து ஊழல் மிகுந்துள்ளது என்கிறார்.

சரன்ஸ்க்கில் எதிரும் புதிருமாக நிற்கும் போட்டி நிலையைக் கருத்திற் கொண்டு நோக்கினால், யெல்சின் மட்டும்தான் ருஷ்யாவில் தமது ஜனாதிபதிப் பதவியை இறுகப் பற்றிக்கொள்ளப் பெரிதும் பாடுகிறவர் அல்ல என்பது புலப்படும். ருஷ்ய சமஷ்டியில் உள்ள 88 பிரதேசங்களில் 21 சிறுபான்மை இனக் குடியரசுகள் என்ற முறையில் விசேட அந்தஸ்து உடையவை. அவற்றுக்கு அரசுத் தலைவர்கள் தனித்தனியே உள்ளனர். மொஸ்கோவில் தேசிய மட்டத்தில் அதிகாரப் போட்டி வலுவடைந்தமை தேசம் முழுவதும் அதிர்வு அலைகளைக் கிளப்பிவிட்டதால், இந்தக்



குஸ்லியன்னிகோவ்

குறு யெல்சின்கள் உள்ளூர்ச் சட்ட சபைகளுடன் (உயர் மட்டத்தில் நிகழும் போட்டியை) ஒத்த பூசல்களில் மாட்டிக்கொண்டுள்ளார்கள். யெல்சின் தமது ஆட்சியை குறுக்கும் இவ் அரசியற் குழப்ப நிலையை சமப்படுத்த இப்பிரதேச நிர்வாகத்தினரை ஜூன் இரண்டாம் வாரத்தில் ஒரு விசேட சபையைக் கூட்டித் தமக்கு ஆதரவு தேட முயல்கிறார். இதன்மூலம் மொஸ்கோவிலுள்ள பிரதிநிதிகள் பேரவையைப் (காங்கிரஸ்) புறக்கணிக்கப் பார்க்கிறார். நோக்கம் தேசத்தை ஜனாதிபதி ஆட்சிக்குட்பட்ட ஒரு குடியரசாக்கக் கூடிய புதிய யாப்பு ஒன்றைத் தயாரிப்பதாகும். 18-ம் நூற்றாண்டில் அமெரிக்க யாப்பு வகுக்கும் மாமன்றம் மாகாணங்களின் உரிமைகளை வரையறை செய்வதில் பூசல் இட்டது போலவே, இவ் விசேட சபையிலும் கிறெம்லின் (மத்திய அரசு) குடியரசுகளின் தலைவர்கள் ஆகிய இரு பகுதியினரும் அதிகாரப் பங்கீடு பற்றி இழுபறி ஏற்படலாம். அதனால் ருஷ்யாவின் கஷ்டங்களுக்குப் புதியதொரு ஆபத்தான பரிமாணம் தோன்றலாம். ருஷ்யாவின் பிற நிர்வாகிகளுக்கிடையே இரட்சகர்களைத் தேடுவதில் யெல்சின், எல்லாம் நன்மைக்கே என்ற கோட்பாட்டைக் கடுமையாக நம்புவதாகலாம். அவர்களுட் பலர் தத்தம் சட்ட சபைகளைப் புறக்கணிக்க முயன்றனரேயன்றி மொஸ்கோவில் வெற்றிகரமாகச் செயற்படுத்தக் கூடிய தீர்வு எதையும் முன்வைத்திலர்.

மோர்டோவியாவில் இருபிளவு பட்ட நிலை யெல்சினின் 'போரை' மிகத் தெளிவாகப் பிரதிபலிக்கிறது. அக்குடியரசைச் செயலிழக்கச் செய்ததுடன் மொஸ்கோவில் போரிடுவோரையும் ஈர்த்துள்ளது. யெல்சின் மோர்டோவிய பாராளுமன்றம் ஜனாதிபதிக்கு மாறாக வாக்கெடுப்பை யாப்பு வரம்புக்குட்பட்டது என ஒப்புக்கொள்ள மறுத்தார். குஸ்ல் யன்னிகோவை மீட்டும் அவரது பதவியில் இருத்தி, சமஷ்டி (மத்திய) அமைச்சுகள் அனைத்தும் அந்த ஜனாதிபதியின் அரசாங்கத்துடனேயே கருமமாற்றும்படி பணித்தார். யெல்சினின் மாற்றானாகிய குஸ்லன்கஸ்புல டோவ் தலைமையில் மொஸ்கோ (மத்திய) பாராளுமன்றம் கிறெம்லினின் ஆணையை இடைநிறுத்தியுள்ளது. குஸ்ல்யன்னிகோவ் இவ் வழக்கை ருஷ்ய யாப்பு நீதிமன்றத்துக்கு எடுத்துச் சென்றார். ஜூன் முதல் வாரத்தில் அம்மன்ற நீதிபதிகள் யெல்சினின் ஆணை யாப்புக்கு மாறானது என்று தீர்ப்புக்கூறி, இவ்வழக்கை மொர்டோவிய நீதிமன்றத்துக்கு அனுப்பினர்.

ருஷ்யாவின் 'ஒட்டுப்போட்ட' சமஷ்டியின் பிறபகுதிகளிலும், யெல்சினின் கடுமையான நிர்வாக முறை இன்றும் நடக்கும் உதாரணங்களை காணலாம். (சிறுபான்மை) இனக்குடியரசுகளின் ஜனாதிபதிகள், யெல்சின் தமது மொஸ்கோ பாராளுமன்ற பழைமை பேணுவோர் விடயமாகக் கைக்கொள்ளத் தயங்கிய கடும் நடவடிக்கைகளைத் தமது பாராளுமன்றங்களில் எடுத்தனர். அதனால் பல கஷ்டங்களுக்கும் ஆளாவதைத் தவிர்க்க முடியவில்லை.

செச்னியா, பெரும்பாலும் முஸ்லிம் இனத்தவர் வாழும் குடியரசு, 1·1 மில்லியன் மக்கள் வசிக்கும் வடகோக்கேசஸ் பிரதேசத்தைச் சார்ந்தது. பிரச்சினைகள் உடையது. ஜனாதிபதி ஜொகார்து துயேவ் தமது கொள்கைத் திட்டங்களுக்குப் பாராளுமன்றம் எதிர்ப்புத் தெரிவித்தபோது பொறுமை, இழந்து, ஜனாதிபதி ஆட்சியைப் பிரகடனம் செய்து, சுமுகமாகத் தம்முடன் ஒத்துழைக்கும் சட்ட சபை தெரிவு செய்யப்படும் வரை அம்முறை தொடர்ந்து நடைபெறும் என்றார். செச்னியா ருஷ்ய சமஷ்டியிலிருந்து விலகியதாக அறிவித்தது. 1991 ஐப்பசியில் துதயேவ் எதிர்ப்பின்றித் தேர்தலில் வெற்றி பெற்றார். முன்னாள் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த குறிகளைத் தாக்கும் போர்விமானத் தளபதியான அவர் தமது குடியரசை சுதந்திரப் பாதையில் செலுத்தினார். கிறெம்லின் இராணுவ நடவடிக்கை எடுக்கப்போவதாயும், பொருளாதாரத்தடை விதிப்பதாயும் அச்சுறுத்தியதைத் துணிந்து எதிர்த்தார். ஆனால் அங்குநிலைமை சீர்கெடவே துதயேவ் யெல்சினைப் போலவே தனது பதவி வேட்கையை பாராளுமன்றம் எதிர்ப்பதைக் கண்டார். யெல்சின் போலவே அவரும் நேரடியாக ஜனாதிபதி ஆட்சியை ஸ்திரப்படுத்தத் தவறவில்லை அவருக்கு விசுவாசமாகப் படைவீரர் நின்றனர். அவர்கள் கருத்துப்படி பழைய முறையிலமைந்த உயர் உத்தியோகத்தர்கள் சோவியத் அதிகாரத்தைப் புதுப்பித்து அமைக்கும் முயற்சியில் ஈடுபடுவதை அவர் தடுத்துள்ளார் என்பது அவரது ஆதரவாளரின் வாதம்.



ஜோகார் துதயேவ்

துதயேவ் அனுபவமூலம் பாடம் படித்துள்ளார். நேரடி ஆட்சியைப் பிரகடனம் செய்வது எளிது. அதை நடைமுறைப்படுத்துவது அரிது என்று ஓர் ஊரடங்குச் சட்டத்தை மதிக்காமல் தலைநகரான குறெஸ்னியில் அவரது ஆதரவாளர்கள் ஜனாதிபதி மாளிகைக்கு முன்னே காவல் புரிய சில மாடித்தொடர்களுக்கு அப்பால் அவரது விரோதிகள் கூடியிருக்கிறார்கள். ஜூன் முதல் வாரத்தில் தனக்கு மாறானவர்கள் மத்தியில் ஜனாதிபதி உரையாற்ற முயன்றபோது, யாரோ துப்பாக்கியால் சுட்டான். பிற எதிர்க்கட்சியார் உள்ளூர் தொலைக்காட்சிக் கோபுரத்தைத் தாக்கினர். துதயேவுக்கு ஆதரவான போர்ப் படையினரும் பாராளுமன்ற ஆதரவாளரும் சுடுபட்டதில் செச் மக்கள் பலர் உயிர் இழந்தனர். ஜூன் 5 ஆம் திகதி செச் மக்கள் குடியொப்பம் ஒன்றின்மூலம் அக்குடியரசை ஆள்வது யார் என்பதை வாக்காளர்களே தீர்மானிப்பதாய் இருந்தது. ஆனால் அதிகாரப் போட்டி தீவழியில் செல்லவே குடியொப்ப வாக்கெடுப்பு நடைபெறுமா என்பதில் ஐயம்

உண்டாயிற்று. துதயேவ் ஆதரவாளர் போர்டாங்கிகளின் உதவியோடு வாக்குச் சீட்டுக்களை எரித்தனர். செச் தேசியவாதிகள் இக் குடியரசை மொஸ்கோ (மத்திய அரசு) மீண்டும் கிறெம்லின் கடும் கட்டுப்பாட்டுக்குள் தள்ளி விடுமோ எனக் கவலைப்படுகின்றனர்.



கிர்சான் இலும்சினோவ்

ஆனால், கிறெம்லின் பலமாயிருந்தால் அல்லவா இது நிகழும். ஒரு குடியரசுத் தலைவரின் கருத்துப்படி மத்திய அரசு உள்ளூர் நிலைமைகளுக்கு இடம் விட்டே தனது பிடியை இறுக்கலாம். உதாரணமாக கல்மிக்கியா என்ற குடியரசு கஸ்பியன் கடலின் வடமேற்கில் உள்ளது. அதன் ஜனாதிபதி 31 வயதினரான கிர்சான் இல்யூம் சினோவ் புதிதாகப் பதவிக்கு வந்தவர். அவர் விருப்பப்படி விட்டால் ருஷ்யா அடங்கலும் அவசரமாகத் தேவைப்படும் சமூக, பொருளாதாரச் சீர்திருத்தங்களைப் பரீட்சித்து முடிவு கட்டும் முன்னோடிப் புலமாகலாம். அவரது குடியரசில் இரண்டு மாதம் வரைதான் இப்பதவியில் இருந்தவர் என்றாலும், அவர் மறு குடியரசை ''சோவியத் அதிகாரத்திலிருந்து நீங்கிய முதலாவது ருஷ்ய நிலப்பரப்பு'' என்கிறார். சுயமுயற்சியால் கோடீஸ்வரனாகிய அவர் சோவியத் என்ற உள்ளூர் ஆட்சிமன்றங்களை முற்றாக இல்லாமற் செய்துவிட்டார். அவரது குடியரசான கல்மிக்கியாவின் 350,000 பௌத்த மக்கள் 17 ஆம் நூற்றாண்டு மங்கோலியரின் வழிவந்தவர்கள். ஸ்ரெப்பீஸ் புல்வெளியின் மேற்கு ஓரமாக வசிக்கிறார்கள். ஆரவாரமிக்க சட்டசபையை எப்படிச் சமாளிப்பது என்பதற்கு அவரது தீர்வும் அம்மக்களை வசீகரித்துள்ளது. அவர் சட்டசபை உறுப்பினர்களுக்கு கவர்ச்சி மிக்க பொருளாதாரத் தூண்டுதல்களை வழங்கினார். தலைநகரான எலிஸ்ராவில் அவர்கள் பாராளுமன்றம் தன்னைத் தானே கலைத்துக் கொள்வதாக தீர்மானம் நிறைவேற்றியுள்ளார்கள். கல்மிக்கியாவின் குட்டி அரசியல் இயக்கங்களிலிருந்தோருக்கு வங்கிக் கடன்களை வழங்கி அவர்கள் வர்த்தகத்துறையில் ஈடுபடும்படி தூண்டிவிடப்பட்டனர். நான்'' கல்மிக்கியாக் குடியரசின் ஜனாதிபதி அல்லேன், கல்மிக்கியா இன்கோப்பரேட்டெட்டின் (வர்த்தகக் கூட்டுத்தாபனத்தின்) தலைவன்'' என்கிறார் சுடச்சுட.

இல்யும்ஷினோவ் வீராப்புடன் தற்புகழ்ச்சியாகக் கூறுகிறார்: ''நான் பொதுவுடைமைவாதியும் அல்லன், ஜனநாயகவாதியும் அல்லன் ஒரு முதலாளித்துவவாதி, அழிவின் விளிம்பில் உள்ள பொருளாதாரத்தைச் சீர்ப்படுத்த இடைக்காலச் சர்வாதிகார அரசு அவசியமானது'' என அவர் தனது ஆட்களையே கல்மிக்கியாவின் 13 மாவட்டங்களிலும் நிர்வாகிகளாக அமர்த்தியுள்ளார். அவர்கள் எல்லோரும் வர்த்தக நிறுவனத்தின் தலைவர் என்ற வகையில் அவருக்கே விடையிறுக்க வேண்டியவர்கள். அவருக்குச் செல்வம் வந்து குவிவது எப்படி என்பது போன்ற விடையளிக்க முடியாத வினாக்களை எழுப்புகிறார்கள். அவநம்பிக்கைவாதிகள் பலர், ஜனாதிபதி தேர்தல் பிரச்சாரத்தின்போது 'ஒவ்வொரு குடும்பத்துக்கும் 100 டொலர் பணம் தரமுடியும், எண்ணெய் வளமுள்ள தமது பூமியை மற்றொரு குவைத் எனத் திகழவைக்கலாம் என்ற வாக்குறுதியை எவ்வளவுக்கு நிறைவேற்ற முடியும் என்று சந்தேகப்படுகின்றனர். ஆயினும் கிறெம்லின் (மத்திய நிர்வாகம்) இங்கு நிகழும் பரிசோதனையைக் கூர்ந்து நோக்குகிறது. இல்யும் ஷினோவ் கூறுகிறார் ''பிரதேசங்களில் மறுமலர்ச்சி ஏற்படாமல் ருஷ்யாவில் மறுமலர்ச்சி உண்டாக முடியாது. வட்டத்தின் விளிம்பில் உள்ளவரே முன்மாதிரி காட்டி வட்டத்தின் மையத்தை வளர்க்கமுடியும்'' என்று.

ஆனால் என்னவிதமான உதாரணம்? மொஸ்கோவில் கசப்பான அரசியற் பூசல் நிகழ்வதால், அதன் கவனம் சிதறுண்டு கிடக்கையில், குடியரசுகளின் தலைவர்கள் உள்ளூர்ப் பிரச்சினைகளுக்குத் தம் சொந்தத் தீர்வுகளைக் காண்பதில் தம் சுதந்திரத்தை நிலைநாட்டியுள்ளனர். யெல்சின் இவர்களுடைய உதவியை நாடித் தமது புதிய யாப்பை நிறைவேற்ற முயலும் அதே வேளையில், அவர் போட்டியிடும் உரிமைகளை முன்வைக்கும் தனியுரிமைப் போக்கை எதிர்நோக்க வேண்டிவரும். ஏற்கனவே பிரதேசத் தலைவர்களிடம் இருந்து 700-க்கு மேற்பட்ட யாப்பு விடயமான சிபார்சுகளைக் கிறெம்லின் பெற்றுள்ளது. அவர்கள் கூட்டத்துக்கு அழைக்கப்படும் போது மேலும் முறைப்பாடுகள் முன்வைக்கப்படும். யெல்சின் அனைவரையும் ஒன்று கூட்டிப் பிரதேச குடியரசுகளை வலுவாக்குவதன் மூலம் மத்திய அரசை வலுவடையச் செய்யலாம் என்ற கனவு பிழைக்கக்கூடும். தடுமுட்பூசலிடும் சிற்றரசுகளாக ருஷ்யா துண்டாடப்படக்கூடும். சோவியத் சமஷ்டியைத் துண்டாடப் பெரும் பங்கு வகித்த மனிதரே இப்பொழுது ருஷ்யாவும் அத் தலைவிதிக்குட்படாதிருக்க வழிவகைகளைக் கூற வேண்டியிருக்கிறது.

டைம், ஜூன் 14, 1993

சீ ஐ ஏ யின் புதிய ஒற்றர்கள்

பனிப்போருக்குப் பிந்திய சகாப்தத்தில் மேலங்கியும் குத்துவாளும் கொண்ட செயற்பாடுகள்

— டக்ளஸ் வோளர் —

ஒற்றர்கள் மரணத்துளிகளைக் கூட உபயோகிப்பதை நிறுத்திவிட்டார்கள். கண்ணுக்குத் துலங்காத வைகளும், நஞ்சூட்டப்பட்ட நுனிகளைக் கொண்ட பிரம்புகளும் கூட இரகசியத் தபால் பெட்டிகளுடன் ஓய்வுபெற்று விட்டன. இப்போது சீ. ஐ. ஏ அதிகாரிகள் வெளிநாட்டு முகவர்களிடமிருந்து விசேட மின்கலத் தொலைபேசிகள் மூலமும், இலக்கங்களாலான புகைப் படங்களை அனுப்பும் தூக்கிச் செல்லக் கூடிய கணனிகள் மூலமும் செய்திகளைப் பெற்றுக் கொள்ளுகிறார்கள். மின்னியல் மூலம் பதியப்படும் இவ்வகைச் செய்திச்சேவை ஒட்டுக்கேட்க முடியாதது.

பனிப்போரின் முடிவின் பின்னர் ஒற்றர் விளையாட்டுப் பூரணமான மாற்றத்தைக் கண்டுள்ளது. ஜேம்ஸ் பொண்ட் நினைத்துப் பார்த்திருக்க முடியாத தொழில் ரீதியான மரியாதைச் செயலாக மொஸ்கோவிலுள்ள சீ. ஐ. ஏ. நிலைய அதிபர் தனது நியமனப் பத்திரங்களை ருஷ்ய புலனாய்வுச் சேவைக்கும், அவ்வாறே, வாஷிங்டனில் மொஸ்கோ அதிகாரி சீ.ஐ.ஏ. யிடமும் அடையாளம் காட்டிக் கொள்ளுகின்றனர். சில ஆண்டுகளுக்கு முன்னர் சீ. ஐ. ஏ. நிறுவனம் சோவியத் ஆயுதபலத்தைக் கணிப்பதற்கு 100 பகுப்பாய்வாளர்களைப் பணியில் அமர்த்தியிருந்தது. இதே பணிக்கு இப்போது 9 பேர் மட்டுமே தேவைப்படுகிறார்கள்.

இந்த நிறுவனத்திற்கு இவ்வளவு செலவுகள் மிக்க வரவு–செலவுத் திட்டம் எதற்காக என்று அமெரிக்க காங்கிரஸ் வினாத் தொடுக்கிறது. கிளின்ரன் நிர்வாகம் புலனாய்வுத் துறைச் செலவினத்தை (ஓர் ஆண்டுக்கு 2800 கோடி டாலர்) எதிர் வரும் ஐந்து ஆண்டு காலப்பகுதியில் 700 கோடி டாலரால் குறைக்கப் போகிறது. மேலும் அது வெட்டப்பட வேண்டும் என்கிறார்கள் விமர்சகர்கள். சோவியத் இராணுவத்தின் கவசவாகன எண்ணிக்கையைக் கண்டு கொள்வதில் இந்த நிறுவனம் வெற்றிகண்டதென்பதை அவர்கள் ஒப்புக்கொள்ளுகிறார்கள். இப்போது முன்னவர் சோவியத் யூனியனின் கனரக ஆயுதங்கள் துருப்பிடிக்கும் போது ஏன் அலட்டிக் கொள்ளவேண்டும்? உலகம் இன்னமும் குழப்பமான நிலையில் இருந்தாலும் உலகத்தின் சமூகக் கிளர்ச்சிகளை முற்கூட்டியே கண்டறியும் ஆற்றல் சீஐஏ க்கு மிகவும் குறைவாகவே இருந்து வந்திருக்கிறது. சோவியத் பொருளாதாரத்தின் வீழ்ச்சியையும், குவைத் மீதான ஈராக்கிய ஆக்கிரமிப்பையும் சீஐஏ மிக ஆறுதலாகவே கண்டு கொண்டது. வளைகுடாப் போரின்போது புலனாய்வுப் பகுப்பாய்வாளராக தமக்களித்த தகவல்கள் வெறும் ''கஞ்சி'' யே யாகும் என்று குறைபட்டுக்கொண்டனர். ஜெனரல் நோர்மன் ஷ்வாக்கோவ் சீஐஏயை இல்லாதொழித்துவிடலாம் என்று ஆலோசனை கூறுகிறார். முன்னாள் செனட் புலனாய்வுக் குழுவின் துணைத்தலைவரான டானியல் பட்றிக் மொயினிஹான் இந்த நிறுவனம் செய்யும் பல பணிகளை வேறு நிறுவனங்கள் பிரதிசெய்கின்றன என்றார். சீஐஏ யின் படையப் புலனாய்வுத்திறன் ஆழமற்றதாக இருப்பதால் ''படையின் சேவைகள் ஒருபோதும் அவற்றைப் பயன்படுத்துவதில்லை'' என்று முன்னாள் தேசிய பாதுகாப்பு நிறுவன இயக்குநர் வில்லியம் ஓடோம் தெரிவிக்கிறார்.



புதிய அச்சுறுத்தல்கள்: லங்லிக்கான புகும் வழி

வங்கியிலமைந்துள்ள இந்த நிறுவனத்தின் தலைமையகத்திலிருந்தும் பிசாசுகள் தமது பழைமையையும் பயனற்ற தன்மையையும் நினைத்து ஏளனப்படுகிறார்கள். வரவு-செலவில் வெட்டு ஏற்படுத்த முயல்பவர்கள் ''உலகத்தில் தெரிந்து கொள்ளத் தேவையில்லாதவை எவை என்பதை இனிமேல் தான் அடையாளம் காணவேண்டும்'' என்கிறார் றொபட் கேற்ஸ். இவர் ஜோர்ஜ் புஷ்ஷின் நிர்வாகத்

தில் மத்திய புலனாய்வு இயக்குனராகப் பதவி வகித்தவர். காங்கிரசும் வெள்ளை மாளிகையும் இன்னும் கூட முன்னாள் சோவியத் யூனியன் பற்றிய புலனாய்வுத் தகவல்களுக்காக இந்நிறுவனத்தைப் புரட்டி எடுக்கிறார்கள். போராடிக் கொண்டிருக்கும் குடியரசுகளுக்கிடையில் பதட்டத்திற்கு விசிறிக் கொண்டிருக்கிறார்கள். சீஐஏ செயற்பாட்டினர் படையினரும், இராசதந்திரிகளும் இவ்வகையான இரகசியப்பணிகளில் ஈடுபட முடியாது. முன்னர் கேஜிபீ செய்தது போலவே இப்போதும் தம்வழியிலே தொடருகின்ற ருஷ்ய முகவர்களை சீஐஏ அதிகாரிகள் தவிர்க்க வேண்டியுள்ளது.

மனித ஆரம்ப வழிகள்

உலகின் ஏனைய பகுதிகளில் உளவறிதல் என்பது கடினமானதும் ஆபத்து நிறைந்ததுமாகிவிட்டது. ஹியூமின்ற் அல்லது மனித வழிகள் மூலம் விபரமான தகவல் வேண்டி நிற்கிறது. வாஷிங்டன் பென்ரகனின் சாதுரியமான குண்டுகளை இலக்குப்படுத்துவதற்கு சீஐஏ ஒரு ஈட்டத்தைத் தொடர்புபடுத்துவதோடு நின்று விடமுடியாது. அந்த ஏவாயுதங்கள் புகுந்து செல்லக்கூடிய காற்றோட்டக் குழாய்களைக் கண்டாக வேண்டும். யூகோஸ்லாவிய நுண்ணிய விவகாரங்களைக் கண்டுகொள்ள இராசதந்திரவட்டாரங்களில் உழன்று திரிந்த சீஐஏ செயற்பாட்டாளர்கள் இப்போது அமெரிக்க படையத் தலையீடு ஏற்படுமாயின் தேவைப்படும் பீரங்கிப் படையணிகள் ராஜேவோவைச் சுற்றி எங்கெங்கெல்லாம் உள்ளன என்று அறிய வேண்டியுள்ளது. சீஐஏ யின் விசேட வழிதுலக்கும் அதிகாரிகள் சோமாலியாவில் உள்ள நிலக் கண்ணிவெடிகளைக் கண்டுபிடித்து முன்னேறிச்செல்லும் அமெரிக்க படையினருக்கு முன்னாலுள்ள நகரங்களுக்கு வழிகாட்டியுள்ளனர். ''நாங்கள் இறக்கையுள்ள பெரிய இராட்சத முதலையைக் கொன்றுள்ளோம். ஆனால் இப்போது தடுமாறிக் கலங்கவேண்டிய நச்சுப்பாம்பினத்தின் மத்தியில் வாழ வேண்டியுள்ளது'' என்று கூறுகிறார் மத்திய புலனாய்வுக்கழகத்தின் புதிய இயக்குனரான ஆர். ஜேம்ஸ் வூல்சி.

அமெரிக்காவுக்குள்ளேயும் சிலர் நுழைந்திருக்கலாம். பயங்கரவாதிகளின் மீது நல்ல புலனாய்வு செலுத்தவேண்டிய தேவையை உலக வர்த்தக மையக் குண்டு வெடிப்பு வலியுறுத்துகிறது. ஐரோப்பாவிலும் மத்திய கிழக்கிலுமுள்ள சீஐஏ அதிகாரிகள் இந்தக் குண்டு வைத்தவர்களுக்கும் வெளி நாடுகளுக்கும் உள்ள தொடர்பை ஆராய்வதற்காகத் தங்களை ஈரானுக்கு இட்டுச் செல்லக்கூடிய கணனித்திட்ட வழிகளைக் கையாளுகிறார்கள். சென்ற ஜனவரியில் பயங்கரவாதம் சீஐஏ யையே தாக்கியது. லங்லேக்குள் உட்புகும் வேளையில் துப்பாக்கியாளர்கள் இந்த நிறுவன அதிகாரிகள் இருவரைச் சுட்டுக்கொன்றதோடு மூவரைக்காயப்படுத்தியுமுள்ளனர். இந்தச் சூட்டுவிவகாரம் பரவலாக நடந்த ஒன்றாகக் கருதப்படலாம். ஆனால் அடிப்படைவாத பயங்கரக்குழுவான ஹிஸ்புல்லா வெளி நாடுகளிலுள்ள அமெரிக்க அதிகாரிகளின் போக்குவரத்து நடைமுறைகளை ஒற்றுக்காணமுயன்றதற்கான ஓர் அறிக்கையாவது சீஐஏ க்குக் கிடைத்துள்ளது. இந்த வழக்கில் பிரதான சந்தேகநபரான பாகிஸ்தானிய மிர் அயிமால் கன்சி ஈரானுக்குத் தப்பியோடியிருக்க முடியுமோ என்பது பற்றி சீஐஏ விசாரணை நடத்தி வருகிறது.

பனிப்போருக்குப் பிந்திய பல அச்சுறுத்தல்களோடு போராட சீஐஏ தன்னை மாற்றி வருகிறது. தகவல்களை இடைநிறுத்திக் கேட்டதன் மூலமும், பாக்தாத்தில் சரியான முகவர்களை நிறுத்தியதன் மூலமும் வளைகுடாப் போரின் போது 30 பயங்கரக் குழுவினரை அது மடக்கியது. போலிக் கடவுச் சீட்டை மடக்கியதன் வாயிலாக இந்தோனேஷியத் தலைநகர் ஜாகர்த்தாவில் உள்ள அமெரிக்க தூதரகத்தின் தோட்டப் பெட்டியொன்றினுள் குண்டொன்றை வெடிக்கவைக்கத் திட்டமிட்ட ஈராக்கிய குழுவொன்றின் முயற்சியை சீஐஏ அதிகாரிகள் முறியடித்தனர். சதாம் ஹுசைனின் நாசகாரக்கும்பல்கள் வேற்றுநாட்டு விமானநிலையமொன்றில் இறங்கிய போது சீஐஏ கொடுத்த தகவலின் உதவியால் அந்த நாட்டின் பொலிசார் அவர்களை எதிர்கொண்டனர். பயங்கரவாதிகளை இறக்குவதற்கு முன்னரே பொலிசார் அவர்களை இன்னொரு நாட்டிற்கு விமானமேற்றிவிட்டனர். அடுத்த விமானநிலையத்தில் அந்நாட்டு பொலிசாரோடு சீஐஏ யினரும் தோன்றி பயங்கரவாதிகளை வேறோர் நாட்டுக்கு அனுப்பிவிட்டனர். இந்த விமானக்கெந்தல் உலகளாவிய ரீதியில் தொடரவே விரக்தியுற்ற பயங்கரவாதிகள் சரணடைந்ததோடு சதாமின் தாக்குதல் திட்டங்களையும் வெளியிட்டனர்.

இந்த நிறுவனத்தின் இப்போதைய முக்கிய பணி அணு, இரசாயன ஆயுதப் பரவலாக்கலைக் கண்டு தடுப்பதாகும். றப்ராவில் அமைந்துள்ள மம்மார் கடாபியின் ''மருந்தக'' வசதிக்கூடம் உண்மையில் இரசாயனக் குண்டுகள் தயாரிக்குமிடம் என்பதை சீஐஏ தான் நிரூபித்தது. அதன் பின்னர் தொழிற்சாலை மர்மமான முறையில் தீப்பிடித்து எரிந்துவிட்டதாக கடாபி அறிவித்தபோது தீச்சுவாலையை இனம் மாற்ற லிபியாவின் தலைவர் நெருப்பின் மீது ரயர்களை அடுக்குவித்தார் என்பதையும் சீஐஏ நிரூபித்தது. ஐ. நா. பரிசோதகர்கள் முன்கதவால் செல்ல, சதாமின் முகவர்கள் பின்கதவால் அணு ஆயுத உபகரணங்களைக் கடத்த முயன்றமையை சீஐஏ யின் செயற்கைக் கோள்கள் கண்டுபிடித்தன. பெப்ரவரியில் ''ஆகக் குறைந்தது ஓர் அணு ஆயுதத்திற்குத் தேவையான'' புளூட்டோனியத்தையாவது வடகொரியா கையிருப்பில் வைத்திருப்பது பற்றி வூல்சி எச்சரித்திருந்தார். காட்டிக்கொடுத்தல் மூலம் எண்ணிக்கையைப் பெருக்க நினைப்பவர்களைக் கட்டுப்படுத்தலாம் என இந்நிறுவனம் நம்புகிறது. அந்த வழி பயன்தராது போனால் இரகசியச் செயற்பாடுகளில் அது இறங்கும். விநியோகிக்கும் நாடுகளின் கணனி கனரக ஆக்கங்களை முகவர்கள் வசப்படுத்தவும் முடியும்.

(''சாதனங்களையே அழித்து விடல்'' என்கிறார் ஓர் அதிகாரி) இதனால் மறுமுனையிலுள்ள கொள்வனவுகாரர் குண்டுகள் தயாரிக்க முடியாமல் போகும்.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் போதைவஸ்துப் போரில் பங்கு கொண்டு தம் கரங்களை அழுக்குப் படிந்ததாக்க சீஐஏயினர் விரும்பவில்லை. இன்று காளி, மெடலின் மறைவிடங்களில் பயிற்சி பெற்ற முகவர்களை அது பணியில் அமர்த்தியுள்ளது. புலனாய்வுத் தடயங்களைப் பெறும் விடயத்தில் சீஐஏ அதிகாரிகள் இப்போது தென் அமெரிக்க பொலிசாருக்குப் பயிற்சி அளித்து வருகிறார்கள். பெப்ரவரியில் நியூஸ்வீக் கிற்குக் கிடைத்த இரகசிய ஆவணங்களின்படி இந்த மறைவிடங்களில் துப்புத் துலக்கத் தனது இரண்டு சிறிய கண்காணிப்பு விமானங்களைப் பணியில் ஈடுபடுத்தியுள்ளது. 1989 ஆம்ஆண்டில் கொலம்பிய பொலிசாருடனான துப்பாக்கிச் சண்டையில் கொலையுண்ட போதைவஸ்துக் கடத்தல் மன்னர் ஜோஸ் கொன்சாலோ றொட்றிகுவற் கச்சாவைப் பதுங்கியிருந்து தாக்க வழியமைத்துக் கொடுத்த செயல் சீஐஏ யின் பெரிய வெற்றிகரச் செயலாகும்.

போதைவஸ்துக் கடத்தற்காரர்களையும், பயங்கரவாதிகளையும் உளவு கண்டறிவதென்பது கேஜீபீயைத் தடுத்துப் பிடிப்பதிலும் பார்க்க மிகக் கடினமான பணியென்பது நிறுவன முகவர்களின் கருத்தாகும். சீஐஏ மனோவியல் நிபுணர்கள் வாராவாரம் ''மாலைப் பிரார்த்தனை'' நடத்துவதுண்டு. சட்ட விரோதச் செயற்பாட்டாளர்கள் எவ்வாறு இந்தக் கடின நடைமுறைகளுக்கெதிராக இயங்க முடிகிறது என்று கண்டுகொள்ள முயல்வதையே இந்தப் பெயர் கொண்டு அழைக்கிறார்கள். திரைப்படங்களையும் வியக்காமல் பணிப்போர்க் காலத்தைய உளவு மெதுவானதாகவும், கௌரவமானதாகவும் இருந்தது. அதற்கான விதி ''ஓர் உளவாளி இன்னோர் உளவாளியைச் சுடுவதில்லை'' என்பதோடு



அப்போது இப்போது

பயங்கரம்– 1979இல் ரெஹரானில் அமெரிக்க தூதரகப் பணியாளர்கள் பணயக் கைதிகளாக்கப்பட்டனர்

அதிக அளவிலான புலனாய்வுத் தூதரகங்களின் (கொக்ரெயில்) சிற்றுண்டி விழாக்களிலேயே நடந்தேறியது. இவற்றிலீடுபடும் அதிகாரிகள் ஆயுதப்பயிற்சி பெறக் கூட முயல்வதில்லை.

ஆழமான மறைப்பு

இப்போது அவை நடைபெறுகின்றன. சோவியத் யூனியனும் அமெரிக்காவும் போன்று போதைக் கடத்தற்காரர்கள் ஆட்களைப் பரிமாறிக்கொள்வதில்லை. சோமாலியாவில் சீஐஏ இழப்புக்களைச் சந்தித்திருப்பதாக நியூஸ்வீக் அறிகிறது. ஆனால் இது பகிரங்கப்படுத்தப்படுவதில்லை. மொஸ்கோதான் எதிரியாக இருந்தபோது ''எமது பின்புறப் பையில் பல வெளிநாட்டுப் புலனாய்வு நிறுவனங்கள் இருந்தன'' என்று கூறுகிறது. ஓர் உளவறியும் அதிகாரி ''சோவியத் இப்போது அச்சுறுத்தலாக இல்லாதபோது நீங்கள் இங்கேஎன்ன செய்கிறீர்கள்'' என்று அவர்களைக் கேட்கிறார். இதனால் செயற்பாட்டுச் சூழல் கடினமாக்கப்பட்டுள்ளது. ''நட்பு நாடு நமது வாலைப்பிடிக்கும்; எமது தொலைபேசிகளையே ஒட்டுக்கேட்கும்'' என்றும் சொல்கிறார். அந்த அதிகாரி இப்போது அநேகமாக சீஐஏ உளவாளிகள் ஆழமான மறைப்புக் குள்ளேயே இயங்குகிறார்கள். (இராஜதந்திர விலக்கு அவர்களுக்கில்லை.) இதைவிடத் தற்போது உளவாளிகளில் அநேகமானோர் பெண்களாவர். வில்லியம்பேக்குக் கண்மையில் உள்ள காம்ப்பியேறியில் அமைந்திருக்கும் ''தபாம்'' எனப்படும் பயிற்சித்தளத்தில் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டோருள் 40 விழுக்காட்டினர் பெண்கள். கணவன் – மனைவிக் குழுக்களும் களத்திலுள்ளனர். பெண்கள் செயலாற்றல் மிக்க முகவர்களாயுள்ளனர் என்பதை ஆண்களே ஏற்றுக் கொள்கின்றனர். ஆனால் இன்னும் லங்லியில் ஒரு கண்ணாடித் தடையுண்டு. வேற்று நாடுகளிலுள்ள நிலையங்களில் பெண்கள் நிலைய முகவர்களாகப் பணிபுரிகின்றார்கள் என்றாலும் ஒரே ஒரு பெண்மட்டுமே நிறுவனத்தின் இரகசியப் பிரிவில் பகுதித் தலைவியாக உள்ளார். அதாவது செயற்பாட்டு இயக்குனரவை உறுப்பினராகப் பதவி வகிக்கிறார்.

லங்லியின் தாழ்வாரங்களில் கலவரத் தன்மையோடு கூடிய உரையாடல்கள் இடம்பெறுகின்றன. நிதிவலுமிக்க வரவு—செலவுத்திட்டங்களுக்குப் பழக்கப்பட்ட மேலதிகாரத்திலுள்ளவர்கள் வசதி குறைந்த எதிர்காலம் பற்றிக் கவலையோடு நோக்குவார்கள். இயக்குனர் வூல்சி ஒரு முன்னைநாள் பென்ரகன் அதிகாரி. காட்டர், ரீகன், புஷ் நிர்வாகங்களின் போது ஆயுதக் கட்டுப்பாட்டுப் பேச்சுவார்த்தையாளர் அதிகார பீடத்தில் அநுபவம் மிக்கவர். வாஷிங்டனின் உள்ளரங்கத்தவர். எனவே ஆழமான வெட்

டுக்களை எதிர்த்து நிற்பார் என்று எதிர்பார்க்கலாம். உதவி ஜனாதிபதி அல்கோறேக்கு இவர் ஓர் உற்ற நண்பரென்பதும், பாதுகாப்பு அமைச்சர் யெஸ் அஸ்பினின் மென்பந்து விளையாட்டுச் சகபாடியென்பதும் அவரது நிலைப்பாட்டைப் பாதிக்கப்போவதில்லை. இந்த நிறுவனம் புத்திக் கூர்மையோடு செலவைக் குறைத்துச் செயற்படவேண்டும் என்பதும் வூல்சிக்குத் தெரியும்.

எங்கே வெட்டுவது? உளவுச் செயற்கைக் கோள்கள் மிகமிகச் செலவு மிக்கவையாகும். ஒரு கோள் 100 கோடி டாலராகும். சென்ட் புலனாய்வுக்குழுவின் புதிய தலைவர் அரிசோனாவைச் சேர்ந்த டெனிஸ் டீ கொன்சினி பனிப்போர்க் காலத்தில் ஏவப்பட்டதும் ''இப்போது எந்தப் பலனுமளிக்காததுமான'' செயற்கைக் கோள் ஒன்றைத் தரமுயர்த்துவதற்கு 10 கோடி டாலர் செலவு செய்யப்பட்டுள்ளதாகக் குறைப்படுகிறார் அவர். காங்கிரஸ் விமர்சகர்கள் உலகைச் சுற்றிவரும் ஒரு டசின் உளவுச் செயற்கைக் கோள்களைத் திரும்பப் பெறலாம் என நம்புகின்றனர். புலனாய்வுத்துறை வரவு செலவில் 15 விழுக்காடு மட்டுமே இவற்றுக்காகச் செலவிடப்படுவதாக சீஐஏயினர் கணக்கிடுகின்றனர். மிகுதியனைத்தும் பென்ரகன் உளவுச் சேவைக்குப் போகிறதாம். அங்கேயும் சிக்கனப்படுத்தமுடியும். இந்த நிறுவனத்தின் வீங்கிவிட்ட அதிகாரபீடம் பத்தியம் காக்கவேண்டியாகலாம். அரச சேவையில் ''சுப்பர் கிறேட்'' எனப்படும் அதியுயர் மட்ட வேதனம் பெறும் அதிகாரிகளுள் மிக உயர்ந்த அளவு விழுக்காட்டினர் இங்கேதான் பணிபுரிகின்றார்கள். சென்ட் அதிகாரி ஒருவர் கூறியுள்ளபடி ஒரு விமானந்தாங்கிக் கப்பலில் 80 கடற்படைத் தளபதிகள் பணிபுரிவது போலாகும். ''ஜோன் ஜென்றி என்ற முன்னாள் சீஐஏ பகுப்பாய்வாளர் எழுதியுள்ள புதிய நூலொன்றல் நிறுவன அறிக்கைகள் வெள்ளை மாளிகைக்குச் செல்வதற்கு முன்னர் ஏழு மதிப்புரைகளைக் கடக்கவேண்டியிருக்கும் என்றும், எத்தனையோ பத்திரிகாசிரியர்களைத் தடை செய்தபின்னரும் அது ஒன்றில் தாமதிக்கும் அல்லது குறிப்பிடத்தக்க அளவு தரம் குறைந்ததாக'' இருக்கும் என்றும் கூறுகிறார்.

சீஐஏ அளவுக்கதிகமாகச் செயற்பட வேண்டும் என்று கேட்கப்படும் சங்கடமும் உண்டு. கூடுதலாகப் பொருவாதார உளவில் நிறுவனம் ஈடுபடவேண்டிவரலாம் என்று வூல்சி கோடிகாட்டியுள்ளார். சமீபத்தில் சீஐஏ செயற்பாட்டாளர்கள் தனியார் உளவு நிறுவனங்களிடம் உபயோகமாக நிறுவன உளவாளிகள் மேலும் என்ன செய்யமுடியும் என்று கேட்டபொழுது அதிகம் செய்வதற்கில்லையென்றே விடை கிடைத்ததாம். அநேகமான அமெரிக்க புலனாய்வுத் தொழில் தேவைகளை வெளியிலிருந்தே பெற்றுக்கொள்ளலாம் என்பது புளோறிடாவிலுள்ள பாதுகாப்பு ஆலோசகர் ஹென்றி கிளமன்ற்சின் கருத்தாகும். ''உங்களோடு போட்டி போடும் புலனாய்வாளர் தன்னிடம் இரகசியமாக வைத்திருக்கும் 10 விழுக்காடு தகவல்களை ஊகித்துக் கண்டுகொள்ள முடியும். இதற்காக ஓர் உளவாளி அவருடைய அறையை உடைத்து உட்புக வேண்டியதில்லை''.

பனிப்போரின் உச்சக்கட்டத்தில் சில அழுக்குத் தந்திரங்களிலீடுபட்டு சீஐஏ தொல்லைக்குள்ளாகியதுமுண்டு. அதிகமான ஹியூமின்ற் வழங்கப்பட்டால் நிறுவனம் மீண்டும் நிழல் படிந்த நீதித்தளத்திற்குள் மீளவும் போய்விடும் என்பது சிலரது கவலை. வெளிநாட்டு அதிகாரிகளுக்கு லஞ்சமளிப்பதும் வெளிநாட்டுக் சட்டங்களுக்கு முரணாக நடப்பதும் மறைமுகமாக ஹியூமின்ற் எனப்படும். ''இது ஒரு கடினமான பணி. எந்த வேளையிலும் நமது முகத்திலேயே திருப்பி அடிக்கும். திருப்பிச் செய்தலையும் பயங்கரவாதத்தையும் பற்றி அறிவதானால் தொல்லைகளைச் சந்தித்தேயாகவேண்டும். காங்கிரசும் நிர்வாகப்பிரிவும் இதனை ஏற்றுக்கெண்டுள்ளன. ஆனால் இந்தச் செயற்பாட்டில் ஒன்றாவது வெடித்துச் சிதறுமானால் அதையும் அவர்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்'' முன்னாள் இயக்குனர் கேற்சின் கருத்து இது.

அவர்கள் அநேகமாக அதைச் செய்யமாட்டார்கள். சீஐஏயின் புதிய தலைமையகத் திட்டத்துக்கு முன்பதால் போர்லின் சுவரின் ஒரு பாகம் அமைந்திருக்கிறது. இது சென்ற ஜனவரியில் லங்கிக்குக் கொண்டுவரப்பட்டது. அசிங்கமான சீமேந்துக் கற்களும் அதை மூடியுள்ள மக்கியும் கிழக்குக்கும் மேற்குக்குமாக ஜேர்மனியில் போலவே அமைந்துள்ளது. லங்கியிலுள்ள பிரதான வாகனத் தரிப்பிலிருந்து வரும் சீஐஏ ஊழியர்கள் இந்த துலக்கமில்லாத அடையாளச் சின்னத்தைக் கடந்தே வரவேண்டும். கடந்த கால இராட்சதப் பிராணியின் தொல்லையையும், இன்னும் வர இருக்கும் பாம்புகளையும் வேண்டுமென்றே ஞாபகமூட்டும் அடையாளம் இதுவாகும்.

★ ★

வான் வெளியில் உயர் தொழில் நுட்ப உளவாளிகள்

சாதாரணமாக நினைப்பது போல அனுமதித்த தகட்டில் உள்ள எண்களை அதனால் வாசிக்க முடியாது. பூமியிலிருந்து 500 மைல்கள் உயரத்தில் புவியை வலம் வரும் உயர் இரகசிய அதி நுட்ப செயற்கைக்கோள் அந்தத் தகட்டைக் கண்டு கொள்ளும். சீஐஏ யின் தலைமைச் செயலகத்திலே 10 லட்சம் டாலர்கள் பெறுமதியான இருவகையான இசைப்பகுதிகளை சம நேரத்தில் ஒலிபரப்பி ஒத்துப் பார்க்கும் ''ஸ்ரீரியோ கொம்பரேற்றர்'' எனப்படும் கருவி லேசர் லைற் பொயின்ரரைப் பாவித்து மைக்றோனின் [ஒரு மீற்றரின் 10,00,000 (பத்து லட்சம் இன் ஒரு பங்கே மைக்றோன் எனப்படும்] பத்தில் ஒரு பங்கு அளவுள்ள அதன் படங்களில் காணப்படும் பொருட்களை அது அளக்கும். அந்த இராட்சத இயந்திரம் எவ்வளவு திட்டமானதென்பதற்கு அதன் அமைப்பே சான்று பகரும். அது 7 தொன் எடையுள்ள கருங்கற்பலகையில் நிறுத்தப்பட்டுள்ளது. அதன் நுண்ணிய செயற்பாடுகள் கட்டியெழும் அதிர்வுகளிலிருந்து பாதுகாக்கப்படுவதற்காகவே தனிமைப்படுத்தப் பட்டுள்ளது. மூன்று கன அளவை அளவுகளால், பணயக் கைதிகளைக் காப்பாற்றுவதற்குத் தகர்க்கப்பட வேண்டிய சுவரின் அகலத்தை இந்த கொம்பரேற்றர் டெல்ற்றா படையினர்க்குத் தெரிவிக்கும்.

சீஐஏ தன் பங்குக்குப் போதிய தவறுகளை இழைத்துள்ளது. ஆனால் உலகிலேயே மிகச் சிறந்த உளவுத் தொழில் நுட்பம் அதனிடமேயுள்ளது. காற்பந்து விளையாட்டு மைதான மொன்றின் அளவினதான அறை ஒன்றில் சீஐஏயின் 'முறை' எனப்படும் கணனித் தகட்டுத் தோட்ட முள்ளது. இதை விட ''ஏழு குள்ளர்கள்'' என அழைக்கப்படும் ஏழு இராட்சதக் கிடங்குகளும் உள்ளன. அதில் ஒவ்வொன்றிலும் மனித இயந்திரம் பதிவு செய்யும் 6000 காந்தக் கணனி நாடாக்கள் வைக்கப்பட்டுள்ளன. செயற்பாட்டிற்குப் போகுமுன்னர் ஓர் உளவாளி தனது பாதையை பிரகாசம் பொருந்திய செய்தி பெற்றுப் பரப்பும் ஒளிப்பதிவுக் கருவி (வீடியோ மொனிற்றர்) யின் முன் அமர்ந்து ஒத்திகை பார்த்துக் கொள்ளலாம். தகட்டுத் தோட்டத்தின் (டிஸ்க் பாம்) கிறே 4-எம்பீ அதியுயர் கணனியில் பல்லாயிரக் கணக்கான செய்மதிப்படங்கள் உள்ளூட்டப் படுகின்றன, அவை மீளவும் உயிரூட்டப் பட்ட சித்திரங்களாகத் துலங்கும். சீஐஏ யின் உளவுப் பணியாளர்கள் பெருவீதிகளில் தாம் செய்ய வேண்டிய சந்துபொந்துகளையும் கடைத்தெருக்களையும் அதில் கண்டு கொள்ளலாம்.

இந்த நிறுவனம் உயர்-தொழில் நுட்ப கனரக இயந்திரத்தின் மூலம் புதிய உபயோகங்களைக் காணுகின்றது. முந்தைய காலங்களில் செஞ்சேனையைக் கண்காணித்து வந்த உளவு விமானங்கள் இப்போது போதைப் பொருள் வர்த்தகர்கள் மீதும் பயங்கரவாதிகள் மீதும் தனது கண்ணோட்டத்தைச் செலுத்துகிறது. முன்னர், முன்னாள் சோவியத் யூனியனின் புரூட்டோனிய உற்பத்தியை அளப்பதற்காக காற்றில் கிறிப்ரன்-85ஐ வாயுக்களால் மோப்பம் பிடித்த அதிநவீன தணிக்கைச் செய்மதிகள் தற்பொழுது வடகொரியா போன்ற நாடுகளின் அணு ஆயுதத் திட்டங்களைக் கண்டு வருகின்றன. ''ஒரு சரியான இடத்திற்கு உளவாளி சென்று வருவது கடினம். அவரது கண்ணோட்டக் களம் குறுகலானது. பொருட்களைப் பார்ப்பதுதான் உங்கள் முழுப்பணியென்றால் அதைத் தொழில் நுட்பத்தின் மூலம் செய்து முடிப்பதே வழியாகும்'' என்கிறார். பென்ரகனின் புகைப்படச் செய்மதியின் கையாள்கையை ஒன்றிணைப்பவரான வில்லியம் எவ். லக்மன் (ஜூனியர்).

புயற்சேதங்கள்

பொருளாதாரத்தையும் சூழலையும் சேர்த்துக் கொள்ளும் விதத்தில் ஸ்பூக்ஸ் அறையைச் செய்மதிகளால் விரிவாக்க முடியும். சென்ற ஆண்டிலே புளோறிடாவைத் தாக்கிய அன்ட்றூ என்ற புயற்காற்றும், ஹவாயைத் தாக்கிய இனிக்கி என்ற புயற்காற்றும் விளைவித்த சேதங்களைக் கணிப்பீடு செய்யச் சென்ற உதவிப் பணியாளர்களுக்கு செய்மதி படங்களைக் கொடுத்தே உதவியது. வாஷிங்டனுக்குச் சலுகைகள் வழங்குவதற்குப் பதிலாக தத்தமது நாடுகளிலேயேயுள்ள எண்ணெய், வாயு வளங்களைக் கண்டறிய வேற்று நாடுகள், சீஐஏ யிடமிருந்து செய்மதி உளவுத் தகவல்களைப் பெற்றுக் கொண்டுள்ளன. வானில் உளவாளிகளுக்குப் பன்றிப் பீப்பாக்கள் உபயோகிக்கப் படுவதை காங்கிரஸ் மோப்பம் பிடித்துள்ளது. சமன் மீனை சட்டவிரோதமாகப் பிடிக்கும் யப்பானிய மீன்பிடி வள்ளங்களைப் படம் பிடிப்பதற்கு உபயோகிக்கப் பட்ட செய்மதிப்பட நீர்களை தனது சொந்த மாநிலத்திற்கு வெளியே வைத்துக் கொள்ளுமாறு அலஸ்காவின் பிறாங்க மூர்க் கொவுஸ்சி தான் சென்ட்டின் புலனாய்வுக் குழுவின் துணைத்தலைவராக இருந்தபோது சீஐஏ யை வற்புறுத்திக் கேட்டுள்ளார். ஆனால் உயர்-தொழில் நுட்பம் சகல பணிகளையும் செய்ய முடியாது. 500 மைல்கள் உயரத்திலே இருந்து யப்பானியக் கப்பல்கள் அலஸ்காக் கப்பல்கள் போலவே இருந்தன.

சென்ற ஜனவரியில் பயங்கரம் உள்நாட்டிலேயே தாக்கியது. சீஐஏ யிலேயே. ஒரு துப்பாக்கியாளன் இரண்டு நிறுவன அதிகாரிகளைக் கொன்று மூவரைக் காயப்படுத்தினான். முக்கிய சந்தேக நபர் ஈரானுக்குத் தப்பிச் சென்றிருக்கலாம்.

நியூஸ்வீக், ஏப்ரல் 12, 1993

கிளின்ரனைப் பற்றிய உலகக் கணிப்பீடு

கொவன்ற் பூங்காவுக் கண்மை மையில் மிக்க கவனத்திற்குரிய அலு வலகங்களைக் கொண்ட அடுக்கு மாடிக் கட்டடத்தில் ஒருசேர அமைந்திருக்கும் தந்தி ரோபாயக் கல்வி நெறிக்கான கழகம் ஒரு முக் கியமான இடமாகும். மிக அமை திக்குப் பெயர்போன அந்த இடம் சென்ற வெள்ளிக்கிழமை காலை யில் அதன் நற்பெயருக்கும், புக ழுக்கும் புறம்பாக அமைந்திருந்தது. நாளாந்தம் இடம்பெறும் தினசரிச் செய்தி விளக்கத்தின்போது இத்தக் கழகத்தின் செய்தி இயக்குனர் கேணல் அன்ட்றூ டங்கன் சிந்த னைத் திறன்கொண்ட 20 தந்தி ரோபாயக் கல்வி நெறிக்கழக ஆய் வாளர்களிடம் '' உரிய நேரத்தில் '' பொஸ்னிய நெருக்கடி தொடர்பா கப் பில் கிளின்ரன் ஒரு முடிவெடுக்க உறுதியளித்திருப்பதாகத் தெரிவித் தார். உக்ரெயின் நாட்டைச் சேர்ந்த 27 வயதான ஓர் ஆராய்ச் சியாளர் பொதுவான நகைச்சுவை வெடித்துச் சிதறும் விதத்தில் இந்தத் தவணையில் அது நடக் குமோ என்பது சந்தேகம் என்றார். தனது 4 மாதப் பதவிக் காலத்தில் கிளின்ரன் ஏற்படுத்திய எண்ணப் பதிப்பைப் பற்றிய சுருக்கத்தை வெளியிட்ட இந்தக் கழகத்தின் பிரதிப் பணிப்பாளர் கேணல் வைக் கேல் டேவார் '' நகைச்சுவை உரை கள் பரவத் தொடங்குகின்றன'' என்றார்.

கிளின்ரனை ஒரு கம்பீரமான மனிதராக எடைபோடும் ஐரோப் பியர்கள் உலகைப்பற்றிய மிக மட் டமான அறிவுபடைத்த தென் மாநில அரசியல் வாதியாகவே அவரைக் கணக்கிட்டு வைத்துள்ள னர். கிளின்ரன் ஜனாதிபதியான போது புத்திக் கூர்மையுள்ள தன் மருமகனைப் பற்றி அவரது மாமன் மனநிறைவோடும், மகிழ்ச்சியோடும் கூறிய வார்த்தைகள் நினைவு கூரத் தக்கவை. '' அநுபவம் குறைந்தவர், சீக்கிரம் கற்றுக் கொள்ளுவார் '' என்பதே அதுவா கும். அந்த நம்பிக்கை மிக்க கருத்து இப்போது மாறிவருகிறது. ஆக்ரோஷத்தோடும், அலங்காரமா கத் தொடங்கி அலங்கோலமாகப் போய்விட்ட அமெரிக்காவின் பொஸ்னியக் கொள்கையாலும், மனச் சஞ்சலத்துக்கு உரிய விதத்தி லான பின்வாங்கல்களினாலும் ஏற் பட்ட திகைப்புமிக்க அச்சம் காரண மாக மேற்கத்தைய பாசிசவா

அவரது தெளிவில்லாத குறிக்கோள் களால் மக்கள் தடுமாற்றம் அடைகிறார்கள். தடுமாறும் தலைமைத்துவம் கண்டும் அவ் வாறே, அப்படியிருந்தும் இன்னமும் அவரை விரும்புகிறார்கள்.

தத் தேக்கத்திற்கு ஐரோப்பியர்கள் கிளின்ரனையே குறைகாண்கிறார் கள். இதே ஐரோப்பியக் கருத்து வகுப்பாளர்கள் முன்னர் தத்தமது தலைவர்கள் மீதும் குற்றம் கண்டி ருக்கிறார்கள். கெடுதலையே எதிர் பார்ப்பதுபோல அமெரிக்காவுக்கும், ஐரோப்பிய நண்பர்களுக்கும் இடை யில் புதிய முரண்பாடுகளைப் பற் றியும் அவர்கள் பேசத் தொடங்கி னார்கள். அத்திலாந்திக் உடன் படிக்கை பற்றி விளக்கும் செய்தித் தலைப்பு எழுதுவோர் '' பிளவு '', '' இழுபறி '', '' குழப்பம் '' போன்ற சொற்களை இது தொடர் பாகப் பிரயோகிக்கத் தொடங்கி னர்.

பொஸ்னியாவில் தமது இலக் குப் பற்றி அமெரிக்காவும், ஐரோப் பிய நாடுகளும் அடிப்படைக்கருத்து முரண்பாடு கொண்டிருக்கவில்லை. இரத்தக்களரி நிறுத்தப்படவேண் டும் என்பதே இருசாராரினதும் விருப்பமுமாகும். பொஸ்னிய சேர்பி யர்களாற் பறித்தெடுக்கப்பட்ட நிலங்களில் சில பகுதிகள் அந்த நாட்டின் முஸ்லிம்களுக்கும், குறோ ஷியர்களுக்கும் திருப்பிக் கையளிக் கப்படவேண்டும் என்றே இரண்டு பக்கமும் விரும்புகின்றன. மேற் குலகின் செயற்றிறமையின்மை முரண்பாடுகள் கொசோவா அல் லது மசிடோனியா போன்ற இடங் களுக்கு விரிவடையவும் வேறிடங்க ளிலுள்ள அமைதியற்ற சிறுபான் மையினர் தம்மிலும் வலிமை குறைந்தவரைத் தாக்கவும் உதவக் கூடும் என்று அமெரிக்காவும் அதன் ஐரோப்பிய நேச நாடுகளும் கவலை யடைந்துள்ளன.

அதேவேளை வழிமுறைகள் பற்றி இருபக்கத்தினரும் கருத்தொ ருமித்திருக்கவில்லை. பொஸ்னிய முஸ்லிம்களை ஆயுதபாணிகளாக்கு வதற்கும், சேர்பிய இலக்குகளுக் கெதிரான விமானத் தாக்குதலுக்கு மான கிளின்ரனின் திட்டத்திலுள்ள குறிப்பிட்ட பிரிவுகளைத் தொலை நோக்கமற்ற, சந்தர்ப்பத்துக்கொவ் வாதவை என்றே ஐரோப்பிய அர சுகள் கருதுகின்றன.

பொஸ்னிய முஸ்லிம்களுக்கு ஆயுதம் வழங்குவது தீர்வாகாது '' என்கிறார் பாரிசிலமைந்துள்ள அனைத்துலக தொடர்புகளுக்கான பிரெஞ்சுக் கழகத்தின் பகுப்பாய் வாளரான தியேறி டீமொன்ற்பிறி யல். '' எரிகின்ற நெருப்பில் எண்ணெய் ஊற்றுவது போன்ற தோர் தவறாகும் '' என்கிறார் அவர். சேர்பிய இலக்குகளில் குண்டு வீச்சு நடத்துவது என்ற அமெரிக் கத் தீர்மானத்தில் ஐரோப்பியர் கள் ஏற்றுக்கொள்ளக் கடினமான வாசகங்கள் உண்டு. அது அமெரிக்க விமானிகளுக்குப் பாதுகாப்பையும், ஐ. நா. கொடியின் கீழ் அமைதி காக்கும் மேற்கு ஐரோப்பிய நாடு களின் படைகளுக்கு பேராபத்தை யும் விளைவிக்கக் கூடியதாகும்.

"கார்ட்டர் மாதிரியான புரட்டு"

ஐரோப்பியர் ஏற்றுக் கொள்ளப் பின் நிற்கிறார்கள் என்றறிந்த தும் வெள்ளை மாளிகை தன் திட்டத்தைப் பின் தள்ளியதும் திட்டம் ஒழுங்கற்றது என்ற குற்றச் சாட்டோடு உறுதியில்லாதது என்ற விமர்சனமும் சேர்ந்து கொண்டது. ''கிளின்டன் ஆர்க்கன்சாஸ் மாநிலத்தில் இருந்து வருவதால் கார்ட்டர் மாதிரியான புரட்டின் வடிவமாக அவர் தோற்றுகிறார்'' என்று கூறுகிறார். ''கிளின்டனின் அமெரிக்கா'' என்ற நூலைச் சமீபத்தில் எழுதி வெளியிட்ட நிக்கோலே போண்ஹெயிம், ''ஆனால் 1945 இன் பின்னான வெற்றிகர அமெரிக்காவின் பிரதி நிதியாகத் திகழ்ந்தார் றீகன். GI இன் சுவிங்கமான பரந்து அகன்ற விண்வெளியைக் கொண்ட அமெரிக்கா அவருடையதாக இருந்தது'' பால்க்கன் விவகாரத்தில் தமது சொந்த முயற்சியையே பீடித்த ஹம்லெட் போன்ற தீர்மானமின்மைக்குக் கிளின்டன் பலியாகி விட்டார் என்று அஞ்சுகின்றார்கள் ஐரோப்பியர்கள்.

இந்தக் கவலைகளுக் கப்பால் பொஸ்னியப் போர் பற்றிய அணுகுமுறையில் வேறுபாடுகள் இருக்கின்றன. இந்த முரண்பாடு பற்றி வாஷிங்டன் ஒரு தார்மிக கறுப்பு-வெள்ளை நோக்கை அரவணைத்துக் கொண்டுள்ளது. முஸ்லிம்களுக்கும், குறோசியர்களுக்கும் எதிராக இரத்தவெறி பிடித்தலையும் சேர்பியர்கள் பேரழிவை நிகழ்த்திக் கொண்டிருக்கிறார்கள். சேர்பிய அழிப்பு நடவடிக்கைகளின் தோற்றங்கள் தொலைக்காட்சித் திரைகளில் தோன்றத் தொடங்கவே அந்த நோக்கு ஐரோப்பாவிலும் இடம் பிடிக்க ஆரம்பித்து விட்டது. ''சரியாகச் சொல்வதானால் ஒரு முக்கிய குற்றவாளிக்கூட்சி ஏற்றுக் கொள்ள முடியாத கற்பனை வித்தையைப் பிரயோகிக்க முயல்கிறது'' என்றார். ஐரோப்பிய ஆணைக்குழுவின் தலைவரான ஜக்குவஸ் டெலோர்ஸ் பல ஐரோப்பியக் கொள்கை வகுப்பாளர்கள் இன்றுள்ள சூழ் நிலையின் பால் அணுகுமுறையொன்றையே மேற்கொள்ளுகிறார்கள். தார்மிக விடயங்களைத் தவிர எதிர்ப்புக்களும் வரலாற்றுச் சிக்கல்களும் மேக மூட்டம் போல மறைத்து விடுகின்றன. ஒரு நிதர்சன மட்டத்தில் குறுகிய காலக் குண்டு வீச்சு நடவடிக்கை பிரதான குறிக்கோளை எப்படிச் சென்றடைய முடியும் என்பதைப் புரிந்து கொள்வது ஐரோப்பியர்களுக்குச் சிரமமாகவே இருக்கும். சேர்பியர்கள், முஸ்லிம்கள், குறோஷியர்களனைவரும் ஒன்றிணைந்து வாழக் கற்றுக்கொள்ள வைப்பதே அந்தப் பிரதான குறிக்கோளாகும்.



பொஸ்னியப் பேரழிவு விடயத்தில் யதார்த்தத்தை விட்டுப் பரந்த அளவிலேயே அமெரிக்க நிர்வாகம் எதிர்த்தாக்கம் செய்கிறது என ஐரோப்பியர் ஐயுறவு கொள்கிறார்கள். அது ஐரோப்பிய விடயத்தில் கிளின்டனின் நிலைப்பாட்டிற்கு வெற்றியளிக்கவில்லை. பொஸ்னியாவுக்கான தனது பார்வையை எடுத்துக்கூற அவர் அனுப்பிவைத்த வெளியுறவு அமைச்சர் வோறன் கிறிஸ்தோபர் இரண்டு வாரங்களுக்கு முன்னர் ஐரோப்பிய தலைநகரங்களுக்கு விஜயம் செய்தபோது அவரது பணியை நிறைவேற்றத் தயார் நிலையில் இருக்கவில்லை. ''உண்மையைச் சொல்வதானால் தனது பணியை முன்வைக்கும் விடயத்தில் அவர் நல்ல பணியாற்றவில்லை'' என்கிறார் ஒரு பிரித்தானிய மேலாளர். ''சில வேளைகளில் அவர் எதைச் செய்ய வந்தார் என்பதை எம்மால் புரிந்து கொள்ளக்கூட முடியவில்லை.

கிளின்டன் பதவியிலமர்ந்த 100 நாட்கள் பற்றி அநேகமாக அமெரிக்க பத்திரிகைகளே விடுத்த அறிக்கைகளால் கிளின்டனின் இலக்கற்ற நிலைப்பாட்டைப் பற்றி ஐரோப்பாவில் பரவிக் கொண்டிருந்த அபிப்பிராயங்கள் கிறிஸ்தோபரின் வரவோடு உறுதிப்படலாயிற்று. பொருளாதார ஊக்குவிப்புத் திட்டம் நடைமுறைப் படுத்தப்படலாம். ஒரு நேரம் எதற்கும் அடங்காதவராகவும் மறுவேளை கோழைத்தனமானவராகவும் மாறுவது, படையத்தில் கேளிக்கைகளை நிறுத்துவதற்கான அணுகுமுறை அரச வழக்குத் தொடுநர் பதவிக்குப் பல முறை தவறான நியமனங்களைச் செய்தமை பொதுவாக நிர்வாக நியமனங்களைச் செய்வதில் காலதாமதம் ஏற்படுத்திய முடங்கல் நிலை எல்லாமே கிளின்டனைத் தாழ்த்தி விட்டன. ''பின்னடைவு திடீர் விசையெழுச்சி பின்னர் பல வளைவுகள், இங்கே நாம் காணத் தவறுவது நல்ல தலைமைத்துவம். அமெரிக்கத் தலைமையை அடியொற்றி ஐரோப்பியர்கள் நடப்பார்களா என்று என்னைக் கேட்காதீர்கள். அதற்கான ஒரு முயற்சிகூட இல்லை'' என்கிறார் சீயற் என்ற ஜெர்மனிய வார இதழின் ஆசிரியரும் நியூஸ்வீக் இன்டர்நாஸனலின் பந்தி எழுத் தாளருமான தியோ சோமர்.

''கிளின்டனுக்கும் ஐரோப்பாவுக்குமிடையில் சில எதிர்த்தாக்குதல்கள் இருந்தன என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது'' என்கிறார் ஹேக்கில் உள்ள கிளிஞ்

செண்டேல் யோசனை மையத்தின் இயக்குநரான ஜோரிஸ் வூர் ஹோவ் ''இனப் படுகொலையைத் தடுத்து நிறுத்த முடியாத எமது இயலாமை குறித்து எல்லோருமே தடுமாறுகிறார்கள்'' என்று கூறுகிறார். இரண்டாவது உலகப் போர் முடிவுற்றது 50 ஆண்டுகளின் பின்னரும் அதிகாரத்தைச் செயற்படுத்த அமெரிக்க ஆதரவு இல்லாமல் ஐரோப்பியருக்கு முடியவில்லை என்பது தெளிவாகியுள்ளது. ''அமெரிக்கா இல்லாமலே எம்மால் கருமமாற்ற முடியும் என்று எண்ணவே ஆசையாக இருக்கிறது'' என்று கூறுகிறார் மியூனிச்சுக்கு வெளியேயுள்ள அனைத்துலக விவகார ஆய்வுக் கழகத்தின் உயர் இணையாளரான ஜெபாட் ஷ்வெயினர். ''அதே வேளை அது எமக்கு முடியாத காரியம் என்று எமக்குத் தெரியும்'' என்கிறார்.

ஐரோப்பாவுக்குள்ள குறைபாடுகளையும் ஒரு பலமுள்ள நண்பனின் தொடர்ச்சியான தேவையையும் பற்றி நன்கு அறிந்துள்ள ஐரோப்பியர்களுட் பலர் சந்தேகத்தின் பிரதிபலனை கிளின்ரன் நிர்வாகத்திற்கு வழங்கத் தயாராக வுள்ளனர். ''பொஸ்னிய இடைக்கதை அவரது வெளியுறவுக் கொள்கை அணியினரிடையே ஐக்கியமின்மை இருப்பதை தெளிவு படுத்துகிறது. இது முதலாவது சுற்றுத்தான் என்பதால் தமது செயற்பாட்டை ஒன்றிணைப் பார்கள் என நம்பலாம்'' என்று கூறுகிறார். ஒக்ஸ்போட் பல்கலைக் கழகப் பேராசிரியரான றொபட் ஓ நீல் தனது தேர்தல் பிரச்சார காலத்தில் அவர் ஏற்படுத்திய கெனடியத் தோற்றத்தைக் கிளின்ரன் நிலை நிறுத்தி வருகின்றார். பொது மக்கள் அந்தத் தோற்றத்தைக் காணும் விதத்திலேயே கிளின்ரன் நடந்து கொள்கிறார். இவருடைய ஜனாதிபதித் தன்மை ருஷ்யாவில் அமெரிக்கப் பொருட்களுக்கு ஒரு கவர்ச்சியை ஏற்படுத்துகிறது. ''நான் கிளின்ரனை மதிக்கிறேன். அவரிடம் இளைஞர் சக்தியும் திறமையும் இருக்கிறது. ஆர்வம் வெகுவாகக் காணப்படுகிறது'' என்கிறார் ஓய்வு பற்ற மொஸ்கோ வாசியான வலென்ரீனா மலெஷ்கினா. சென்ற மார்ச் திங்களில் கிளின்ரனும் ஜேர்மன் பிரதமர் ஹெல்மட் கோலும் சந்தித்து உரையாடிய சிநேகபூர்வம் ஜேர்மன் மக்களை வசியப்படுத்தியுள்ளது. பிரான்சைப் பொறுத்த மட்டில் அமெரிக்க ஜனாதிபதி கிளின்ரன் வணக்கத்துக்குரிய ஒருவரென கருதுகின்ற தன்மைக்கு நெருங்கிய விதத்தில் மதிக்கப்படுகிறார்—சில இடங்களில் உடலை அசைத்துக் கூத்தாடி மகிழவும், சக்சபோன் எனப்படும் கருவியை மீட்டி ரசிக்கவும், அர்க்கன்சாவிற்குப் பிரயாணம் செய்யவும் தூண்டும் அளவிற்கு கிளின்ரன் பால் பிரான்சில் உள்ள சிலர் கவர்ந்திழுக்கப் பட்டிருக்கிறார்கள்.

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியிடம் அவர்கள் இவ்வளவு ஈர்க்கப்பட்டிருப்பதற்கு அனைத்து மதிப்புக்குறைந்து விட்ட தமது ஐரோப்பியத் தலைவர்களைப் பற்றி அந்த மக்களிடம் சலிப்புத் தோன்றியிருப்பதே காரணமாகும். சமீபத்தில் நடந்த கருத்துக் கணிப்பொன்றில் கிளின்ரனின் வயதினையொத்த ஜனாதிபதி ஒருவர் பிரான்சிலும் தெரிவு செய்யப்பட வேண்டும் என்றும் 60 வயதும், அதற்கு மேற்பட்டவர்களையுமுள்ள அரசியல் வாதிகள் புறந்தள்ளப்பட்டு புதிய தலைமுறையினர் இடம் பெறவேண்டும் என்றும் 84 விழுக்காடு மக்கள் தெரிவித்துள்ளனர். இந்த முடிவு 40 வயதைத் தாண்டிய ஒருசில பிரான்சின் அரசியல் வாதிகளுக்கு உற்சாக மளிப்பதாயுள்ளது. பாதுகாப்பு அமைச்சர் பிறென்சே லெற்றாட் முன்னை நாள் சுகாதார அமைச்சர் பேனாட் கூக்னர், முன்னாள் பிரதமர் லோறன்ற் வேபியஸ் ஆகியோர் இவர்களுள் அடங்குவர். கிளின்ரனின் தலைமுறையினர் என இவர்கள் அழைக்கப் படுகிறார்கள். ''அமெரிக்கர்களிடம் சக்சகோன் இசைக் கருவி மீட்போருள்ளனர். எம்மிடம் ஜெக்சஜெனேரியன் எனப்படும் 59—70 வயதினர் உள்ளனர்'' என்று தனது ஆதங்கத்தை வெளிப் படுத்தியுள்ளனர் நிக்கொலன் டொமனாச் என்ற ''வியாதுன் மலை'' வார இதழின் விமர்சகர்.

ஆனால் இளைஞர்கள் அனுபவமற்றவர்களாகவும் உணர்ச்சி வசப் படுபவர்களுமாக இருப்பர். கிளின்ரனின் வெள்ளை மாளிகை கதவுகளுக்கண்மையில் தெரிகின்ற குறைகளும் வெடிப்புகளும் இதனால் ஏற்பட்டவையேயன்றி பொஸ்னியக் கொள்கையால் மட்டும் உருவானதல்ல. உள்நாட்டில் நல்ல தோர் பொருளாதாரக் கட்டுமானத்தைத் திட்டமிட்டு எழுப்புவதற்கும் வெளி நாட்டில் திட்டவட்டமான வர்த்தகக் கொள்கையைக் கடைப் பிடிப்பதற்கும் கிளின்ரனுக்குள்ள இயலாமை பற்றி பரந்த அளவில் கண்டனங்கள் எழுகின்றன ஓசைநயத்தோடு பேசப்பட்ட அளவிற்கு செயல்முறை தொடரப்பட வில்லை. ''நல்ல திடகாத்திர நிலைக்கு அமெரிக்க பொருளாதாரத்தைக் கொண்டு வருவதென்பது அனைத் துலகத்துக்குமே ஒரு முன்னுரிமைத் தேவையாகும். அது நடக்காது போனால் கிழக்காசிய பொருளாதாரம் வீழ்ச்சியுறும். மேற்கு ஐரோப்பாவின் பொருளாதார மீட்சிக்குப் பல காலம் பிடிக்கும்'' என்கிறார் ஓ நீல். தோட்டச் செய்கை மானியங்கள் தொடர்பான பரந்த அத்திலாந்திக் சர்ச்சைகள் வர்த்தக விமானப் போக்குவரத்து தந்தித் தொடர்பு சாதனங்கள் பொது உரிமையாக்கப்படல் போன்ற அமெரிக்க சுயகாப்புத் திட்டங்கள் என்பன போன்ற இரட்டைச் சைகைகள் ஐரோப்பியருக்குக் கவலையை எற்படுத்தி வருகிறது. தனிப்பட்ட அளவில் வட அமெரிக்க சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை உறுதிப்படுத்தும் விடயத்தில் அமெரிக்கா கடைப்பிடிக்கும் ஆயத்தம் ஆயத்தமில்லாத என்ற விதத்திலான இருவித அணுகுமுறைகள் பற்றி மெக்சிக்கோவின் நிர்வாகிகள் குறைபட்டுக் கொள்ளுகின்றனர். இது அமெரிக்காவுடனான தனது சொந்த சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் சம்பந்தமாக சிலி நாட்டையும் ஆர்வம் கொள்ள வைத்துள்ளது. இதனால் வெள்ளை மாளிகையின் முன்னுரிமைப் பட்டியலில் தமது நாடுகள் பின் தள்ளப்படக்கூடுமோ என்ற நோக்கால் ஏனைய தென் அமெரிக்க நாடுகள் செய்வதறியாது

திகைத்து நிற்கின்றன. பதவியேற்று நாலு மாதங்கள் கடந்த பின்னரும் மேற்கு அர்த்தகோள நாடுகளின் விவகாரங்களைக் கவனிக்க இன்னமும் ஓர் உதவிச் செயலாளரை நியமிக்கவில்லை கிளின்ரன். அதுவுமின்றி தென் அமெரிக்கத் தலைவர் எவரையும் கிளின்ரன் சந்திக்கவுமில்லை. (சென்ற வாரம் வெள்ளைமாளிகை ஆர்ஜன்ரீனிய ஜனாதிபதிக்கு அழைப்பு ஒன்றை விடுத்தது) ''நாங்கள் அநாதரவாக விடப்பட்டிருக்கிறோம்'' என்கிறார் கொலம்பிய வங்கியாளர் ஒருவர்.

பசுபிக் பாதுகாப்பு

ஆசிய நாடுகளும் புதிய அமெரிக்க ஜனாதிபதியிடமிருந்து தெளிவான சமிக்ஞைகளை எதிர் நோக்கிக் கொண்டேயிருக்கின்றன. ஜப்பானிய பிரதமர் கிச்சி மிசாவாவைச் சந்தித்த ஜனாதிபதி ஜப்பானியர்கள் தெரிவித்த டோகியோவும் இணைந்த 'அனைத்துலகக் கூட்டுத்தொழில்'' பற்றி மிக மகிழ்ச்சியோடு குறிப்பிட்ட அடுத்த மூச்சிலேயே அமெரிக்காவுடனான வர்த்தக அதிகப் படியை ஜப்பான் குறைக்கத் தவறினால் ஏற்படக்கூடிய மகிழ்ச்சிக்குப் புறம்பான விளைவுகளைப் பற்றி அசாதாரணத் தொனியில் குறிப்பிட்டிருக்கிறார், ருஷ்யாவுடனான உறவுகள் கடினமாக்கப்பட்டு சீனாவின் எழுச்சிக்கும் முகம் கொடுக்க வேண்டிய ஜப்பானின் ''அமெரிக்காவுடனான பாதுகாப்பு உறவுகள் கிளின்ரன் நிர்வாகத்தால் கீழ்த் தரப்படுவதாக'' எனசிங்கப்பூர் பிரதமர் கோ சொக் ரோங் கவலை தெரிவித்துள்ளார். சீனாவுடனான வர்த்தக உறவில் கிளின்ரன் மனித உரிமைகள் மற்றும் கட்டுப்பாடுகளை நிபந்தனையாக விதித்துக் கொண்டே இருப்பாரானால் அந்தச் செயல் குறுகிய விடயங்களிலான அவரது அக்கறை பசுபிக் (ஆசியா) பாதுகாப்பிலும் பார்க்க அதிகமானது என ஆசியத் தலைவர்களை நம்பவைக்கும் தந்திரோபாயக்கல்வி நெறிக்கான அனைத்துலகக் கலகத்தில் – சென்றவாரம் சிரிப்பொலி அடங்கியபின்னர் கேணல் டேவார் ஒரு சமாதான முறையிலான கருத்தை முன்வைத்தார். பொஸ்னியாவில் பரந்த அத்லாந்திக் ஐக்கியம் தோற்று விட்டதை நினைத்து வருந்தாமல் இந்த நிகழ்வை, ஐம்பது ஆண்டு காலப் பனிப்போர்த் தேக்கத்திலிருந்து விலகியுள்ள உலக அமைப்பை எவ்வாறு கையாள்வதற்கான நல்ல பாடமாகக் கொள்ள வேண்டும் என்றார் அவர். குத்துக்கரணமடிப்பதாக வெள்ளை மாளிகையைக் குறை கூறாமல் தனது நண்பர்கள் எதிர்க்கும் ஒரு விடயத்தை நடைமுறைப் படுத்தாமல் விட்டமைக்காக அமெரிக்காவை ஐரோப்பா வாழ்த்தலாம். ''நகைப்புக் கிடமான ஒரு வீர பரிசோதனைப் பொறிக்குள் விழாமல் தப்பியதற்காக ஜனாதிபதியின் முதுகிலே தட்டிக் கொடுக்கலாம். அது ஒரு நல்ல அளவீடாகவும் இருக்கும்'' என்கிறார் கேணல் டேவார். உண்மையில் அமெரிக்காவுக்குத் தன் நண்பர்களுடனான உறவில் எந்தத் தாக்கமும் ஏற்படவில்லை. பனிப் போருக்குப் பிந்திய கால வாழ்க்கையிலிருந்து கிளின்ரன் ஒரு விடயத்தைக் கருத்துட் கொள்ளலாம். ஒரு கூட்டமைப்பில் உள்ள பலங்குன்றிய பங்காளிகள் பலம் பொருந்திய அமெரிக்கர்களிடம் கோபிக்கலாம்; திகில் அடையலாம். அது இயற்கையானதேயாகும். அப்படியிருந்தும் விடயமெதுவும் தப்பாக நடந்து விடவில்லை.

லண்டனில் டானியல் பண்டே சென்னுடன் பஸ்கல் பிறிவட்.

பாரிசில் தியோடோர் ஸ்ரன்ச்சர். பொன்னில் தெரேசா வல்டிஹோப்

ஹொங்கொங்கில் ஸ்டீபன் ஸ்ட்றஸ்ஸர். அசன்சனில் புறூக் லாமர்.

★

சீனா

வீட்டில் கடின வரவேற்பு

அமெரிக்காவுக்குள் ஒழுங்கு முறையல்லாது நுழைவதற்கு எத்தனித்த மூன்று கப்பலில் சென்ற சீன மக்களை மெக்சிக்கோ பொறுப்பு ஏற்றதையிட்டு வாசிங்டனுக்கும், மெக்சிக்கோவுக்கும் உள்ள ராஜதந்திரிக உறவுகளில் கஸ்டங்கள் ஏற்படுத்தக் கூடியதாக அமைகிறது.

இந்தக் கப்பலில் வந்த 658 மக்களும் மூன்று மாதமாகக் கடலில் பட்ட பயங்கர அனுபவத்தை விட இனிமேல் தான் அவர்களுக்கு மிகக் கடுமையான பரீட்சை ஆரம்பமாகிறது. அமெரிக்க குடியேற்று இலாகாவின் பரிசீலனைக்குப் பின் யாராவது அரசியல் அகதிகளாக நிரூபித்தாலே தவிர ஏனையோர் திருப்பி அனுப்பப்படுவர் என மெக்சிக்கோ அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பர். சென்ற கிழமை தான் ரியுவானவில் விமான மூலம் அவர்களுடைய சொந்த வீடுகளுக்கு 100 சீன மக்கள் திரும்பினார்கள்.

முன்பு திருப்பி அனுப்பப்பட்ட 527 மக்களில் 100 பேர் மட்டில் அவர்களுடைய சொந்த மாகாணமாகிய புயுசியனில் குற்றம் அடித்தும், தடுப்புக்காவலில் வைத்தும் உள்ளார்கள். குற்றக் காசுகட்ட முடியாதவர்களை பலவந்தப் படுத்தி வேலை வாங்கினார்கள் என சீனாவுக்குச் சென்று வந்த அமெரிக்க வட்டாரங்கள் கூறின. அகதிகள் தங்கள் நிலை பற்றி அறிந்து உள்ளார்கள்.

நியூயோர்க்கில் சீனாவின் உப இராணுவத் தளபதி கூறுகையில்: அகதிகள் எப்படி சீனாவுக்கு வெளியிலும், உள்ளேயும் நடக்க வேண்டியது பற்றித் தகுந்த கல்வி கொடுப்போம் என்று கூறினார்.

ஹிலாரி: அமெரிக்காவின் "மென்மைதங்கிய பெண்"

பாரிசில் "தலை யிடும் பெண்" என்று அவர் அழைக்கப் படுகி றார். ஜேர்மனியில் "மேன்மை தங்கிய பெண்" எனப்படுகி றார். பிரித்தானியப் புதினத் தாள்கள் அவரை "இணை ஜனாதிபதி" என ஏளனமாக அழைக் கின்றன. முன்னாள் பிரதமர் மாகறட் தச்ச ரின் கெட்ட பெயரெடுத் தும் மௌனத்தைக் கடைப்பிடித்த கணவர் டெனிஸ் தச்சரைப் போல் ஹிலாரி இருந் தாலென்ன என்று ஆச்சரியத்தோடு கூறு கிறாகள் விமர்சகர் கள். ருஷ்ய மக்கள் அவரை நெய்சா கொர் பச்சேவோடு ஒப்பிடுகி றார்கள். கெட்ட பெய ரெடுத்த மாவோவின் மனைவியோடு ஹிலாரி யை இணையாக்கு கிறார்கள் சீன மக்கள், சுறுசுறுப்பும், தகைமை யும் வாய்ந்த தமது இளவரசியாகப் போகும் பெண்ணைப்பற்றிய விபரச் சேகரிப்பி லீடுபடு கிறார்கள் ஜப்பானியர். லத்தீன் அமெரிக்க நாடு களில் நிலவும் உறவினர் -சலுகை ஆட்சியோடு கோடிட்டுப் பார்க்கிறார் கள் தென்னமெரிக்க விமர்சகர்கள்.

சுருங்கச் சொல்வதா னால் ஹிலாரி றொத் தாம் கிளின்ரனைப் பற்றி எவ்வித கணிப்பீடு செய்வதுஎன்று அமெரிக் கர்களைப் போலவே உலகம் முழுவதுமே ஒரு முடிவுக்கு வர முடியாமலுள்ளது. அவ ரைப் பற்றி விமர்சகர் கள் படம்பிடித்துக் காட் டுவது போல் ஹிலாரி ஒரு தலையீடு செய்யும் கண்டைக்காரப் பெண் ணா? அல்லது அவரது ஆதரவாளர்கள் வருணிப் பது போல சமகாலப் பெண்களின் நிகரற்ற உதாரணமா? அதனோடு ஜனநாயக அமைப்பில் மக்களால் தெரிவு செய் யப்படாத ஒருவர் எத்த னை அதிகாரங்களைக் கொண்டிருக்க முடியும்? கணவனும் மனைவியும் நாட்டை நிர்வகிப்பதை நாங்கள் பார்த்ததில்லை என்று கூறுகிறார்மொஸ் கோ செய்தி இதழின் அரசியல் விமர்சகரான லுட்மீலா சரஸ்தீனா. "பலர் இதனால் செய் வதறியாதுள்ளனர்" எலீனோர் ரூஸ்வெட் டைத் தன் இலட்சியப் பெண்ணாக நினைப்ப தாகக் கூறுகிறார். ஹிலாரி சமீப கால உலக வரலாறு மிகக் குறைந்த அளவு மரியாதைக்குரிய வர்களையே மூன்று தாரணமாகத் தந்துள் ளது. இமெல்டா எவிற் றர் ரூமேனிய சர்வாதி காரியின் மனைவி எலீ னர் கவுசெஸ்கு, கலைக் கப்பட்ட கிழக்கு ஜேர் மனி அரசுத் தலைவர் எரிக் ஹொனேக்கரின் மனைவியும் அவரது அரசியல் போலிக் கல்வி யமைச்சராக இருந்தவரு மான மாகொட் என் போரைக் குறிப் பிடலாம்.

ஹிலாரியைப் பற்றிய கண்டனங்கள் அவரது தனிப்பட்ட குணாதிசயங்களைப் பற்றியதல்ல. அவ ருடைய புத்திக்கூர்மையை யும், திறமையையும் விமர்சகர்களே போற்று கிறார்கள். சுகாதாரக் கண்காணிப்பு மறுசீர மைப்புத் தொடர்பான நிர்வாகத்தின் துரித சேவையமைப்பின் தலை மையை ஏற்றதன் மூலம் அரசியல் மறையாளின் எல்லைகளைத் தாண்டி விட்ட ஹிலாரியின் நிலை கூடக் கவனிக் கப்படாத அளவிற்கு அவரது அறிவாற்றல் போற்றப்படுகிறது. "திருமணத்தின் மூலம் மட்டும் தான் அரசியல் சட்டபூர்வத்தன்மையை ஒருவர் பெறவேண்டு மென்பதில்லை" என்று சொல்கிறார்ஹிலாரியின் விசிறியும் ஜேர்மன் ஆட் சிமன்ற உறுப்பினரு மான மாலீஸ்டொபேத தியன். "வாழ்க்கை யிலே முன்னேற வேண் டும் என்ற ஆசையுள்ள பெண்கள் கணவன்மார் மூலமான குறுக்குவழி யைக் கடைப்பிடிக் காமல் விடுவது புத்தி சாலித்தனமாகும்" என் பதும் அவரது கருத்தாகும்.

குறிப்பாக ஐரோப் பாவைப் பொறுத்த மட்டில் பிரிட்டன், பிரான்ஸ், நோர்வே, போலந்து போன்ற நாடுகளில் பெண் பிரத மர்கள் இருந்திருக்கிறார் கள். அயர்லாந்தில் ஒரு பெண் ஜனாதிபதி யாகவுள்ளார். ஜேர்மனி யில் வருகிற தேர்தலில் பிரதமர் பதவிக்கு ஒரு பெண் போட்டியிடக் கூடும். அரசியலில் பெண்கள் இருப்பது ஐரோப்பிய வாக்காள ருக்குச் சுகமான ஒன் றாக இருக்கிறது. பிரான்ஸ் நாட்டின் முதற் பெண்மணியான டானியல் மித்தறோன். தான் தலைமை தாங்கும் புகழ் வாய்ந்த மனிதாபிமான அமைப்போடு முரண்படு கின்ற வேளையில் தன் கணவரின் வெளிநாட்டுக் கொள்கையைக் கண்டிக்கிறார். அவரைத் தவிர ஏனைய ஐரோப் பிய தலைவர்களின் மனைவியர் பாதுகாப் பான மக்களின் தொண் டுப்பணிகளில் ஈடுபடு வார்கள். அவர்கள் தாமுண்டு. தமது வேலை யுண்டு என்று மறை வாகப்பின்னணியிலேயே இருந்து விடுவார் கள். "எம்மைப் சேர்த்து விடவும் ஹிலாரி இன்னோர் அமெரிக்க மனித உழைப்பை மட்டுப் படுத்தும் சாதனம்" என்று பெருமுச்சோடு கருத்துத் தெரிவித்தார். பிரான்சின் பிரதமர் எழுவாடோ பலடூர் பத்திரிகைக்கு அளித்த செவ்வியில் "அவரு டைய முக்கியத்துவம் விசித்திரமானது" என்றும் அவர் கூறியுள் ளார்.

அவருடைய நேரடிக் கொள்கை வகுக்கும் அதிகாரம் உள்நாட்டுவிவ காரங்களோடு மட்டுப் படுவதால் அமெரிக்கா வுக்கு வெளியேயுள்ள மக்களை ஹிலாரி பாதி க்கப் போவதில்லை. ஆனால் அவரது கணவ ரின் கொள்கைகள் உலகைப் பாதிக்கும். முன்னுதாரணம் வகுக்கும் அவரது தகைமையை உலகத் தலைவர்கள் அனுமதித்தாலும் அனும திக்காது விட்டாலும் ஜனாதிபதியிடம் தமது செல்வாக்கைப் பிரயோ கிப்பதற்கு மிகச் சிறந்த வழி அவரது அதியுயர்ந்த ஆலோசகரான ஹிலாரி யிடம் தம்மை அடையா ளம் காட்டிக் கொள் வது தான் என்று சீக்கி ரம் உணரத் தலைப் படுவார்கள்.

நியூஸ் வீக்,
மே 24, 1993

அய்டிட்டின் முதுகை முறிக்க எத்தனிப்பு

முகமது :பாறா அய்டிட் அவசர அவசரமாக வெளியேறிவிட்டான். மொகடிசுவிலுள்ள அவனது சிதைக்கப்பட்ட வீடும், வளவும், சௌகரியமான படுக்கையறையும் அங்கு காணப்படும் வெற்று ஆயுதக் கிடங்குகளும், தீறந்த லாச்சிகளும், சிறறிக்கிடந்த அழகு சாதனங்களும் அவன் தப்பியோடியதற்குச் சான்றாய் விளங்கின. ''ஐவன்கூ'', குல்ரான் அமெரிக்க யாப்பு எனும் நூல்களும், தலையிடிக் குளிகைகள், ''கோல்கேட்'' பற்பசை, மேஸ் எனும்வாசனைத்திரவிய டப்பாக்கள், ஊதாநிறச் செவிப்பன்னி ஒருசோடி இவைபோன்ற பலதும் பத்தும் அங்கு மீங்கும் சிதறிக் கிடந்தன. மேல் வீட்டிலுள்ள அவனது பிரத்தியேக அறையிற் காணப்படும் ஊதா நிறக் கம்பளங்கள் மேலும் சிவப்பு நிற மெத்தை இருக்கை மேலும் கட்டிட இடிபாடுகளும், கண்ணாடித் துண்டுகளும் சிதறிக்கிடந்தன. அய்டிட்டின் படையினர் படுத்திருந்த இடங்களில், அவர்களது பூட்சுகளும்,வெற்றுரவைப் பெட்டிகளும் பரவிக் கிடந்தன. அந்திய நாட்டு நிருபர்களுக்கு ஐக்கிய நாட்டுச் சபைமேல் எந்தக் கூரைமாடியிலிருந்து தமது கண்டனங்களைச் சொரிந்தனரோ அம்மாடி அமெரிக்க ஏவுகணைக்கு இலக்காகிப் பாரிய துவாரத்துடன் காட்சியளித்தது. அமெரிக்க உலங்குவானூர்திகள் அயிடிட்டின் மேற்குறித்த கண்டனங்களுக்கு இவ்வித ஏவுகணைகளாற் பதிலளித்திருந்தன.

முன்னைநாள் சோமாலியத் தளபதியின் யுத்த அகக் கட்டமைப்பை அழிக்கும் பொருட்டுத் தொடர்ச்சியாக நான்கு நாட்கள் நடாத்தப்பட்ட தாக்குதல்களில் அவனது மாளிகை மீது மேற்கொண்ட இடைவிடாத 9 மணித்தியாலத் தாக்குதலே உச்சக்கட்டமானது எனக் கூறலாம். ஐக்கியநாட்டு அமைதி காக்கும் 18,000 படையினருக்குக் குறிப்பாகப் பங்கு பற்றிய பாகிஸ்தானியத் துருப்புகளுக்கு இந்நிகழ்ச்சி மிகவும் உவப்பானதாய் அமைந்தது. இதன் பின் சென்ற வாரம் ஜனாதிபதி கிளின்ரன் அய்டிட்டின் இராணுவ முதுகெலும்பு முறிக்கப்பட்டு விட்டதாகப் பிரகடனம் செய்தார்.



அய்டிட் ஐ. நா. சபையைச் சுடுகிறான்

சோமாலியாவிலுள்ள 15 யுத்தக் குழுக்களில் அய்டிட்டே ஏனையோரிலும் பார்க்க ஐக்கியநரட்டுச் சபையால் அறிவிக்கப்பட்ட,

1. எல்லா யுத்தக் குழுக்களினதும் ஆயுதங்களைக் களைதல்,

2. பக்கச்சார்பற்ற காவற்படையை அமைத்தல்,

3. அரசியற் தீர்வொன்றைக் காணுதல் ஆகியன அடங்கிய திட்டத்தை எதிர்த்தான். அவன் ஆயுதங்களைக் குவித்தது மல்லாமல் தனது ஒலிபரப்புச் சேவை மூலம் ஐ. நா. சபைக்கு எதிரான பிரச்சாரத்தை மேற்கொண்டான். இறுதியாக அவனது ஆதரவாளர்கள் ஒழித்திருந்து தாக்கி 24 ஐ. நா.படையைச் சார்ந்த பாகிஸ்தானியரைக் கொன்றதுமன்றிப் பலரைக் காயப்படுத்தியுமுள்ளார்கள். அப்பொழுதுதான் ஐக்கிய அமெரிக்கா அயிடிட்டிற்கும் அவனது போட்டியாளருக்கும் ஒருபாடம் படிப்பிப்பதற்காக பெரும் படையைக் கொணர்ந்தது. ஆனால் அய்டிட் இத் தாக்குதலிலிருந்து தப்பிவிட்டானா? அல்லது பேரழிவை உண்டாக்கக் கூடிய ஆயுதங்களையுடைய அமெரிக்க அதிரடிப்படை ஆழமான புதை சேற்றிற் காலை வைத்து விட்டதா?

அயிடிட்டிற்குப் பெரிய அடி என்பதில் சந்தேகமில்லை. அமெரிக்க கோபிறா உலங்கு வானூர்திகளும், பிரங்கிகள் பொருத்தப்பட்ட விமானங்களும் அவனது முக்கிய ஆயுதக் கிடங்குகளையும், ஒலிபரப்பு நிலையத்தையும் அழித்தொழித்தன. மொறோக்கோ, பிரான்சு, இத்தாலி, பாகிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்து தருவிக்கப்பட்ட நன்கு ஒன்றிணைக்கப்பட்ட படைகள் அவனது நூற்றுக்கணக்கான ஆட்களைத் தேடிப்பிடித்து அல்லது கொன்று அழித்துள்ளன. ஏ. கே 47, எறிகணைகள், யுத்த தளபாடங்கள் ஆகியவற்றைக் கைப்பற்றிக் கொண்டார்கள். இந்த யுத்தத்தில் உபயோகிக்கப்பட்ட சக்தி அச்சந்தரக் கூடியது. யுத்தத்தின் உச்சக் கட்டத்தில் கோவிற்சர் எறிகணைகளும், பிரங்கிகளும் அயிடிட்டின் வீடு வளவையும், சுற்றுப்புறங்களையுந் தாக்கின. அரை இருட்டில் டாங்கிகளும், கவசவாகனங்களும் முழங்கின. அவனது வளவிற்கு நேர் மேலே கறுத்த நிறக் கோபிறா உலங்கு வானூர்திகள் பறந்து பிரங்கித் தாக்குதல்களை நடாத்தின. பின்பு எறிகணைகள் காதடைக்கும் பேரிரைச்சலுடன் இலக்குகளைத் தாக்கின. ஐ. நா. படைத்தளபதி ஜோ காதன் கோவ் ''ஒத்துழைப்பதுதான் ஒரே வழி. துவக்குக் குழாய்கள் மூலம் செயற்படுவதல்ல'' என உறுதியாக அறிவித்துள்ளார்.



குமுறும் சோமாலிய மக்கள் வெள்ளம்

இப்பாடத்தைச் சோமாலியர் மனதில் வைத்திருப்பாரோ அல்லவோ தெரியவில்லை. இத் தாக்குதல் பரீட்சார்த்தத் தாக்குதல் அல்ல எனக் கோவ அறிவித்துள்ளார். மொகடிசுவிலுள்ள வைத்தியசாலைகள் நிரம்பி வழிகின்றன. மோதல்களுக் கிடையில் அகப்பட்ட பலர் – பெண்களும், குழந்தைகளும் இறந்திருக்கிறார்கள், காயமுற்றுள்ளார்கள். டிக்:பர் வைத்தியசாலையைப் பல பாரிய எறிகணைகள் பாதித்துள்ளன. இங்கு அய்டிட்டின் எஞ்சிய படையினர் தஞ்சம் புகுந்ததால் இத் தாக்குதல்கள் நிகழ்ந்தன. பல நோயாளிகள் காயமுற்றனர். பலர் இறந்தனர். ஒரு சத்திர சிகிச்சைக் கூடமும் சிதைக்கப்பட்டது. சோமாலியர் சிலரும், சோமாலியாவில் உதவிப்பணியில் ஈடுபட்டுள்ள வெளி நாட்டுத் தொழிலாளிகள் சிலரும், ஐ. நா. வையும், அமெரிக்காவையும் அளவுக்கு மிஞ்சிக் கொலை புரிந்ததாகக் குற்றம் சாட்டினர். அய்டிட்டைப் பலாத்காரமாக அகற்றுதல் அதிகார வெற்றிடத்தை ஏற்படுத்தி அவனது போட்டியாளராகிய கபிர் கிடீருக்கு தென் மொகடிசுவில் கூடிய முக்கியத்துவத்தைக் கொடுக்கக்கூடும் என எச்சரித்தனர். கொன்சேன் சோமாலியா எனும் அயர்லாந்தைச் சேர்ந்த துயர் துடைக்கும் நிறுவனத்தின் இயக்குனராகிய மக்டொனா:பர் அமெரிக்கா வினதும், ஐ. நா. வினதும் இச் செயல் அரசியல் முன்னேற்றத்தை ஏற்படுத்தலாம் அல்லது இங்கு வேலைசெய்யும் எமக்கும் ஆபத்தைத் தரலாம் என விமர்சித்தார்.

அயிடிட்டைப் பின் பற்றுவோர் கோழைகளல்ல; யுத்தம் புரியும் போது சிறு குழுக்களாகப் பிரிந்து இயந்திரத் துப்பாக்கிகளாலும், எறிகணைகளாலும் கொடூரமாக எதிர்ப்பவர்கள், கான்குறோக்க இராணுவத்தினரும், ஒரு பாகிஸ்தானியரும் கொல்லப்பட்டனர். யுத்தம் முடிந்து பல மணித்தியாலங்களுக்குப் பின்பும் யாருமற்ற சந்தை ஒன்றில் ஒழித்திருந்து சுடும் சத்தம் இடைக்கிடை கேட்டுக்கொண்டிருந்தது. ஒரு முற்றத்தில் கம்பளியாற் சுற்றப்பட்ட பிரேதம் காணப்பட்டபோது ஆத்திரமிகுதியால் நடுங்கிக்கொண்டு ஓர் இளைஞன் நீண்ட கத்தியுடன் நீ ஓர் அமெரிக்கனா? எல்லா அமெரிக்கரையும் நாம் கொல்லுவோம் எனக் கத்திக்கொண்டு அதை அணுகினான். ஐ. நா. படைகள் மிகக்குறைவாகக் காணப்படும் தலைநகருக்கு வடக்கேயுள்ள நாட்டுப்புறத்தில் அயிடிட்டின் ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ளன. இவற்றுள் பீரங்கிகளும். டாங்கிகளும் அடங்கும். சிறிதளவிலான யுத்தத்திற்கு வேண்டிய ஆயுதங்களை அயிடிட் களவாக உட் கொண்டு வரலாம் என்பதை ஓர் ஐ. நா. உயர் அதிகாரி ஒப்புக் கொண்டார். மேல் நாட்டவருக்கு எதிராக அவன் மரபு முறை நகர்க் கெரிலா யுத்த தந்திரங்களைக் கையாண்டு அவர்கள்மேல் ஒளித்திருந்து தாக்கலாம்; அல்லது அவர்களைக் கடத்திச் செல்லலாம். அவ்வாறு நிகழுங்கால் இங்கு வாழ்க்கை நரகமாகிவிடும் என்பது ஒரு நிவாரண ஊழியரின் கூற்று.

அய்டிட்டிற்கு இடைவிடாது தொந்தரவு கொடுக்க ஐ. நா உறுதி பூண்டுள்ளது. மேலும் மேலும் இராணுவத்தினர் வந்து சேர்ந்ததும் அவனது எஞ்சியுள்ள ஆயுத ஒளிவிடங்களைக் கண்டு பிடிப்பதில் அவர்கள் ஈடுபடுவார்கள் என அதிகாரிகள் கூறுகின்றனர். ஆனால் அய்டிட் இலகுவில் அகப்பட மாட்டான். அவனது மாளிகையிலிருந்து அவன் விரட்டியடிக்கப் பட்ட பின்பே கோவ் அவனைக் கைப்பற்ற ஆணை பிறப்பித்தார், தனது சொந்த நாட்டில் அவனுக்குப் பல ஒளிவிடங்களுண்டு என வெள்ளை மாளிகை உதவியாளர் ஒருவர் கூறுகிறார். அய்டிட்டை ஒடவைத்தது ஒரு மனோரீதியானயுத்த நோக்கத்தைப் பூர்த்தி செய்துள்ளது.

அய்டிட்டின் இடத்தை இப்போ வேறொருவர் நிரப்புவாரா என வினாவப்படுகின்றது. சோமாலியாவின் பிற தலைவர்கள் பலரிடம் ஒழிவு மறைவாகப் பெருவாரி ஆயுதக் கிடங்குகள் உள்ளன. இத்தாக்குதல்கள் அவ்வாயுதங்களைக் கையளிக்குமாறு தூண்டலாம். ஆனால் நம்பிக்கையுடன் அவ்வாறு கூறமுடியாது என்கிறார் கொன்சேன் சோமாலியாவைச் சேர்ந்த மக்டொனாட்டி. வெள்ளை மாளிகையினரது அபிப்பிராயமும் அதுவே. சோமாலியாவில் ஐ. நா. யுத்தம் முடிந்து விட்டன என எதிர்பார்க்க முடியாது எனக் கூறுகிறார் கிளின் உயர் அதிகாரியொருவர். அடுத்த யுத்தத்தை யார் தொடக்குவார் என்பதே உண்மையான கேள்வி?

வோஷிங்டனிலிருந்து
ஜோசுகமர், டக்ளஸ் வோலர்

அமெரிக்கா எதிர்காலத்தில் மேற்கொள்ளவிருக்கும் உலகளாவிய காவற்றொழில் -சோமாலியாவின் வெள்ளைமாளிகையின் செயற்பாட்டுக்கு ஒரு முன்னோடி நடவடிக்கையா?

கவிஞர் பாராட்டிப்பாடக் கூடிய புகழ் மிக்க வெற்றி என நாம் அதைக் கூறிவிட முடியாது. சோமாலிய யுத்தத் தளபதியும் அவனது ஆதரவாளர்களும் பன்முறை எச்சரிக்கப்பட்டு விட்டார்கள். அதிகாலை 1.30 மணிக்கு முகமது (எவ்) பாடு அயிடிட்டின் வதிவிடமும் அதன் சூழலும் சக்தி மிக்க ஒளிவீச்சிற்கு உட்படுத்தப்பட்டது. ஆனால் 4 மணித்தியாலங்களுக்குப் பின்பே ஐக்கிய நாட்டுப் படைகள் அவ்விடத்திற்கு வந்தன. வந்ததும் அயிடிட்டும் அவனது ஆட்களும் பெண்களையும் குழந்தைகளையும் மனிதக் கேடயமாகப் பாவித்து சரமாரியான துவக்கு வெடியுடன் ஐ.நா.ப்படைகளை வரவேற்றனர். அங்கு வந்த ஐக்கிய நாட்டுப்படை மொறோக்கோத் துருப்புக்களையும் இத்தாலியரையும், பிரெஞ்சியரையும் பாகிஸ்தானியரையும் உள்ளடக்கியிருந்தது. வந்த ஜீப் வண்டி ஒன்றிற்குள் ஒரு கிறெனேட் வீசப்பட்டது. அதனால் 4 ஐ.நா படையின்ர் இறந்தனர். அமெரிக்க இராணுவத்தினரை யுத்தத்திற்கு பங்கு பற்றாமற் பாதுகாப்பான இடங்களில் வைத்திருக்க உத்தேசிக்கப்பட்டது. எனினும் 130 இராணுவ வீரர்கள் நியூயோர்க்கிலிருந்து அவசரமாகக் கொண்டு வரப்பட்டார்கள். விடியு முன் ஐ.நா படையின் சேதங்களில் 46 பேர் காயமானோர் அடங்கினர். இதில் பறக்கும் கண்ணாடித் துண்டால் வெட்டப்பட்ட அமெரிக்கச் சிப்பாய் ஒருவரும் அடங்குவர். ஆனால் அயிடிட்டோ தப்பிவிட்டார்.

சென்ற வாரம் நிகழ்த்திய ஒளிப்பதிவு செய்யப்பட்ட பத்திரிகையாளர் மகா நாட்டில் இதை "ஒரு வெற்றி" எனக்கூறி மகிழ்ச்சிப் புன்னகை புரிந்தார் ஜனாதிபதி கிளின்ரன். ஐக்கிய நாட்டுப் பிரத்தியேக பிரதிநிதியாகக் கடமையாற்றும் ஒய்வுபெற்ற கடற்படைத் தலைவர் ஜோனாதன் சோவ் இதை ஒரு பூரண வெற்றி என விபரித்தார். அமெரிக்க பீரங்கிக் கப்பலொன்று அயிடிட்டின் மறைத்து வைத்த ஆயுதக் களஞ்சியங்களை அழித்தது உண்மைதான். எனினும் தோல்வியைத் தந்தது எது எனத் தெளிவாகத் தெரிவிக்கப்படவில்லை. அயிடிட் தப்பியோடியபின் 24 பாகிஸ்தானிய அமைதி காக்கும் வீரரை ஒளித்திருந்து கொல்லுவதற்குக் காரணமாயிருந்த அவனைக் கைதுசெய்யுமாறு ஐ.நா பாதுகாப்புச் சபை கட்டளை பிறப்பித்துள்ளதாக கோவ் அறிவித்தார். என்றாலும் வெள்ளை மாளிகையின் உயர் அதிகாரிகள் அயிடிட் தப்பியோடியதையிட்டு விசனப்படவில்லை. அய்டிட்டைக் கைதுசெய்தாலும் ஐ.நா. அவனை என்ன செய்ய முடியும்? சோமாலியாவில் அவனை விசாரிக்க முடியாது. ஏனெனில் அங்கு நீதித்துறை இயங்கவேயில்லை. மேலும் பாகிஸ்தானோ அல்லது அமெரிக்காவோ அவனைத் தங்களது நீதிமன்றங்களில் விளங்க விரும்பவில்லை.

உலக சமாதானத்தைக் காப்பாற்றும் இச்சகாப்தத்தின் நிகழ்வுகள் இவ்வாறிருக்கின்றன. இரத்தக்கறை நிறைந்த ஆனால் நிரந்தரமற்ற படாடோபமான இலக்குகளாகவும், பயனற்ற பேச்சுக்களாகவும் அமெரிக்காவிற்குக் கேந்திர முக்கியத்துவம் இல்லாத நாடுகளில் மேற்கொள்ளப்படும் வீண் முயற்சிகளுமாக இவை விளங்குகின்றன.

இவ்வாறான ஓர் எதிர்காலத்தை நோக்கி கிளின்ரன் நிர்வாகம் சென்று கொண்டிருக்கிறது. அமெரிக்க தலையீட்டின் திட்டவட்டமான நோக்கமென்ன? திருப்பின் அதைத் தெளிவாக எடுத்துரைக்க கிளின்ரன் தவறி விட்டார். அவருக்குக் கீழ் இயங்கும் மிகப் பெரிய இராஜதந்திர இராணுவ உத்தியோகவர்க்கம் பல தேசத்தவரைக் கொண்ட சமாதானப் படையினால் ஏற்படக் கூடிய நடைமுறைப் பிரச்சினைகளைப் பற்றி இப்போதுதான் சிந்திக்கத் தொடங்கியுள்ளது. அந்நிய தளபதிகளின் கட்டளைகளுக்குச் சற்றும் கீழ்ப்படிய அமெரிக்க இராணுவ வீரர் விரும்பாமை பல பிரச்சினைகளுள் தலையானது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. தீர்க்கமான முடிவு அரசியற் சாணக்கியம் கோழைத்தனம் ஆகிய இலக்குகளுக்கிடையில் அமெரிக்க ஜனாதிபதி தளம்பிக் கொண்டிருக்கிறார். உறுதியற்ற கொள்கை என்ற குற்றச்சாட்டை மறுதலிக்கும் நோக்கத்துடன் இராஜாங்க காரியதரிசி வாறன் கிறிஸ்தோபர் ஐக்கிய நாட்டுக் கொள்கையில் நிர்வாகத்துறை இதுவரையும் அடைந்துள்ள பெறுபேறுகளின் பட்டியலொன்றை எல்லா அமெரிக்கஸ்தானிகர்களுக்கும் இம்மாதத் தொடக்கத்தில் அனுப்பியுள்ளார். இப்பட்டியலில் உள்ள ருஷ்ய ஜனாதிபதி பொறிஸ் யெல்சினிற்குக் கிளின்ரன் நல்கிய ஆதரவு போன்ற சில விடயங்கள் உண்மை என்ற போதிலும் பனிப்போருக்குப் பின் ஏற்பட்டுள்ள சிக்கலான சோமாலியா போன்ற பிரச்சினைகள் அடங்கவில்லை.

கிளின்ரனின் ஆசை அமெரிக்கா உலகத் தலைமைப் பதவியை வகிக்க வேண்டும் என்பதே. அதே நேரத்தில் அவ்விருப்பத்தை நிலைநாட்ட அமெரிக்க சக்தியை உபயோகிக அவர் தயங்குகிறார். உள்நாட்டுப் பிரச்சினைகள் பலவற்றிற்கு ஈடுகொடுக்க வேண்டிய இந்நேரத்தில் அவர் இப்பிரச்சினையைத் தீர்ப்பது கடினமானது. இதற்கு நிர்வாகத்தினர் சென்ற மாதக் கடைசியில் தந்த விளக்கம் யாதெனில், ஐக்கிய அமெரிக்கா பனிப்போரில் வகித்து வந்த தலைமைத்துவத்தைத் தொடர்ந்தும் வகிக்க முடியாது என்பதாகும்.

PUBLIC LIBRARY
JAFFNA
NALLUR BRANCH LIBRARY

இது உண்மைதான். ஆயினும் இது வெளிவந்த உடனேயே வெள்ளை மாளிகையும் இராசாங்க இலாகாவும் மேற்காணும் அறிக்கையை மறுதலித்தன. அறிக்கையை வெளியிட்ட அதிகாரி இதைக் கண்டு ஆச்சரியப்பட்டார். காரணம் அவர் அவ்வறிக்கையை கிளின்ரனின் ஜனாதிபதித் தேர்தற் பேச்சுக்களின் பின்னணியிலேயே தயாரித்தார்.

அமெரிக்க பொருளாதாரத்தையே முக்கியவிடயமாகக்கொண்ட அபேட்சகர் கிளின்ரனின் பேச்சுக்களின் அர்த்தமற்ற அம்சங்களை அப்பொழுது யாரும் பொருட்படுத்தவில்லை, பனிப்போருக்குப் பின் அமெரிக்க நிலைப்பாடுகளை வெளிநாடுகளிற் பரவச்செய்ய கிளின்ரனின் மேலும் பல முயற்சிகளை மேற்கொள்வது இப்பொழுது அவசியமாயுள்ளது. ஈடுபட்டுள்ள பல்வேறு யுத்த முயற்சிகளுக்கும் ஒரு பொதுக்காரணி கண்டுபிடிக்க வேண்டியிருக்கிறது. கொம்யூனிசப் பயமுறுத்தல் இருக்கும்வரை அமெரிக்க தாய்மாருக்கு ஜனாதிபதி அவர்களது பிள்ளைகள் ஓர் உயர்ந்த இலட்சியத்தை அடைவதற்காக யுத்தம் செய்கிறார்கள் எனக் காரணங்காட்ட முடிந்தது, ஆனால் பொஸ்னியாவின் சுதந்திரத்திற்காக அவர்கள் உயிரிழப்பதை பென்ரகனும், ஐக்கிய அமெரிக்க மக்களும் விரும்பவில்லை என்பதைக் கிளின்ரன் அறிவார். உண்மையென்னவென்றால் அமெரிக்க உயிர்களை எங்கு எப்போ எதற்காகத் தியாகம் செய்யலாம் என வரையறுப்பது கடினம். மனித இடர்ப்பாடு எப்போ மீகக் கூடுதலாக இருக்கிறது? சூடானைவிட ஏன் சோமாலியாவின் துன்பச்சுமை கூடக் காணப்படுகிறது? உள்நாட்டுப்போர் இன அழிப்புத் தன்மையை எப்போ பெறுகிறது? லைபீரியாவில் அல்லாமல் ஏன் அமெரிக்கா பொஸ்னியாவில் தலையிடவேண்டும்? எனும் வினாக்கள் எழுகின்றன. சிலவேளைகளில் எங்கெங்கு அமெரிக்க ஒலி ஒளிக்கருவிகள் (சீ.வி) இயங்கிக் கொடுமைகளை வெளிக்காட்டுகின்றனவோ அவ்விடங்களிலேயே அமெரிக்க தலையீடு ஏற்படுகிறது என்று கூட நம்ப வேண்டியுள்ளது.

முரண்பாடற்ற ஒரு கொள்கையைத் தேடி அதன் சுமையையும் தவறுகளின் பொறுப்பையும் பகிர்ந்து கொள்ளும் பங்காளிகளைத் தேடி ஒரு பன்முகப்பட்ட அணுகுமுறையை கிளின்ரன் கொள்கையாளர் மேற் கொண்டுள்ளனர். சமாதானத்தை நிலை நாட்ட வருங்காலத்தில் அமெரிக்கா தனித்துச் செயற்படாது பதிலாக மேலும் மேலும் ஐக்கிய நாட்டின் உதவியை நாடும். இதற்கு எடுத்துக் காட்டாக பாரசீயக்குடா யுத்தம் விளங்குகிறது. இவ்யுத்தம் 28 நாடுகளின் கூட்டு முயற்சியாகப் பிரகடனப்படுத்தி நடாத்தப்பட்டது. எனினும் இவ்வுதாரணம் கானல் நீர் போன்றது. ஜோர்ஜ் புஷ் ஆலும் அவரது அரசாங்க காரியதரிசி ஜேம்ஸ் பேக்கராலும் அரபிய உலகில் உருவாக்கப்பட்ட ஓர் அரசியற் போர்வை. இறுதியில் பெரும்பாலும் அமெரிக்காவே இவ்யுத்தத்தினை நடாத்தியது. கிளின்ரனின் ஐக்கிய நாட்டுத் தூதுவராகிய மடலீன் அல்பிறைற் இதை பலத்தை அழுத்திக் காட்டும் பன்முக அணுகுதல் எனக் குறிப்பிட்டுள்ளார். இது ஒரு முரண்பாடான அர்த்தமற்ற சொற்றொடர் எனக் கருதப்படுகிறது. ஐக்கிய நாட்டு அமைதிகாக்கும் படை தனது கடமையைச் சரிவர நிறைவேற்றவில்லை என்பதே உண்மை. மேற்காணும் கூற்றைச் சந்தேகிப் பவரிடம் ஏனைய நாட்டுப்படைகளிடம் பொறுப்பை ஒப்படைத்த 6 வாரங்களுக்குள் ஏன் அமெரிக்க படை மீண்டும் சோமாலியாவை அடைந்தது? என நாம் வினவலாம்.

முன்பெல்லாம் ஐ.நா. அமைதிகாக்கும் படை சிறிதாகவும், ஒரு சின்னமாகவும் திகழ்ந்தது. ஐ.நா. துருப்புக்கள் வருகையை ஏற்றுக் கொண்ட வெவ்வேறு தனிப்பட்ட இடங்களுக்கே அவை அனுப்பப் பட்டன. நல்ல பயிற்சி பெறாத துருப்புக்கள் கூட நிலைமையைச் சமாளிக்கக் கூடியதாய் இருந்தது. ஏனெனில் அவர்கள் கோப மேலீட்டால் சுடப்படும் சத்தத்தைக் கேட்கும் சாத்தியக்கூறுகூட இருக்கவில்லை. சமைப்பதற்கும் பார்ப்பதற்குமாகவே அவர்களுக்குப் பதக்கங்கள் கொடுக்கப்படுகின்றன என்பது அக்கால ஏளனப் பேச்சாகும். ஆனால் சோமாலியாவிலும் பொஸ்னியாவிலும் சமாதானத்தை நிலை நாட்டும் முயற்சி விரைவில் யுத்தமாக மாறலாம். கொள்கைகளைத் தீட்டுபவர்கள் வட அயர்லாந்தில் ஆங்கிலேயர் கண்ட அனுபவத்தை நினைவில் வைத்திருத்தல் நலம், அங்கு கத்தோலிக்கருக்கும் புறெட்டஸ்தாந்தியருக்கும் இடையிலுள்ள மதப் பூசலை அடக்கி வைக்க அனுப்பப்பட்ட தாக்குதலுக்கு இலக்காகினர். இன்று 3000 பேர் இறந்தபின் அந்த அழிவடைந்த நகரில் 12,000 துருப்புக்களை இங்கிலாந்து வைத்திருக்க வேண்டியுள்ளது. வருடா வருடம் இங்கிலாந்திற்கு இதனால் ஒரு மில்லியன் பவுணுக்கு மேற் செலவேற்படுகிறது. சோமாலியாவும் விரைவில் ஒரு வட அயர்லாந்தாகலாம். பட்டினியால் வாடும் மக்களுக்கு உணவளிக்கும் பொருட்டு வரவேற்கப்பட்ட ஐ.நா. துருப்புக்கள் இன்று பலம் குறைந்தோரைத் துன்புறுத்தும் புதுவித குடியேற்றவாதிகள் எனக் கண்டிக்கப்படுகிறார்கள். நன்கு பயிற்றப்பட்டாத பயந்த சுபாவமுள்ள இத்துருப்புக்கள் இலகுவிற் கோபங் கொள்ளுதல் இயல்பே. சென்ற வாரம் பாகிஸ்தான் படையினர் மொகடிசு வர்க்கத்தைச் சேர்ந்த ஒரு கூட்டத்தினர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததினால் 20 அப்பாவி மக்கள் கொல்லப் பட்டார்கள். மேலும் அமெரிக்க அதிகாரிகள் தமது துருப்புக்களை அந்நியர் அதிகாரத்தின் கீழ் செயற்படவைப்பதை விரும்புவதில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

எனினும் ஐக்கிய நாட்டுச் சபைக்கு அமெரிக்க உதவி அவசியமாயிருக்கிறது. உலகின் பல பாகங்களிலும் அங்கும் இங்குமாகச் சிறு சிறு அளவிற் பரவியிருக்கும் 80,000 பேரைக் கொண்ட அமைதிப் படையுடன் 24 மணித்தியாலமும் தொடர்பு கொள்ளக் கூடிய ஒரு காரியால

யத்தை நியூயோர்க் நகரத்தில் அண்மையிற் திறந்துள்ளார்கள். ஐக்கிய நாட்டுப் பொதுச்செயலாளர் பூட்ரோஸ்காலி ஐ.நா. விற்கு பொஸ்னியாவின் பாதுகாப்பு வலையங்களை இயங்க வைக்க மேலும் 34,000 துருப்புக்கள் தேவை எனக்கூறியுள்ளார். இதுவரைக்கும் அங்கத்துவ நாடுகள் இத்தொகையின் 1·10 ஐயே கொடுத்துள்ளன. இதன் விளைவு யாதெனில் பாதுகாப்பு நிலையங்கள் பாதுகாப்பற்ற பிரதேசங்களாக மாறிவிட்டன. இவ்வாரம் கிளின்ரன் மேலும் 300 அமெரிக்க துருப்புக்களை அண்மையிலுள்ள மசிடோனியாவுக்கு அனுப்புகிறார். பொஸ்னியாவிற்குள் அமெரிக்க துருப்புக்கள் புகுந்தபின்பும் சேபியர்கள் தமது நாக்குதல்களை நிறுத்துவார்கள் எனக்கருத முடியாது. இச்சிறு படை பொறியில் அகப்பட்டுத் திண்டாடக்கூடும்.

அமெரிக்க படை ஒருபோதும் அமைதிகாக்கும் பொறுப்பை விரும்பியதில்லை. பென்ரகனின் நியாயப்படுத்தும் முறையைப் பின்பற்றி ஜெனரல் பவல் அத்திலாண்டிக் கொமாண்டிடம் இப்பொறுப்பைக் கையளித்தார். இதனிடம் தரைப் படை அதிகமில்லை. நீர்மூழ்கிப் படையே அதன் சிறப்பம்சம். மேலும் அமெரிக்கத் துருப்புக்கள் ஆயுத சக்தியைப் பயன்படுத்தவே பிரதானமாகப் பயிற்றப்பட்டவர்கள். யுத்தக் களத்தில் பல்வேறு கட்டளைகளுக்குக் கீழ்ப்படியப் பழக்கப்பட்டவர்கள். அத்துடன் அமைதிகாக்கும் பணிக்குச் சில பிரத்தியேக திறன்கள் தேவை. வட அயர்லாந்துக்கு அனுப்பப்படுமுன் பிரித்தானிய துருப்புக்கள் கட்டுக்கடங்கி புதிய யுத்த முறைப் பயிற்சிக்குள்ளாக்கப்பட வேண்டியிருந்தது. முன்றாம் உலகிலுள்ள அந்நிய படைகளுக்கு ஆலோசனை அளிப்பதற்காக விசேட பயிற்சி பெற்ற 11,000 படையினர் பென்ரகனிடம் உண்டு. இவர்கள் ஆபிரிக்க வனப்பாதுகாவலர்களுக்கு குறிப்பாக மிருகங்களை வேட்டையாடுவோருக்கெதிராகயுத்தப்பயிற்சி அளிப்பதற்காகக்கூடப் பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறார்கள். கிறீன்பரற் என அழைக்கப்படும் இச்சிப்பாய்க்கு வேண்டிய பயிற்சியளிக்க சுமார் இரண்டு வருட காலம் எடுக்கிறது. ஒவ்வொருவருக்கும் அமைதிகாக்கும் பொறுப்பில் இரண்டு வருட காலம் பயிற்சி அளிப்பது சாத்தியமல்ல எனப்பென்ரகன் அதிகாரிகள் கருதுகிறார்கள்.

சோமாலியாவைப் போன்ற எதிர்கால நிலைமைகளைச் சமாளிக்க ஐக்கிய நாட்டுச் சபைக்கு உதவும் பொருட்டு விரைவில் அனுப்பக் கூடிய ஒரு படையைத் தயாரிக்க கிளின்ரன் நிர்வாகம் உத்தேசித்துள்ளது. ஆனால் கிளின்ரன் இம்முயற்சிக்குக் கையொப்பம் அளிக்கத் தயங்குகின்றார். உலக நாடுகள் மத்தியில் அமெரிக்காவின் நிலை என்ற விடயம் பற்றி அவரைப் பேச வைப்பதே சிரமமாயுள்ளது என அவரது அந்நிய நாட்டுக்கொள்கை ஆலோசகர்கள் கூறுகின்றனர். அல்லாமலும் இவ்விடயம் பற்றி அவர் என்ன கூறவேண்டும் என்பது யாரும் அறியாத புதிராக விளங்குகிறது.

வாஷிங்டனிலிருந்து இவான் தோமஸ், மார்கரட் கரட் வோணர், ஜோண்பரி, டக்ளஸ் வோலர்.

ஐக்கிய நாடுகள்.
புதிய சகாப்தத்தை உருவாக்குதல் வரிசையில்

ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகமான பூட்ரோஸ் காலி கோடானுகோடி டொலரைப் பெறுவதற்கு சர்வதேச மக்கள் ஸ்தாபனமாகிய பேர்சன் மான்ரெல்லர் உடன் ஓர் ஒப்பந்தத்துக்கு வர உத்தேசித்துள்ளார். ஐக்கிய நாடுகளின் 50 ஆவது வருடக் கொண்டாட்டத்துக்கு இத் தொகையை திரட்ட தீர்மானித்துள்ளார். ஆனால் பூட்ரோஸ் காலியும் அந்த ஸ்தாபனமும் ஓர் ஒப்பந்தத்துக்கு வந்த பின்பே நடவடிக்கை எடுக்கப்படும்.

ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகத்தின் அணுகு முறையிலும் விவேகத்திலும் தான் இதன் சாத்தியக்கூறு உள்ளது என பேர்சன் மான்ரெலரின் பிரதம நிர்வாகியான, ரொம் பெல் கூறியுள்ளார். ஐக்கிய நாடுகளின் சபையின் இலட்சியங்களைக் கைவிட சில இராஜதந்திர வட்டாரங்கள் விரும்பவில்லை.

குடியரசு கட்சியில் தொடர்புள்ள ஸ்தாபனத்திடம் இருந்து பெறுவதற்கு பூட்ரோஸ் காலி நினைத்தது வியப்பைத் தருகிறது. ஏனெனில் வெள்ளை மாளிகையில் இருப்பவர் ஒரு ஜனநாயக கட்சியை சார்ந்தவர் தேவையான மாற்றங்களை உருவாக்க வேண்டிய நேரத்தில் தன்னுடைய நன்மை கருதியே காலி செயற்படுகிறார் எனவும், இது யாருடைய உதவியைப் பெற்றும் தனக்கு ஒரு நோபல் பரிசை பெறவே இம் முயற்சி என நினைக்கிறார்கள்.

இராணுவ மட்டத்தில் மனக்குமுறல் ஜனாதிபதிக்கு எதிராக இராணுவம்

துருப்புக்களின் மனோதிடத்தைக் குலைக்கும் செயல்களை கிளின்ரன் கைவிடலாம்

அது ஒரு பயங்கர வசைமாரி. ''கிளின்ரன் தன்னினச் சேர்க்கையாளரை நேசிப்பவர். போதை வஸ்துப் பாவிக்கும் கட்டாய இராணுவ சேவையிலிருந்து களவாக விலகிய காமுகர்'' இவ்வாறு வான் படை மேஜர் ஜெனரல் கறோல்ட் என்காம்மெல் சென்ற மாதம் நெதர்லாந்தில் நேட்டோ நாடுகள் கூட்டத்தில் சொற்பொழிவாற்றும் போது அமெரிக்க ஜனாதிபதியை விமர்சித்தார். பிரதான இராணுவத் தளபதி (ஜனாதிபதி)யை வெளிப்படையாகத் தாக்கிப் பேசப்படும் மாதிரிச் சொற்றொடர்கள் இவையாகும், இவ்விதவார்த்தைப் பிரயோகத்தை அடக்க இராணுவ உயர் அதிகாரிகள் அரும்பாடுபட்டு வருகிறார்கள். வான்படைப் பிரதம நிர்வாகியாகிய ஜெனரல் மைறில் மக்பீக், படையின் கட்டளைத் தொடர் ஜனாதிபதியிலிருந்து தமது புதிய வான்படைத் துருப்பினர் வரை கீழிறங்குகிறது எனக் கூறித் தனது சிரேஷ்ட தளபதிகளை உத்தியோக ரீதியில் எச்சரித்துள்ளார். சென்ற கிழமை எச்சரித்துக் குற்றப்பணம் விதித்தபின் பதவியிலிருந்து ஒய்வெடுக்கச் செய்யப்பட்டார். ஆனால் அவர் அமெரிக்கப் பாசறையில் இன்று ஒருவர் கேட்கமுடியாத ஒன்றைக் கூறி விட்டான் என கூறுவதற்கில்லை. இராணுவத்தைப் பற்றி ஏறத்தாள 50 வருடங்களாக எழுதி வந்துள்ளேன். ஆனால் வெளிப்படையாக ஒரு ஜனாதிபதியைப் படையினர் இப்படித் தாக்கிப் பேசியதை நான் ஒருபோதும் கண்டதில்லை. உயர் அதிகாரிகள் பிராங் கிளின் ரூஸ்வல்ரை வெறுத்தார்கள். மக்காதரை வேலை நீக்கம் செய்ததற்காக ட்ரூமனைத் தாக்கிப் பேசினார்கள். இராணுவச் செலவினங்களைக் குறைத்ததன் பொருட்டு ஜிம்மிக் காட்டரை தொப்பி பிரட்டி என வைதார்கள். இவையாவும் உண்மைதான். ஆனால் இன்று மனக்குமுறல் எல்லா மட்டங்களிலும் பரவியுள்ளது. குறிப்பாக பென்ரகனிலிருந்து தூரச் செல்லச்செல்ல குமுறல்களின் சத்தம் கூடிக்கொண்டே போகிறது. ருவான்ரிக்கொவாவிலுள்ள இரவு விருந்துச்சாலையில் அண்மையில் விருந்து வாழ்த்துரையில் பொருத்தமற்ற கூற்றுக்களைத் தவிர்க்குமாறு எச்சரிக்கப்பட்டது. மேலும் விருந்து வாழ்த்துரைகள் ஜனாதிபதியின் பதவிக்கன்றி அப்பதவியினை வகிக்கும் பிரமுகர்களுக்கல்ல எனவும் சுட்டிக்காட்டப்பட்டது. பலர் தமது கிளாசுகளை உயர்த்தினர். ஆனால் குடிக்க மறுத்தனர். இந்தநிலை நீடித்ததன் காரணமாகத் தான் தனது வான் படையினரை அழைத்து கிளாசிலுள்ள மதுவை குடித்து முடித்து விடுமாறு கட்டளையிட்டதாக கூறினார். அங்கு நிலவிய மனப்பாங்கைத் தப்புக்கணக்குப் போட்டமுடியாது. நான் பார்த்த ஒரு பெரிய ஸ்ரிச்சரில் ''முதல் கில்வேரி, பின் ஜெனிபர், இப்பொழுது நாம்'' என எழுதியிருந்தது.

பின்புற உதை – இவையாவும் கிளின்ரன் தவறுகள் அல்ல; அவர் பல கடினமான செயல்களைத் தொடர வேண்டியிருந்தது.

—ஜோர்ஜ் புஷ் ஓர் உண்மையான (யுத்த) வெற்றி வீரன். றொனால்ட் றீகன் எவ்வாறு படங்களில் நடித்தார். றீகன் யுத்தத்தை ஒருபொழுதும் கண்டிரா விட்டாலும் தான் கண்ட ஆயுதங்கள் அனைத்தையும் வாங்கத் தவறியதில்லை. துர் அதிர்ஷ்டவசமாக பனிப்போரின் இறுதிக் கட்டத்தில் கிளின்ரன் பதவியேற்றார். இக்காலகட்டத்தில் பல தலங்களை மூட வேண்டியிருந்தது. அத்துடன் பல்லாயிரக்கணக்கானோர் பதவியிழக்க வேண்டி நேர்ந்தது. இவர்களனைவரும் தொண்டர் படையினராவர். ஓய்வு பெறும் வரையும் தொழில் தரப்படும் எனும் ஒப்பந்தத்தை கிளின்ரன் மீறிவிட்டார் எனப் பலர் கருதினர். அவர்களது அனைத்துப் பிரச்சினைகளுக்கும் கிளின்ரனே குட்டுப்படவேண்டியவரானார். இது ஒரு பின்புற உதை, இப்போக்குகள் கிளின்ரன் பதவிக்கு வருவதற்கு நீண்ட காலத்திற்கு முன் 1989 ஆம் ஆண்டே தொடங்கி விட்டன.

ஆயினும் துருப்புக்களிடையே இன்று காணப்படும் யுத்த ஆயத்தத்தில் ஏற்பட்டுள்ள தளர் நிலைக்கும் கிளின்ரனை நாம் குறை கூறலாம். ஜெனரல் சுவாற்ச் கொப் கட்டளைகள் சதாமின் ஒளிவிடங்களை 100 மணி யுத்தத்தில் தகர்த்தெறிந்தபோது அமெரிக்க இராணுவம் முன்பு எப்பொழுதும் கண்டிராத திறமையைப் பெற்றிருந்தது. 1991 ஆம் ஆண்டு தொடங்கி இத்திறமை பெரிய பாதிப்புக்குள்ளாகியது. கிளின்ரன் இராணுவச் செலவுகளைப் பொறுப்பற்ற முறையில் வெட்டித் தள்ளினார். வருங் காலப்பொறுப்புகளின் தன்மையை ஆராயாது இராணுவ வரவு செலவுக் கணக்குகளைக் குறைத்தார். இராணுவத்தின் தகைமையைக் காப்பாற்ற வேண்டுமெனச் சிந்தியாது அவரது நிர்வாகச் செலவினங்களை வெட்டியது என ஒரு கடற்படை லெப்ரினன்ட் கேணல் கூறுகிறார், அவர் தேவையற்ற சீலூல்ஃப நீர்மூழ்கிக் கப்பலையும் சீ 3 பொதிகளேற்றும் ஆனால் பறக்க முடியாத விமானங்களையும் வாங்கி அருமையாகப் பாது

காப்பிற்கென கிடைத்த டொலர் களை வீணக்கினார்.

கௌரவமில்லை - பல மற்ற வெற்றுப்படையாக தளம் திரும்ப வேண்டியுள்ளது எனத் துருப்புக் கள் பயப்படுகின்றன. இப்பயம் நியாயமானதே. ஏனெனில் டாங்கி களும், கப்பல்களும் செயலிழந்து காணப்படுகின்றன. அவற்றிற்கு உதிரிப்பாகங்கள் இல்லை. படைப் பிரிவுகளின் பலம் அபாயக்கோட் டிற்குக் கீழுள்ளது. பணப் பற்றாக் குறையின் காரணமாகத் தம் திறன்களை வளர்க்க வேண்டிய பயிற்சிகளைப்பெற முடியவில்லை. எனினும் இராணுவ நடவடிக்கை யின் வேகம் கூடியுள்ளது. குறிப் பாகப் பனிப்போருக்குப் பின் ஆபிரிக்காவுக்கும், லத்தீன் அமெ ரிக்க நாடுகளுக்கும், மத்திய கிழக்கு நாடுகளுக்குமென அமெரிக்க துருப் புக்கள் உலகின் பல பாகங்களுக் கும் செல்ல வேண்டியுள்ளது. அதே வேளையில் பால்கன் பிர தேசத்திற்கும் துருப்புக்கள் மேலும் அனுப்பப்பட வுள்ளன.

எல்லாவற்றிற்கும் மேலாக தன்னினச் சேர்க்கையாளரை இரா ணுவத்தில் சேவை செய்ய கிளின் ரன் அனுமதி வழங்கியமை திருப்தி கள் அனைத்தையும் சூடுபிடிக்கச் செய்த்து. இந்த அனுமதிப்பு உண்மையாக சண்டைசெய்யும் 20 வீத யுத்த வீரரை அந்நியப் படுத்தியுள்ளது. யுத்தம் செய்வ தற்கென்றே இராணுவத்திகுற் சேர்ந்து அதையே தமது தொழி லாகவும் கொண்டவர்கள். இரா ணுவ மதிப்பீட்டில் அஸ்பின் தொடங்கி கீழேயுள்ள கிளின்ரனின் ஆலோசகர்கள் உயர் புள்ளிகள் பெறுபவராயில்லை. ஜனாதிபதி யின் நெருங்கிய ஆலோசகர்களிற் சிலரே எப்போதாவது சீருடை அணிந்துள்ளனர். வெள்ளை மாளிகை அதிகாரிகளிற் சிலரே இராணுவ அநுபவமுடையவர்கள். அங்கு இரண்டு கலாசாரங்கள் ஒன்றுக்கு ஒன்று முரண்பாடான நோக்கத்துடன் இயங்குவது தான் முக்கிய பிரச்சினை, விட்டுக் கொடாத நல்ல யுத்த வீரர்களா கிய பழம்போக்காளர் ஒருபுறம் 90 ஆம் தசாப்தக்காரராகிய வேற் றுமையில் நம்பிக்கையுள்ள யுப்பீஸ் எதிர்ப்புறம். படையினர் வேற் றுமை வாதத்தை எதிர்ப்பவர்கள் ஒருமைப்பாடு கூட்டு முயற்சி, கட்டுப்பாடு, ஒழுங்கு ஆகியன யுத்தத்தில் வெற்றி ஈட்டுவதற்கு அவசியம்.

பெரும்படியாகப் பார்க்கும் பொழுது கிளின்ரனைப் பற்றிப் படையினர் அபிப்பிராயம் முக்கிய மானதல்ல. கப்பின்களும், சார் ஜன்மாரும் ஏனையோரும் இலக் குகளை தயாரித்து யுத்தத்தை வெல்லுகிறார்கள். லிங்கனும் சூஸ் வெல்டும் படையினரின் விசுவாச மின்றி யுத்தங்களை வென்றார் கள். இரத்தக்கறை நிறைந்த வியட்நாம் யுத்தங்களில் நிக்சன் தூற்றப்பட்டார். ஆனால் வெல்ல முடியாதென்றறிந்தும் படையினர் தளராது யுத்தம் செய்தனர். படைத்தலைவன் கட்டளையிட் டதும் துருப்புக்கள் சல்யூட் செய்து புறப்படுவார்கள். படையினர் கண்ணில் கிளின்ரன் உயர்ந்து தான் செல்ல வேண்டும். அவர் அந்த இலக்கை நோக்கிச் செல்வ தாகத் தெரிகிறது. இராணுவத் திற்கும் தனக்குமிடையிலுள்ள இடைவெளியைக் குறைக்க அவர் முயல்கிறார். இதன் பயனாக தலை யீட்டுவாதிகளின் கோரிக்கைக்கு இவர்கள் பின்னணியில் வேலை செய்யும் லிகிதர்களும் மற்றவர் களும் இதில் அடங்குவர். தன்னி னச் சேர்க்கையாளர் வெளிப்படை யாக இராணுவத்திற் சேவையாற் றலைத் தனிப்பட்ட முறையில் எதிர்ப்பவன் நான். அவர்களை இப்படிக் கிளின்ரன் அனுமதித் தால் அவர் பாராளுமன்றத்தில் பகிரங்கமாக விளங்கப்படவேண்டி யவர் என நான் கடிதமூலம் அறிவித்துள்ளேன். ''அவர் எங்களை மதிக்கவில்லை, தன்னினச் சேர்க்கை என்னும் சேற்றில் எங்கள் முகங் களைத் தோய்த்துள்ளார்'' என ஓர் இராணுவ அதிகாரி கூறுகி றார். இதுபோன்றது தான் யுத்த வானூர்திகளைப் பெண்களும் செலுத்த அனுமதிக்கும் பாது காப்புக் காரியதரிசியின் கட்டளை யும். கிளின்ரன் தனது சமூகப் பரிசோதனைகளை நிறுத்தவேண் டும். ''இராணுவம் ஒரு ஜீவமரண விடயம். இருபாலாருக்கும் சம வேலை வாய்ப்பளிக்கும் நிறுவன மல்ல'' என உரைக்கிறார் ஒரு கடற்படை லெப்டினண்ட்.

இராணுவத்தின் வேதன உயர்வைக் கிளின்ரன் நிறுத்தி யமை மற்றோர் அடியாகும். கிளின்ரன் இராணுவத்தைப் பொருட்படுத்துவதில்லை என்பதன் மற்றொரு சின்னம் எனச் சுட்டிக் காட்டுகிறார் வேறொரு இராணுவ மேஜர். சென்ற 10 வருடங்களில் இராணுவச் சம்பள வீதம் தனி யார் வீதத்திலும் பார்க்க 20 % பின்னிற்கிறது என்பதைக் காட்டு கின்றன. இராணுவ ஆய்வுகள் இராணுவத்தில் சேர்க்கப்பட்டவர் களில் 20, 000 பேர் உணவு முத்திரைக்குத் தகுதி உடையவர் கள். 80./· மானோர் வருடம் 30, 000 டொலர்களுக்குக் குறையப் பெறுகின்றார்கள். மாறாக பொஸ்னியாவிற்குள் பெரும் படையும் குதிக்க மறுக்க லாம்.

கிளின்ரன் தனது படையின ருடனான தொடர்புகளைச் சீர் செய்ய எண்ணினால் அவர் மேற் கொள்ளக் கூடிய இலகு நடவடிக் கைகள் உள. படையினரின் சல் யூட்டை அவர் தலை குனிந்தபடி (வெட்கப்பட்டவர் போல்) ஒரு பொழுதும் ஏற்கக் கூடாது.

2 துவக்குக் குண்டின் மணத்தைக் கூட அறியாத ஓய்வு பெற்ற கடற்படைத் தளபதி வில்லியம் குறோவின் தற்போதைய பதவியை வேறொருவருக்குக் (தகுதிவாய்ந்த வருக்கு) கொடுக்க வேண்டும்.

3. அவர் மிலிற்றறி அக்கடமி களில் ஆற்றும் பேச்சுக்களைக் கைவிட வேண்டும். அத்துடன் வாசகங்களுடன் கூடிய செளத் லோனிலுள்ள யுத்தவீரரின் படங் களை உரைஞ்சி எறியவேண்டும்.

4. படைமேற்பார்வையாளரு டன் ஓரிருநாட்கள் கழிக்கவேண் டும். அதுபோல் நீர்மூழ்கி மாலு மிகளுடனும், போர்ப்படைப் பிரிவி னருடனும், அவர்களது அதிகாரி களுடனும் சில நாட்கள் இருந்து சம்பாஷிக்க வேண்டும். அவ்வாறு நடந்து கொண்டால் அவர்கள் மீண்டும் ஜனாதிபதிக்கு மதிப்புக்

கொடுத்துக் கீழ்ப்படிந்து நடப்பர். மேலும் கிளின்ரன் உயர் மட்ட உத்தியோகத்தருடன் நெருங்கிப் பழகவேண்டும்.

இராணுவம் அமெரிக்காவின் வரவு செலவுத்திட்டத்தின் 20வீதத்தினை உபயோகிக்கிறது. அல்லாமலும் நாட்டின் பாதுகாப்பிற்கும் பொறுப்பாயுள்ளது. இவ்வாறு செய்யின் அவர் இராணுவத்தின் பல்வேறு பகுதியினரும் முடுக்கிவிட்ட யுத்த வீரரல்ல, சிந்தனையுள்ள உசாரான தேசாபிமானிகள் என்பதை உணர்வார். அவர்களும் கிளின்ரன் ஒரு கைப்பொம்மையல்ல நிஜமாகவே தம்மீது அக்கறைகொண்டவர் என்பதை உணர்வார்கள்.

சம்பள உயர்வை மீளாய்வு செய்வதன் மூலம் கிளின்ரன் விரைவில் துருப்புக்களின் நல்லெண்ணத்தைப் பெற்றுக்கொள்ளலாம். ஆயினும் தமது பிரதம இராணுவ தளபதியைத் தேர்ந்தெடுப்பதிலேயே அவரது நல்லெண்ணத்தை எடுத்துக் காட்டும் சிறப்பம்சம் தங்கி இருக்கிறது. அவர்களுக்கு ஜெனரல் கோவின் பவல் ஓய்வு பெறவிருப்பது தமது காவல் தெய்வத்தை இழந்ததுபோலாகும். அவர்கள் அவர்மேல் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். படையினருக்கு ஆபத்து ஏற்படும் முன்னரே தன்னுயிரைக் கொடுக்கக் கூடியவர். பவலின் வெற்றிடம் வேனைப் போன்ற வீரமும், நேர்மையும், விவேகமும் நிறைந்த இன்னொருவராலேயே நிரப்பப்படவேண்டும். இன்று தயார் நிலையிலிருக்கும் தலைவர்களுள் இப்பண்புகளுடைய சிப்பாய்களிடம் ஆர்வமூட்டக்கூடிய ஒரேயொருவர் கடற்படைத் தளபதி ஜெனரல் ஜோகோவர் ஆவர். அமெரிக்காவில் இராணுவ பலத்தை நிலை நாட்டுவதில் கிளின்ரன் உண்மையான அக்கறை கொண்டிருந்தால் தன்னினைச் சேர்க்கையாளரை இராணுவத்திற் சேர்ப்பதைப் பற்றியும் பெண்களை 'யுத்தம் செய்யவிடுவதைப்பற்றியும்மீளாய்வு செய்யவேண்டும். இவ்விடயத்தில் அவர் தனது தவறை ஏற்றுக் கொண்டால் அவரை இராணுவம் விரைவாக நம்பும்.

மறுபுறம் சகல மட்டத்திலும் ஜெனரல் தொடங்கி லெப்ரினண்ட் ஈறாக அனைவரும் கிளின்ரனைப்பற்றி முறுமுறுப்பதையும், அவதூறாகக் கூறுவதையும் நிறுத்தவேண்டும். அவருக்குக் கீழ் கடமையாற்ற முடியாதவர்கள் பதவி விலகவேண்டும். ''நான் கிளின்ரனைப் பற்றி நினைப்பதை உமக்குக் கூறுவதற்கு முன் நான் பதவி விலகவேண்டும். அவர் எனது அதி மேலதிகாரி, ஆகவே நான் அவரை ஆதரிக்கவேண்டும்; அவருக்காகச் சேவைசெய்யவேண்டும்'' என்று ஒரு லெப்ரினண்ட் ஜெனரல் சொல்லக்கேட்டேன். தான் முன்பிருந்த நிலையைத் திரும்பவும் பெறக்கூடியவர் என்பதைக் கிளின்ரன் காட்டியுள்ளார். அவர் எதையும் விரைவில் கற்கக் கூடியவர். ஆகவே அவர் இராணுவத்துடனான சீர்கெட்டுப்போன உறவைச் சீர்செய்து கொள்ள முடியும். ●

—டேவிட் எச், காக்வோர்த்

நியூஸ் வீக், ஜூன் 28, 1993

உண்மை வெளிவருகின்றது ஆனால் பலனில்லை

ஒருவரும் தண்டிக்கப்படப் போவதில்லையென்றால், குற்றத்தை வெளிப்படுத்தி என்ன பிரயோசனம்?

800 பக்கங்கள் கொண்ட அந்த அறிக்கையைத் தயாரிக்க எட்டு மாதங்கள் எடுத்தன. எழுத்தில் வடிக்க முடியாத பல கொடுமைகள் நடந்ததாக அந்த அறிக்கை உணர்ச்சியற்ற கற்றறிந்தோர் மொழியில் தெரிவிக்கின்றது. குற்றங்களுக்குப் பொறுப்பானவர்களையும் சுட்டிக்காட்ட அது தவறவில்லை. எல்சல்வடோர் நாட்டில் அந்த நாட்டின் உயர் இராணுவ அதிகாரிகள் நடத்திய கொலைக்கான இந்த அறிக்கை விபரிக்கின்றது. ஐ. நா. வின் ஆதரவுடன் ''உண்மை'' என்ற பெயரில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. எல்சல்வடோர் நாட்டின் பாதுகாப்பு மந்திரி றெனே எமிலியோ பொன்ஸ் உட்பட வேறு பல இராணுவ அதிகாரிகள் 1980 இல் எல் மொசோட் மாகாணத்தில் நூற்றுக்கணக்கான விவசாயிகளையும் 1989 இல் ஆறு ஜேசுட் கத்தோலிக்க மதகுருமார்களையும் கொலை செய்தார்களென இவ் அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது. ஆனால் அந்த நாட்டின் அரசு இந்த அறிக்கையில் பெயர் சொல்லிக் காட்டப்பட்டவர்கள் மீது ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்போவதில்லை. அறிக்கை வெளியானதும், எல்சல்வடோர் ஜனாதிபதி அல்பிறடோ கிறிஸ்ரியானி பரவலான மன்னிப்புக்கு அறைகூவல் விடுத்தார். மேலும் ''எங்கள் சரித்திரத்தில் கறைப்படிந்த நிகழ்வுகளை நாம் மறக்க வேண்டும்'' என்றும் கூறினார். இந்த நாட்டில் பன்னிரண்டு வருடகாலம் உள் நாட்டு யுத்தம் நடைபெற்றதும் அதில் 75, 000 உயிர்கள் பலியானதும், நாம் அறிந்ததே. மறக்கவேண்டும் என்ற ஜனாதிபதியின் கோரிக்கையை வலது சாரி தேசிய ஆளும் சபை அங்கீகரிக்கும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

அப்படியென்றால் இந்த அறிக்கையை தயாரிப்பதில் என்ன பிரயோசனம்? நீதி கிடையாதென்றால் அறிக்கைத் தயாரிப்பு வெறும் காலவிரயம் அல்லவோ? எல்சல்வடோர் சட்ட நிபுணர் பிரான்ஸிஸ்கோ லீமா என்பவர் கூறுகிறார்: ''அறிக்கையில் கூறப்

பட்டவற்றை உண்மைகளைத் தொடர்ந்து நடவடிக்கை யெடுக்கத் தவறின் அதன் பெறுமதி மக்கள் மத்தியில் குறைவது திண்ணம்'' ஆனால் வெற்றிகரமாக குற்றவாளிகள் மீது சட்ட நடவடிக்கை யெடுப்பது எளிதல்ல. எல்சல்வடோர் நாட்டின் நீதித்துறை ஊழல் மலிந்த தொன்றாகும். அங்கு நீதி கிடைப்பது சுலபமல்ல. பிரதம நீதியரசர் மவுறிசியோ குற்றியரேஸ் கஸ்றோ இவ்வறிக்கை சிபாரிசு செய்த நீதித்துறைச் சீர்திருத்தத்தையும், தன்னை வெளியேற்றும்படி அறிக்கை கேட்டுக் கொண்டதையும் ஏளனம் செய்தார். கடவுள் ஒருவர் தான் தனது பதவியிலிருந்து உத்தியோக ஒப்புக்கு முன்பாக இறக்கமுடியுமென்று அவர் தெரிவித்துள்ளார். இந்தச் செய்தியை மக்கள் எப்படி வரவேற்றுள்ளார்கள்? மறந்தவடுக்களை மீண்டும் கிளறுவதில் என்னத்தைக் காணப்போகின்றார்களோ தெரியவில்லை.

தென் அமெரிக்க நாடுகள் அண்மையில் உண்மையை அரியாசனம் ஏற்றும் முயற்சிகளில் இறங்கியமை வரவேற்கத் தகுந்தது. அரசியல் கொடுமைகள், சித்திரவதைகள், பெருந்தொகைக் கொலைகள் போன்றவற்றின் வரலாறுகள் பிரசுரிக்கப் படுவதால்– இவைகளுக்கு பரிகாரமாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படாவிடினும் -நன்மைகள் பல உண்டு. இந்தப் பரீட்சையில் முதலிறங்கிய நாடு ஆர்ஜென்ரீனா நாடாகும். குற்றவாளிகளை அவர்கள் தண்டிக்கவில்லை. ஆனால் வெளியரங்கப் படுத்துவதால் நன்மை பயப்பதைப் பலரும் ஒத்துக்கொள்வர். அமெரிக்கப் பார்வை என்ற ஆர்ஜென்ரீனா நாட்டின் மனித உரிமைக் குழு இயக்குனர் ஜோவான் மென்டேஸ் கூறுகிறார்: ''மீண்டும் கொடுமைகள் நடப்பதைத் தடுக்கச் சிறந்த வழி - உண்மையும் சட்ட நடவடிக்கையும் தான்'' ஆனால் உண்மையைக் கூறிவிட்டு சட்டநடவடிக்கை யெடுத்து தண்டனை கொடுக்கத் தவறினால் சமூகத்தில் பெரும் பாதிப்பு ஏற்படும் என்றும் அவர் கூறுகிறார். ஆர்ஜென்ரீனா நாட்டில் தனியார் துறை அறிக்கையொன்றினால் அந்த நாட்டில் நடந்த அழிவுயுத்தத்தில் ஏற்பட்ட நிகழ்வுகள் வெளியரங்கப் படுத்தப் பட்டதால் எட்டு படைத் தளபதிகளும் ஒரு கெரில்லாத் தலைவனும் தண்டிக்கப்பட்டு மறியல் கூட்டில் அடைக்கப்பட்டனர். இவர்கள் மூன்று வருடங்களுக்குப் பின் வீடு தலை செய்யப் பட்டபோது நாட்டில் பெரும் கண்டனக் குரல் எழுந்தது, ஆனால் பொது மக்கள் ஒருவராவது இவர்கள் மீது வஞ்சம் தீர்க்க முயலவில்லை. இது ஜனநாயக வளர்ச்சிக்கு நல்லதோர் வழிகாட்டி என்று மென்டேஸ் கூறுகிறார்.

ஆர்ஜன்ரீனாவைப் பின் பற்றி தென் அமெரிக்க நாடாகிய சிலி நாடும் நடவடிக்கை யெடுக்கத் தொடங்கியுள்ளது. அந்த நாட்டின் சர்வாதிகாரி ஜெனரல் அகுஸ்றோ பினோஷே 1973 ஆம் ஆண்டிலிருந்து 1990 ஆம் ஆண்டு வரையில் பதவியிலிருக்கும் போது இடது சாரிகளுக்கெதிரான தனது நடவடிக்கைகளில் பல பயங்கரப் படுகொலைகளைச் செய்துள்ளார். அவர் பதவியிலிருந்து இறங்கும் போது நடந்தேறிய பெருந் தொகைக் கொலைகளுக்கும் மனித உரிமை மீறல்களுக்கும் நாடளாவிய பொது மன்னிப்பை வழங்கினார். ஆனால் இவருக்குப் பின் பதவிக்கு வந்த ஜனாதிபதி பற்றீசியோ அல்வின் 1970 களில் பெருந்தொகைக் கொலைகளை ஆராயவேண்டும் என்ற முடிவுக்கு வந்துள்ளார், எட்டு அங்கத்தவர்கள் கொண்ட குழுவொன்று 3,400 படுகொலைகள் பற்றி அறிக்கை வெளியிட்டுள்ளது. இவையாவும் இரகசியப் பொலிசாரினால் செய்யப்பட்டன என்றும் இந்த அறிக்கை கூறுகின்றது. பொது மன்னிப்பின் காரணமாக சட்ட நடவடிக்கை எடுக்க முடியாதிருப்பினும் இதுபோன்ற புலனாய்விற்கு மக்கள் பேராதரவு நல்கியுள்ளனர். ''நிகழ்ந்த கொடுமைகளை மக்கள் அறிந்திருப்பதற்கும், அறிக்கை மூலம் அவைகளை ஒத்துக்கொள்வதற்கும் பெரிய வித்தியாசம் உண்டு'' என்கிறார் மென்டேஸ். மேலும் மாண்டவர்களின் பெயர்களையும் அவர்கள் இறந்த விதத்தையும், இறப்புக்குக் காரணமானவர்களையும் அறிக்கை மூலம் வெளியிடுவதால் இரு நன்மைகள் ஏற்படுகின்றன. ஒன்று ஒருவர் செய்த உயிர்த்தியாகம் எழுத்தில் ஏற்கப்படுகின்றது. இரண்டாவது அவர்கள் சுற்றத்தாரின் மனம் ஓரளவு மனச் சாந்தி பெறுகின்றது.

என்றாலும் எல்சல்வடோர் நாடு தனது இரத்தம் தோய்ந்த சரித்திரத்தை இன்னும் ஏற்கவில்லை. சென்ற வாரம் ஜனாதிபதி கிறிஸ்ரியானி ஒரு முறைப்பாடு செய்துள்ளார். என்னவென்றால் மேற்குறித்த ஐ. நா. அறிக்கை பெரும்பான்மையான மக்களின் மன்னிக்க வேண்டும் மறக்கவேண்டும் என்ற கோரிக்கைக்கு அது செவிசாய்க்கவில்லையாம். உண்மையைச் சொல்ல வேண்டும் என்ற எண்ணம் மக்கள் மத்தியில் இருந்து வரவில்லை. அது வெளி நாட்டுத் தலையீட்டால் வந்துள்ளது. முக்கியமான கேள்வி யென்னவென்றால் எல்சல்வடோர் குற்றவாளிகளைத் தண்டிக்குமா என்பதல்ல, அறிக்கையிற் சொன்னவாறு நாட்டின் குற்றம் புரிய உதவிய ஸ்தாபனங்களை மாற்றுமா என்பதுதான். மிக்க குறைந்த எதிர்பார்ப்பு என்னவென்றால் இந்த அறிக்கை சில சீர்திருத்தங்களைத் தொடக்கி வைக்கும் என்பதுதான். விசாரணைக் குழுவில் அங்கம் வகித்த அமெரிக்கச் சட்டப் பேராசிரியர் மோஸ் புயர்கென்தால் கூறுவது போல இந்த அறிக்கை புதிய சட்டத் துறையையும் நிர்வாகத் துறையையும் சட்டத்தின் முன் எல்லோரும் சமம் என்ற கொள்கைக்கேற்ப அமைக்க உதவுமென்பதுதான். மனித உரிமை இயக்க பணியாளர் சீலியா மெட்றானோ சொல்கிறார்; ''மறுசீரமைக்க இதுவே தருணம். இதை இப்போது தவறவிடின் வேறு சந்தர்ப்பம் ஒருபோதும் வராது.''

சென்ற வாரம் வெளிவந்த அறிக்கை ஒன்றையும் புதிதாகச் சொல்லவில்லை. மக்கள் என்றோ அறிந்ததையும் சந்தேகப்பட்டதை

யும் அது அறிக்கையாக வெளியிட்டது. அதுவே புதிது. 1989 ஆம் ஆண்டு நடந்த ஆறு ஜேசுட் கத்தோலிக்க மதகுருமாரின் படுகொலைக்குப் பாதுகாப்பு மந்திரி ஜெனரல் பொன்ஸ் பொறுப்பு என்று மக்கள் அறிந்ததை அறிக்கை ஊர்ஜிதம் செய்துள்ளது. மதகுருமார் அறுவரைக் கொல்லும் படியும் சாட்சிகள் ஒருவரையும் விட்டுவைக்க வேண்டாமென்றும் இவர் இராணுவத்தினருக்குக் கட்டளையிட்டுள்ளார். அறிக்கை வெளிவர மூன்று நாட்கள் இருக்கும்போது பொன்ஸ் இராஜிநாமாச் செய்துள்ளார். ஆனால் மதகுருமாரின் கொலைக்கு இவர் மீது வழக்குத் தொடரப்படுவது சந்தேகமே. பத்து ஆண்களுக்கு மனித உரிமை மீறல் குற்றங்கள் புரிந்த அரச மற்றும் நிர்வாக சேவை அதிகாரிகளைத் தடை செய்யும்படி தரப்பட்ட சிபாரிசையும் ஜனாதிபதி கிறிஸ்ரியானி ஏற்கப்போவதில்லை. வாரம் முடியும் வரை இவர் ஜெனரல் பொன்ஸ் கொடுத்த இராஜினாமாவையே ஏற்கவில்லை.

வெளியார் தலையீடில்லாமல் எல் சல்வடோர் தன்னைத்தான் சுத்தப்படுத்துவது இயலாத காரியம். பேராசிரியர் புயர்கென்தால் சொல்கிறார்; ''ஜனாதிபதி கிறிஸ்ரியானி மீது சர்வதேச மட்டத்தில் அழுத்தம் கொண்டுவரப்படல் வேண்டும். இதற்கு அமெரிக்கா மாத்திரம் போதாது. ஜனநாயக சமுதாயத்தைக் கட்டியெழுப்பாமல் பொருளாதார மேம்பாடு அடையமுடியாதென்பதை அவர் உணரவேண்டும்.'' கடந்த பத்து வருடங்களில் செய்யப்பட்ட சீர்திருத்தங்கள்—தேர்தல்கள் நீதி விசாரணைகள் சமாதான ஒப்பந்தங்கள் யாவும் நிதி உதவியை நிறுத்தப் போவதாக அமெரிக்கா கொடுத்த மிரட்டலால் தான் நிகழ்ந்துள்ளன. பல்லாண்டு நடந்த யுத்தத்தின் வீழ்ச்சியிலிருந்து மீளத்துடிக்கும் ஒரு நாட்டிற்குக் கொடுக்கப்படும் உதவியை நிறுத்துவது கசப்பான மருந்தாகும். ஆனால் இது நிலைமையைப் பொறுத்துத் தேவைப்படுவதொன்றாகும். உண்மையை மட்டும் சொன்னால் போதாது—அறிக்கை சொல்வதை வைத்து எல்சல்வடோர் என்ன செய்யப் போகின்றது என்பதுதான் முக்கியம்.

ரொம் மான்லன்ட், றிம்பட்ஜெட்,
தொமஸ் லோங்க்—
எல்சல்வடோரிலிருந்து.

நியூஸ்வீக், மார்ச் 29, 1993

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் அமைதிகாக்கும் சேவையின் பிரிவு. தை 1993

நாடுகள்	துருப்புக்கள்	வருடாந்த செலவு (மில்லியன் டொலர்)
சோமாலியா	28000	1500
யூகோசிலாவியா (முன்னைய)	22609	602
கம்போடியா	19253	1411
லெபனான்	5251	146
மேற்கு சகாரா	1603	29
சைப்பிரஸ்	1539	19
கோலான்மேடு	1119	36
எல்சல்வடோர்	425	39
ஈராக் — குவைத்	343	40
இஸ்ரேல் எல்லை	48	31
அங்கோலா	224	39
இந்தியா — பாகிஸ்தான்	38	7
மொசாம்பிக்	23	146

எக்கனமிஸ்ட், மே 1, 1993

அங்கோலாவில் பக்க மாற்றம்

கிளின்ரன் அரசு சவிம்பியைக் கைவிடுகின்றதா?

அண்மைக் காலம் வரை ஜோனாஸ் (Jonas Savimbi) வாஷிங்டனில் உள்ள தனது நண்பர்களைப் பெரிதும் நம்பியிருந்தார். பதினாறு வருடங்களாக அங்கோலாவில் நடக்கும் உள்நாட்டு யுத்தத்தில் இவர் தலைமை தாங்கும் யுனிற்ரா (Unita) இயக்கத்திற்கு அடுத்தடுத்து நாலு அமெரிக்க நிர்வாகங்கள் உதவி வழங்கி வந்துள்ளன. இந்த உள்நாட்டு யுத்தம் ருஷ்ய உதவியுடன் பதவிக்கு வந்த எம் பி எல் ஏ (MPLA) அரசுக்கும் அமெரிக்க உதவியுடன் இந்த அரசைக் கவிழ்க்கப் போராடும் யுனிற்ரா இயக்கத்திற்குமிடையில் நடைபெறுகின்றது. எம். பி. எல். ஏ என்றால் அங்கோல விடுதலைக்கான வெகுஜன இயக்கம் (Popular movement for the Liberation of Angola) என்ற கருத்துப்படும். யுனிற்ரா என்றால் அங்கோலாவின் பூரண விடுதலைக்கான வெகுஜன இயக்கங்களின் தேசிய ஒன்றியம் (National Union for Total Independence of Angola) என்று கொள்ளலாம். இன்றும் நடந்து கொண்டிருக்கும் இந்த யுத்தத்தில் அங்கோலா பேரழிவைச் சந்தித்திருக்கின்றது. 300,000 அங்கோலர்கள் இறந்துள்ளனர். ஒரு கோடிக்கு மேற்பட்டோர் வீடு வாசல் இழந்துள்ளனர். சென்ற வாரம் கிளின்ரன் அரசு சவிம்பியின் நம்பிக்கையைச் சிதைத்துள்ளது. ஐவரி கோஸ்ற் (Ivory Coast) நாட்டில் தலைநகர் அபிட்ஜானில் நடந்த சந்திப்பில் அமெரிக்க அரசின் அதிகாரிகள் சவிம்பியின் தூதுவர்களை சண்டையை நிறுத்தும்படியும், சென்ற செப்ரம்பர் மாதம் நடந்த சுதந்திரமான பல கட்சி அரசியல் தேர்வில் வெற்றி அடைந்த எம். பி. எல். ஏ. அரசுத் தலைவர் ஜனாதிபதி ஜோசே எடுவார்டோ டொஸ் சான்ரோஸ் (Jose Eduardo Dos Santos) என்பாருடன் சமாதானத்திற்கு வரும்படியும் வலியுறுத்தினர். சவிம்பி மறுத்தால் டொஸ் சான்ரொஸ் அரசுடன் அமெரிக்க இராஜாங்க உறவுகள் பலப்படுத்தப்படுமென்றும் இவ்வரசுக் கெதிரான ஆயுதத் தடை நிறுத்தப்படுமென்றும் அமெரிக்க அரசுச் செயலாளர் வாறன் கிறிஸ்தோப்பர் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார். ''சாட்சி சொல்லிக் காலம் கடத்த முடியாது. யுனிற்ராவுக்கு உதவியவர்கள் தங்கள் பொறுமையை இழந்து விட்டனர்'' என்று லுவான்டா நகரிலுள்ள அமெரிக்க அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

சவிம்பி மீது அமெரிக்கா கொண்ட வெறுப்பு சென்ற செப்ரம்பரில் ஆரம்பித்துள்ளது. சவிம்பி தனது தேர்தல் தோல்வியை ஏற்க மறுத்து எம். பி. எல். ஏ ஆதரவுப் படைகளைத் தாக்கியுள்ளார். இது ஐ. நா. படைகள் மேற்பார்வை செய்த போர் நிறுத்த உடன்பாட்டைச் சீர்குலைத்துள்ளது. சென்ற நவம்பர் மாதம் ஆரம்பித்த முழு அளவிலான யுத்தத்தில் 20,000 ற்கு மேற்பட்ட பொது ஜனங்கள் இறந்துள்ளனர். இத் தொகையில் அரைவாசிக்கு மேற்பட்டோர் எம். பி. எல். ஏ படைகள். யுனிற்ராவிடமிருந்து குவாம்போ நகரைப் பறிப்பதற்காக நடந்த வெற்றிகரமான இரண்டு மாத யுத்தத்தில் இறந்தனர். கயிம்பாம்போ என்ற அரச கட்டுப்பாட்டிலுள்ள நகருக்குத் தப்பியோடிய பொதுமக்கள் பின்வருமாறு தெரிவித்துள்ளனர். கூட்டமாகச் சென்றுகொண்டிருந்த அகதிகளைக் கோடரியால் யுனிற்ரா கெரில்லாக்கள் சிரச்சேதம் செய்தனர் என்றும், காயப்பட்டோரைக் கட்டுப்பெல்லா ஆற்றில் தள்ளிக் கொன்றனர் என்றும் நியூஸ் வீக் பத்திரிகையாளரிடம் அறிவித்தனர். பிராங்கிலின் கில்கோன் என்ற அகதி ''அவர்கள் பிடித்தவர்களைக் கொன்று விடுவார்கள்'' என்கிறார். இவர் தனது மனைவியுடனும் ஒரு வயது மகளுடனும் தப்பி வந்துள்ளார். யுனிற்ரா படையினர் இப்போது மூன்று மாகாணத் தலைநகர்களைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார்கள். அத்துடன் அங்கோலாவின் வெளிப் பிரதேசங்களில் 70 வீதம் அவர்களிடம் உள்ளது. மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட யுத்தம் வயல்களில் விதைப்பை நிறுத்தியுள்ளது — நிவாரணங்களுக்குப் பொறுப்பானவர்கள் பட்டினியும் பஞ்சமும் வருமென்று எச்சரித்துள்ளனர்.



உள்நாட்டு யுத்தம் இரண்டாம் சுற்று: சோயோவை திருப்பிப் பிடித்தபின் டொஸ் சான்ரோசின் படத்தைக் காண்பிக்கும் எம்.பி.எல்.ஏ. இராணுவத்தினர்.

அதிர்ஷ்டம் குறைந்த யுத்த நிறுத்தம்

கட்டுப்பாடற்று மூர்க்கமாகச் சலிம்பி செயற்பட ஜனாதிபதி டொஸ்சான்ரோஸ் தான் ஒரு நம்பகமான ஜனநாயக வழிக்கு வந்தவரெனக் காட்டியுள்ளார். 1991 இல் தோல்வியுற்ற யுத்த நிறுத்தத்தின் பின், கியூபா (Cuba) நாட்டுப் படைகளையும் ஆலோசகர்களையும் இவர் திருப்பி அனுப்பியுள்ளார். வெளியரங்கமாகப் பொதுவுடைமைக் கோட்பாடுகளை இவர் துறந்துள்ளார். பல பொருளாதாரச் சீர்திருத்தங்களையும், சந்தைக் குதவும் வழிகளையும் இவர் கைக்கொண்டுள்

ளார். ஜனநாயக வழிக்குத் திரும்பியபின் பல கட்சித் தேர்தலில் பங்குபற்றியுள்ளார். லுவாண்டா நகர் அமெரிக்கப் பிரதிநிதி எட் மன்ட் டீ ஜார்னற் ஜூனியர் இவை யாவற்றாலும் கவரப்பட்டுள்ளார். கடந்த நாலு மாதங்களாக இவர் அமெரிக்க அங்கோலா அரசுடன் முழு இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்த வேண்டுவென்று சிபாரிசு செய்துள்ளார். சென்ற வாரம் அமெரிக்க நாடாளுமன்றம் (காங்கிரஸ்) இதை ஏற்றுச் செயற்படத் தொடங்கியுள்ளது. என்றாலும் தற்போதும் கிளின்ரன் நிர்வாகம் தயக்கம் காட்டி வருகின்றது. ''எங்களுடைய முதற் குறிக்கோள் யுத்தத்தை நிறுத்தி இரு பகுதியையும் பேசவைத்து ஒரு தீர்வைக் கொண்டு வருவதுதான். இராஜதந்திர உறவுகள் இரண்டாம் பட்சமே'' என்று மூத்த அரச அதிகாரி தெரிவித்துள்ளார்.

வாஷிங்டன் தனது அரசை அங்கீகரிக்க மறுத்ததையிட்டு டொஸ் சான்ரொஸ் பெரிதும் மனம் வெதும்புகின்றார். அண்மையில் பத்திரிகை ஒன்றிற்கு அவர் வழங்கிய செவ்வியில் அவர் சொன்னார்: ''எனது அரசை அங்கீகரிக்காத ஒரு நிலைப்பாடு யுனிற்றாவுக்குச் சாதகமானதாகும். அங்கோலாவில் சமாதானத்தை நிறுவும் பொறுப்பு அமெரிக்காவுடையதாகும்''ஆனால் தற்போது உள்நாட்டு யுத்தத்தில் இரண்டாவது சுற்றை நடத்துவதில் அவர் ஈடுபட்டுள்ளார். 20-க்கும் 45-க்கும் இடைப்பட்டோருக்கும் கட்டாய இராணுவச் சேவையைக் கொண்டு வரும் சட்டத்தை நாடாளுமன்றம் மூலம் இவர் கொண்டுவந்துள்ளார். போர்த்துக்கல் நாட்டின் தொலைக்காட்சியில் இவர் தோன்றி ''ஜனநாயகத்தைக் காப்பாற்ற'' ஆயுதங்கள் அனுப்பும்படி உலக சமுதாயத்தைக் கேட்டுள்ளார்.

மீண்டும் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட யுத்தத்தில் இனரீதியான அழிப்புத் தென்படுகின்றது. இது அபாயகரமானதும், தேசிய ஒருமைப்பாட்டைப் பங்கப்படுத்தக் கூடியதுமாகும். சென்ற நவம்பரில் லுவாண்டா நகர் போராளிகளுக்கு எம். பி. எல். ஏ ஆயுதம் வழங்கியது. இந்த ஆயுதங்களால் நூற்றுக்கணக்கான ஓவிம்புண்டு. பாகொங்கோ இனங்களைச் சேர்ந்த பொதுமக்கள் கொல்லப்பட்டனர். அரச இரா



ஜோனாஸ் சவிம்பி

ணுவ ஜெனரல் ஊசேபியோ பிறிற்ரோ ரெக்ஸ்சீரா சொல்கிறார்: ''ஒருவராவது கைதிகளைப் பிடிப்பதில் அக்கறை காட்டுவதில்லை'' என்று. ஜோனாஸ் சவிம்பியே ஓர் ஓவிம்புண்டு இனத்தைச் சேர்ந்தவராவர். முன்பு அங்கோலாவை ஆண்டு, இப்போதும் நாட்டைவிட்டுச் செல்லாமல் இருக்கும் போர்த்துக்கீசரை அவர் கண்டித்துள்ளார். சென்ற தை மாதம் யுனிற்றா படையினர் மத்திய வகுப்புப் போர்த்துக்கீசரையும் கலப்பின அங்கோலரையும் பென்குவெலா, லொபிற்றா நகரங்களில் கொன்றுள்ளனர்.

சவிம்பியும் ஜனாதிபதி டொஸ் சான்ரோசும் ஏற்கக் கூடியதோர் சமாதானத் தீர்வைக் கண்டுபிடித்து அங்கோலாவில் அமைதியை உண்டாக்குவது அமெரிக்காவின் பொறுப்பாகும். மீண்டும் ஐக்கிய நாடுகளின் துருப்புகள் ஒரு நடுக்கமுள்ள சமாதானத்தைக் காக்க வேண்டியிருக்கும். இவை யாவற்றையும் அமெரிக்கா முன்கூட்டியே அங்கோலாவின் கொந்தளிப்பான அரசியல் நிலையில் பிரவேசித்திருந்தால் தவிர்த்திருக்க முடியுமா? அமெரிக்கா காலம் கடத்தியதால் நிலைமை அடங்காமல் போய்விட்டதெனலாம். பனிப்போர் நடந்த காலத்தில் தனது நண்பனாகிய சவிம்பியை நட்டாற்றில் விட அமெரிக்கா துணியவில்லை. இதை அறிந்த சவிம்பி அங்கோலாவில் சிறிது காலம் நிலைத்த அமைதியையும், பரீட்சார்த்த ஜனநாயகத்தையும் உடைக்கக்கூடியதாக விருந்தது. இதை வேறு ஆபிரிக்க நாட்டுக் கொடுங்கோலர்கள் கவனித்திருப்பார்கள். அவர்களும் இதையே செய்வார்கள்.

லுவான்டாவிலிருந்து கரன் பிரெஸ்லோவும்
ஜோ கொன்ரேராகும் சயிம்பம்
போவிலிருந்து
கிறிஸ் மக்கிறியல், வாஷிங்டனிலிருந்து ஜேன் விற்மோர்,

நியூஸ்வீக், ஏப்ரல் 5, 1993

★

புதியதோர் நாட்டின் உதயம்

ஆபிரிக்கா எரித்திரியாவை வரவேற்க வேண்டும்

இன்றைய உலகில் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்புகள் சர்வ சாதாரணமாகி விட்டது. ஆபிரிக்காவின் ஒரு மூலையில் நடக்கும் ஒரு வாக்கெடுப்பு பத்திரிகைத் தலையங்கச் செய்தியாக வரமுடிய வில்லை. ஏப்பிரல் 23 - 25 ற்கு இடைப்பட்ட காலத்தில் எரித்திரிய மக்கள் எதியோப்பியா விலிருந்து பிரிவதா என்ற விடயம் பற்றி வாக்களிக்கும்காலம் உதயமாகும். நாடு அளவில் மிகச் சிறியது, ஆனால் வாக்களிப்பின் பெறுமதியோ மிகப் பெரியது. மக்கள் ஆம் என்று வாக்களிப்பார்கள் என்பது திண்ணம், இன்னுமொரு நாட்டில் இருந்து பிரிந்து உதயமாகும் முதலாவது ஆபிரிக்கா கண்ட நாடு இதுவாகும். காலனிய ஆட்சியாளர்கள் ஆபிரிக்காவை விட்டு வெளியேறிய பின் இவ்வாறு பிறக்கும் முதலாம் நாடு இதுவென்ற பெருமை இவர்களுக்கு உண்டு. எரித்திரியாவின் பிறப்பு ஆபிரிக்காவைச் சீர்குலைத்து பற்பல சிறிய நாடுகள் தோன்ற வழிகாட்டி விடுமெனப் பயப்படுவதில் உண்மை உண்டு.

இக் கண்டத்தில் எல்லைகளும் ஒரே இனமக்களும் மாறுபட்டுள்ளன பற்பல சிறிய நாடுகள் தோன்ற இதுவே போதும். காலனிய ஆட்சியாளர்கள் தங்கள் வசதிக்கு கீறிய எல்லைக்கோடுகள் இன்று நாடுகளைப் பிரிக்கின்றன. ஆனால் இவைகளை மாற்றியமைக்கத் தொடங்கினால் ஆபிரிக்காவில் உறுதியின்மையும், சண்டைகளும் மலிந்து விடும். பிரிவை மனதிற் கொண்டு நடத்தப்பட்ட யுத்தங்களின் ஞாபகம் இன்றும் ஆபிரிக்கர்களின் நெஞ்சில் உண்டு. நைஜீரியாவில் பயாபிறா யுத்தம், கொங்கோவில் காதங்கா யுத்தம் தகுந்த உதாரணங்கள் ஆகும். ஆபிரிக்கர்கள் பொஸ்னியா பக்கம் தங்கள் பார்வையைச் செலுத்தினால் குளிர்யுத்தம் முடிந்தபின் நடக்கும் இனப் போரைக் காண்பார்கள்,

ஆனால் ஆபிரிக்கர்கள் எரித்திரியா விஷயத்தில் சற்றே ஆறுதல் அடையலாம். இந்த நாடு சுதந்திரமடைய பல பலமான காரணங்கள் உண்டு இதுபோன்ற வேறு உதாரணங்களும் ஆபிரிக்காவில் உண்டு. இதுபோன்ற நாடுகள் கிளம்புவதால் ஆபிரிக்காவில் பேரழிவு வந்து விடும் என்று சொல்லிவிட முடியாது.

எரித்திரியா ஒரு தனிநாடுதான், ஆனால் எதியோப்பியாவை சேர்ந்ததால்

எரித்திரியா ஒரு தொடக்கம் அல்லது ஒரு முன்மாதிரி என்ற பயம் ஆபிரிக்கர்களுக்கும் முக்கியமாக எதியோப்பியர்களுக்கும் உண்டு. பல இனங்கள் வாழும் நாடு எதியோப்பியா. ஒவ்வொரு இனமும் தனிநாடாகப் பிரியும் போது எதியோப்பியாவே மறைந்து விடும். அவர்கள் மனதில் இக்கனவு இருக்கலாம். ஆனால் எரித்திரியா மக்களுக்குள்ள உறுதியான காரணங்கள் அவர்களுக்குக் கிடையாது. அவர்களின் தனிநாட்டுக் கோரிக்கை அவர்களின் சரித்திரத்தில் ஊன்றியுள்ளது எக்காலத்திலாவது எரித்திரியா எதியோப்பியாவின் ஓர் அங்கமாக இருந்ததில்லை. எத்தியோப்பிய மக்கள் முசோலினி காலத்தில் சில வருடங்கள் இத்தாலியின் பிடியில் இருந்ததென்னவோ உண்மைதான். ஆனால் எரித்திரியா இந்த நூற்றாண்டின் முதற்பகுதியில் இத்தாலிய சாம்ராச்சியத்தில் உட்பட்ட அடிமை நாடாகவே இருந்தது. 1952 ஆம் ஆண்டில் இரண்டாவது உலக யுத்தத்தில் இத்தாலியிடமிருந்து இதைக் கைப்பற்றிய பிரிட்டிஷார் எரித்திரியாவை எதியோப்பியாவிடம் ஒப்படைத்து விட்டனர். 1952இல் எதியோப்பியாவிடம் ஒப்படைக்கு முன் பிரிட்டிஷார் இந்த நாட்டை பதினொரு வருடங்கள் ஆட்சி செய்துள்ளனர். இதற்கு அவர்கள் சொல்லும் காரணம் பின்வருமாறு: எதியோப்பியாவை முசோலினி கைப்பற்றிக் கொடுங்கோலாட்சி செய்யும்போது ஐரோப்பா வாய்மூடி மௌனியாக இருந்து விட்டது. இதற்குப் பரிகாரமாகவே எதியோப்பியாவுக்கு எரித்திரியா கொடுக்கப்பட்டுள்ளது என்பதே! இத்தாலியர்கள் எரித்திரிய மக்களுக்கு தங்கள் உணவுப் பழக்கங்களையும் மாத்திரமல்ல, ஒரு தனித்துவத்தையும் அளித்துள்ளார்கள். எதியோப்பியாவுடனான கட்டாயச் சேர்க்கையால் அவர்களுடைய தனித்துவம் அழியவில்லை. இவர்களுடைய சுதந்திரம் நாற்பது வருடங்களுக்கு முன்பாக எந்த எல்லைகளுக்கிடையில் எவ்வாறு இருந்தார்களோ அந்த நிலைக்குக் கொண்டு செல்லும்.

இன்னும் சொல்லப்போனால் எதியோப்பியா கைப்பற்றிய நாள் தொட்டு எரித்திரியா தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்துப் போராடி வந்துள்ளது. அவர்கள் விட்டுக் கொடுக்கவேயில்லை. மே மாதம் 1991 ஆம் ஆண்டில் எதியோப்பிய இராணுவத்திற்கெதிரான போரில் அவர்கள் பூரண வெற்றியடைந்தார்கள். இந்த வெற்றி முப்பதுவருட யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்துள்ளது. அன்று தொட்டு உண்மையில் எரித்திரியா ஒரு தனிநாடாகி விட்டது. எரித்திரிய மக்கள் விடுதலை முன்னணி என்ற இயக்கம் இந்தப் போரில் வெற்றி ஈட்டிய பின் எரித்திரியாவை தனிநாடாகவே ஆட்சி நடத்தி வருகின்றது. வாக்குக் கணிப்பு ஒரு சம்பிரதாய பூர்வமான நடவடிக்கை. பிரிவை சட்ட பூர்வமாக்குவது தான் இதன்

குறிக்கோள். யுத்தத்தில் வெற்றி கொண்ட பின் எரித்திரியா தனது அலுவல்களை மிகவும் அமைதியாக கட்டுப்பாடாக நடத்திவந்துள்ளது. இந்த வாக்கெடுப்பை நடத்த இரண்டு வருடங்கள் அவர்கள் பொறுத்துள்ளார்கள் முதலில் நெடியதோர் யுத்தத்தினால் சீரழிந்த தங்கள் நாட்டை கட்டியெழுப்புவதுதான் அவர்களுடைய முதற்கடமை. அவர்கள் எதியோப்பிய அரசுடன் நல்லுறவை வளர்க்கவும் தவறவில்லை.

காலப்போக்கில் வேறு நாடுகளும் எரித்திரியாவைப் பின்பற்றிச் செயற்பட ஆபிரிக்காவில் வாய்ப்புண்டு. ஆனால் எரித்திரியா போன்ற தகுந்த வலுவான காரணங்களும், போராடும் திறனும் இருக்குமோ என்பது சந்தேகம். பெரிய நாடுகளில் செல்வம் கொழிக்கும் சிறுபகுதிகள் தனி நாடாகப் பிரிந்து ஒருசிலர் ஒரு விதக் கொள்கையில் ஈடுபட உலகம் அனுமதியாது. ஆனால் எரித்திரியா போன்றவற்றிற்கு உலக ஆதரவு உண்டு. சோமாலியா நாட்டின் வடக்குப் புற பிரிட்டிஷ் சோமாலிலாந்து (முன்னாள் பெயர்) தனிநாடாகும் வாய்ப்பு உண்டு. தென்சூடான் பிரிவதற்கு நெடுங்கால யுத்தம் நடத்தி வருகின்றது. வடக்குடன் சேர்ந்து வாழ முடியாதென்ற காரணத்தினால் இவர்களும் எதிர்காலத்தில் தனி நாடாகலாம். சில எல்லைகள் மெதுவாக மாறிவிட்டன. மேற்கு ரோகோ (முன்பு பிரிட்டிஷ் ரோகோலாந்து) இப்போது கானா நாட்டுடன் இணைந்து விட்டது. பிரிட்டிஷ் தென்கமரூன், பிரஞ்சு கமரூன் நாட்டுடன் ஒன்றாகி விட்டது. ஆனால் பிரிட்டிஷ் வடகமரூன் நைஜீரியாவுடன் இரண்டறக்கலந்து விட்டது, பிரிவுக்கு ஊக்கம் அளிக்கக் கூடாது தான். ஆனால் எரித்திரியா போன்ற நாடுகள் தனிநாடாக வருவதைத் தடுக்க முடியாதென்பதும் சரித்திர உண்மையாகும்.

எக்கனமிஸ்ற் ஏப்பில் 24, 1993

மரணம் சற்று ஓய்வு எடுக்கிறது

தென் ஆபிரிக்காவில் அரசியல் இம்சை குறைகிறது

ஆறு ஆண்டுகளுக்கு முன் தென்னாபிரிக்காவின் நேட்டால் மாகாணத்தில் வெடித்துக் கிளம்பிய அரசியற் கொடுமைகளில் முழ்கிய கிராமிய சமூகங்களுள் ஒன்று பிற்றர் மாரிற்ஸ் பேர்க் நகரத்துக்கு வெளியே உள்ள 'ங்க்மைலல'. 1990 இல் மட்டும் சூலுமொழியினரான ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸின் ஆதரவாளர்களுக்கும், மங்கோசுது புத்தெலெஸியின் இங்கதா சுதந்தீரக் கட்சிக்குமிடையில் நிகழ்ந்த உள்ளூர்க் கலவரங்களில் 85 பேர் கொல்லப்பட்டனர். இன்றுங்க்ஸ மலல எப்படியோ வயிற்றைக் கழுவப் போதிய சொற்ப வருவாயுள்ள சிறு விவசாயப் பண்ணைகளும் வசிப்பிடங்களும் கொண்ட வறுமையில் முழ்கிய மக்கள் சமூகமாகி விட்டது. ஆனால், அதில் வசிக்கும் 35, 000 பேரும் சமாதானத்தை ஈட்டிக்கொண்டனர். பெரும்பகுதி நேட்டாலைப் பாழ்படுத்தும் அராஜகமும், குழப்பமும் பரவலாகக் காணப்பட்டாலும், ங்க்ஸ மலலவில் அரசியற் காரணங்களுக்காக உயிரிழந்தவன், 1991 ஜனவரியிலிருந்து ஒரே ஒருவன் மட்டுமே. அதே காங்கிரஸ் இங்கத்தா கட்சிகளின் அனுதாபிகள் உள்ளூர்ப் பாடசாலைகளிலும் நீர் (வளச்) சபைகளிலும் அருகருகே அமர்ந்து கருமம் ஆற்றுகிறார்கள். "இங்கதா ஆதரவாளர்களும். ஆ. தே. கா. ஆதரவாளர்களும் சந்திக்கும் போது கைகுலுக்கிக் கொள்கின்றோம்" என்கிறார் கொலேகா சிதோலி. அறுபதுகளின் நடுப்பகுதி வயதுடைய ஆ. தே. காங்கிரஸை ஆதரிக்கும் இவர் இப்பொழுது அனுபவ முதிர்ச்சியுடையவர். இங்கே எல்லாம் சரியான ஒழுங்குக்கு வந்து விட்டது என்று சொல்லமுடியாது; ஆனால், நம்பிக்கை அதிகரிக்கிறது என்றார்.

நம்பிக்கையைச் சிறிதும் வாக்குப் பண்ண இயலாத இச் சமுதாயத்தில் ங்க்சமலல போன்ற அதிக குறு நிலங்கள் தெளிவாகத் துலங்குகின்றன. ஆனால் நீண்ட காலத்துக்கு அல்ல. அரசியற் கொடுமைகள் தென்னாபிரிக்காவில் சென்ற ஆண்டுமுதல் குறைந்துள்ளன. கிடைக்கும் அறிக்கைகளின் படி மூன்று ஆண்டுகளில் ஆகக் குறைந்த மட்டத்தை எட்டி உள்ளன.

ஒருமைப்பாடு

இந்த ஆச்சரியமான முடிவு தென் ஆபிரிக்க இனத் தொடர்பு நிலையத்தினதும், மனித உரிமைகள் ஆணைக்குழுவினதும் (ம. உ. ஆ.) கண்டு பிடிப்புகளாகும். இவ் விரு நிறுவனங்களும் அரசியற் கொடுமைகளை அவதானித்துக் கணிப்பவை. எனினும் கருத்தார்ந்த முரண்பாடு மீகுந்தவை. சமீப ஆண்டுகளில் இனத்தொடர்பு நிலையம் ஆ. தே. கா. எதிர்ப்புப் பக்கச் சார்புடையது எனக் குற்றம் கூறப்பட்டு வந்துள்ளது. ம. உ. ஆணைக்குழுவின் அங்கம் வகிப்போருள் பிரபல ஆ. தே. கா. அனுதாபிகளும் உளர். ஆயினும் இரு அமைப்புகளும் கொடூர சம்பவங்களில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 1992 இன் பிற்பகுதியிலும் இவ்வாண்டின் முன் மூன்று மாதங்களிலும் கணிசமான அளவு குறைந்துள்ளதாக அறிவிக்கின்றன. இனத் தொடர்பு நிலையத்தின் அறிக்கைப்படி 1993 இன் முதல் கால் ஆண்டில் அரசியற் கொடூர மரண சராசரித் தினசரி 4. 25 ஆகும். இது சென்ற ஆண்டுச் சராசரியின் சரிபாதியாகும். இவ்வாண்டில் தான் ஆ. தே. கா. வெகுசனப் போராட்டத்தை ஆரம்பித்தது. எதிர்ப்புத் தெரிவித்தல், பகிஷ்காரம், தொழிலாளர் வேலை நிறுத்தம் என்பன தூண்டிவிடப்பட்டன. "வரலாற்றில் வேறு எப்போதும் இல்லாத அளவுக்குப் படையணிகள்

எங்கும் பரவலாக நிறுத்தி வைக்கப் பட்டன. மக்கள் போதிய அளவு துன்பப்பட்டு விட்டார்கள்'' என்று விளக்குகிறார் இனத் தொடர்பு நிலையப் பேச்சாளர் போல் பெரேரா.



டீ கிளார்க்

இப் போக்கு எங்கும் பரந்து காணப்படவில்லை. அது தொடர்ந்து நிலைபெறும் என்பதில் ஐயம் உளது. ஆ. தே. கா. இங்கதா பூசலில் தொட்டில் என வர்ணிக்கப் படும் நேட்டால் சமீபத்தில் ஓர் ஆண்டின் மிகக் கடும் குருதி தோய்ந்த மாதத்தை அனுபவித்தது. பங்குனியில் தினசரி இருவர் வீதம் இறந்தனர். சித்திரையில் கொடூரம் அதிகரித்தது. காரணம் பொதுவுடைமைக் கட்சி ஆதரவாளர் கிறிஸ் கானி கொல்லப்பட்டபின் கலகங்கள் அதிகரித்தன.

ஆயினும் உற்சாகம் பெறுவதற்குச் சில அடிப்படைகள் உள. உள்ளூர் அனைத்துலக சமாதானக் கணிப்பாளர்கள் அநேக உயர்மட்ட நிலைகளில் எதிர்ப்புத் தெரிவித்த சமீப மாதங்களில் இரு சாரார் மத்தியிலும் பதட்டம் குறைந்து இம்சையைக் கூட தவிர்க்க வழி கோலியது. 1991 புரட்டாதியில் தேசிய சமாதான செயலகம் அமைக்கப்பட்டது. ஆயினும் தேசியமட்டத்தில் அது வலுவற்றுக் காணப்பட்டாலும், அதிலுள்ள கீழ் மட்ட உத்தியோகத்தரில் சிலர் போட்டியிடும் அரசியல் கட்சிகளுக்கிடையில் ஏற்படும் வேறுபாடுகள், பிணக்குகளைத் தீர்த்து வைக்கின்றனர். ங்க்ஸமலல, நேட்டால் மாகாணத்தில் முன்னர் கலகத்துக்குப் பேர்போன சூலு சமூகங்கள் இரண்டு என்பவற்றில் தீர்மானமெடுத்துக் கருமாற்றுவதில் வல்ல சமூகத் தலைவர்கள் சிலர் சமாதானத்தைப் பேணுவதில் நிச்சயமான பங்களிப்பைச் செய்துள்ளனர். ங்க்ஸ மலலவில் ஆ. தே. கா. மற்றும் இங்கதா கட்சிகளில் சுறுசுறுப்பாகப் பணியாற்றி வருவோரிடையே சமாதானப் பேச்சுக்களில் சமன் செய்வோராகப் பணியாற்றிவரும் லிபரல் சுதந்திர ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த பிரதேச அதிகாரி ரட்லி கீய்ஸ் கூறுகிறார்: ''எம்மிடையே நல்ல உறுதியான தலைவர்களை எடுக்கும் தீர்மானங்கள் நிலைத்திருக்கச் செய்யும் திறன்படைத்தவர்கள். (சமூகத்துக்கு) வெளியே உள்ளவர்கள் உட்புகுந்து குழப்பங்களை ஏற்படுத்த முனைந்தபோது உள்ளூர்த் தலைவர்கள், அவர்கள் ஒன்றில் சமாதானமாக அங்கிருக்க வேண்டும், அல்லது வெளியேற வேண்டும் என்று துணிந்து சொல்லி விட்டார்கள்.''



மண்டெலா கறுப்பரும், வெள்ளையரும் உள்ள வகுப்பில் உரை ஆற்றுகிறார்

தென் ஆபிரிக்க அரசியல் எதிர்காலம் பற்றிய பேச்சு வார்த்தைகள் மீண்டும் தொடங்கியுள்ளன. ஆனி மாதக் தொடக்கத்தில் ஒருவருக்கு ஒரு வாக்கு என்ற அடிப்படையில் தேர்தல் நடத்தும் திகதி அறிவிக்கப்படும். அடுத்த ஆண்டு மார்ச், அல்லது ஏப்ரலைக் குறியாகக் கொண்டு காரியங்கள் நடைபெறுகின்றன. கடந்த கால சம்பவங்கள் சுட்டுவதன்படி தேர்தல் பிரச்சாரம் தீவிரமடையும்போது அரசியற் குழப்பங்கள் அதிகமாகும். ஜனநாயகம் கூடிய தென்னாபிரிக்கா நிலையற்றதும், ஆட்சிசெய்ய முடியாததுமாகிய இடமாகும் என்ற எதிர்பார்ப்புப் பலமுறும். நம்பிக்கை மிகுந்த மற்றொரு நோக்கின்படி தேர்தல் முடிந்து, புதிய அரசாங்கமொன்று தேர்ந்தெடுக்கப் பட்டதும், இரத்தம் சிந்துதல் ஓய்ந்துவிடும். ''அரசியல் இம்சை யாதாவதொரு நோக்கமும் அற்றதாகிவிடும். விடயம், அனைத்தும் தேர்தலின் மூலம் தீர்மானிக்கப்படும்'' என்கிறார் மனித உரிமை ஆணைக்குழுவின் தேசியத் தலைவர் மாக்ஸ் கோல்மன் 1990 இல் பிறிற்றோறியாவின் பிடியிலிருந்து விலகிச் சுதந்திரம் பெற்ற நமீபியாவில் நிகழ்ந்தது அதுதானே. தென் ஆபிரிக்கா மெல்ல மெல்ல ஜனநாயகத்தை நோக்கி அடி எடுத்து வைக்கும்போது தென் ஆபிரிக்கா தனது அயல் நாட்டிடமிருந்து ஏதாயினும் பாடம் கற்கக் கூடும்.

❋ ❋ ❋

—பீற்றர் மரிற்ஸ் பேர்க்கிலிருந்து
யோசப் கொன்டீறெறாஸ்,
டைம், ஜூன் 14, 1993.

ஒரு ஆபத்தான புரட்சி

வர்த்தக உலகம் இடை உயிர்ப்பான தொடர்புச் சாதனங்களைச் சந்தைப்படுத்தப் பாடுபடுகின்றது, ஆனால் படுகுழிகள் இருக்கின்றன.



ஒரு பூச்சிய பில்லியன் டொலர் கைத்தொழில்: சேகா கம்பனியின் ''முட்பன்றி வீடியோவின் பாத்திரங்கள்.

மன்ஹற்றன் நகரில் பியரி ஹொட்டலில் மைக்றோ சொஃப்ட் கம்பனியைச் சேர்ந்த வல்லுனர் குழு ஒன்று மனிதனும் கம்பியூட்டரும் உரையாடுவதைப் போன்று தகவல் பரிமாறிக் கொள்ளும் இடையுயிர்ப்புத் தொடர்பு சாதனங்களின் எதிர் காலத்தை விளக்கிக் கொண்டிருந்தது. பொழுது போக்குத் துறைக் கைத்தொழிலைச் சார்ந்த 700 பேர் இதை அமர்ந்திருந்து கேட்டுக் கொண்டிருந்தனர். இது நடந்து கொண்டிருந்த போதே பார்வையாளர் உள்ளக் கிளர்ச்சியடைந்ததை அவதானிக்கக் கூடியதாயிருந்தது. வெறுமனே தொலைக் கட்டுப் பாட்டுக் கருவியில் அழுத்துவதன் மூலம் உங்கள் தொலைக் காட்சியில் அற்புதங்களை நிகழ்த்த முடியும் என கம்பனியின் வல்லுனர்கள் கூறினர். நூற்றுக் கணக்கான கேபிள் சனல்கள் மூலம் நீங்கள் தகவல்களைப் பெறுதல், நிகழ்ச்சிகளைப் பார்த்தல் போன்ற அந்தந்தச் சனல்களில் உபயோகங்களைப் பெறமுடியும். ஒரு திரைப் படத்தை பார்த்தவாறே பங்குச் சந்தை நிலபரத்தைப் பார்வையிட முடியும். ஒரு பேஸ் பந்து வீச்சாளர் பந்து எறியும் போது அவரின் வெவ்வேறு நிலைகளைப் படமிட்டுக் காட்டுமாறு உங்கள் தொலைக்காட்சியிடம் கேட்கலாம். ஒரு பொத்தானை அழுத்தி அடுத்த ஞாயிறு நடைபெறவிருக்கும் இசை நிகழ்ச்சியில் இரண்டு இருக்கைகளுக்கு உத்தரவு கொடுக்க முடியும். அல்லது இப்பொழுதே ஓர் உணவுப் பொதியை வழங்கு மாறு உணவகம் ஒன்றுக்கு உத்தரவிட முடியும்.

ஆனால் வர்த்தகர்களை வாயூறச் செய்தது உணவுப் பொதிகள் அல்ல. இடையுயிர்ப்பான தொடர்பு சாதனங்களின் சகாப்தம் மலருகையில் வர்த்தகர்கள் மிக உருசியான பொருள் ஒன்றை மெல்லுவதாக உணருகிறார்கள். இடையுயிர்ப்பு தொடர்பு சாதனங்களின் சந்தையின் பெறுமதியை மதிப்பீடு செய்ய நினைப்பது முட்டாள் தனம். மதிப்பீடுகள் 1995 ஆம் ஆண்டளவில் 4 பில்லியன் டொலர்களிலிருந்து 14 பில்லியன் டொலர்கள் வரை வேறு படுகிறது. ஆனால் அது பிரமாண்டமானதாக இருக்கும். ஒரு தங்கம் சேகரிக்கும் போட்டியாக, அல்லது கோல்ட்மன் சாக்ஸ் சொல்வதைப் போல் கம்பனிகளுக்கு இதுவரை அறியப் படாத செல்வ மீட்டும் முறைகளை எடுத்துக் காட்டும் ஒரு கையேடாக அமையக் கூடும். அத்துடன் இது வரை அது எல்லா வர்த்தகர்களும் முயற்சிக்கக் கூடிய ஒரு சிறந்த சந்தையாகவே இருக்கிறது. இடையுயிர்ப்பான தொடர்பியலில் சோதனை உற்பத்தியில் ஈடுபடும் – தற்போது ஈடுபடும் நூற்றுக்கணக்கான கம்பனிகளில் பங்குகளை வைத்திருப்பவர்களுக்கு இப்புதிய சகாப்தம் பிரகாசமான நம்பிக்கைகளைத் தாங்கியவாறு நிற்கிறதே ஒழிய எவ்விதமான அழிவையும் அல்ல.

இக்கட்டத்தில் பிரகாசமான நம்பிக்கைகள் உள்ளன என்பதே அழுத்தி உச்சரிக்கப்படுகிறது. அமெரிக்காவில் மிகக் கூடியளவு கேபிள் சனல்களை நடத்தும் தொலைத் தொடர்புக் கூட்டுத் தாபனத்தின் (டி.சி.ஐ) தலைமை நிறைவேற்றுக் கூட்டுத் தாபனம் 1996 ஆம் ஆண்டளவில் நூற்றுக்கணக்கான சமுதாயங்களை இணைத்து நாடளாவிய ஒளியியல் நார் வலைப் பின்னலை அமைப்பதன் மூலம் ''அதிவேகப் பாதை'' ஒன்றை அமைத்து முடிக்கும் எனவும் இதற்காக 2 பில்லியன் டொலர்கள் செலவிடப்படும் எனவும் கடந்தவாரம் அறிவித்தார். சில நாட்களின் பின் தொலைத் தொடர்புக் கூட்டுத் தாபனம் தமது பங்காளர்களான டைம் வோணர், வீடியோ விளையாட்டுத் தயாரிப்பாளர் சேகா ஆகியோருடன் சேர்ந்து சேகா என்ற பெயரில் சனல் ஒன்று திறக்கப் பட்டுள்ளதாக அறிவித்தது. இதன் மூலம் சில ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த சிறார்கள் பொத்தான் ஒன்றை அழுத்துவதன் மூலம் ''முட்பன்றி சோனிக்'' போன்ற வீடியோ விளையாட்டுக்களை நேரடியாக தொலைக் காட்சித் திரையில் பெறமுடியும்.

அடுத்த வருட ஆரம்பத்தில் இச் சனலை நாடளாவிய ரீதியில் பெற முடியும். அத்துடன் நியூயோர்க் டைம்ஸ் என்ற பத்திரிகை, டைம் வோணர் கம்பனி, ஹெலிவூட்டின் அனைவராலும் விரும்பப்படும் விசேட விளைவுகளை வழங்கும் சிலிக்கன் கிறபிக்ஸ் கம்பனி ஆகியவை இடையுயிர்ப்புத் தொடர்பு தொழில் நுட்பத்தில் கூட்டு செயல்திட்டம் ஒன்றில் ஈடுபடுவது பற்றிப் பேசி வருகின்றன என்று தெரிவித்துள்ளது. இரு கம்பனிகளும் இது பற்றி எவ்வித கருத்தும் வெளியிடவில்லை.

இதே வரிசையில் பல செய்திகள் இருக்கின்றன. பொதுமக்கள் தொடர்பு சேவை இவ்வாரம் டொமினோவின் பிஸ்ஸா கம்பனியுடனும் ஜே.சி, பெனி கம்பனி டி.வி. ஆன்சர் என்ற கம்பனியுடனும் சேர்ந்து இவ்வாறான கூட்டு முயற்சியில் ஈடுபடப் போகின்றன. இவ்வருட முடிவில் டி.வி. அன்சர் கம்பனியின் தனியாளுக்குரிய தொலைக் காட்சித் தொகுதிகளின் பாவனையாளர்கள் (தற்போது இவர்கள் வெறும் பார்வையாளர்கள் அல்லர்) ஓர் உணவுப் பொதியையோ, அழகான ஓர் உடையையோ வீட்டுக்கு கொண்டுவந்து தரும்படி உத்தரவிட முடியும். அடுத்த மார்ச் அளவில் ஓர்லாண்டோவில் உள்ள 4000 வீடுகளில் கேபிள் பெட்டிகள் இணைக்கப்பட்டுவிடும் என டைம் வோணர் கம்பனி தெரிவிக்கின்றது. இதன்மூலம் ஏனைய வசதிகளுடன் உங்கள் வீட்டிலுள்ள ஒரு வீடியோக் களஞ்சியத்துக் கொப்பான வகையில் கேட்டவுடன் வீடியோக்களைப் பெறக்கூடியதாக இருக்கும். நியூஸ் வீக் என்ற தலையங்கத்துடன் தொடராக வீடியோக்களை வெளியிட்டு வருகிறது, இதன் தாயான வாஷிங்டன் போஸ்ட் கம்பனி ஒரு கேபிள் தொலைத் தொடர்புத் தொகுதியை சொந்தமாக வைத்துள்ளது.

அப்பில் கம்பியூட்டர் கம்பனியின் டேவிட் றகின் கூறுகையில்: ''மக்கள் இதனை பூச்சிய பில்லியன் டாலர்கள் பெறுமதியான கைத்தொழில் என்று பகிடியாகக் கூறி வந்துள்ளனர். ஆனால் இப்போது நிலைமை மாறிவிட்டது. மக்கள் இப்போது இத்துறையில் பங்குகளை வாங்க முண்டியடிக்கிறார்கள்'' என்கிறார். ஒகில்வி அன்ட் மதர்டினெக்ற் கம்பனியைச் சேர்ந்த நிசன் ஹோல் ''இப்பொழுதே இதில் ஈடுபடுங்கள்; இல்லையேல் எதிர்காலத்தில் வர்த்தகத்தில் நீங்கள் ஆதிக்கம் செலுத்த முடியாது'' என அறிவுறுத்துகிறார், சில கம்பனிகள் பல படி முன்னே நிற்கின்றன. பிராந்திய தொலைபேசிக் கம்பனியான பேபிபெல்ஸ் கேபிள் கம்பனிகளை அதிவேகப் பாதையின் உள்கட்டமைப்பை கட்டியெழுப்ப, கட்டியான ஒளியியல் நார் வலைப் பின்னல்களை விரைவில் அமைக்குமாறு அவசரப் படுத்துகின்றன. மைக்றோசொஃப்ட், இன்டெல் ஜெனரல் இன்ஸ்ட்ருமன்ற்ஸ் ஆகியவை தங்களுடைய தொழில் நுட்பங்களை இணைத்து மைக்றோ சொஃப்ட் இன் பிரபல சாளரக் கட்டளை நிரலை இடையுயிர்ப்பு தொலைக் காட்சி மேற்தொகுதியில் சேர்ப்பதற்கு ஓர் ஒப்பந்தம் செய்யப் போவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. பில் கேற்றின் புதிய கம்பனியான கொண்டினம் ஒவியங்களைக் கம்பியூட்டரில் களஞ்சியப் படுத்துவதற்கான உரிமைகளை பெருமளவில் வாங்கி வருகிறது. பாரிய கம்பனிகளுடன் கூட்டாகவோ தனித்தோ ஏனைய கட்பனிகளும் இச்செயற்பாடுகளில் ஒருசிறு பகுதியிலேனும் பங்கு கொள்ள முயற்சி எடுத்து வருகின்றன. அச் செயற்பாடுகள் தேவையான கறுப்புப் பெட்டிகளை அமைப்பதாகவோ சுமார் 500 சனல்களைக் கொண்ட ''திறமையான தொலைக்காட்சிகளையும் தூரக்கட்டுப்பாட்டுக் கருவிகளையும் செய்தலாகவோ அச் சாதனங்களில் பயன்படுத்த கம்பியூட்டர் மென்பொருள்களைத் தயாரித்தலாகவோ இருக்கலாம்.

ஆனால் புரட்சிகள் தமது வரைவிலக்கணத்தின் படி நிச்சயமற்ற தன்மைகள் நிறைந்தவை. அத்துடன் இடையுயிர்ப்புத் தொடர்பு சாதனங்களின் வர்த்தக பல தோல்விகளை எழுபதுகளில் சந்தித்திருக்கிறது. அதைவிட அண்மையாகக் கலிபோர்ணியாவின் இடையுயிர்ப்பு வலைப்பின்னற் கூட்டுத்தாபனப் பங்குதாரர்கள் சோதனை மிகுந்த காலத்தை அனுபவித்திருக்கிறார்கள். வலைப் பின்னலின் அநேக சந்தாதாரர்கள் சந்தா செலுத்தாமையே இதற்குக் காரணம். கானன், என். பி. சி. போன்ற கம்பனிகளின் ஆதரவு இருந்தும் இடையுயிர்ப்புத் தொடர்புச் சாதனங்கள் முதலீட்டாளர்களின் நம்பிக்கை சென்ற வருடக் கடைசியில் பெருமளவில் குறைந்து விட்டது.

ஆனால், இடையுயிர்ப்பு வர்த்தகம் முதலீட்டாளர்களை மிகவும் வற்புறுத்தக் கூடியது. ஏனெனில் எதிர்காலத்தில் கிராக்கி ஏற்படக் கூடிய தன்மை இதில் பிரமாண்டமானதாக இருக்கிறது. இடையுயிர்ப்பியலின் பிரதான தளம் பொழுது போக்குத் துறையாக இருந்தபோதிலும் இதன் பிரயோகங்களுக்கும் சமூகத்தில் இதன் தாக்கங்களுக்கும் எல்லையே இல்லை. '' தொலைபேசிகள் '' அல்லது '' தொலைத் தொடர்பு'' என்ற தனியான கைத்தொழிலின் எண்ணக் கருவை ஸ்க்றோடர் கம்பனியின் ஆய்வாளர் டேவிட் லண்டனர் ஓர் ஒருங்கிணைந்த தொலைத் தொடர்புக் கொள்கையை வகுக்குமாறு அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டார். தற்போதைய நிலபரத்தை அவர் புகையிரதப்பாதைகள், நவீன சாலைகள் போன்ற வற்றின் தோற்றத்துடன் ஒப்பிடுகிறார். ஒரு கலைக் களஞ்சியத்திலிருந்து ஒரு குழந்தையின் பெருமூச் சுவரை ஏறக்குறைய எல்லாமே இருநிலைக் குளிகளுக்கு மாற்றப்பட்டுக் கடத்தப்பட முடியும். இடையுயிர்ப்புத்தொடர்பின் சாரம் என்னவென்றால், மனிதர்கள் ஒருவரோடொருவரும் பிரமாண்டமான இருநிலைக் குறிப்பிட்ட தகவல் மூலங்களுடனும் எங்கிருந்தும் இடையுயிர்ப்பாகத் தொடர்பு, இடையுயிர்ப்புத் தொடர்பு பெரும்பாலான கைத்தொழில்களில் தேவைப்படுகிறது. ஐ. பி. எம். கம்பனியைச் சேர்ந்த லூ ரசி ஜெல்ஸ்ரட் '' பல்வழித் தொடர்பு '' என்பது ஒரு தனித்த விடயம் அன்று, அது கம்பனிகளின் சந்தைப்படுத்தல் சேவைகள் உற்பத்தி முன்னேற்றுதல் ஆகிய துறைகளின் மீது வாசனைப்

PUBLIC LIBRARY
JAFFNA
NALLUR BRANCH LIBRARY.

பொடியைப் போல் தூவப்பட வேண்டும்'' என்று தெரிவிக்கிறார்.

பல பில்லியன் டொலர் பெறுமதியான கேள்வி: எப்படி இந்த வாசனைப் பொடியின் எல்லாத் துகள்களும் ஒன்று சேர்ந்து டி.சி.ஐ. யின் மலோனியிலிருந்து இரு நிலைக் குறியிட்ட பில் கிளின்ரன் வரை கற்பனை செய்யும் அதி வேகப் பாதையை அமைக்கும்? பாதைகள் ஒன்றையொன்று இடையூறின்றி இடைவெட்டும் ஒரே விதிகளின்படி இயங்கும் அகில உலகத் தொகுதி ஒன்றைப் பாதைகளின் ஒப்புமை சிபாரிசு செய்கிறது. இடையுயிர்ப்புத் தொலை தொடர்பு இதுபோன்ற பல பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும். தொழில் நுட்பங்கள் முன்னேறும் வேகத்தினால் இப் பிரச்சினைகள் மேலும் சிக்கலாக்கப்படுகின்றன. அதிக எண்ணிக்கையுள்ள பல வகையான பெட்டிகள் தொலைக்காட்டியின் தாங்கியைப் பெரிதாக்கிவிடும் என்று சில நிபுணர்கள் எச்சரிக்கின்றனர். ஏனையோர் பெரிய கம்பனிகள் கூடுதல் விரைவாக நியமனத் தகுதிகளை வரையறுப்பதன் மூலம் புதுமைப் புகுத்தலைத் தடுத்துப் போட்டியாளர்களுக்கு நுழைவாயிலை மூடி விடக்கூடும் என்று கவலைப்படுகிறார்கள். இப்படியான படு குழிகளைக் கற்பனை செய்து பார்க்கப் பீற்றாமக்ஸ் வி. கி. ஆர். இதை ஞாபகப்படுத்தி அதனை நூறால் பெருக்கவும்.

மிகப் பெரிய சிக்கலாக இயற்கையாகவே நுகர்வோரின் விருப்புகள் இருக்கின்றன. அமெரிக்கர்கள் ஒரு நாளைக்கு எத்தனை மணி நேரம் தொலைக் கட்டுப்பாட்டுக் கருவியும் கையுமாக உட்கார்ந்து இருக்க விரும்புவார்கள் என்பதையும் இதன்மூலம் எத்தனை நூலகத்துக்கான பேஸ்போல் மைதானத்துக்கான கடைவீதிக்கான பிரயாணங்களை நிறுத்த விரும்புவார்கள் என்பதையும் எதிர்வு கூறுவது குதிரைக் கொம்பாக இருக்கிறது. பல ஆய்வாளர்கள் ஒரு தங்கம் உழைக்க விரையும் பித்து ஏற்படலாம் என எச்சரிக்கின்றனர். ''மக்கள் இப் போது புரட்சி என்ற சொல்லை பாகுபாடின்றி எல்லாவற்றிற்கும் பாவிக்கின்றார்கள் என்று டிஜிட்டல் மீடியா பத்திரிகையின் ஆசிரியர் எச்சரிக்கிறார். ஆனால் 1 பக்ஸ் இயந்திரங்கள் கம்பியூட்டர்கள், கையடக்க தொலைபேசிகள் ஏற்கனவே கற்பித்த பாடம் என்ன வெனில் ஆயுதப் போட்டியைப் போலவே தொழில் நுட்பப்போட்டியில் பின்தங்குவது வருத்தத்தை ஏற்படுத்தும். தவிர அநேகர் இப் போது அளவுக்கதிகமான கேளிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

ஜோலி சொலமன்,
மைக்கல் மேயர் சீமாநாயர்,
ஜோன் சுவார்ட்ஸ்
நியூஸ் வீக், ஏப்ரல் 12, 1993

✶

ருஷ்யாவிலிருந்து
மூளைவலுவுள்ள ஆட்சேர்ப்பு

ஆற்றெம் யொங்சுக், மோஸ்கோவில்காம்பியுட்டர்பகுப்பியலாளராக தமதுதொழிலைத்தேர்ந்தெடுத்தவர் தற்பொழுது கணனிகள் விற்கும் கடையில் விற்பனை முகாமையாளராகக் கடமையாற்றுகின்றார். வரவு செலவுக் குறைப்பு அவர் கடமையாற்றி வந்த இரு கணனித் திட்டமிடல் ஸ்தாபனங்களிலும் விஸ்தரிப்பைப் பெரிதும் குறைத்துள்ளது. அவரது மனைவி லிடியா ஷேர்பக்கோவாவின் வாழ்க்கை நிலையும் அத்தனை சிறந்ததாக இருக்கவில்லை. மருத்துவத் துறைக்குப் போதிய ரூபிள்களை ஒதுக்கப்படாமை உயிரியல் இரசாயன விஞ்ஞானியான தனது ஆய்வுகளைக் குறுக்கிவிட்டதாக அவர் குறை கூறுகின்றார். பாங்கொக்கில் நல்ல தொழிலொன்றைப் பெறுவதற்காகத் தாய்லாந்து அரசுடன் தொடர்பு கொண்டுள்ளதாகக் கூறுகின்றார். அடிப்படை விஞ்ஞான ஆய்வுகளுக்குத் தமது நாட்டில் ஆதரவு இருப்பதில்லை என்றும் ஆய்வுகளைத் தொடங்குவது முடியாத காரியம் என்பதும் அவர் கருத்தாகும்.

யொவ்சுக் 34 ஷேர்பக்கோவா 33 ஆகிய இருவரும் வேகமாக வளர்ந்து வரும் ஆசியப் பொருளாதார முயற்சியில் தொழில் வாய்ப்புத் தேடும் நூற்றுக் கணக்கான ருஷ்யத் தொழில் வல்லுனர்களில் இருவராகும். 1991 விருந்து தென்கொரியாவில் மட்டும் 400 க்கு மேற்பட்ட ருஷ்ய விஞ்ஞானிகளும் பொறியியலாளர்களும் ஆய்வு நிலையங்களிலும் தொழிற் சாலைகளிலும் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர். மேலும் இவ்வாண்டுக்குள் 150 விசேட துறையினர் நியமிக்கப் படவுள்ளனர் எனக் கணக்கிடப் பட்டுள்ளது. விஞ்ஞானத் தொழில் நுட்ப அமைச்சின் உத்தியோகத்தர் வீட்டில் கியூ என்பார் ருஷ்யர்கள் தென்கொரியாவில் பயனுள்ள சேவை புரிந்து வருவது தெளிவாக நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், யப்பானும் ஏனைய முன்னேறியுள்ள நாடுகளும் சியோலுக்கு மறுத்து வரும் தொழில் நுட்ப வளர்ச்சியை எப்படியாவது நாம் அடைந்தே தீருவோம் என்றும் கூறியுள்ளார்,

தாய்லாந்தில் ருஷ்யக் கல்விமான்களும், ஆசிரியர்களும் அணுவியல் பௌதீகம், கணிதம் ஆகியவற்றை கற்பிக்கின்றார்கள். இவ்வாண்டு சர்வ கலாசாலையிலும் தனியார் துறைக் கல்வி நிலையங்களிலும் உயர் தொழில் நுட்பக் கல்வியைப் போதிப்பதற்கு பாங்கொங்கின் உயர் கல்வி அமைச்சு புதிய விண்ணப்பங்களைப் பரிசீலித்து வருகிறது. மருத்துவம்

எலெக்ட்ரோனிக் எந்திரவியல் கணனிப் பகுப்பாய்வு வளியியக்க வியல் மின்னியல் [ஆகிய துறைக ளுக்கு முக்கியத்துவம் கொடுத் துள்ளது.

சம்பளத் திட்டம் ஒவ்வொரு வரின் ஆற்றலுக்கும் அனுபவத் திற்கும் ஏற்ப வேறுபடும் ஒவ் வொரு தனியார் நிறுவனங்களும், கொம்பனிகளும் தத்தம் வரவு செலவுத் திட்டத்திற்கேற்ப சம் பள விகிதங்களை நிர்ணயிக்கின் றன என்றார். தென்கொரிய உயர் அதிகாரி ஒருவர் ருஷ்யக் கல்விமான்களும் தொழில் வல்லு னர்களும் ஏனைய விசேட வல்லு னர்களைப் போன்று உயர் சம்ப ளம் பெறுகிறார்கள் என்பதைத் தென்கொரிய சிங்கப்பூர் அதிகாரி கள் ஏற்றுக் கொள்கிறார்கள். தெளிவாக ருஷ்ய வெளிநாட்டு உத்தியோகத்தர் தம் தாய் நாட் டில் உழைப்பதிலும் பார்க்கப் பன் மடங்கு வாய்ப்புகளையும் வசதிகளையும் பெறுகிறார்கள் என்பது உண்மை.

தென்கொரியா சென்ற டிசம்பர் மாதம் 20 றொக்கட் உருவ அமைப்பாளர்களை மாதம் ஒன்றுக்கு 1200 டொலர் சம்ப ளத்தில் கவர்ந்திழுக்க முயற்சித்த பொழுதே அதன் தொழில் நுட்ப வியலாளரைத் தேடும் வேட்டை வெளிப்படலாயிற்று. அவர்கள் வர்த்தகச் செய்தித் தொடர்பு களை விஸ்தரிப்பதற்கு விண்வெளி யில் செய்மதி ஒன்றினை உருவாக் குவதற்கு அமர்த்தப்பட்டவர்கள் என்று குழு அங்கத்தவர் ஒருவர் கூறுகிறார். அது ஒரு கற்பித்தல் சம்பந்தமான தொழில் என்கி றார். அதன் அமைப்பாளர் யூறி பெசறாபோவ் இவ் வொப்பந்தம் இவர்கள் வர்த்தக ரீதியான ஏனைய தொழில்களைச் செய்வதற்குத் தடைவிதிக்க வில்லை என்றும் கூறுகிறார். மேற்கத்தைய செய்தித் தொடர்பு முகவர்கள் பியொங்யாங் அணு ஆயுத உற்பத்தியில் ஈடுபட்டு முன் னேறுவதற்கே ருஷ்ய ஆள் வலுவை நாடியுள்ளது என்று குற் றஞ் சாட்டியுள்ளன.ர் ருஷ்யா இக் குற்றச்சாட்டை நிராகரித்துள் ளது.

இத்தகைய மாறுபட்ட கருத் துகளுக் கிடையிலும் பல ஆசிய நாடுகள் ருஷ்யத் தொழில் வல்லு னர்களை வேலைக்குத் தொடர்ந் தும் அமர்த்தி வருகின்றன. கடந்த மாதம் சிங்கப்பூரின் பொருளாதார அபிவிருத்திச் சபை 100 ருஷ்ய விண்ணப்பதாரிகளை ஆசிரியத் தொழிலுக்கு நேர்முகப் பரீட்சை செய்தது. 1995 ஆம் ஆண்டளவில் 10,000 தொழிலா ளர்களுக்கு 40 விஞ்ஞானிகள் ஆய் வாளர் என்ற விகிதத்தில் ஆட் சேர்ப்பதற்கு முயற்சி எடுத்து வரு கின்றது. இப்போதைக்கு ஆங்கில தேர்ச்சியுள்ள கற்பிக்கும் திறன் கொண்டோர் சிறு ஆய்வு வேலை களை மேற்கொள்ளக் கூடிய வகை யில் ஆட்சேர்ப்பதற்கு உத்தேசிக் கப்பட்டுள்ளது. வர்த்தக ரீதியான ஆய்வு அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ளக்கூடிய வல்லுனர் களை இனிமேல் தான் தேட வேண்டியுள்ளது. ஆயிரம் சிறு துளிகளாகத் தொடங்கியது பெரு வெள்ளம் ஆக மாறியுள்ளது. வேலை தேடுவோரின் விண்ணப் பங்கள் பெருவாரியாகக் குவிந் துள்ளன. மொஸ்கோவில் சிங்கப் பூரின் தூதுவர் யோசெப் கொன் சிகோ இவ் விண்ணப்பங்களைப் பரிசீலிப்பதற்கு அண்மையில் ஓர் ஆட்சேர்ப்பு முகவர்நிலையத்தையே வாடகைக்கு அமர்த்தியுள்ளார்.

ஏசியா வீக் ஜூன் 2, 1993

புதிய பொருளாதார ஒழுங்கு

ஏழுநாடுகள் கொண்ட குழு தனது அங்கத்துவ விதிகளை மாற்ற வேண்டும்

ஜூலை மாதத்தில் நடந்த உலகின் மிகச் செல்வந்த ஏழு நாடுகளின் மகாநாட்டில் பேசுவத் தற்கு ஜனாதிபதி சுகார்ட்டோ அனு மதி கேட்டுள்ளார். 108 நாடுகள் அங்கத்துவம் கொண்ட அணி சேரா நாடுகளின் தலைவர் சுகார்ட்டோவுக்கு அவர் கேட்ட அரை மணித்தியால பேச்சுரிமை மாத்திரம் போதாது. நாம் எனப் படும் அணிசேரா இயக்கம் அங் கத்துவம் கொடுக்கப்படல் வேண் டும். நாம் நாடுகளுக்கு மாத்திரம் இவ்வுரிமை கொடுத்தால் போதாது. ஏழு நாடுகள் கொண்ட இந்த உன்னத மன்றத் தில் சீனா, பிறேசில் அல்லது இந் தியா சேர்க்கப்பட்டு அங்கத்துவம் விரிவாக்கப்படல் வேண்டும். இதற்குப் பலமான காரணங்கள் உண்டு.

1975 ஆம் ஆண்டு தொடக் கம்—அமெரிக்கா, பிரிட்டன், ஜேர்மனி, கனடா, இத்தாலி, ஜப்பான் ஆகிய இந்த ஏழு நாடு களும் வருடாவருடம் ஒன்று கூடி ஆலோசனைகள் செய்து வருகின் றன. பேச்சளவில் இவர்க ளுடைய நோக்கம் ஒரு பொது வான பொருளாதாரக் கொள் கையை வகுப்பதாகும். அவர்கள் தங்களுக்குள் ஒற்றுமையை வளர்க்க முயல்கிறார்கள். சில சம யம் அடைந்தும் விடுகிறார்கள். அவர்கள் வளர்ச்சிக் குறிக்கோள், நாணயமாற்று விகிதம், வட்டி வீதம் போன்ற பொதுவான விட யங்களில் ஒருமைப்பாடு காண விளைவார்கள். தற்பாதுகாப்பு வரிகள் முன்னேற்றத்திற்கு நிதி உதவி போன்ற விடயங்களையும் இவர்கள் அலசுவார்கள். அரசியல் விஷயங்கள், பயங்கரவாதம் ருஷ் யாவில் நடந்த சேர்நோபில் மின் உலை விபத்துப் போன்றவற்றை யும் இவர்கள் ஆராய்வார்கள். ஜனாதிபதி சுகார்ட்டோ பேசும் சந் தர்ப்பம் கேட்டுச் செய்த விண் ணப்பம் நியாயமானதாகும். இப் பூவுலகில் வாழும் முக்கால் பங்கு மக்களைப் பாதிக்கும் தீர்மானங் களை இந்த ஏழு நாடுகளும் எடுக்கின்றன. இவர்கள் இந்த

உரிமையை எப்படிப் பெற்றார்கள் என்று பொது அபிப்பிராயம் கேட்கின்றது. இதன் வெளிப்பாடேசுகார்ட்டோவின்விண்ணப்பம் ஜீ 7 என்று சொல்லப்படும் ஏழு நாடுகளும் டாலர்—யென் மாற்று விகிதத்தை மாற்றிய போது கடனை யென் நாணயத்தில் கொடுக்கவேண்டிய நாடுகள் நூற்றுக்கு மேற்பட்ட மில்லியன்களை இழந்தன.

அங்கத்துவ நிதிகளுக்கு மிகப் பிந்திய அடி ஐ. எம். எப். எனப்படும் சர்வதேச நிதி நிறுவனம் கொடுத்ததாகும். முன்பு ஒரு நாட்டின் தயாரிப்புக்களையும் சேவைகளையும் கணக்கிடும்போது ஐ. எம். எப் டொலர் நாணயத்தை அளவு கோலாகப் பயன்படுத்தியது. இது பிழையான தகவல்களைக் கொடுக்கும். உதாரணமாக சீனாவின் உண்மையான வளர்ச்சி 1978 தொடக்கம் 1990 வரை 7.5 வீதமாகும். ஆனால் உலக விகிதாசாரத்திலும் பார்க்க இரண்டு மடங்கிலும் கூடியதாகும். ஆனால் டொலர் நாணயத்தில் கணக்கிட்ட படியால் விகிதாசாரம் சுருங்கிப்போயுள்ளது. தற்போது உலகளாவிய சகல பொருளாதார நிபுணர்களின் ஆசியுடன் ஐ. எம். எப் நிறுவனம் அந்தந்த நாணயத்தைக் கொண்ட வளர்ச்சி விகிதாசாரத்தைக் கணக்கிடத் துணிந்துள்ளது. இது முன்பு வேறு நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கப்படும். ஆகையால் சீனாவின் சராசரி தனிமனித வருமானம் டாலர் 370 லிருந்து டாலர் 1,600 ஆக உயரும். அதே சமயத்தில் அவர்களின் பொருளாதாரம் உலகின் பத்தாவது பெரியதாகவிருந்து மூன்றாவதாக மாறிவிடும். கடந்த இரண்டு வருட இரண்டு இலக்க வளர்ச்சியைக் கூட்டிப் பார்த்தால் சீனாவின் பொருளாதாரம் இன்னும் உயரும். இந்தக் கணக்கீட்டின்படி இந்தியா ஐந்தாவது இடத்திற்கும், பிறேசிலும், மெக்சிக்கோவும் முறையே ஒன்பதாவது, பத்தாவது இடங்களைப் பெறும் நாடுகளாகும். இதில் அதிசயம் என்னவென்றால் பிரிட்டன் முதலே தான் வகித்த இடத்தை இழந்துவிடும். கனடா முதல் பத்தில் தான் வைத்திருந்த இடத்தைப் பறிகொடுத்துவிடும். இந்தப் புதிய கணக்கீட்டால் உலகப் பொருளாதாரம் மூன்று துருவங்கள் கொண்டது—அமெரிக்கா, ஐரோப்பா, ஜப்பான் என்ற நிலை பொய்யாகிவிடும். அமெரிக்காவின் 22 வீதப் பங்களிப்பு ஆசியாவின் 18 வீதத்திலும் பார்க்கச் சிறிது கூடியதாகும். இந்தக் கணக்கியலின்படி இன்றில்லாவிடினும் இன்னும் சில வருடங்களில் சீனப் பொருளாதாரம் ஜப்பானை மிஞ்சிவிடும்,

ஐ.எம்.எப்.கொண்டுவந்த மாற்றத்தின் முன்பே ஜீ 7 நாடுகளின் நிலையில் தடுமாற்றம் ஆரம்பித்துள்ளது. இன்று பொதுவுடைமை ஒரு சரித்திரச் சின்னமாகி விட்டது. பொதுவுடைமை நாடுகள் என்று சொல்லிக் கொள்ளும் கியூபா, லாவோஸ், வட—கொரியா, சீனா, வியட்நாம் போன்றவை வசதிக்கேற்ப முதலாளித்துவக் கோட்பாடுகளையும், சந்தைப் பொருளாதாரத்தையும் கடைப்பிடிக்கின்றன. லண்டன் மாநகரத்தில் பணிபுரியும் முதலீட்டு நிதிய நிர்வாகி ஐம்பது பங்குச் சந்தைகளைத் தனது கவனத்தில் எடுக்கலாம். பொருளாதார நிர்வாகத்திற்கு திறமைசாலிகள் என்று ஜீ 7 நாடுகளைச் சொல்ல முடியாது. அண்மையில் வெளியேற்றப்பட்ட பிரிட்டிஷ் நிதி மந்திரி நோர்மன் லாமென்ற் நிர்வாகத் திறனற்றவர் என்பது பிரசித்தம்.

ஜீ 7 எனப்படும் முதலேழு நாடுகளும் சீனா ஜனநாயக நாடல்ல வென்றும், தொழில்வளம் அற்ற நாடென்றும் வாதிடுவர். சீனாவின் சராசரித் தனிமனித வருமானம் தங்களுடையதிலும் பார்க்கக் குறைவானதென்றும் அவர்கள் கூறுவர். இந்தியா இன்னுமோர் விவசாய நாடு. பிறேசில் இன்று ஜனநாயக நாடு. நாளை சர்வாதிகார நாடு என்று மாறி மாறிப் போய்க்கொண்டிருக்கிறது. இந்த நாடுகள் யாவற்றிலும் பெரும்பான்மையான மக்கள் ஏழ்மைக் கோட்டில் சீவிக்கின்றார்கள். ஆனபடியால் இவர்களுக்கு அங்கத்துவம் கொடுக்க முடியாதென்றும் வாதிடுவர். ஆனால், இந்தக் காரணத்திற்காகவே அவர்களுக்கு அங்கத்துவம் கொடுக்கப்படல் வேண்டும். இந்த நாடுகள் ஜீ 7 நாடுகளுக்குப் பிரதேச சமுதாயப் பொருளாதாரச் சமநிலையைக் கொடுப்பார்கள். ஜீ 7 நாட்டுப் பிரதி நிதிகள் மாநாட்டில் எடுத்துக்கொள்ளும் புகைப்படத்திற்கு புதிய அங்கத்தவர்கள்ஒரு நம்பகத்தையும் பிரதேசவாரிப் பிரதி நிதித்துவத்தையும் கொடுப்பார்கள். மிகவும் துரிதமாக உலகம் ஒரு சுதந்திரமான சந்தையாக மாறிக்கொண்டு வருகின்றது. இதைத் தடுக்க எவரையும் அனுமதிக்கமுடியாது. உலகளாவிய ஒரு சர்வதேசப் பொருளாதார ஸ்தாபனம் அத்தியாவசியமாகும். ஜீ 10 என்று பத்து பொருளாதார முதன்மை பெற்ற நாடுகளின் மன்றத்தை உருவாக்கி இந்தப் பாதையில் செல்லலாம். ஆகையால் ஜீ 7 இன் அங்கத்துவ விதி மாற்றம் அவசியமான தொன்றாகும்.

★

ஏசியா வீக் ஜூன் 9, 1993

எயிட்சின் எதிர்காலம்



எச்.ஐ.வீ என்பது ஒரு புதிய நோய்க்கிருமி (வைரஸ்) யல்ல; மிகக் கொடிய வளர்ச்சி கொண்ட பழைய ஒன்றே அதுவாகும்.

அதன் செயற்பாட்டை எம்மால் மாற்ற முடியுமா?

— ஜியோப்றி கௌலி —

பத்து ஆண்டுகளுக்கு முன்னர் பெஞ்சமின் பீ என்பவருக்கு மரண தண்டனை என்று சொல்லக் கூடிய ஒன்று கிடைத்தது. பெருங்குடலின் ஒரு பாகத்தில் சத்திர சிகிச்சை செய்யப்படுவதற்காக அவர் மருத்துவ மனையில் சேர்க்கப் பட்டார். இந்த அவுஸ்திரேலிய நாட்டு ஓய்வூதியக் காரருக்கு எயிட்ஸ் நோய்க் கிருமியால் களங்கப் படுத்தப்பட்ட இரத்தம் ஏற்றப் பட்டது. அவர் இன்னும் உயிர் வாழ்கிறார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். ஆனால் இது கதையின் அரைப் பகுதியேயாகும். எச். ஐ. வியினால் பாதிக்கப்பட்டு நீண்ட காலம் வாழும் பலரைப் போலல்லாது எந்த அறி குறியோ தடுப்புச் சக்திக் குறைபாடோ இவருக்கு ஏற்படவில்லை. 1983 ஆம் ஆண்டில் எவ்வளவு சுகதேகியாக இருந்தாரோ, அப்படியே இன்றைக்கும் தேக ஆரோக்கியத்துடனிருக்கிறார். அவர் தனது 81 ஆவது பிறந்த தினத்தையும் கொண்டாடியுள்ளார். நியூ சவுத்வேல்ஸ் பல்கலைக் கழகத்தின் எயிட்ஸ் நோய் ஆய்வாளரான டாக்டர் பிறெற்றின்டோல் சென்ற ஆண்டு எச்ஐவீ தொற்று நோய் தொடர்பான வழமையான கடந்த கால இரத்த மாற்றுப் பற்றிய ஆய்வு ஒன்றைச் செய்து கொண்டிருந்த போது அவரது கவனத்தை ஈர்த்த ஐந்து நோயாளிகளுள் பெஞ்சமின் பீயும் ஒருவர். இந்த ஐந்து பேருமே, ஒரே இரத்த தானக்காரரிடமிருந்து தொற்று நோய்க் கிருமியைப் பெற்றுக் கொண்டவர்கள். ஏழிலிருந்து பத்து ஆண்டுகள் வரை இவர்களில் யாருமே எந்த விளைவுகளுக்குமே உள்ளாகவில்லை.

இதில் சம்பந்தப் பட்ட இரத்த தானம் செய்த நபர் ஓர் உல்லாசப் பேர்வழி. 1970 இன் பிற் பகுதியோ அல்லது 1980 இன் முற்பகுதியோ இந்த விஷக்கிருமியை உடம்பிலேயே ஏற்றுக் கொண்டவர். இதைத் தொடர்ந்து தான் இந்த நோய்க்கு ஆளாகியுள்ளார் என்பதை அறியும் வரையில், 26 தடவைகள் இரத்த தானம் செய்துள்ளார். எப்படியோ டாக்டர் ரின்டோய் இவரைக் கண்டு பிடித்துப் பரிசோதனை செய்த போது அவருக்கு ஆச்சரிய மளிக்கும் விதத்தில், அவரது இரத்தம் ஏற்றப்பட்ட ஐவரைப் போலவே அவரும் தேக ஆரோக்கியத்துடனிருக்கக் காணப்பட்டார். "எச்ஐவீ எயிட்சை வருவிக்கிறது என்பது எமக்குத் தெரியும். சில நோயாளிகள் நீண்ட காலம் வாழ்கிறார்கள் என்பதையும் நாம் அறிவோம். ஆனால் அது ஏன் என்பது தான் புரியாத புதிராகவுள்ளது. அவர்கள் உட்கொள்ளும் உயிர்ச்சத்து இதற்குக் காரணமாக முடியுமா? அல்லது அவர்களிடம் பொதுவான வம்சக் கலங்கள் இருக்கக் கூடுமா? இது அந்த நோய்ப் பரப்பியோடு கூடிய அளவு தொடர்புடைய ஒன்று என்று கொள்ளலாம். தீங்கற்ற பெரு முயற்சியாகும் இது என்று கூறுகிறார் ரின்டோல்.

பரவக் கூடிய தொற்று நோயான எயிட்சின் ஆரம்ப பரிணாமம், எதிர்காலம் பற்றிய துப்புத் துலக்கக் கூடிய பண்டைய நோயொன்றின், சம அளவிலான நோய்க்கிருமியையும் அவர் கண்டு பிடித்திருக்கலாம். சாதாரணமாகக் கணிக்கப்படுவது போன்று எச்ஐவீ (எதிர்ப்புச் சக்திப் பற்றாக்குறை யினால் மனிதனைத் தாக்கும் நோய்க் கிருமி) ஒரு புதிய உடலிலேயே தோன்றும் பயங்கர தொற்று நோய்க்கிருமியல்லவாக இருக்கலாம். அது பழையது. பயங்கர குணாதிசயங்களைச் சமீபத்திலே பெற்றுக் கொண்டிருக்க வேண்டும். போல் இவால்ட் ஒரு பரிணாம உயிரியல் விஞ்ஞானி. அம்ஹோஸ்ற் கல்லூரியைச் சேர்ந்தவர். அவர் எழுதிய நூல் ஒன்று சமீபத்தில் வெளிவருகிறது. அதில் பல பத்து ஆண்டுகளாகவோ, அல்லது பல நூற்றாண்டு காலமாகவோ எச்ஐவீ எயிட்சை உண்டாக்கத் தொடங்குவதற்கு முன்னர் மக்களுக்குத் தொல்லை கொடுக்காத விதத்தில் தொற்றியிருக்கக் கூடும் என்று வாதிக்கிறார். 1960 களிலும் 1970 களிலும் ஏற்பட்ட சமூக எழுச்சிக் காலத்தில் எச்ஐவிக்கு தொற்றும் சக்தி ஏற்பட்டிருக்கலாம் என்றும் இந்தக்காலப்பகுதியில் அதன் இயக்கம் சனத்தொகை வாயிலாகப் பரவியது மட்டும் அல்லாமல் உடலிலே மிக ஆக்கிரமிக்கும் தன்மையில் மீளுற்பத்தியையும் பெருக்கியது என்றும் அவரது ஆய்வு கூறுகிறது.

இந்தக் கருத்து ஓரளவு தீவிரமான அடிப்படையைக் கொண்டதாக இருக்கலாம். ஆனால் அது மறைந்து மறந்துவிடக் கூடிய ஊகமல்ல. இயற்கையில் எனையவற்றைப்

போலவே பரசீவிகளும் இயற்கைத் தேர்வின் முலமான பரிணாமத்துக் குட்படுவன என்பதையும் சூழலுக் கேற்றவாறு தமது குணாதிசயங் களை மாற்றுவன என்பதையும் இந்த முடிவு பிரதி பலிக்கிறது. எயிட்சைப் பற்றிய எமது விளக் கத்தை மாற்ற உதவுவதோடு, இந்தப் புதிய கருத்து அந்த நோயை எதிர்த்துப் போராடுவதற்கான துணிச்சல் மிக்க தந்திரோபாயங் களையும், அளிக்க வல்லது. மரங்க ளையும், மிருகங்களையும் விட தொற்று நோய்க்கிருமிகள் பல்லா யிரம் மடங்கு துரிதமாக பரிணாம மாற்றமெய்தக் கூடியவை. ஒரு மருந்தாலோ அல்லது தடுப்பு வழி யிலான எதிர்ப்பாலோ மோதல் ஏற்படும் போது இந்த நோய்க் கிருமி தனது சுய பகுதியை விட்டு மாற்றமடைகிறது. அதனுடைய இத்தகைய திறமையைத் தமக்குச் சாதகமாக்கி அது மேலும் செயற் படமுடியாத அளவிற்கு எச்ஐவி மாற்றமுறக் கூடியதாக மருந்துகளை உபயோகிக்க முயற்சிகளைச் செய் கிறார்கள் சில ஆய்வாளர்கள். இந் தத் தொழில் நுட்பம் ஒரு பரிசோ தனைக் குழாயிலே மிகவும் நேர்த் தியாக வேலை செய்வதாக வைத் திய மாணவன் டுங்-காங் சௌ தலைமையிலான ஒரு பொஸ்டன் குழு நிருபித்துக் காட்டியுள்ளதை பத்திரிகைகள் தலைப்புச் செய்தி யாகப் பிரசுரித்தன. பரிணாம நோக்கை மையமாக வைத்து எழு கின்ற கருத்தில் மருந்துகள் மட்டுமே இதற்கு வழியும் நம்பிக்கையும் என்றில்லாமல் போகிறது. மனித விசாரணைகள், முயற்சிகள் துரித கதியில் இயங்குகின்றன. தீவிரப் பரவல் தான் எச்ஐவியை ஒரு கொல்லும் வியாதியாக மாற்றியி ருந்தால், கொண்டோம்களும், துப் பரவான ஊசிகளும், இறுதியாக புதிய தொற்றுதல்களைத் தடுப்பதி லும் பார்க்க அதிக பலனைச் செய்ய முடியும், சரியாகவும் பரவலாகவும் பாவிக்கப் பட்டால் மறைந்த நிலை யில் அவுஸ்திரேலியாவில் எயிட்ஸ் நோய்க் கிருமிகள் தோன்றிய காலத்துக்கு அதனை விரட்டி விட முடியும்.

எச். ஐ. வீ: எங்கிருந்து வந்தது?

தொற்று நோய்க் கிருமிகளே இறுதிப் பரசீவிகளாகும். சத்துக் களை உறிஞ்சி கழிவுகளை வெளிப் படுத்தி பிரிந்து மீளுற்பத்தியாகும் நுண்ணுயிர்களைப் போலல்லாது அவற்றிற் கென்று சொந்தமாக உயிர் கிடையாது. டீஎன்ஏயில் அல்லது சீஎன்ஏயில் பதியப் படும் வம்சத் தகவல்களின் சிதறல் களே அவையாகும். உயிருள்ள கலங்களோடு தன்னை இணைத்து அதன் இயக்கத்திலேயே தங்களைப் பிரதி பண்ணக்கூடியவை இவை. இதில் முதலாவது கிருமி எங்கிரு ந்து வந்ததென்பது யாரும் ஊகித் துக் கொள்ள வேண்டிய ஒன்று. ஆனால் இன்றைய நோய்க்கிருமி கள், மரங்கள் மிருகங்களைப் போலவே முந்தைய உருவங்களின் வம்சா வழியினவேயாகும்.

எதிர்ப்புச் சக்திப் பற்றாக்கு குறையினால் மனிதனைத் தாக்கும் நோய்க்கிருமி – எச்ஐவி 1, எச் ஐவி – 5 அடிப்படையில் குரங்கில் அல்லது வாலில்லாக் குரங்கில் தோன்றிய தென்பதே விஞ்ஞானி களின் ஒருமித்த கருத்தாகும். இந்த இரண்டு எச்ஐவீக்களுக்கும் வம்ச ஒற்றுமை இருக்கிறது. இத னோடு காணப்படும் மரம் எடுத் துக் காட்டுவது போல எச்ஐவிக் கள் தமக்கிடையேயுள்ள ஒற்றுமை களிலும் பார்க்க சிமியன் எனப் படும் வாலில்லாக் குரங்கிலுள்ள தொற்று நோய்க் கிருமிகளோடு நல்ல ஒற்றுமையைக் காட்டுகின் றன. பிரதானமாக மேற்கு ஆபிரிக் கப் பிரதேசங்களிலேயே வாழுகின்ற 'சூட்டி மங்கபே' எனப்படும் ஒரு வகைச் சாம்பல் நிறக்குரங்குக்குத் தொற்றும் எஸ்ஐவியை ஒத்ததா கும். அதனால் அது ஒரு தனியான தொற்று நோய்க்கிருமி இனமாகக் கருதப்படுவதற்குத் தகுதியற்றது. ''நீங்கள் எச்ஐவி – 2 ஐப் பார்க்கும் போது ஒரு மனித தொற்று நோய்க் கிருமியைக் காண மாட்டீர்கள். மங்கபேநோய்க்கிருமியைமனிதனில். காண்பீர்கள்'' என்கிறார் லொஸ் அலாமோஸ். தேசிய ஆய்வு கூடத் தின் எச்ஐவீ அடிப்படைத்தரவுகள் கருத்திட்ட மேலானவரான ஜெரால்ட் மையேஸ். உலகத்தில் எயிட்ஸ் நோய்களில் மிகப் பெரும் பான்மை யானவற்றுக்குப் பொறுப்பான எச் ஐவி – 1 நோய்க்கிருமி எச்ஐவி – 2 உடனோ அல்லது குரங்கு எஸ்ஐவி உடனோ அதிகம் ஒருமைப் பாட்டைக் காட்டுவதில்லை. ஆனால் அதற்கும் மேற்கு ஆபிரிக்க நாடான கம்போ னில் வசிக்கும் மனிதக் குரங்கில் இருந்து 1990 ஆம் ஆண்டில் கண்டு பிடிக்கப்பட்ட எஸ்ஐவி (சிம்பன்சீ) க்கும் தோற்ற ஒற்றுமை நிரம்ப இருப்பதைப் பார்க்கலாம்.

பாலூட்டிகளுடனான நேரடித் தொடர்பு காரணமாகவே மனித இனத்தை இந்த நோய்க் கிருமிகள் தொற்றின என்பதாலேயே எஸ்ஐவீக் கள் தமது மூதாதையர்களிடமிருந்து வெவ்வேறு அளவினராகப் பிரிந்த னர். எச்ஐவீயும், எஸ்ஐவீயும் வெவ் வேறாக பரிணாமம் பெற்றன என்ப தும் அல்லது மனித இனமே முதற் காவிகள் என்பதும் சரியாகக்கூட இருக்கலாம். பாலூட்டிகளிலிருந்து– மக்களுக்கு என்ற நிலைப்பாட்டிற்கு சில காரணங்கள் ஆதரவாகவுள்ளன. முதலாவதாக எச்ஐவியை விட எஸ்ஐவீயில் பல்வேறு வகைகள் உண்டு என்பதால் அதன் பரிணா மம் நீண்டகாலத்தையது என்று கூறப்படுகிறது. குரங்குகளிலி ருந்தோ மனிதக் குரங்குகளிலி ருந்தோ மனிதனுக்கு இது தொற்று வதென்பது மனிதனிலிருந்து அவற் றுக்குத் தொற்றுவதிலும் பார்க்கக் கற்பனைக்கு இலகுவாக உள்ளது என்பது இரண்டாவது. மனித இனம் பல்லாயிரம் ஆண்டுகளாக ஏனைய பாலூட்டிகளை கையாண் டிருக்கின்றது; வேட்டையாடி வந் திருக்கின்றது. கடிக்கப்பட்டிருந் தால், சுரண்டப்பட்டிருந்தால், மிருகம் வெட்டப்படும் போது தன் னையும் வெட்டிக்கொண்டிருந்தால் நோய்க்கிருமிகள் தொற்றியிருக்க முடியும்.

சமீபகாலம் வரையில் பாலூட் டிகளிலிருந்து நேராக மனிதர் எஸ்ஐ வியைப் பெற்றுக் கொள்ள முடி யுமா என்பது பற்றி தெளிவில்லாம லிருந்தது. ஆனால் அண்மையில் நடந்த சில விபத்துக்கள் அந்தச் சந்தேகத்திற்கு முற்றுப்புள்ளி வைத் துவிட்டன. கடந்த கோடைகாலத்

தில் நோய்க் கட்டுப்பாட்டிற்கான நிலையங்கள் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் பாலூட்டிகள் ஆய்வு நிலைய மொன்றின் சோதனைத் தொழில் நுட்பவியலாளரான பெண் ஒருவர் நோய்க்கிருமி தொற்றிய மக்காக் எனப்படும் குரங்கின் இரத்தம் இருந்த ஓர் ஊசியால் காயப்பட்டு விட்டார் என்றும் ஆனால் அதிர்ஷ்டவசமாக நோய் தொற்றவில்லை என்றும் கூறப்பட்டுள்ளது. ஒருசில மாதங்களுக்கு எஸ்ஜவீக்கு மட்டும் எதிர்க்கிருமிகளை அவர் உற்பத்தி செய்ய முடிந்ததாம். இன்னொரு சோதனைத் தொழிலாளி தோல் வியாதியால் பாதிக்கப்பட்டிருந்த போது குரங்கு இழையங்களைக் கையாண்டதால் 2 ஆண்டுகளுக்கு எஸ்ஜவீக்குச் சாதக நிலையிலிருந்திருக்கிறார். பாலூட்டிகளைக் கையாளும் ஆட்களிடமிருந்து பெறப்பட்ட 472 இரத்த மாதிரிகளைப் பரிசோதனை செய்யப்பட்ட போது அவர்களுள் மூன்று பேருக்கு சாதக நிலையும் இருந்ததாக சுகாதார அதிகாரிகள் கண்டுள்ளனர். எஸ்ஜவீயுள்ள மனிதருக்குக் கால கதியில் எயிட்ஸ் வருமோ என்பது யாருக்கும் தெரியாது. இனங்களுக் கிடையிலான பரிமாறல் மறைவாக உள்ளது என்பது வெளிப்படை.

இந்த மாற்றங்கள் எப்போது நிகழத் தொடங்கின என்பது விளங்க முடியாததாகவே உள்ளது. எயிட்ஸ் நோய் ஒரு புதிய பரவும் வியாதி என்பதால், இதற்குப் பொறுப்பான நோய்க் கிருமிகள் கடந்த பல பத்து ஆண்டுகளுக்குள்ளேயே மனித உடலில் பிரவேசித்திருக்க வேண்டும் என்பதே மிகவும் பொதுவான கருத்தாகும். அது ஒரு நியாயமான சந்தேகம் தான் என்றாலும் அதனால் எழும் வினா மிகவும் பாசத்தன்மையுள்ளதாக இருக்கிறது. ஆபிரிக்காவில் பாலூட்டிகளைக் கையாளும் வழக்கம் பல்லாயிரம் வருடங்களாக இருந்து வருகிறதென்றால் மாற்றங்களுக்காக எஸ்ஜவி ஏன் இப்போது வரை காத்திருந்தது?

கடந்த காலங்களில் இல்லாதிருந்த சில வழிமுறைகளை மனிதன் சமீபத்தில் தான் திறந்துவிட்டான் என்பது ஒரு சாத்தியக்கூறு. 1950 களின் கடைசிப் பகுதியில் ஆபிரிக்காவில் செயற்படுத்தப்பட்ட இளம்பிள்ளைவாத நோய்த் தடுப்பூசித்திட்டம்தான் எயிட்ஸ் நோய்க்கு வித்திட்டது என்பது சில கோட்பாட்டாளர்களின் வாதமாகும். அந்த 4 ஆண்டுகால முயற்சியின் போது ஆபிரிக்கப் பச்சைக் குரங்குகளின் சிறுநீரக இழையங்களிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட வாய்மூலம் கொடுக்கும் சிறுபிள்ளைவாத நோய்க்கான மருந்து 325,000 பேருக்கு கொடுக்கப்பட்டுள்ளது இந்தத் தடுப்பூசி மருந்து எஸ்ஜவீயால் கெடுக்கப்பட்டிருந்தாலும் கூட அதனையே எயிட்சுக்குக் காரணமாக்குவது அவசரத்தனமானதாகும். இவ்வாறு கெடுக்கப்பட்டதென்பது நிரூபிக்கப்படவில்லை என்பது வேறு ஆபிரிக்கப் பச்சைக் குரங்குகளில் காணப்படும் எஸ்ஜவீக்கள் வம்சத்தியாளர்கள் என்று கொள்ளப்படத் தக்கதாக ஆரம்ப மனித எயிட்ஸ் நோய்க்கிருமிகளான எச்ஜவீ -1, உடன் மிகவும் குறைந்த உருவ ஒற்றுமையை காட்டுகின்றன. ஆரம்ப காலச் சிறுபிள்ளைவாத ஊசிமருந்துகளோடு எச்ஜவீ யைத் தொடர்பு படுத்துவதனால் உண்மையான குரங்குகளில் இந்நாள் வளரக் கண்டு கொள்ளப்படாத குரங்குத் தொற்று நோய்க் கிருமிகள் அதனில் இருந்ததாக யாராவது நிரூபித்தாக வேண்டும்.

எச்ஜவீ என்பது பழைய தொற்று நோய்க் கிருமிகள் என்ற மாற்றுக் கருத்தும் நிரூபிப்பதற்குக் கடினமான ஒன்றுதான். ஆனால் அதற்குத் தேவையானவை வதைக்கப்பட்ட சில ஊகங்கள் மட்டுமே. எல்லாவகையான ஏனைய பாலூட்டிகளும் எஸ்ஜவீ யையும் எச்ஜவீ யையும் உள்ளடக்கும் ஒரு வகை ''வென்ரிவைரஸ்'' எனப்படும். தொடக்க நோய்க் கிருமிகளைத் தம்மிடம் கொண்டுள்ளன என்பது எமக்குத் தெரியும். மனிதர்கள் மட்டும் ஏன் இதற்கு விதிவிலக்காக கொள்ளப்படவேண்டும் என்று சொல்கிறார் சான் பிரான்சிஸ்கோவின் கலிபோனியாப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஓர் எயிட்ஸ் நோய் ஆய்வாளரான டாக்டர் ஜேய் லேவி. எயிட்ஸ் தொற்று நோய் தோன்றுவதற்கு முன்னரே எச்ஜவீ கைவசம் இருந்த தென்றால் எழும் முக்கிய வினா அவை எங்கே இருந்து வந்தன என்பதல்ல; இந்த வியாதியை எப்போதுமே அவைதான் உண்டாக்கினவா என்பது தான்.

ஒருகாலத்தில் எச்ஜவீ கொல்லும் தன்மை குறைந்ததாகஇருந்ததா?

எச்.ஐ.வீ தான் எப்போதுமே எயிட்சை உண்டாக்கியதென்றால் வரலாற்றுப் பதிவுகளில் நோய்க் கிருமிகளும் நோயும் ஒன்றாகவே தோன்றின என்று ஒருவர் எதிர் பார்க்கலாம். 1959 ஆம் ஆண்டிலே மிகவும் அரிதான இரத்த மாதிரிகளில் எச்ஜவீக்கு எதிர்ப் பொருள்கள் கண்டுபிடிக்கப் பட்டன. எனினும் ஆபிரிக்க எயிட்ஸ் 1980 களின் ஆரம்பத்தில் தான் விளக்கப்பட்டுள்ளன. றுவாண்டா சுயர், சாம்பியா, உகண்டா போன்ற நாடுகளின் நகரங்களெல்லாம் இந்த நோயினால் அழிக்கப் பட்டுக் கொண்டிருந்தபோது தான் இது சாத்தியமாயிற்று. எயிட்ஸ் போன்ற நோய்களின் வருணனைகள் ஆபிரிக்க மருத்துவ ஆவணங்களில் காணப்படுகின்றனவா என்று தேசிய புற்றுநோய் நிலையத்தின் தொற்று நோய் நிபுணரான டாக்டர் றொபெட் பிக்கார் தேடிப் பார்த்த போது அவரால் எதையும் கண்டுகொள்ள முடியவில்லை. ஒரு குறிப்பிட்ட நிலையினது என்று அங்கீகரிக்க முடியாத அளவில் இந்த நோய் அந்தக்காலம் தொட்டே இருந்து வந்திருக்கும் சாத்தியம் உண்டு. ஆனால் இதற்கு மாற்றீடான கருத்தும் கவனத்திற் கொள்ளத்தக்கதாகும். எச்ஜவீ எப்போதுமே கொல்லும் தன்மையுடையதாகவே இருக்கவில்லை என்பதற்குக் குறிப்பீடுகள் இருக்கின்றன.

காளான் தொடக்கம் காண்டாமிருகம் வரைக்கும் உயிர்ப் பொருள்களின் எண்ணிக்கையில் வம்ச ரீதியில் தனித்துவம் வாய்ந்த பலவற்றை உள்ளடக்கும் தன்மை உயிர்ப் பொருள்களுக்கு உண்டு. தத்தமது விசேட குணங்களையும் அவைதம் வம்சாவழியிலே கொடுப்பனவாகும்

ஒரு நூற்றாண்டிற்கு முன்னர் சார்ல்ஸ் டாவின் கண்டு பிடித்தது போல, தனி மனிதர்கள் எப்போதுமே மிகக் கூடிய அளவிலான உயிர் வாழக்கூடிய வம்சா வழியினரை விருத்தி செய்வதற்கேற்ற குறிப் பிட்ட சூழலை தமது நலத்திற்காகப் பயன்படுத்துவர். பரம்பரைகள் கலந்துகொண்டு போகப்போக பல னளிக்கும் வம்சங்கள் எண்ணிக்கை யளவில் மேலும் மேலும் மாற்ற மடைந்து வழி விலகத் தொடங்கும். மீனுற்பத்தி வெற்றிக்கான சர்வதேச கலவை முறை ஏதும் கிடையாது. வித்தியாசமான சூழல்களில் வித்தி யாசமான வம்சங்கள் உருவாகின் றன. சிலவற்றைப் பேணிக்காத்தும் சிலவற்றை ஒதுக்கியும் விடும் சூழல் தன்னை ஆதரிக்கும் இனங்களை தனக்கேற்ற வகையில் அமைத்துக் கொள்கிறது.

இந்த வழிமுறைகளுக்கு நோய்க் கிருமிகள் விதிவிலக்கல்ல. டார்வி னிய நோக்கின்படி தம்மாலியன்ற அளவு தம்மைப் பிரதிபண்ணுவதே அவற்றின் கருத்தாகும். ஏனையவை யெல்லாம் சமநிலையில் அமைந் திருக்க, எவை துரிதகதியில் பெரு குகின்றனவோ அவையே மிக அதி கமாக விருந்தளிப்போரில் பெருக அதனால் தம்மோடு தொடர்புகொள் ளும் ஏனைய விருந்தளிப்போரிலும் தொற்றிக்கொள்வர் (இங்கே விருந் தளிப்போர் என்பது தொற்று நோய்க் கிருமியை ஏற்றுக்கொள் பவரைக் குறிக்கும்) அதிலே ஒரு பிடியும் உண்டு. ஒரு நுண்ணிய நோய்க்கிருமி மிகமிக வேகமாக விருந்தளிப்பவரினுள்ளே மீளுற்பத்தி செய்யத் தொடங்கியதும் அல்லது மிக அதிகமான இழையங்களை ஆக்கிரமிக்கத் தொடங்கியதும் விருந்தளிப்பவரைக் கொன்று - தன் னையும் கொன்று - வேறு எதற்கும் தாவாமல் கதையை முடித்துக்கொள் ளுகின்றது. மிக வெற்றிகரமான தொற்றுநோய் நீர், மிகவும் உக்கிர மான அல்லது மிகவும் உக்கிரம் குறைந்த ஒன்றாக இருக்காது அதுவே விருந்தளிப்பவரை மிகவும் திறமையாகத் தனது நலனுக்கு உப யோகித்துக் கொள்ளுகிறது.

எஸ்வோல்டும் ஏனையோரும் காட்டியிருப்பது போல வெவ்வேறு நுண்ணிய, நோய்க் கிருமிகளை வெவ்வேறு மட்டத்திலான -கெட்ட நிலைக்குத் துரத்த முடியும். மக்க ளிடையே சமூகத் தொடர்பால் போய் வருவதால் தடிமல், சளித் தொற்றுநோய் நீர் எம்மை தயார் நிலைக்குக் கொண்டுவந்து கொள் ளமாட்டாது. அவற்றுக்குத் தமது தொழிலைச் செவ்வனே செய்ய வேண்டுமானால் எந்தநேரமும் இரு முகின்ற, மூக்கால் நீர்வழிகின்ற, கைகுலுக்குகின்ற, பென்சில் மை மாற்றுகின்ற விருந்தளிப்போரிருக்க வேண்டும். பிடிப்பதற்கு பரசீவிக்கு வேறுவழிகள் இருந்தால் தூண்டு தல்கள் மாறுபடும். சயரோகம் அல் லது சளிச்சுரத்தைக் கவனித்துக் கொள்ளலாம். இந்த இரண்டு பயங் கர வியாதிகளையும் உருவாக்கும் நுண்ணுயிர்கள் – பக்ரீறியா - பல வாரங்களுக்கோ பல மாதங்களுக் கோ உடம்புக்கு வெளியே உயிர் வாழ வல்லன. விருந்தளிப்பவரில் அது மிகமிக விரைவாக மீளுற்பத்தி செய்யும். வெளிச்சூழலில் இருமலை வரச்செய்யும். அதன்பின் இன்னொரு விருந்தளிப்போர் எதிர்ப்படும்வரை பொறுமையாகக் காத்திருக்கும். இதே வகையில் நுளம்பு வாயிலா கவோ அல்லது வேறுவழியிலோ ஒரு மனிதனிலிருந்து இன்னொரு மனிதனுக்குத் தாவும் பரசீவி அமைதி யான தொழிற்பாட்டையே கொண் டிருக்கும் என்பதற்கில்லை. பசி கொண்டலையும் நுளம்புகளுக்கு மலேரியா நோயாளர்கள் தொடர்ந் தும் உணவளிக்கும் வாய்ப்புண்டு. நோய்க் கிருமிகளுக்கு நோயாளி யின் துன்பம் குறைந்த அளவிலான பாதிப்பையே ஏற்படுத்துகிறது. ஒரு ஈயைத் துரத்தி நகக்கிவிடக் கூடிய ஒருவர் அவ்வாறு செய்ய முடியா தவரிலும் பார்க்க விரும்பத்தக்க வராவார்.

இந்த வழிமுறைகள் கல்வெட் டுக்களிலே பதிக்கப்பட்டவையல்ல. சந்தர்ப்பம் மாறுகின்றபோது அமை திப்போக்கிலே ஒரு பரசீவி தீவிர செயற்பாடுடையதாக்கப் படுகிறது.

அப்படியே சிலவேளைகளில் தீவிரமான பரசீவி அமைதிப் போக் குக்கும் மாறுகிறது. மனித வரலாற் றிலேயே மிகுந்த அழிவை ஏற்படுத் திய பிளேக் நோய் ஒரு சளிச்சுரத் தொற்று நோய் நீரால் உண்டாக் கப் பட்டதென்பதும் 1918 ஆம் ஆண்டிலே உலகளாவிய ரீதியில் இந்தநோய் 2 கோடி சடலங்களை விட்டுச் சென்றதென்பதும் குறிப்பிட தக்கதாகும். இன்றைக்கும் இந்தப் பேரழிவை ஒருவிபத்தென்றே நிபுணர்கள் கருதுகிறார்கள். நஞ்சூட் டப்பட்ட வம்ச விருத்திக் கருக்க ளைக் கண்டபடி இடமாற்றம் செய் ததால் ஏற்பட்ட வினை இது. சளிச் சுரம் கொல்லும் வியாதியாக மாறி யது ஒரே காலத்தில் நேர்ந்த விளைவல்ல என்பது பரிணாம நோக்காகும். 1918 ஆம் ஆண்டிலே முதலாவது உலக மகாயுத்தம் தீவிர மடைந்து கொண்டிருந்தது. ஐரோப் பிய அகழிகளில் பெரிய எண்ணிக் கையிலான படையினர் நெருக்க மாய் அடைபட்டுக் கிடக்க வேண் டியதாயிற்று. இந்த இடத்திலே மிகவும் நாசமாக்கப்பட்ட நிலையி லிருந்த விருந்தளிப்பவர் கூட ஏனைய பலருக்கு நோய் பரவச் செய்யும் மிக நேர்த்தியான சந்தர்ப் பத்தைப் பெற்றிருந்தார். சளி தொடர்பான தொற்றுநோய் நீருக்கு தடுப்புக்கு உதவும் காரணிகள் அந் தச் சந்தர்ப்பத்தில் மறைந்திருக்கக் கூடும். விருந்தளிப்பவரைப் பயனற் றவராக்காமல் மிகத் தீவிரமான நோய்க்கிருமி நீர் மூலம் அவரை மேலும் தொற்றுநோய் பரப்புபவ ராக்கலாம்.

எச் ஐவி சமீபகாலத்தில் இவ் வாறான ஒரு மாற்றத்துக்குள்ளாகி யிருக்கவேண்டும்.என்று எஸ்பேர்ல்ட் சந்தேகம் கொள்ளுகிறார். சுவா சிக்கும் பகுதியில் உள்ள கலங்களில் தொற்றி இருமல், தும்மல் மூலம் பரவும் சளிச்சுரத் தொற்றுநோய் நீர்போலல்லாது எச்ஐவி வெண் சீவ அணுவுக்குள் புகுந்து விடுகிறது. நோய் தொற்றப்பட்ட கலங்கள் (அல்லது அது உற்பத்தி செய்யும் புதிய தொற்று நோய் நீர்) ஆட்க ளுக்கிடையில் பரவலாம். ஆனால் இது பாலியல் உறவு அல்லது உடல் திரவப் பண்டமாற்றின் போது மட்டுமே சாத்தியமாகும். காவிகள் எவருக்கும் அதிக பாலி யல் பங்காளிகள் இல்லா, தனித்த சனத்தொகையினரிடையே மட்டும் இருக்கின்ற எச்ஐவி போன்ற தொற்று நோய் நீர் உடம்பிலே வேகமாக உற்பத்திப் பெருக்கம் செய்வதால், அதற்குப் பலன் ஏதும்

ஏற்படப் போவதில்லை. அது எதுவும் செய்யாமல் அமைதி பெற்று விருந்தளிப்பவரைப் பலகாலம் வாழச் செய்து மிகக் குறைந்த அளவிலான தொற்றும் தன்மையோடிருக்கும். ஆனால் மக்களிடையே பாலியல் வலைப்பின்னல் இருந்தாற் போல் அதிகரித்தால் புதிய விருந்தளிப்போர் மிகவும் ஏராளமாகி நோய் தொற்றப்பட்ட விருந்தளிப்போர் அதிகம் வழங்கும் தன்மையை அடைவர். மிகவும் வேகமாகப் பெருகும் எச்ஐவீ இனம் 30 ஆண்டுகளுக்குப் பதிலாக மூன்று ஆண்டுகளிலே ஆட்களைக் கொன்று விடும். அவை இருக்கும் வரை தொற்றும் தன்மையும் அதிகரித்து முன்கூட்டியே வெளிப்படவும் செய்யும்.

இது தான் உண்மையில் நடந்ததா? சமூக மாற்றங்கள் எச்ஐவீயின் பரவலைத் துரிதப்படுத்தின என்பதில் கேள்விக்கு இடமில்லை. 1960 களிலே ஆரம்பிக்கப்பட்ட போர் உல்லாசப் பயணம் வியாபாரப் போக்குவரத்து என்பன தனித்திருந்த ஆபிரிக்கக் கிராமங்களின் மீது வெளியாரை வலுக்கட்டாயமாகத் தள்ளின. அதேவேளை வரட்சியும், கைத்தொழில் மயமாக்கலும் கிராமப்புறங்களிலிருந்து புதிதாகத் தோற்றமெடுக்கும் நகரங்களுக்குப் பாரிய அளவிலான குடியேற்றங்களுக்கு வழிவகுத்தன. மேற்கத்தைய தனிப்பெண் உறவுமுறை ஆபிரிக்காவில் ஒரு போதும் வழக்கிலிருந்ததில்லை. மிக நீண்டகாலமாக கட்டுப்பாட்டுக்குள்ளிருந்த பாலியற் பழக்க வழக்கங்களும் அதற்குக் காரணமான சமூகக் கட்டமைப்பும் நகரமயமாக்கலால் சிதறுண்டு போயிற்று என்று பிரான்சிய மருத்துவ வரலாற்று ஆசிரியரான மிர்க்கோ திறமெக் ஏன்பவர் தான் எழுதிய ''எயிட்சின் வரலாறு'' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். விலைமாதர் தொழில் அதிகரித்தது. மேக நோய் செழிப்புற்றது. தோலுக்கடியில் ஏற்றப்படும் ஊசியின் உபயோகம் பரவலாயிற்று. அதுவே அந்தக்காலப் பகுதியில் நோய் பரப்பும் ஒரு சாதனமாகவும் ஆயிற்று. தீவிரமானதும் அதேவேளை அடக்கமானதுமான தொற்றுநோய் கொல்லும் வியாதியாக மாற இந்தப் போக்குக்கள் தான் காரணமாயினவா? இதற்கான சாட்சியங்கள் சந்தர்ப்ப வசமானவை; உதறித்தள்ளிவிடவும் முடியாதவை.

எஸ்வோல்ட் கூறுவது சரியாக இருந்து எச் ஐ வீ யின் கொல்லும் தன்மை அதன் துரித பரவல் காரணமாக ஏற்பட்டதென்றால் எந்தச் சனத்தொகையின் மத்தியில் அது வேகமாக நகருகிறதோ அங்கே தான் அதன் அபாயகரமான பாங்கு தென்பட வேண்டும். ஆச்சரியப்படத் தக்க அளவிற்கு அது நடைபெறுகிறது. உதாரணமாக எச் ஐ வீ – 2, எச் ஐ வீ ஒன்றிலும் பார்க்க தீவிர செயற்பாடு கொண்டதல்ல. மிகக் குறைந்த அளவு கடுமையே வாய்ந்தது என்பது தெரிந்த விடயம். ''இதுவரை நாம் கண்டு கொண்டுள்ளதை வைத்துப் பார்த்தால் தொற்று நோய் நீரால் பாதிக்கப்பட்டவர்களுள் 90 வீழுக்காட்டினருக்கு எச் ஐ வீ – 1 எயிட்சை வருவிக்கிறது என்பதையும் எச் ஐ வீ – 2, 10 வீழுக்காட்டினருக்கு மட்டுமோ அல்லது அதனிலும் குறைந்த எண்ணிக்கையினருக்குத்தானோ எயிட்சை வருவிக்கின்றது என்று நாம் கொல்லலாம்'' என்கிறார் ஹாதேட் பல்கலைக்கழக எயிட்ஸ் நிபுணரான மக்ஸ் எஸ்செக்ஸ். ''எச் ஐ வீ –2 தொற்றுதலுக்கு ஆளாகிய ஒவ்வொருவரும் 40 அல்லது 50 ஆண்டுகளின் பின் எயிட்ஸ் வியாதியால் பீடிக்கப்படக் கூடும்- அது கூடக் குறைந்த வேகத்தின் உச்சக்கட்டத்தில் தான்'' என்றும் அவர் கருதுகிறார். மேற்கு ஆபிரிக்காவில் காணப்படும் எச் ஐ வீ - 2 இன் போக்குத்தான் மிகவும் சாதுவானது என்பதில் ஆச்சரியப்பட எதுவுமேயில்லை என்பது எஸ்வோல்டின் நோக்கமாகும். ஆபிரிக்காக் கண்டத்தின் மத்திய, கிழக்குப் பகுதிகளுக்கு எரியூட்டிய எச் ஐ வீ - 1 காரணமான போர் வரட்சி நகர் மயமாக்கல் என்பனவற்றிலிருந்து மேற்கு ஆபிரிக்கா தப்பி வந்துள்ளது. குறைந்த அளவிலான பாலியல் தொடர்புகள் உள்ள பகுதிகளில் மெதுவான



இரத்தத்தில் உள்ள வெண்குருதிக் கலமானது எச்ஐவி கிருமியின் தாக்குதலினால் வைரஸ் தொழிற்சாலையாக மாறுகிறது.

படத்தில் பெரிதாகத்தெரிவன வெண்குருதிக் கலமொன்றில் பற்றியிருக்கும் புதிய எச்ஐவி வைரஸ் கிருமிகள்.

மாற்றத்திற்காக எச் ஐ வீ - 2 பயன் படுத்தப்படுகின்றது. எச் ஐ வீ -1 உயர்ந்த அளவிலான பாலியல் தொடர்புள்ள பகுதிகளில் விரைவான மாற்றத்திற்குப் பயன்படுத்தப் படுகிறது'' என்று முடிக்கிறார் அவர்.

வெவ்வேறு சனத்தொகையினரை ஒவ்வொரு தொற்று நோய் நீரும் பாதிக்கும் விதம் இதே பாணியிலேயே அமைந்துள்ளது. காத்திரமான நிலையில் தனித்திருக்கும் மேற்கு ஆபிரிக்க நாடான செனகலில் எச் ஐ வீ -2 மிகத் தணிந்த நிலையிலேயே உள்ளது. ஆறு ஆண்டுகளுக்கு செனகல் நாட்டின் விலை மாதர் குழு ஒன்றை ஆய்வு செய்த ஹெவேட் ஆய்வாளர்கள் எச்ஐவி-2 தொற்றப்பட்ட பெண்களில் எவருக்கும் நோயின் அறிகுறிகள் இல்லாதிருக்கக் கண்டனர்- பரிசோதனைக் குழாயில் வெண்சீவ அணுக்கள் மீது செனகல் நாட்டு எச்ஐவி-2 ஏவப்பட்டபோது அது அந்த அணுக்களைக் கூடக் கொல்லவில்லை என்று அலபாமாப் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் நடத்திய ஆய்வு கூடப் பரிசோதனைகள் காட்டுகின்றன. எனினும் அதிகநகர் மயமும், குறைந்த பாரம்பரிய வழி முறைகளைக் கொண்டதுமான ஐவரி கோஸ்டில் எச் ஐ வீ -2 ஒரு கொல்லும் நோய்க்கருவியாகவே இருக்கிறது. அபிட்ஜான்நகரின் மருத்துவ மனை நோயாளர்களின் அளவீடொன்றின்போது எச் ஐ வீ -1 இன் அளவிற்கு எச்ஐவி 2ம் எயிட்ஸ்சுடன் தொடர்பு கொண்டிருந்ததை நோய்க் கட்டுப்பாட்டிற்கான அமெரிக்க நிலைய ஆய்வாளர்கள் கண்டுபிடித்தார்கள்.

எச் ஐ வீ -1 இன் உள்ளே ஏற்படும் வேறுபடும் தன்மைகள் தெளிவற்றதாக இருப்பினும் எஸ்வோல்டின் கருத்துக்கு இது வலுவூட்டுகிறது, சான்றுகள் கலப்புத் தன்மை கொண்டவையாகவே இருக்கின்றன. எனினும் கடந்த 10 ஆண்டுகளில் மாறுபடும் விதம் உயர்வாகவே காணப்பட்ட ஐ வீ போதைவஸ்து உபயோகிப்பாளர்கள் மாறுபடும் விதம் மீதப்பிலேயே இருக்கக்கூடிய உல்லாசப் பேர்வழிகளிலும் பார்க்க கொல்லும் தன்மை கொண்ட எச் ஐ வீ -1 இன் போக்கில் தொடர்புபடும் வாய்ப்பு அதிகமுடையவர் என்பதே குறிப்பீடாகும். 1990 ஆம் ஆண்டில் நோய்கள் தொற்றிய உல்லாசப் பேர்வழிகள் மீது நடத்தப்பட்ட ஆய்வில், தொடக்கச் சிகிச்சை பெறாதவர்களுள் 8 விழுக்காட்டினர் ஒவ்வொரு ஆண்டும் எயிட்ஸ் வியாதிக் காளாகிறார்கள் எனத் தெரியவருகிறது. ஐ வீ போதைவஸ்து உபயோகிப்போர் மீதான சமீபத்தைய ஆய்வு ஒன்றிற் சிகிச்சைக் குள்ளாகாமல் போகும் காவிகள் ஒவ்வொரு ஆண்டும் விகிதாசாரப்படி எயிட்ஸ்சுக் குள்ளாகும் எண்ணிக்கை 17 விழுக்காட்டுக்கும் அதிகமாகும் எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஒன்றாகப் பார்க்கின்றபோது இந்தச் சமமின்மை, ஓர் உண்மையைப் புலப்படுத்துகிறது. வெவ்வேறு நிலைகளில் வெவ்வேறு அந்தஸ்தை எச் ஐ வீ பெறுகிறதென்பதும் சனத்தொகை அதிகரிப்பிற்கேற்ப அது துரித பயணம் மேற்கொள்ளுகிறது என்பதுமே அந்த உண்மையாகும். நோயால் பீடிக்கப்பட்ட ஆட்களின் தேக ஆரோக்கியத்தைப் பல காரணிகள் பாதிக்கின்றன என்பதால் இந்தத் தொடர்பின் பலம் தெளிவாக இல்லை. ''தீவிரத் தன்மையைப் பற்றி எண்ணுவதற்கு இதுவே தகுந்த வழியாகும். தீவிரம் சுறுசுறுப்பானதாக இருத்தல்வேண்டுமே தவிர நிலையாதாக இருத்தல் கூடாது. எவ்வளவு சுறுசுறுப்பு என்பதே வினாவாகும். எச் ஐ வீ போன்ற ஒரு தொற்று நோய் நீருக்கும் பல மறைந்துள்ள சக்திகளுண்டு என்பதை நாம் அறிவோம். அதிலிருந்து பலன்களை உண்டாக்குவதற்கு என்னென்ன அழுத்தங்கள் தேவை என்பதை இன்னமும் எம்மாற் சொல்ல முடியாமலுள்ளது'' இப்படிச் சொல்கிறார் நீயூயோர்க் றொக்பெலர் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த தொற்றுநோய் நீர் நிபுணரான ஸ்டீபன் மோர்ஸ்.

மோர்சின் வினாக்களுக்கான சரியான விடை ஆய்வுகூடத் துலக்கங்களிலிருந்தே வரவேண்டும். ஒரு பரசீவியின் குணாதிசயங்களை மாற்றுவிதம் எவ்வாறு உருவகப் படுத்துகிறது என்பதைச் சரியாகக் கண்டறிய பரிசோதனைக் குழாய்களில் ஒரு குறிப்பிட்ட சில உயிரியல் விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர். நுண்ணுயிரில் நோயைத் தொற்ற வைக்கத்தக்க தொற்று நோய் நீரான பக்ரீறியோபேஜ், ஒரு பரிசோதனைக் குழாயில் வைக்கப்பட்டு நோய் தொற்றக்கூடிய புதிய கலங்களையும் கொடுத்தால் அதி விரைவில் அக் கலங்களை அது கொன்று விடும் என்று கூறுகிறார் ஓஸ்ரினிலுள்ள ரெக்காஸ் பல்கலைக் கழகத்தின் விலங்கியல் விஞ்ஞானியான ஜேம்ஸ் புள். பெரிய பாலியல் வலைப்பின்னல் ஒன்றிற் போலவே எச்ஐவீ தனிப்பட்ட விருந்தளிப்பவரையும், தன்னை அந்தப் போக்கில் அழித்துவிடாமல், கொல்லவல்லது. இதே தொற்றுநோய் நீர் (வைரஸ்) தனிப்பட்ட கலங்களுக்குள் முடங்கிவிடும் போதும், அவற்றின் சந்தானங்களில் தங்கிவிடும்போதும் அமைதியாகி விடுகின்றன. (தொற்று நோய்கள் பரவுவதற்கு முந்திய எச்ஐவீ போன்ற ஒரு நிலை இது) ஒரு நல்ல மிருக மாதிரியில் ஆய்வாளர்கள் என்றோ ஒரு நாள் எஸ்வோல்டின் எச்ஐவீ பற்றிய அனுமானத்தை அதே அளவு நூட்பமான முறையில் பரிசோதிப்பதில் வெற்றி காண்பார்கள்.

எச்ஐவீயை அடக்கிப் பழக்க முடியுமா?

நுண்கிருமி உலகத்தைக் கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வருவதில் மிக சமீப காலத்தில், மருத்துவ விஞ்ஞானம் வெற்றிப்பாதையில் அடியெடுத்து வைத்திருக்கிறது. 10 ஆண்டுகளின் பின்னர் பல்லாயிரம் கோடிகளை ஆய்வுகளுக்காக விரயம் செய்த முடிவிலும், எச்ஐவீ விஞ்ஞானிகளை, பீப்பாவிற்கு மேல் ஏற்றி வைத்து நகையாடுகிறது. மாறுந் தன்மை என்ற ஒரு சொல்லே அதன் வெற்றியின் இரகசியமாகும். அதன் வம்சவிருத்தி மாற்றம் மக்களினுடையதைப் போலப் பத்துலட்சம் மடங்கு அதிகம் என்பதால் எச்ஐவியினுடைய மாறும் முறை தவறுதல்களுக்கப்பாற் பட்டதாகையால்-அது மிகமிக வேறுபட்ட சந்தானங்களை விருத்தி செய்கிறது. ஒரு மருந்தோ அல்லது எதிர்ப்புச் சக்தியோ வெற்றி காரமான தாக்குதலை மேற்கொள்ளுகின்ற போது அந்த தொற்று நோய் நீர் அல்லது கிரு

மியினிடத்தில் வேறொன்று தோன்றி செழிப்பாக விருத்தியடைகிறது. எயிட்ஸ் நோய்க்கு எதிரான மருந்து ஒன்று பரந்த அளவில் வேலை செய்து எச்ஐவியைக் கட்டுப்படுத்த முயன்றாலும் அது நீண்டகாலத்துக்கு அந்தப் பணியைச் செய்து கொள்ள மாட்டாது. உதாரணமாக ஏ இசட் டீ ஒரு குறிப்பிட்ட ஆண்டுகளுக்கு நோயின் அறிகுறிகளைத் தடுத்து நிறுத்த முடியும். ஆனால் ஏஇசட்டீ யில் தங்கியுள்ள மக்களுக்கு எயிட்ஸ் வரலாம். தொற்று நோய் நீர் எண்ணிக்கை அவர்களுடைய எதிர்ப்பு மாதிரிக்கமைய பரிணாமம் பெறுகிறது.

உலகத்திலே யுள்ள எந்தவொரு மருந்தோ அல்லது தொற்று நோய் நீருக்கெதிரான அம்மைப்பால் போன்ற ஒன்றோ மாறிவிடும் தன்மை கொண்ட பரசீவியைக் கட்டுப்படுத்திவிட முடியாது. டார்வினிய நோக்கில் எயிட்ஸ்சோடு போராடுவதற்கு எச்ஐவியைக் கொல்வது மட்டும் வழியல்ல; வெளி அழுத்தங்களுக்குப் பதிலாக இந்தத் தொற்று நோய் நீர் மிக வேகமாக மாற்றமடையக் கூடியது என்பது நமக்குத் தெரியும். நாங்கள் சரியான அழுத்தங்களைப் பிரயோகித்தால் – அதுவும் ஒரு சமூகத்தினிடையிலோ அல்லது ஒரு நோயாளியின் உடலிலோ பாய்ச்சினால் நாம் அதனைப் பழக்கிக் கட்டுப்படுத்த ஆரம்பிக்கலாம்.

கொண்டோம்களும், சுத்தமான ஊசிகளும் எச்ஐவி நோய்த் தொற்றலைத் தடுத்து உயிர்களைக் காப்பாற்ற முடியும் என்பது யாவரும் அறிந்ததே. பரிணாம நோக்கொன்றின்படி அவைகள் இன்னும் அதிகமாகச் செய்ய முடியும் என்று நினைப்பதற்கு எல்லாக் காரணங்களுமுண்டு. பரவலாக உபயோகிக்கப்படும் போது அதே அடக்கமான கருவிகள் தொற்று நோய் நீரை மேலும் பயனுள்ள மாதிரிகளுக்குத் தள்ளிவிடலாம். அவைகள் வாழ்வதற்குத் தேவையான மிகஉயர்ந்தமாற்று வித நோய் நீர்ப்பாதையை இல்லாமற் செய்வதே அவ்வழியாகும், உல்லாசப் பேர் வழிகள் இப்போதே இந்தப் பயிற்சியில் ஈடுபடத் தொடங்கி விட்டனர். உல்லாசப் பேர்வழிகள் மத்தியில் புதிய

எயிட்சைப் பற்றிய அநுமான வரலாறு.

எச்ஐவீ இருந்தாற்போல் சடுதியாக எப்படி ஓர் உலகக் கொல்லியாக உருவெடுத்தது? ஒரு கோட்பாட்டின்படி இந்த தொற்றுநோய்க் கிருமி பல நூற்றாண்டு காலமாக மக்களில் தொற்றி வந்திருக்கிறது. ஆனால் சம்மத்திய சமூக மாற்றங்கள் அதனுடைய குணாதிசயங்களை மாற்றியுள்ளன.



1960 இன் முன்னர் கிராமிய ஆபிரிக்கர்கள் பாலுட்டிகளிடமிருந்து எச்ஐவியை மறைந்த நிலையிலான தொன்மை வழிகளில் பெற்று வந்திருக்கின்றனர். மக்களிடையே இந்தத் தொற்று நோய்க் கிருமிகள் மிக மெதுவாகவே பரவுவதால் அவற்றுக்குத் தீவிரமாக இயங்க முடியவில்லை.



1960 இலிருந்து 1975 வரை போர், வரட்சி, வர்த்தகம், நகர் மயப்படுத்தல் என்பன ஆபிரிக்க சமூக அமைப்புகளைச் சின்னாபின்னப் படுத்திவிட்டன. மாற்றம் விரைவு படுத்தப்பட்ட போது எச்ஐவி தீவிரமாகப் பரவத் தொடங்கியது.

தொற்று நோய் விகிதம் 1980 களில் ஐந்திலிருந்து பத்து மடங்கு குறைந்திருப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன. இதற்கு பாதுகாப்பான பாலியலுக்கே நன்றி சொல்ல வேண்டும். ஒரே காலப் பகுதியில் ஒரே சனத் தொகையுள் எச்ஐவி தீங்கு குறைந்து காணப்படுவதான ஆசை காட்டும் குறிப்புகள் கிடைக்கின்றன. தேசிய சுகாதார நிலையங்களின் ஆய்வாளர்கள் 1991இல் நடாத்திய ஓர் ஆய்வின் போது ஒவ்வொரு ஆண்டும் வெவ்வேறு ஆபாயக்கட்டக் குழுக்களின் மத்தியிலுள்ள நோய் தொற்றப் பட்டவர்கள் எந்த விகிதாசாரத்தில் எயிட்சின் தாக்கத்தைப் பெறுகிறார்கள் எனக்காண முயன்றார்கள். 1987 இல் போலவே உல்லாசப் பேர்வழிகளின் மத்தியில் விகிதாசாரம் குறைந்துள்ளதைக் கண்டார்கள். நோயை உண்டாக்குவதற்கு தொற்று நோய்க் கிருமிகள் கூடிய காலமெடுக்கின்றன என்பதை இதிலிருந்து அறியக்கூடியதாயுள்ளது. இந்த மாற்றத்தின் ஒரு பகுதிக்குக் காரணம் ஏஇசற்றீ ஆகும். அறிகுறிகள் தென்படும் காலத்தை அது நீடிக்கும். தேசிய சுகாதார நிலையங்களின் ஆய்வாளர்கள் ஏஇசட்டீக்காகத் திருத்தம் செய்த போதும், ஆச்சரியப்படத்தக்க விதத்தில் மாயமாக எயிட்ஸ் நோயாளரின் எண்ணிக்கை குறைவாகவே காணப்பட்டது. எஸ்வோல்டின் கருத்தின் படி குறைவு ஆச்சரியத்துக் குரிய தொன்றுமல்ல, முன்கூட்டியே செல்லக் கூடியதும் தான்.

இவ்வாறான ஒரு போக்கை எவ்வளவு தூரத்திற்குக் கொண்டு செல்ல முடியும்? விரிவான, நல்ல தடுப்பு முயற்சிகள் இறுதியில் இன்றைய கொல்லும் தன்மை மிக்க எச்ஐவி – 1 ஐ மிகவும் அமைதிப் போக்குடைய செனகலின் எச்ஐவி – 2 ஆக மாற்றிவிட முடிமா? எவருக்கும் இது தெரியாது. எயிட்ஸ் நோய்க் கிருமியை அடக்கி ஓரளவாவது பழக்கி எடுப்பதென்றால் அது பொது சுகாதார அதிகாரிகளைத் திகைப்பில் ஆழ்த்தும். கொண்டோம்களும் சுத்தமான ஊசிகளும் அளவுக்கு அதிகமான

PUBLIC LIBRARY
JAFFNA
MALLUR BRANCH LIBRARY.

மலிவான மருந்துகளாகும். பரிணாமப் போக்கை மாற்ற முடியாது போனாலும் அவைகள் உயிர்களைக் காப்பாற்றும். கிடைக்கின்ற சான்றுகளை வைத்துப் பார்க்கும் போது வெற்றி நிச்சயம் என்று நம்பலாம்.

இதற்கிடையில் இன்றைய எச்ஐவீயை ஒரு கோடியே இருபது லட்சம் பேர் காவித் திரிவதோடு, எயிட்சால் பாதிக்கப்படுவோர் மரணிக்கிறார்கள். அதிர்ஷ்டவசமாக மஸ்ஸாட்சுசெற்ஸ் மருத்துவ மனையில் யுங்-காங்சௌவும் அவரது உதவியாட்களும் சென்ற மாதம் காட்டியது போல தொற்று நோய்க் கிருமிகளின் போக்கைத் திறமையோடு நெறியாள்வதற்கு ஒன்றுக்கு மேற்பட்டவழிகள் உண்டு. எச்ஐவீ யை அதன் சொந்த விளையாட்டிலேயே தோற்கடித்து விடுவதற்கு ஆய்வாளர்கள் ஒரு பரிசோதனைக்குழாயில் நடத்திய சோதனையில் வழிகண்டு பிடித்திருக்கிறார்கள். ஏஇசற்ரீ, டீஇஎல், பிறிடினோன் என்கின்ற மூன்று மருந்துகளையும் ஒன்றாக்கி தொற்று நோய் நீரின் ஒரே பகுதியைச் செயலிழக்கச் செய்வதே அவர்களின் தந்திரமாகும். (றிவேஸ்டிறான்ஸ் கிறிப்ராஸ் எனப்படும் என்சைமே இதுவாகும்.)

விருந்தளிக்கும் கலங்களில் குடிபுக நினைக்கும் எச்ஐவீ யின் முயற்சிகளை இவற்றில் எவையாவது முறியடிக்கும். தனித்தனியாகவோ அல்லது சோடியாகவோ வரும் இவற்றுடன் எச்ஐவீ மோதும் போது அது படிப்படியாக எதிர்ப்பு மாதிரியில் மாற்றமுற்று தன் தொழிலைச் செய்து கொண்டிருக்கும். ஆனால் ஒவ்வொரு மாற்றமும் தொற்று நோய்க் கிருமியை சிறிதளவு வலுக் குறைந்ததாக்கி, சௌகுழுவினர் செய்து காட்டியது போல மாற்றமே தொற்று நோய்க் கிருமியை மடக்கி விடும். (வரைபடம்) முன் வெவ்வேறு விதமான மாற்றங்களைக் கொண்டிருந்து ஒவ்வொரு மருந்துக்கும் ஒவ்வொரு மாற்றம் எச்ஐவீ மாற்றுக் கிருமியை ஆய்வாளர்கள் பொறிக்குள் அடக்கி உருவுமிழந்து செயலுமிழந்த தொற்று நோய்க் கிருமியாகி விட்டனர். இந்த மூன்று மருந்துகளுக்கும் முன்னால் கன்னித் தன்மையுள்ள எச்ஐவீ செயற்பட முடியாது போனால், மூன்று மடங்கு தன்மையுள்ள எச்ஐவீ செயற்படமுடியாது போனால், மூன்று மடங்கு தன்மையால் மாற்றப்படும் போது எச்ஐவீயால் இயக்கவே முடியாது விட்டால், மூன்று மருந்துப் படையணி கற்பனை ரீதியில், நோயாளிகளுக்கு அதிசயங்களை விளைவிக்கும்.

சோதனைக் குழாயிலிருந்து பரிசோதனை நிலையத்திற்கு வெகு தூரமுண்டு. ஆய்வு கூடப் பரிசோதனைகளில் மிகவும் செயற்பாட்டுத் திறமையைக் காட்டிய பல மருத்துவ முறைகள் நோயாளியில் செயலிழந்தும், நச்சுத்தன்மையை ஊட்டியுமுள்ளன. சௌவின் இந்தக் கூட்டு மருந்துகளிலிருந்து நோயாளிகள் பயனடைய முடியுமா என்பதை வெகு விரைவில் நடைபெறவுள்ள மருத்துவ நிலைய சோதனைகள் தீர்மானிக்கும் ஒரு குறிப்பிட்ட சேர்க்கைக்குள் மட்டுப்படுத்தப் படாமையே புதிய அணுகு முறையின் சிறப்பம்சமாகும். றிவேஸ் டிறான்ஸ் கிறிப்ராக் கெதிராக பொஸ்டன் குழுவினர் மருந்துகளைப் பரிசோதிக்கும் அதேவேளையில் நியூயோக்கிலுள்ள ஆரோன் டயமன்ட் எயிட்ஸ் ஆய்வு நிலைய ஆய்வாளர்கள் இதேவழியை இன்னொரு நோய்க்கிருமி இலக்கை நோக்கி (புறொட்டீஸ் எனப்படும் என்சைம்) ப் பரிசோதிக்கிறார்கள் ''அதன் மாறும் திறமையால் இந்தத் தொற்று நோய் நீர் அல்லது கிருமி மீண்டும் மீண்டும் எமது மனத்தில் இடம் பிடித்துக் கொண்டுள்ளது'' என்று சொல்கிறார் ஆரோன் டயமன்ட் நிலைய இயக்குனர் டாக்டர் டேவிட் ஹோ. ''எமது முயற்சிகளைத் தோற்கடிக்க அது புதிய தந்திரோபாயத்தைக் கையாளுகிறது உனது வேலையை மாற்றிச் செய் என்று இப்போது நாங்கள் அதனிடம் சொல்லுகிறோம். நீ மாறிக் கொண்டே இரு. சரியான இடத்தில் அப்படி நீ மாறிக் கொண்டே இருந்தால் நோயாளிக்கு நீ குறைந்த அளவு தொல்லையையே அளிப்பாய் என்றும் நாம் அதனிடம் கூறுகிறோம்'' என்றும் டாக்டர் ஹோ கூறுகிறார்.

1975 லிருந்து இன்று வரையான உலகப் பிரயாணங்கள் எச்ஐவீ யை பரந்த சுற்றுலாவில் வைத்தன. இடம் மாறும் பாலியற் சேர்க்கைகளும் இரத்த மேற்றுதல்-போன்ற நவீன மருத்துவப் பயிற்சிகளும் பல சனத் தொகையினரை இந் நோய்க்கு இலக்காகச் செய்துவிட்டன. எதிர்காலம்.

சமூக மாற்றங்கள் ஓர் அமைதியான தொற்று நோய்க் கிருமியை கொல்லும் தன்மையினதாக்க முடிந்தால், இந்தப் போக்கு திரும்பி மறுபக்க மாகவும் செயற்படலாம். மாற்றத்தை மெதுவாக்கினால் கொல்லும் போக்கை சுழற்சியிலிருந்து விலக்கி விரைவாக ஓட்டிவிட முடியும்.

அடுத்த எயிட்சைத் தடுக்க முடியுமா?

இந்தப் பிளேக் நோயை எங்களிடம் கொண்டு வந்த சக்திகள் வேறு பலவற்றையும் எம்மிடம் கொண்டு வர முடியும். மழைக்காடுகளிலும், வனப் பிரதேசங்களிலும் மனிதன் அத்து மீறிக் குடியேறி வருவதினால் மனித சமுதாயம் தன்னை வேறு மிருக இனங்களுடனும், அவற்றில் மறைந்து கிடப்பவற்றுடனும் மிகவும் நெருங்கிய தொடர்பு படுத்துகிறது. கொல்லும் தன்மையுள்ள நுண்ணுயிர்களே மறைந்து கிடப்பனவாகும். நீர்ப்பாசனம் தொடக்கம் நகரங்கள், அணைக்கட்டுகள் அமைக்கப்படுவதுவரையில் மிருகங்களுக்கும், பூச்சிகளுக்கும் தாம் தாங்கிச் செல்லும் நோய்க் கிருமிகளையும் கொண்டு அலைந்து திரிவதற்கு விரிவான இடம் அமைத்துக் கொடுப்பதாகவே உள்ளது. இதனால் புதிய நோய்கள் உண்டாகும் வாய்ப்பு மிகவும் அதிகமாகும். சனங்களுக்கிடையிலும், மிருக இனங்களுக்கிடையிலும் நுண்ணுயிர்களின் நடமாட்டத்தை ஆய்வு செய்யும் றொக்பெலர் தொற்று நோய்க்கிருமி விஞ்ஞானியான

ஸ்டீபன் மோர்ஸ் மனித நடவடிக்கைகள் தொற்று நோய்க் கிருமிகளின் போக்குவரத்தைத் துரிதப்படுத்துவதாகக் கவலைப்படுகிறார். 1960 ஆம் ஆண்டிலிருந்து மனிதரில் பன்னிரண்டுக்கும் மேற்பட்ட புதிய நோய்கள் தோற்றமெடுத்துள்ளன. இவைகளெல்லாம் முன்னர் காடுகளிலும், மரங்களிலும் இருந்த பரசீவிகளாகும். புதிய சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தியே அவை மனிதர் மத்தியில் வந்துள்ளன. '' ஆரம்பச் சிக்கல் தொற்று நோய்க் கிருமி தொடர்பானதல்ல - சமூகம் சம்பந்தப்பட்டதாகும்'' என்ற முடிவுக்கு வருகிறார் மோர்ஸ்.

எபோலா தொற்றுநோய் நீரை எமது வருங்காலப் பேய் வியாதிகளுக்கு உதாரணமாகக் கூறுவர். இந்த நோய்க்கிருமியின் தாக்குதல் முதலாவதாக 1976 ஆகஸ்டில் நிகழ்ந்தது. வடக்கு சயரில் உள்ள மிஷன் மருத்துவ மனைக்கு வந்த ஒரு வியாபாரியே முதற் தாக்குதலுக் காளானவராவார். காய்ச்சல் ஏறிக் கொண்டேயிருந்தது. ஐம்புலன்களாலும் இரத்தம் வடிந்துகொண்டிருந்தது. சில நாட்களில் நோயாளி மரணித்துவிட்டார். மருத்துவ மனையின் தாதிமாருள் அரைவாசிப் பேருக்கு மேல் இந்த நோய்க்காளாகி விட்டனர். 39 பேர் மரணத்தைத் தழுவ வேண்டியதாயிற்று. மருத்துவ மனையின் நோயாளிகளைத் தொற்று நோய்க் கிருமி பிடிக்கவே, 58 அயல் கிராமங்களுக்கும் நோய் பரவலாயிற்று. எபோலா நோய் சயரிலும், பக்கத்திலேயுள்ள சூடானிலுமாக 1000 பேரைத் தாக்கி 500 பேரின் உயிரைக் குடித்தது. இன்னும் வேகமாக இந்த நோய் பரவக் கூடும் என்று தொற்று நோய் நிபுணர்கள் அஞ்சினார்கள். எவ்வளவு வேகமாக இந்த நோய் பரவலாயிற்றோ அவ்வளவு வேகமாக அடங்கியும் விட்டது. டார்வீனிய நோக்கில் அது ஆச்சரியத்துக்குரிய ஒன்றல்ல. இவ் வளவு வேகமாகக் கொல்லும் ஒரு பரசீவி நோய்ப் பரப்பலைத் தொடர்ந்து செய்வதாயின் விருந்தாளிகள் நோய் தொற்றிய பேர்வழிகள் இல்லாமலே தான் தனித்து வாழக் கூடியதாயிருக்க வேண்டும்.

கவலையளிக்கும் இன்னுமோர் தொற்று நோய்க் கிருமி எச் ஐ வீ யின் உறவு முறையிலான எச் ரீ எல் வீ யாகும். எச் ஐ வீ தொற்றும் அதே இரத்தக் கலங்களையே இதுவும் பீடிக்கிறது. புதிய சனத் தொகையினருள் அதே அலைப்போக்கில் அதுவும் சவாரி செய்கிறது 1970 களிலேயே எச்ரீஎல்வீ (எச் ரீ எல் வீ-1, எச் ரீ எல் வீ-2) இனங்காணப்பட்டதென்றாலும் அது தொன்மையானதாகவே தோற்றுகிறது. எச் ரீ எல் வீ தொற்றுநோயால் பீடிக்கப்படும் இருபது பேருள் ஒருவர் இரத்தச்சோகை (லியூக்கோமியா) செஞ்சீவ அணுக்களின் குறைவால் ஏற்படும் லிம்போமா அல்லது ரீ எஸ் பீ எனப்படும் முளை நரம்பு ஏழுங்கின்மையால் ஏற்படும் பாரிச வாதம் போன்ற நோய்க்கு ஆளாவர். இந்தத் தொற்றுநோய்க் கிருமி அல்லது நீர் எச் ஐ வீ -1 லும் பார்க்க ஆக்கிரமிப்புத்தன்மை குறைந்ததாகும். ஒரு நோயை உண்டாக்குவதற்கு இதற்கும் பல பத்தாண்டுகள் தேவைப்படும். ஆனால் ஒரு அமைப்பிலிருந்து இன்னொரு அமைப்பிற்கு மாறும்போது அதன் தொற்றும் வேகம் வேறுபடுவதைப் பார்க்கலாம்.

யப்பான் நாட்டில் எச் எல் ரீ வீ தொடர்பான புற்றுநோய், 60 வயதுக்காரரைப் பீடித்திருப்பதைக் காணமுடிகிறது. இவர்கள் தாயின் கருப்பையில் இருந்தபோது தொற்றிய வியாதி இதுவாகும். கரீபியன் தீவுகளில் அநேகமாக இந்த நோய் பாலியல் சேர்க்கையால் இடம் மாறுகிறது. சராசரியாக இங்கே அது நோயாளியில் மறைந்திருக்கும் காலம் வெகு குறுகியதாகும். அவர்களது 40 வயதுகளிலேயே நோயின் அறிகுறிகள் தென்படுவது அசாதாரணமான நிகழ்வல்ல.

எச் ஐ வீ யைப் போன்று எச் எல் ரீ வீ உடனேயே மாற்றத்திற் குள்ளாவதில்லை. ஆனால் அதே இயற்கைச் சக்திகளுக்கு அது கட்டுப்படுகிறது. மனித நடவடிக்கைகள் ஒரு தொற்றுநோய்க்கிருமியை உலகக் கொலையாளியாக மாற்ற முடியுமாயின் அதே வேலையை இன்னொன்றுக்கும் செய்ய முடியும் என்று சந்தேகிப்பது எச்சரிக்கையான விடயமாகும். ''எச் எல் ரீ வீ ஓர் அச்சுறுத்தலாகும். ஒரு மறைவிடத்திலிருந்து தப்பி வந்துவிட்டதென்பதாலல்ல, அது மேலதிக வேகத்தில் நோய் பரப்பும் பரிமாணத்தைப் பெறக்கூடும் என்பதாலேயே'' என்கிறார் எஸ்வோல்ட். அமெரிக்காவில் எச் ஐ வீ யின் பத்திலொரு பங்களவே எச் எல் ரீ வீ உண்டு. ஆனால் ஐ வீ போதை வஸ்து உபயோகிப்பாளரிடையே தடம்பதித்துக் கொண்டுள்ளது. அவர்கள் பங்குபோடும் ஊசிகள் நோய்ப் பரம்பலுக்கு மிக நல்ல களபூமியாகும்.

எயிட்ஸ் போன்ற தொரு தொற்று நோயை எச் எஸ் ரீ வீ உண்டாக்குமோ என்பது யாருக் தெரியாது. அதிர்ஷ்டவசமாக அதை அறிந்து கொள்வதற்குச் செயலற்று நாம் இருக்க வேண்டியதில்லை. எமது பரசீவிகளின் குணாதிசயங்களை வடிவமைப்பதில் எமது செயற்பாடுகளின் திறன் பற்றி அறிய ஆரம்பித்துள்ளோம். கடைசியாக வந்த தொற்று வியாதியை யாரும் கண்டதில்லை. இம்முறை அது ஒரு மன்னிப்பாக முடியாது.

நியூஸ் வீக், மார்ச் 22, 1993

டாக்ரர் விலிப்பரின் சிகிச்சை முறை

கற்பதில் உள்ள பிரச்சினைகளில் இருந்து விடுபட்டு பாஷைத் தடையை நீக்குவதற்கு டொல்பின் மீன்கள் உதவுகின்றன.

முதன் முதலாக 1988 இல் 13 வயதில், ஒக்லாகோமா நகர மிருகக் காட்சிச் சாலையில், டொல்பின் மீனை, டீன்போல் அன்டசன், கண்டபொழுது அவர், அது நின்ற நீர்த் தடாகத்தை அடைவதற்கு உடனே றெயிலால் ஏறினார். அவரின் அம்மா காதி, அவரைத் தடுத்து நிறுத்தினார். ஆனால், அவரின் மகனின் ஆர்வம் அவவை எத்தனிக்கத் தூண்டியது. டீன் போல் பேச முடியாத தன்மையுடன் பிறந்தார். முயற்சித்தும் அவரால் ஒரு சொல்லுக்கூட உச்சரிக்க முடியவில்லை.

மறுலீவு வந்த பொழுது காதி, டீன்போலையும், தனது இரு பெண் பிள்ளைகளையும், காரில் ஏற்றி, கிறாசி கீயில் உள்ள டொல்பின் ஆராய்ச்சி மைதானத்திற்கு எடுத்துச் சென்றார்.

சில மணித்தியாலங்களுக்குள், மகனும், தாயும், சான்தினி என்ற பெண் டொல்பினின் றப்பர் துடுப்பைப் பிடித்துக் கொண்டு தண்ணீரில் அசைந்தார்கள்.

அன்று மாலை சான்தினி ஒரு மிதக்கும் படகில், காரின் படத்தைக் கொண்டுவந்த பொழுது டீன் போல், கா . . . கா . . . கார் என்றார்.

எட்டு டொல்பின்களின் உதவியுடன், 1988 தொடக்கம், டொல்பின் ஆராய்ச்சி நிலையத்தார், இடசின் கணக்குப் பிள்ளைகளின் பாஷைத் தடைகளை அகற்றியது மல்லாமல் நூற்றுக் கணக்கான பிள்ளைகளின் விலா எலும்பு நரம்புக் காயங்களையும் மாற்றியுள்ளார்கள். அங்கீகரிக்கப்பட்ட நிலையங்கள் டொல்பின்களுடன் மனிதரை நீந்தவும் அனுமதிக்கின்றன. டொல்பின்களைப் பாவித்து வருத்தங்களைக் குணப்படுத்தவும் இந்த நிலையங்கள் உதவுகின்றன.



சந்தோஷம் தரும் அதிசயம்

டொல்பின் மீன்கள் டீன் போல் அவர்களை எப்படி உள்ளார்ந்த உலகில் இருந்து வெளிக் கொணர உதவின.

சிகிச்சை முறையை வழி நடத்தும், புளோறிடா சர்வதேச சர்வகலாசாலையின், கல்வி உளநூல் விரிவுரையாளரான டேவிட் இ. நதன்சன் கூற்றின்படி ''எங்களது குறிக்கோள், கதவுகளைத் திறந்து கற்கும் முறைகளை ஆரம்பித்தலாகும்.'' 'டீன் போல்' என்ற சிறுவர்களை நதன்சன் ஊக்குவிக்கிறார். எப்படியெனில், இப்பேர்ப்பட்ட கதவுகளைத் திறப்பதற்கு அவர்களுக்கு டொல்பின்களுடன் கொஞ்சிக் குலாவுவதற்குச் சந்தர்ப்பம் அளித்தும், நீந்த அவகாசம் கொடுத்துமே.

ஆர்வமே திறப்பு

ஆய்வாளர்கள் சொல்கிறார்கள்: டீன் போலின் கதைகள் போன்றவை இப்பொழுது சர்வசாதாரணமாகி விடுகின்றனவாம்.

இப்பொழுது ஆறு வயது நிரம்பிய கம்பீரமான டீன்போல், அதிகம் கதைப்பதுமல்லாமல், எழுத்துக் கூட்டவும் கற்றுக் கொள்கிறார். (ஒகஸ்ட் மாதத்தில் இவ் வேலைகள் புயலினால் தடைப்பட்டு, அவர்கள் வீட்டை விட்டு ஸாசியானா நகருக்கு இடம் பெயர நிர்ப்பந்திக்கப்பட்டனர்.) டீன் போலை அவரது உள் உலகத்திலிருந்து எப்படி டொல்பின்களுடன் நீந்தும்முறை வெளிக்கொணர்ந்தது.

மரபு வழிமுறைகளை விட இவ் வாறான மீன்களுடன் விளையாடிக் களிப்புற்றுக் கல்வி கற்கும் முறை ''டீன் போல்'' போன்ற வர்களுக்கு ஆர்வத்தைத் தந்தது. 'நதன்சன்'' சொல்கிறார்: அதி, சயப்படுத்தலும், விசுவாசமும் பிள்ளைகளைக் கல்வியில் ஆர்வம் கொள்ள வைத்து விருப்புடன் படிக்க வைக்கிறதாம். இது உந்து சக்தி போன்றது என்று.

அண்மையில் மேற்கொண்ட ஆய்வின்படி, முற்றாகப் பலவீன முற்ற ஆறுபேரைக் கொண்ட பிள்ளைகள் கூட்டம் ஒன்று வகுப்பறையில் கற்பதை விட, பத்து மடங்கு வேகமாக டொல்பின் மீன் இனத்துடன் விளையாடிக் கொண்டே படிக்கிறார்களாம். அவர் இதை ''மருத்துவ அசாதாரண உளநூல்'' என்கிற சஞ்சிகையிலே வெளியிட்டு உள்ளார்.

இந்த எண்ணிக்கையானது ''நதன்சன்'' சைக் குறை கூறுபவர்கட்கு திருப்தி தருவதாயில்லை. டொல்பின் சிகிச்சை நிலையத்தார் உடற்பயிற்சி, விளையாட்டு போன்றவற்றைவிட, டொல்பின் மீன்களுடன் நீந்தி விளையாடிக் கொண்டே படிக்கும் முறை சிறந்தது என்பதனை நண்பர்களுக்கு விளக்கிச் சொல்லி அவர்களைத் திருப்திப் படுத்துவதற்குப் போதிய ஆதாரங்களையும், சான்றுகளையும் திரட்டுகின்றனர். சில பிள்ளைகளை உணர்ச்சி வசப்படுவதில் இருந்தும், மூளை நோய்களில் இருந்தும் தப்பிக் கொள்வதற்குப் பாலூட்டி மிருகங்கள் உதவுகின்றன. இதை எவரும் மறுக்க முடியாது. ஆனால் அவர்கள் கூறுவார்

கள்; நாய்க்குட்டிகளைப் பாவிப்பது பாதுகாப்பானதும், மலிவானதும் என்று இன்னும் ஓர் அதிகாரியான அன்ரூறு றோவான் கூறுகிறார். ''சில டொல்பின் கதைகள் நம்பத் தகுந்தவை அல்ல'' என்றாலும் மேலும் தகவல்களையும், ஆய்வுகளையும் நடத்தி இச் செலவை நியாயப் படுத்துகிறார். அது பிரயோசனம் ஆனது என்றும் கூறுகிறார். பென்சில் வேனியா சர்வகலாசாலையின் துணை விரிவுரையாளரான ஆறன் கார்ச்சர் கூறுகிறார்: ''தனது 14 வருட மிருக சிகிச்சை ஆய்வின்படி'' இன்னும் மலிவான முறையில் இதனை நிரூபிக்கலாம் என்று, இதற்கு அவர் கூறும் காரணம், இந்த டொல்பின் ஆய்வு 20 நிமிடத்திற்கு டொலர் 200 முடிகிறதாம். ஆனால் நதன்சன் நாய்க் குட்டிகளினதும், டொல்பின்களினதும் வேற்றுமைகளில் கல்வி நெறிப் பயிலுனர் திறமைகளில் டொல்பின் மீன்கள் சிறந்தவை எனத் தனது கட்டுரைகளில் வெளிப்படுத்துகிறார்.

றோவானும் இன்னும் பலரும் காட்டு மிருகங்களை குறிப்பாக டொல்பின் மீன்களை மனித நன்மைக்குப் பயன் படுத்துவதை



எதிர்க்கின்றனர். காரணம் இவை மனிதனை விட . இரண்டாந்தர அறிவு படைத்தவை என்றும், விவேகம் அற்றவை என்றும் நிக் ஒபெரி டொல்பின் பயிற்சியாளர் கூறுகிறார். இவை ஒரு நெறிப் படுத்தும் செயல் என்றும் பிரசுர விளம்பரம் என்றும் 20 டொல்பின் மீன்களைக் கொண்டு மூன்று டொல்பின் சிகிச்சைக் கழகங்கள் இந்த நிகழ்ச்சிகளை நடத்துகின்றன. இந்த முறை வெற்றியானது எனத் தீர்மானிக்கப்பட்டால் இந்த டொல்பின் மீன்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

ஆனால் இம் முறையான ஆய்வாளர்கள் வெகு விரைவில் நீருக்கு வெளியில் வருவார்கள். வருகிற யூன் மாதத்துடன் இந்த நான்கு டொல்பின் நீச்சல் நிலையங்களுக்கும் அனுமதி காலாவதியாகின்றன. அனுமதிகளை வழங்கும் தேசிய கடல்வள மீன்பிடிச் சேவை யானது டொல்பின் மீன்களின் பழக்க வழக்கங்கள் இவ்வாறான நீச்சல்களினால் பாதிப்புறாது என ஆய்வுகளில் இருந்து தெரிந்தால் மட்டுமே அவற்றைப் புதுப்பிக்கும்.

இவ்வாறான டொல்பின் சிகிச்சை முறை வெற்றி அளித்தால் அவை மாற்றம் அடையாது. செயற்பட்டால்—இதை ''மாதிரி முறையாகப்'' பயன் படுத்திப் பலனைப் பெறலாம். நோயாளரும் குணமடையலாம். ஆனால் அவர்களிடம் அதனைக் கூறாதே. அடுத்து என்ன நடக்கும் தெரியுமா? அவர்கள் தங்களது அதற்கான கட்டணங்களை அதிகரித்து விடுவார்கள்.

நியூஸ் வீக், மார்ச் 22, 1993

பங்கசில் இருந்து புற்றுநோயைக் குணப்படுத்துவதில் முன்னேற்றம்

மொன்டானாவிலுள்ள உயிரியலாளருக்குக் கிடைக்கின்ற நம்பிக்கை

1. மொன்டானா அரசினர் பல்கலைக்கழகத்தில்பட்டமேற்படிப்பை மேற்கொண்டிருந்த அன்றியாஸ்டேலி என்ற பெண்மணியினுடையபுலமைப் பரிசில் கொடுப்பனவு முடிவடையுந் தறுவாயில் இருந்தது. ஆயினும் கவலை கொள்ளவில்லை. அவர் 1980ஆம் ஆண்டுகளின் நடுப்பகுதியில் மொன்டானாவில் தொல்லையாகவிருந்தஓருகாளைக்கு ஏற்ற நச்சு மருந்தை உற்பத்தி செய்யக் கூடிய ஒரு பங்கசைஅதிர்ஷ்டவசமாகக் கண்டுபிடித்திருந்தார், பசுபிக் யூ மரத்திலிருந்து உற்பத்தி செய்யப் பட்ட மருந்தொன்று சூலகப் புற்று நோயையும், மார்புப் புற்றுநோயையும் சுருக்கும் என்ற கண்டுபிடிப்பால் உந்தப்பட்டு அதே மருந்தை ஒரு பங்கசினால் உற்பத்தி செய்வதற்கான முயற்சியில் அவர் 1991 ஆம் ஆண்டு போஸ்மன் சுற்றியுள்ள தொன்மையான காட்டுப்பகுதியை ஆராய்வதற்குத் தீர்மானித்தார். அக்கோடை காலத்தில் அவரும் இரசாயனவியலாளருமான அவரது கணவன் Donald Stierle உம், வடமொன்டானாவிலுள்ள தொன்மையான தேவதாரு மரக்காட்டுப் பகுதியில் 200 நுண்ணங்கிகளைச் சேகரித்தார்கள். அவற்றுள் பசுபிக் யூ மரத்தின் உட்பட்டையிலிருந்து எடுக்கப்பட்ட நுண்ணங்கியொன்று வினோதமாகக் காணப்பட்டது அவரும் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த Gray Strobel என்பவரும் சேர்ந்து இரவுபகலாக வேலைசெய்து தாங்கள் எதைக் கண்டு பிடித்துவிட்டோம்என்று எண்ணியதை நிச்சயப் படுத்திக் கொண்டார்கள். யூ மரத்திலிருந்து சுரண்டியெடுக்கப்பட்ட பங்கசுதான் மார்புப் புற்றுநோயையும் சூலகப் புற்று நோயையும் எதிர்க்கின்ற ரொக்ஸ்சோல் (Taxol) மருந்தை மிகச்சிறிய அளவில் உற்பத்திசெய்கிறது. கடந்த வாரம் இவர்கள் யூ மரத்தில்இருந்து தயாரிக்கப் பட்டபுற்றுநோயை எதிர்க்க வல்ல அதே மருந்தை யூ மரப் பட்டையிலிருந்து எடுக்கப்பட்ட பங்கசும் உற்பத்திசெய்கிறது என்ற விடயத்தை ''Taxamyees Andreanae'' என்ற சஞ்சிகையில் வெளியிட்டார்கள்.

2. கண்டுபிடிப்பாளர்கள் இவ்வகை பங்கசுள்ள மரங்கள் உள்ள காட்டுப்பகுதியில் நிலையங்களைச்

சரிவரக் கூறமாட்டார்கள். (ஆயினும் Taxol என்ற மருந்தைத் தயாரிப்பதற்காக அரிதாகவுள்ள யூ மரங்களைக் களவாகத் தறித்தெடுக்கிறார்கள்.) ஆயினும் ஒருவரும் பங்கசை மரப் பட்டையிலிருந்து சுரண்டி எடுத்து பின்னர் Taxol மருந்தை தயாரிப்பதற்குத் திட்டமிடமாட்டார்கள். சோயா Sauce தயாரிப்பு மாதிரியில் பங்கசையும் பாரிய நொதி கலன்களில் வளர்த்துப் பின்னர் இரசாயன முறையில் பிரித்தெடுக்கமுடியும். மொண்டானா பல்கலைக்கழகத்தில் கோடியில் ஒரு பங்கு கிராம் Taxol தயாரித்தல் மிக மந்தமான நிலையிலேயே விளங்குகின்றது, ஆனால் பங்கசுக்கு கூடுதல் ஒட்சிசனைக் கொடுப்பதனாலோ அல்லது சிறப்பான வர்க்கங்களை பிறப்புரிமையியல் (Genetics) முறைகளினால் வளர்த்தெடுப்பதனாலோ மருந்தின் அறுவடையைக் கூட்டலாமென Massachusetts Institution of Technology யைச் சேர்ந்த நுண்ணுயிரியலாளரான Arnold Demain ஆலோசனை தெரிவித்திருக்கின்றார். அத்துடன் மரத்திலிருக்கின்ற ஏதோவொரு இரசாயனம் பங்கசுக்களில் Taxol மருந்து உற்பத்தியை ஊக்குவிக்கின்றன என மொன்டானாக் குழுவினரும் குறிப்பிட்டிருக்கிறார்கள். மேலும் அப்படியானதொரு மூலப்பொருளான பிரதானபொருளை யூ மரப்பட்டையிலிருந்து பிரித்தெடுத்தால், அது பங்கசுக்கான ஓர் இயற்கைப் பசளையாக விளங்கும்.

3, ஏற்கனவே நான்கு மருந்துத் தயாரிப்பாளர்கள் மொன்டானா பல்கலைக்கழகத்திடமிருந்து தயாரிப்பு உரிமைப் பத்திரங்களைக் கோரியுள்ளார்கள். அவற்றுள் ஒன்றான Bristol myers Squibb என்ற நிறுவனம் 1991ஆம் ஆண்டு பசுபிக் யூ மரத்திலிருந்து Taxol மருந்தைத் தயாரித்து விற்பனை செய்வதற்கான அனுமதிக்கு அரசாங்கத்துடன் ஒப்பந்தம் செய்துகொண்டது. தயாரிப்பு உரிமைகளுக்குப் பேரம் பேசி Taxol தயாரிப்பை அதிகரிக்கச் செய்து அதனால் உற்பத்திச் செலவைக் குறைத்து மருந்தின் விலையைக் குறைக்கக் கூடிய நிலையில் இந்நிறுவனம் இருக்கின்றது.

கருவூலப் புற்றுநோய்ச் சுருக்கத்தை நிச்சயப்படுத்தவென தேசிய புற்றுநோய்க் கழகத்தினால் விதந்துரைக்கப்பட்ட மூன்று சுழல் நிகழ்ச்சியான சிகிச்சை முறைக்கு 2958 டொலர் செலவாகின்றது. (இற்றை வரைக்கும் அரசாங்கம் Taxol ஐக் கருவூலப் புற்றுநோய்ச் சிகிச்சைக்கு மாத்திரமே அனுமதி அளித்திருக்கின்றது.) மருந்து வேலை செய்தால் மேலும் மூன்று சுழல் நிகழ்ச்சியான சிகிச்சை தேவைப்படும். (வறிய நோயாளி கட்கு சிகிச்சை இலவசம்) இப்பொழுது கிட்டத்தட்ட 15,000 அமெரிக்கர்கள் Taxol மருந்தைச் சிகிச்சைக்கென வாங்குகிறார்கள். அரசாங்கம் இம்மருந்தை மார்புப் புற்று நோய்ச் சிகிச்சைக்கும் அனுமதித்தால் இத்தொகை 50,000 ஆக உயரும்.

4. Bristol Mayers இதனுடைய யூ மரங்களுக்கு மொன்டானா பங்கசு மாத்திரம் தான் சவாலாக இல்லை. பெரும்பாலாகக் காணப்படும் பொதுவான ஐரோப்பிய வன யூ மரத்திலிருந்தும் Taxol மருந்தைத் தயாரிக்கிறார்கள். இனிமேல் சட்டமியற்றுபவர்கட்கு அருகிவரும் யூ மரங்களைத் தறிக்க அனுமதிப்பதா அல்லது புற்றுநோய் நோயாளிகளின் நம்பிக்கைக்குப் பாத்திரமான கடைசி மருந்தை இல்லாமற்பண்ணுவதா என்ற பிரச்சினை எழமாட்டாது. இதற்கு மாற்றாக stirles இதுவரை விஞ்ஞானத்திற்கே தெரிந்திராத இந்த வினோத பங்கசை மரவியாபாரிகளின் கண்களுக்கு இலக்காகும் தொன்மையான காடுகளிலொன்றிலேயே கண்டு பிடித்தார்.

நியூஸ் வீக், ஏப்ரல் 19, 1993

தண்ணீரில் நடத்தல் (மிதத்தல்)

நரகக் குகைகளில் வாழும் வெளவால் பறப்பதை விட வேகமாக நீந்தக்கூடிய, ஒருசென்ரிமீற்றர் நீளம் உடைய, சமுத்திர அடியில் வாழும் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட உயிர் இனத்திற்கு இன்னும் பெயர் சூட்டப்படவில்லை.

இவ்வாறான கூனி போன்ற சிறிய பிராணிக் கூட்டங்களை அண்மையில் 8000 அடி வரை சமுத்திரத்தில் சுழி ஓடிய மசாச்சுசெற்ஸ் வூட்கோஸ் சமுத்திர ஸ்தாபனத்தைச் சேர்ந்த ஆய்வாளர்கள், மேற்கு மெக்சிக்கோ கரையில் கண்டு பிடித்துள்ளனர்.

இப்படியான ஒரு கூட்டம் / தொகுதி; அவை நடக்கவும் நீந்தவும் கூடிய பிராணிகள். ஒரு சோடி கால்களால் நடக்கவும் மறுசோடி கால்களால் நீந்தவும் கொண்டவை.

அவை நீரின் வெப்ப அசைவுக்கு ஏற்ப வினாடிக்கு 10 தொடக்கம் 20 உடல் நீளம் நீந்தி பூமியின் வெடிப்புக்களில் தங்கி இயங்குகின்றன. அவை ''காட்டில் காணப்படும் அந்துகள்'' போன்று ஒரு இடத்தில் நிற்பதற்கு, வேகமாக நீந்துகின்றன இப்படிக் கூறுகின்றார் இந்தக் குழுவின் இயக்குனரான லோறின் முல்லினெக்ஸ். காரணம், அவை உண்ணும் பக்ரீரியாக் கிருமிகள் வெடிப்புக்களில் சத்துணவைப் பெறுகின்றமையே.

ருஷ்யாவிலிருந்து இறக்கைகளுடன்

ருஷ்யாவின் இரகசியப் பொலிஸ் (கே. ஜி. பி.) கொள்கைகளுக்கு எதிராக வடிவமைக்கப்பட்டு பறக்க விடப்பட்ட விக்ரர் டிமிற்றீவின் உயர்ந்த தொழில் நுட்ப முடைய ''உடுப்புப் பெட்டி அளவு பாரம் குறைந்த'' மிகச் சிறிய ஆகாய விமானம் மிகப் பிரபல்ய மடைந்து வருகிறது.

— ரிமொதி—ஆர். (காப்ஃனி)

விக்ரர் டிமிற்றீவ் செய்ததை நீங்கள் செய்வதாகக் கற்பனை பண்ணிப் பாருங்கள். நாட்டுப்புற வீதிவழியாக வாகனம் ஒன்று ஓட்டிச் செல்லும் பொழுது பறக்க வேண்டும் போல் தோன்றுகிறது. இவ்வாசையைத் தீர்ப்பது மிகவும் இலகுவான காரியம். வாகனத்தை நிறுத்தி கூரையிலிருந்து பெரிய கொள்கலன் பெட்டியை இறக்குங்கள். உள்ளே ஒரு சிறிய ஆகாய விமானத்திற்குரிய உறுப்புகள் யாவும் உள.

குழாய்களால் ஆக்கப்பட்ட சட்டங்களை இணைத்து இறக்கைகளையும் வாலையும் பிரித்து இணையுங்கள். பதினைந்து நிமிடங்களில் நீங்கள் பறப்பதற்கு ஆயத்தமாயுள்ளீர்கள். இரு சட்ட ஓட்டுங் கருவியை சுழற்றியவுடன் ஈர் அடிப்பு எஞ்சின் வேலை செய்யத் தொடங்குகின்றது. இரும்புத் தொப்பியை மாட்டிக் கொண்டு சிறிய திறந்த வெளி இருக்கையில் அமர்ந்து பட்டிகளால் கட்டிய பின் வீதிக்கு நேராக வாகனத்தைத் திருப்புங்கள். மோட்டார் சைக்கிள் றொற்றுளைத் திருப்புவது போல் வலது கைப்பிடியைச் சுழற்றுங்கள். எஞ்சின் சத்தம் உயர்ந்து வாகனம் பாய்ந்து செல்கிறது. மணிக்கு 34 மைல் கெதியை அடைந்தவுடன் ஆளி நிரலை மெதுவாகப் பின்னே இழுக்கவும். நிலத்தை விட்டுச் செல்கிறீர்கள்; நீங்கள் பறக்கிறீர்கள்.

பல வருடங்களாக டிமீற்றிவ் செய்ததை கற்பனை பண்ணிப் பாருங்கள். ஆகாய விமானப் பகுதிகளை கன்வஸ் துணியில் மறைத்



துக்கொண்டு இரவில் வாகனத்தில் வெளியேறி நாட்டுப் புறத்திற்குச் சென்று சொற்ப நேரம் பறந்து பார்த்தால் இந் நேரங்களில் தன்னை யாரும் கண்டால் கே ஜீ பி க்கு அறிவித்து விடுவார்களோ என்ற பயம் ஒரு பக்கம்.

முன்னாள் சோவியத் ஒன்றியத்தில், நாற்பத்தேழு வயதுடைய விக்ரர் டிமிற்றீவ் ஓர் ஆசிரியராகவும், லொறி ஓட்டுநர் ஆகவும், பறத்தலில் விருப்பமுடையவராகவும் இருந்தார். ஆகாய விமானங்கள் வடிவமைத்தலும், பறத்தலும் சட்டவிரோதம் என்று கருதிய நாட்டில் இவர் அமெரிக்காவில் விளையாட்டுக்காகப் பறக்கப் படும் விமானங்களைப் பற்றி எல்லாச் செய்திகளையும் நுணுக்கமாக அறிந்து விமானங்களை வடிவமைக்கக் கற்றுக் கொண்டார். குப்பையில் வீசப்பட்ட பொருள்களைக் கொண்டும் சட்ட விரோதமாக வாங்கப்பட்ட விமானங்களின் உறுப்புகளைக் கொண்டும் 24 வருடங்களில் 30 விமானங்களை உருவாக்கினார்.

ஒரு செக்கோசிலவேக்கியன் மோட்டார் சைக்கிள் எஞ்சினை ஆகாய விமான சக்தி முதலாக மாற்றினார். இவரின் திட்ட வரைதல் அறை, இணைக்கும் தொழில் நுட்ப கூடம், விமான இருப்பிடம் ஆகியவை அவரது நான்கு அறை தொடர் மாடி வீட்டிலே இடம்பெற்றன. இவ் வீட்டில் இன்னுமொரு குடும்பமும் வசித்து வந்தது. கசகஸ்தானுக்கும் சீனாவுக்கும் இடையே அமைந்துள்ள அமெரிக்க மாநிலமான மினிசோட்டா அளவுள்ள கேகிஜியாக் குடியரசில் உள்ள பெஷ்செக் நகரில் இவரின் வீடு அமைந்திருந்தது.

இவரின் விவேகமும், வடிவமைக்கும் திறமையும் ஆழ்ந்த ஈடுபாடும், துணிவும் வெளி உலகிற்குத் தெரிவதற்கு கிளாஸ் நொஸ்உம் பெரஸ்ரொரிக்காவும் இறுதியாக சோவியத் அரசாங்கத்தின் வீழ்ச்சியுமே காரணமாக அமைந்தன. பறத்தலில் ஈடுபாடு கொண்டுள்ள அமெரிக்க விளையாட்டுப் பிரியர்கள் இத் தனித்துவமான விமானத்தில் தங்கள் சுவனத்தைச் செலுத்தியுள்ளனர். இவரின் திட்டத்தில் அமைக்கப்பட்ட மிகப் பாரங்குறைந்த விமானத் தொகுதி விற்பனைக்கு வந்துவிட்டது.

சென்ற ஆடி மாதம் இவரை நாங்கள் சந்தித்தபொழுது கலிபோர்னியாவில் உள்ள சக்கிர

மென்ரோ நகரின் தெற்கே அமைந்துள்ள சிறிய ஆகாய விமானத் தளமாகிய லோடி ஆகாய விமான நிலையத்தில் அமைந்துள்ள உருக்கால் அமைந்த விமான இருப்பிட மண்டபத்தில் அவரின் ஆகப் பிந்திய அமைப்பான எக்ஸ்—14 டூ விமானத்தின் மீது வியர்வை சிந்திக் கொண்டிருந்தார். அந்த நேரத்தில் இவரின் மிகப் பெரிய தொழில் நுட்பத் தடை இவரால் வடிவமைக்கப்பட்ட விமானச் சட்டக் கூடுக்கு மலிவான, இலகுவாய்க் கிடைக்கக்கூடிய எஞ்சினை இணைப்பது ஆக இருந்தது. வழமையான பாரங்குறைந்த விமானங்கள் உபயோகிக்கப்படும் சக்திமுதலாய் தனது பழைய எஞ்சினில் மாற்றி இருந்தார். ஆனால் இவரின் சிறிய இறக்கை விமானத்திற்கு அவ்வெஞ்சின் பாரங்கூடியதாகவும் சக்தி குறைந்ததாகவும் காணப்பட்டது.

தனது அரைகுறை ஆங்கிலத்தில் பேசும்பொழுது தான் இங்கே அதிகம் பறப்பதில்லை என்றும். இந்த விமானத்திற்கு 40, 50 பரிவலு எஞ்சின் தேவை என்றும் கூறினார். தனது விமானத்திற்கு இணைக்கப்பட்ட எஞ்னைக் காட்டி அதன் பரிவலு 24 மட்டுமே என்றும் கூறினார்.

கலிபோர்னியா விமான நிலையத்தின் ஓடுபாதையில் சிறிய பாய்ச்சல் மட்டுமே செய்ய முடிந்தது என்று ஒப்புக் கொண்டார். ஆனால் அவரின் முன்னைய எஞ்சின் பறப்பின் நடுவே நின்றுவிடும் தன்மையுடையது. சடுதியாக இறக்கப்பட்ட காரணத்தினால் பிரதான சில்லுகளைக் காவும் உருக்குக் குழாய்களில் மீண்டும் மீண்டும் காய்ச்சி இணைக்கப்பட்ட அடையாளங்கள் காணப்பட்டன. இவ் விமானத்தின் பறக்கும் தன்மையைக் காட்டமுடியாத காரணத்தினால் கேகிஜயாவில் எடுக்கப்பெற்ற நிலையப் படங்கள் ஓடும் படங்கள் மூலம் இவ்விமானத்தின் சிறப்பை அறிய முடிந்தது.

மற்ற பாரங்குறைந்த விமானங்களுடன் ஒப்பிடும் பொழுது எக்ஸ்—14 டூ இன் சிறப்பு யாது? அதிகமான பாரங்குறைந்த விமானங்கள் தொங்கு கிளைடர்களில் இருந்து விருத்தியடைந்தவை. இவ்ற்றுக்கு கப்பலின் பாய் போன்ற பெரிய இறக்கைகள் இருப்பதனால் விமானம் ஓட்டி மெதுவாகவும் தாழ்வாகவும் பறக்க ஏதுவாகின்றது. மிகச் சிலவற்றை மிகச் சிறிய ஆகாய விமானங்கள் என்றே கூறலாம். அவற்றுக்கு விமான ஓட்டி உட்காரும் மூடிய அறையும் மூடப்பெற்ற விமான உடலும் இருந்தன. அமெரிக்க சமஷ்டி அரசின் பாரங்குறைந்த விமானங்களின் நிபந்தனைகளை திருப்திப்படுத்திய காரணத்தினால் மட்டுமே இவை பாரங்குறைந்த விமானங்கள் என்று கருதப்பட்டன. அதாவது நிறை 254 இறாத்தலுக்கு கூடாமலும் எரி பொருள் கொள்வனவு ஐந்து கலனுக்கு கூடாமலும், ஒரே மட்டத்தில் உயர்கதி மணிக்கு 63 மைலும் அதன் பறக்கும் தன்மையை இழக்கும் கதி மணிக்கு 27 மைலும் ஆக இருக்க வேண்டும், பாரங் குறைந்த விமானத்தின் கவர்ச்சியாதெனில் இதன் ஓட்டி விமானம் ஓட்டுவதற்குரிய லைசென்ஸ் வைத்திருக்கத் தேவையில்லை. அத்துடன் மிகப்பணச் செலவுள்ள பரிசோதனைகளுக்கும் பராமரிப்புக்கும் உட்படத் தேவையில்லை.

டிமிற்றீவ் ஆகாய விமானம் தொங்குகிளைடரின் விருத்தியும் அல்ல மூடிய விமான ஓட்டி அறையைக்கொண்ட விமானமும் அல்ல. முதலாவதாக அது மிகவும் சிறிய தாகும். 10 — 9 அடி நீளமும் இறக்கைகளின் அகலம் 16. 4 அடியும், வாலின் உயரம் 4அடியுமாகும். அதன் இறக்கைகளின் பரப்பளவு 18. 9 சதுர அடி மட்டுமே. பாரங் குறைந்த விமானங்களுடன் ஒப்பிடும் பொழுது மிகவும் இலேசானதாகும். ஜூலை மாதத்தில் வடிவமைக்கப்பட்டபோது அதன் நிறை 110 இறாத்தல் மட்டுமே. இதை நன்றாகத் தெரிந்த பாரங்குறைந்த விமானம் ஆகிய குவிக் சில்வர் எம். எக்ஸ். ஸ்போட்ஸ் உடன் ஒப்பிடுக. கலிபோர்னியாவில் உள்ள தெமெகூலா நகரிலுள்ள குவிக் சில்வர் என்ரப்பிரைசஸ் கம்பனியால் இவ் விமானம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் மாதிரியின் நீளம் 18. 1 அடியும், இறக்கைகளின் அகலம் 28 அடியும், உயரம் 8. 1 அடியும். அதன் இறக்கைகளின் பரப்பளவு 156 சதுர அடியுமாகும். அதன் வெறும் நிறை உயர்வு நிறையாகிய 254 இறாத்தலுக்கு அண்மையில் உள்ளது.

அதன் பறக்கும் மேற்பரப்புகளிலிருந்து உயர்வுச் செயற்பாட்டைப் பெறுவதற்கு பெரிய ஆகாய விமானங்களின் பண்புகளைப் பயன்படுத்துவதே டிமிற்றீவ்வின் சிறிய விமானத்தின் சிறப்பம்சமாகும். அதன் இறக்கைகளுக்கு ஆகாய விமான வடிவ அசைவும், மடிப்புகளும் முன் பக்கமாக மர விளிம்புகளும் பொருத்தப்பட்டிருப்பதனால் மேலே எழும்பல் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக மேலே எழும்பும் கதியும், நிலத்தில் இறங்கும் கதியும் குறைக்கப்பட்டுள்ளன. இறக்கைகளில் அமைந்திருக்கும் ஒரு சொற்ப ஆனால் அவதானிக்கக் கூடிய முற்பக்க சாய்வு குறைந்த கதிகளில் விமானத்தைக் கூடுதலாக ஆளக்கூடியதாக இருக்கிறது. உயர்த்திகளிலும், சுக்கானிலும் மேலதிக மூட்டுக்கள் அவற்றின் சிறிய மேற்பரப்புகளின் செயற்றிறனைக் கூட்டுகின்றன.

அத்துடன் விமானத்தின் பகுதிகள் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டு, மடித்து வைக்கக் கூடியன. ஒவ்வோர் இறக்கையும் இரண்டாக மடிக்கக் கூடியது. வால் பகுதியும் வேறாக்கி மடிக்கக் கூடியது. வால் பகுதியை இணைக்கும் அலுமினியக் குழாய்கள் தொலைக்காட்டி போல் ஒன்றுக்குள்ளே ஒன்று செருகக் கூடியன. முடிவில் வீட்டில் ஒரு சிறிய அறையில் வைக்கக்கூடிய ஒரு ''பொதி கிடைக்கின்றது'' 'உடுப்புப் பெட்டி அளவு பாரம் குறைந்த விமானம்' என்ற பட்டப்பெயர் சரியாக அதற்கு அமைந்துள்ளது.

ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்குக் கொண்டு செல்லத் தான் இவ்வகை விமானங்களின் சரியான பண்பு என்று கூறுகிறார் லோடி. ஆகாய விமான நிலைய விமானம் திருத்துநர் யோன் ஷெரில் ''மோட்டார் வாகனத்தினுள் அல்லது அதன் கூரையின் மேல் கொண்டுசென்று பறக்கக் கூடிய காரணத்தினால் இவ் வகை பாரங்குறைந்த விமானங்களை விரும்பினேன்'' என்று இவர் கூறு

கின்றார். டிமிற்றீவ் சடுதியாக எக்ஸ்— 14 டீ ஐப் பற்றிக் கனவு காணவில்லை. அதன் பெயருக்கு' அமைவாக பல வருடகாலமாக தொடர்ச்சியாக பல சிறிய ஏக்ஸ் விமானங்களை வடிவமைத்தார். ''பல இறக்கைகளை ஆக்கினேன் மடிப்பில்லாமல். ஒரு மடிப்புடன், இரு மடிப்புகளுடன், மூன்று மடிப்புகளுடன்'' என்று கூறினார்.

மிகவும் அடக்கமாகக் கூறுகின்றார், ''பல தவறுகள் நேர்ந்து விட்டன. ஆகாயத்தில் பல எஞ்சின்கள் இயங்காமல் நின்று விட்டன. ஆம், எனது விமானத்துடன் விழுந்துமிருக்கிறேன்.''

தனது பல தோல்விகளைப் பற்றிக் கூற அவர் உயிருடன் இருப்பது மிகவும் ஆச்சரியமாக உள்ளது. விமானமோட்டிச் சான்றிதழ்கள் ருஷ்யாவில் அரச கல்விக்கூடங்களினால் மட்டுமே வழங்கப்படும் சூழ் நிலையில் டிமிற்றீவ் பறக்கப் பயில வேண்டியிருந்தது. அது எவ்வளவு அபாயகரமானது என்றும் ஒவ்வொரு வருடமும் பல விமான ஓட்டிகள் தங்கள் பரிசோதனை விமானங்களில் இருந்து விழுந்து நொருங்கி இறப்பதும் அவருக்குத் தெரியும்.

ஆனால் அவருக்கு ஓர் உதவியுமிருந்தது. இவரின் தந்தையார் பவெல் நிக்கலேவிச்சு டிமிற்றீவ் சோவியத் இராணுவத்தில் உத்தியோகத்தராகவும், விமானமோட்டியாகவும் கடமை புரிந்தார். மொஸ்கோ இராணுவ ஆகாயப் பறத்தல் கல்விக் கூடத்தில் ஆசிரியராகவும் பணி புரிந்தார். குழந்தையாக இருக்கும் பொழுதே விக்ரரை விமானத்தில் கூட்டிச் சென்று பறத்தலில் ஆர்வத்தை வளர்த்தார். தனது தந்தையின் பறத்தல் விமானக் கட்டமைப்பு, சம்பந்தமான புத்தகங்களை விக்ரர் நன்றாகப் பயன்படுத்தினார்.

தனது பறக்கும் தொழிலில் இறங்கு முன் டிமிற்றிவ்வின் தந்தை இளைப்பாறிய காரணத்தால் தந்தையின் தொடர்புகள் சோவியத் அரசின் கொள்கைகளை ஊடறுக்க முடியாமல் இருந்தன. விசேட தொழில் நுட்பக் கல்லூரிகளுக்கு விண்ணப்பங்கள் அனுப்பியும் புகுமுக பரீட்களுக்கு அழைக்கப்படவில்லை. சிறிய தொழில் நுட்பப் பாட சாலையில் இவர் பிற்காலத்தில் வேலை பார்த்தபொழுது அங்கே படித்த மாணவர்கள் யாபேரும் அப்பாடசாலையில் கடமையாற்றும் ஊழியர்களின் இனத்தவர் அல்லது நண்பர்கள் என்பதை அறிந்தார்.

1968 இல் ஆகாய விமானமொன்றை வடிவமைக்க முதன் முதலாக முயற்சித்தார். தொங்கு கிளைடர்களில் உபயோகிக்கப் பட்ட றோகல்லோ இறக்கையின் வடிவமாக ஒரு முக்கோணவடிவ பட்டம் போன்ற இறக்கையைப் பயன்படுத்தினார் அது பறக்க வில்லை. ஆனால் விடாக் கண்டனாகி 1970 இல் ஒரு விமானத்தை மேலே எழுப்பினார். 1979 இல் முதன் முதலாக ஒரு வட்டத்தில் பறந்தார்.

மூலப்பொருள்களைப் பெறுதல் பணம், இடவசதி ஆகிய காரணங்களுக்காக சிறிய விமானங்களில் கவனத்தைச் செலுத்தினதாக ஒரு மொழிபெயர்ப்பாளர் மூலம் கூறினார். மற்றும் வேறு சிறிய விமான ஆர்வலாருடன் தொடர்பு கொண்டார். இவர்கள் ஒருவருக்கொருவர் உதவினார்கள். சில விமான உறுப்புக்களை மறைவாகவும் விற்றார்கள். உறுப்புக்கள் கிடைக்காத விடத்து அவற்றை உருவாக்கினார். கைக் கருவிகளால் ஓட்டும் கருவிகளை தானே செய்தார். இறக்கை, மற்றும் வால் மேற்பரப்புகளை பரசூட் துணியால் மூடி ஷெய்லாக் பூசி அதன் மீது பூச்சுப்பூசி வழுவழுப்பான இறுக்கமான மேற்பரப்பாக்கினார். இறக்கைகளை தாங்கும் மிகவும் பாரங்குறைந்த கோல்களை ஆக்குவதற்கு மரத் துண்டுகளை பிளந்து உள்ளே குடைந்து மீண்டும் துண்டுகளை ஒட்டி அதன் கண்ணாடி நார்த் துணியால் மூடினார்.

அவரின் சவால்கள் யாவும் தொழில் நுட்பம் காரணமானவை அல்ல. 1975 இல் கே. ஜீ. பி இரகசியப் பொலிஸ் அவரின் வீட்டிற்கு வந்து அவரின் பறத்தல் செய்கைகளைப் பற்றி விசாரித்தார். இது அரசாங்க ரீதியாக தடுக்கப் படவில்லை. ஆயினும் இவரின் செய்கைகளை அவர்கள் விரும்பவில்லை. விமானத்தில் பறந்து எல்லையைக் கடந்து விடுவார்கள் என்ற பயமும் அவர்களுக்கு இருந்தது. ஆகாய விமானம் ஒரு சொத்தாகக் கருதப்பட்ட படியால் சொத்து வைத்திருப்பதை அவர்கள் விரும்பவில்லை. விமானங்களைப் பொழுது போக்காகக் கட்டலாம். ஆனால் பறக்க முயற்சிக்க கூடாது. என்றும் எச்சரித்து இவரின் பெயரைக் குறித்துக் கொண்டார்கள்.

எப்படியாயினும் டிமிற்றீவ் பறக்கத்தான் செய்தார். கிராமப் புற ஊர்ப்பக்கங்கள் சென்று இரவில் பறந்து பார்த்தார். சோவியத் ஒன்றியத்தில் பெரஸ் ரொரிக்காவிற்கு முற்பட்ட காலத்தில் பொருளாதார சமூக நிலைமைகள் வீழ்ச்சியுற்றதனால் நிர்வாகத்தினருக்கு வேறு முக்கிய விடயங்களில் கவனம் செலுத்த வேண்டியிருந்ததினால் ஒரு பறக்கும் பித்தனின் செய்கைகளில் கவனம் செலுத்தமுடியவில்லை. முன்னாள் சோவியத் ஜனாதிபதிமிக்கெயில்கோர்பச்சோவின் ஆட்சியில் ஒரு சிறந்த மனப்பான்மை எங்கும் நிலவியது. சோவியத் பத்திரிகைகள் டிமிற்றீவ்வின் செயற்பாடுகளைப் பற்றி எழுதத்தொடங்கின. ஆகாயப்பறத்தல் காட்சிகளில் பங்குபற்றுமாறு டிமிற்றீவ் அழைக்கப்பட்டார். 'ஏவியேஷன் வீக் அன்ட் ஸ்பேஸ் ரெக்னோலொஜி' என்ற பத்திரிகையில் இவரின் விமானத்தின் படம் பிரசுரிக்கப்பட்டபொழுது 1990இல் இவரின் செயல்கள் மேற்குலக நாடுகளுக்குத் தெரிய வந்தன. 1991இல் எக்ஸ் – 14 டீ பறக்கும் பொழுது எடுக்கப்பட்ட படங்கள் பரிசோதனை ஆகாய விமானச் சங்கத்தின் (EAA) சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்டன. அமெரிக்க முதலாளித்துவத்துடன் இவர் சேர்ந்தால்தான் தனது ஆகாயவிமானத்தை விற்பனைக்குக் கொண்டு வரலாம். இதுவே அவரின் பெரிய சவாலாகும்.

லோடி ஆகாய விமானத் தளத்தில் நிலை கொண்டுள்ள பழைய ஆகாயவிமான வியாபாரியோன் குப்காவின் விருந்தாளியாகி சென்ற ஏப்ரல் மாதம் தனது மனைவி லட்மிலாவையும், ஆறு வயதுள்ள மகள் ஜூலியாவையும் அமெரிக்காவிற்கு அழைத்துக்

கொண்டு வந்தார். மிகவும் பாரங் குறைந்த விமானங்களை குப்காவு டன் சேர்ந்து வடிவமைத்து விற் கலாம் என வும், அமெரிக்காவில் தனக்கொரு புதிய வாழ்க்கையை அமைத்துக் கொள்ளலாம் என்றும் கனவு கண்டார். ஆனால் யோன் குப்காவினால் இவருக்குக் கொடுக் கப்பட்ட உடன்படிக்கை இவரின் கனவை தவிடு பொடியாக்கியது. வெளிநாட்டவர் அமெரிக்காவில் வசிக்க உதவும் பச்சை அட்டைக் குப் பதிலாக இவரின் வடிவமைப் புப் படங்களையும் இலாபத்தில் பங்கில்லாதவாறும் உடன்படிக்கை எழுதப்பட்டு இருந்தது. குப்காவு டன் வியாபாரம் செய்யமுடியாது என்று கசப்புடன் கூறிக்கொண்டு குடும்பத்துடன் கேகிஜியாவிற்கு திரும்ப ஆயத்தப்படுத்தினார். ஆனால் அமெரிக்காவை விட்டு வெளியேற முன்பு கலிபோனியா விலுள்ள சான்ரா பாபராவில் வசிக்கும் முதலீட்டாளர் றீங்க் அயர்ஸ் என்பவருடன் டிமிற்றீவ் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டார். தனது வடிவமைப்பு படங்களின் உரிமையை விட்டுக் கொடுத்து விமானத்தை மீள மைத்து விற் பனை செய்யும் உரிமையையும் அவரிடம் கொடுத்து பதிலாக 20,000 டொலர் பணத்தை யும், விற்பனையில் 10 நூற்றுவீத இலாபத்தையும், அவரின் தொழில் ஸ்தாபனத்தில் ஓர் எஞ்சினியராக தொழில் பார்க்கும் உரிமையை யும் பெற்றுக் கொண்டார். ஆனால் குப்காவும் இதே மாதிரி விமானத்தை விற்கப்போவதாக 1992 செப்ரெம்பர் மாதம் விளம் பரப் படுத்தினார்.

உடுப்புப் பெட்டி அளவு பாரங் குறைந்த இவ்விமானத்தை மூன்று மாதிரிகளில் விற்பதற்கு குப்கா திட்டங்கள் தீட்டியுள்ளார். முதல் செய்யப்பட்ட விமானத்தின் மாதிரி ஓர் உண்மையான பாரங் குறைந்த விமானத்தின் மாதிரியும் பயிர்கள் மேல் விசிறும் மாதிரியு மாகும். பறக்கும் தன்மையை இழக்கும் கதியைப்பற்றிய ஈ.ஏ.ஏ விதிகளுக்கு அமையாத காரணத் தினால் மூலப் பிரதியாகிய விமா னம் ஒரு பரிசோதனை விமான மாக வகைப்படுத்தப்படும். இவ் வகை விமானத்தை பறக்க விமான ஓட்டி லைசென்ஸ் (உத்த தரவுப் பத்திரம்) தேவைப்படும். ஆனால் உண்மையான பாரங் குறைந்த விமானமாதிரியின் இறக்கை வடிவமைப்பு மாற்றப் பட்டுள்ளது. இவற்றை டிமிற்றீவ் செய்யவில்லை என்று குப்கா ஆணித்தரமாகக் கூறுகின்றார். அத்துடன் விக்ரரின் சேவை இனித் தேவையில்லை என்று, அவர் திரும்பி விடுவார் என்றும் தான் எதிர்பார்க்கவில்லை என் றும் கூறுகிறார்.

ஆனால் செப்ரெம்பர் மாதத்தி லும் ஒரு பறக்கக் கூடிய மாதிரி குப்காவிடம் இல்லை. முன்னோடி உறுப்புகள் மீளமைக்கப்படுவதாக வும், பரிசோதனைப் பறத்தல்கள் 1993 ஜனவரி மாதம் நடைபெறும் என்றும், விற்பனைகள் பெப்ரவரி முதல் தொடங்கும் என்றும் கூறுகி றார். அயர்சும், குப்காவும் ஒருபறக் கும் சட்டத் தொகுதிக்கு மட்டும் 7000 டாலர் விலை நிர்ணயித் திருக்கிறார்கள். ஈர் அடிப்பு பாரங்குறைந்த எஞ்சினுடன் விமா னத்தின் விலை 10,000 டாலர் தொடக்கம் 12,000 டாலர் வரை இருக்கும்.

எக்ஸ்—14 டூ ஐ உற்பத்தி செய்து பொதுமக்களுக்கு விற் பனை செய்ய முன் அதில் பல மாற்றங்கள் செய்ய வேண்டியிருக் கும். டிமிற்றீவ், விமானங்களைப் பரீட்சிக்கும் விமான ஓட்டி அல்ல. கேகிஜியாவில் அவரின் அதி உயர் பறத்தல் 8.5 நிமிடமும் அடைந்த அதியுயர் உயரம் 350 அடி மட்டுமே.

எக்ஸ்—14 டூ ஐப் பறக்க நிலத்திலிருந்து உயர்த்துவதே முதல் பிரச்சினையாகும். ஒரு சிறந்த பாரங்குறைந்த எஞ்சினு டன் இவ் விமானம் பறக்கும் என அயர்ஸ் நம்பிக்கையுடன் இருக்கி றார். பின்வரும் பல மாற்றங் களை விமானத்தில் செய்து (7645 கோல் றியல், சான்ரா பாபரா, கல்போனியா 93117) என்ற விலாசத்தில் அமைந்துள்ள சிரியா எலியேஷன் மூலம் விற் பனை செய்ய இருப்பதாக அறி விக்கிறார்.

★ விழும்பொழுது பாதுகாப் பிற்கு உருள்க்கூடிய கூடும், சிறிய கருவிகள் அமைந்த முகப்புத் தொகுதியும், காற்றுத் திரையும், துணியால் அடைக்கப்பட்ட மூடிய இடமும், அவசர காலத்தில் வெளியேறக்கூடிய பரசூட்டும்.

★ உயர்வான உறுதி நிலையில் இருப்பதற்கு உயர்ந்த இறக்கை அமைப்பு.

★ கூடிய இறக்கை பரப்பள வாக 40 சதுர அடி இது இரு மடங்கு நிறைய ஈடு செய்யவும் பறக்கும் தன்மையை இழக்கும் கதியைச் சரியான எல்லை மணிக்கு 27 மைலுக்குக் கொண்டு வரவும் உதவும்.

★ கிடையாகவும், மேல்நோக் கியும், கீழ்நோக்கியும் பறக்கும் பொழுது உறுதியாக இருப்பதற்கு வாற்பக்கம் நீட்டப்பட்டு மொத்த நீளம் 18 அடிக்கு உயர்த்தப் படுகின்றது.

★ இலகுவாகப் பொருத்தக் கூடியவாறு கட்டமைப்பில் மாற் றங்கள் இறக்கைகள் நுரை மற் றும் கண்ணாடி நார் தோல்க ளால் ஆக்கப்படும். கையால் கடையப்பட்ட மரப் பகுதிகளுக் குப் பதிலாகக் கண்ணாடி நார் பாவிக்கப்படும்.

★ மணிக்கு 120 மைல் கதியை அடையக்கூடிய பல்வேறு சக்தி மூலகங்களும் வெவ்வேறு வகை யாக மாற்றியமைக்கக் கூடிய தொகுதிகளும்.

தனது திட்டங்கள் தான் பெறக்கூடிய முதலில் தங்கியுள் ளது என அயர்ஸ் கூறுகின்றார்.

இலைத் துளிர் காலத்திற்கு முன்பாக 10 பறக்கும் தொகுதி களை ஆக்குவதாகவும் கோடை கால பறத்தல் காட்சிகளில் அவற் றைக் காட்டுவதாகவும் கூறுகின் றார்.

டிமிற்றீவ் அடுத்ததாக என்ன செய்யப்போகிறார் என்று தெரிய வில்லை. தனது குடும்பத்தின் பாதுகாப்புக் கருதி கே சி ஜி யாவிற்குத் திரும்பப் பயப்படுகிறார். பொருளாதார வீழ்ச்சியும், அரசாங்க பலத்தின் வீழ்ச்சியும் காரணமாக மலைப் பகுதிகளிலிருந்து கொள்ளைக் கூட்டங்கள் பெஷ்கெக் போன்ற நகரங்களை நோக்கிப் படை எடுக்கிறார்கள். ருஷ்யாவிலும் பார்க்க ஆப்கானிஸ்தானுக்குக் கிட்ட இருக்கும் தேசிஜியாவில் ருஷ்யர் மீது அதிக சகிப்புத் தன்மை இல்லை. ''ருஷ்யர்கள் அங்கே இருப்பது மிகவும் அபாயகரமானது'' என்று கூறுகிறார்.

டிமிற்றீவ்வின் கடைசி நம்பிக்கை அயர்ஸ் ஆகு இருக்கலாம். டிமிற்றீவ் சென்ற சில நாட்களின் பின்பு அவரின் குடும்பத்தை அமெரிக்காவிற்கு மீண்டும் உதவிக்கு அழைக்கப் போவதாக அயர்ஸ் கூறினார். டிமிற்றீவ்வின் உதவி இல்லாமல் இச் செயல் திட்டத்தில் அதிக தூரம் போக முடியாது என்று கூறுகிறார்.

டிமீற்றீவ் கற்பனை பண்ணாத பல வழிகளில் அவரின் சிறிய வீமானம் அவரின் எதிர் காலத்திற்கு வழி கோலப் போகின்றது.

பொப்பியூலர் சயன்ஸ், ஜனவரி 1993.

உறவு கொண்டுள்ள கடல் பாலூட்டிகள்

சுற்றம் சூழலை நச்சுப் படுத்தக்கூடிய வர்க்கப் பிராணிகள் இனத்தின் இன்னுமோர் இன பிரயோசனப் படக்கூடிய கரிச் சுரங்கப் பறவைகள் போன்ற வர்க்கமும் அடங்கும்.

கடந்த 10 வருடங்களாக ஆய்வாளர்கள் இவ்வாறான இரசாயனக் கடல் அசுத்தத் தன்மையையும், அளவையும், பாதை ஓரங்களிற் காணப்படுகின்ற தாவர வர்க்கத்தின் தன்மையையும் கணக்கிட்டு காற்று மாசடைவதை இப்பொழுது வகுக்குகிறார்கள்.

இப்பொழுது, சன்ரகுரஸ், நகரத்தில் அமைந்துள்ள கலிபோனிய சர்வ கலாசாலைப் பட்டதாரி மாணவர் கோர் நயின் பேக்கன்



எவ்வளவிற்கு சமுத்திரம் மாசு படுகிறது ஒரு மேற்குக்கரை கடல் சிங்கத்தைக் கேட்டுப்பார்.

தலைமையில் இயங்கும் ஆய்வாளர்கள் குழு அண்மையில் வெளியிட்டுள்ள செய்தியின் படி, ஆக்டிக், அண்டாட்டிக் சமுத்திரத்தில் வாழும் 'சீல்'', எனப்படும் திருகங்களிலும் கடல் சிங்கங்களிலும் நரம்பைத் தாக்கக்கூடிய நச்சுக் கிருமிகளைக் கொல்லக் கூடிய (டீடீரி) போன்ற சக்தியும், மின்சார மின் மாற்றிகளைச் செய்வதற்கு உபயோகப்படும் டொக்சிக் உப பொருள்களும் இருப்பதாகச் செய்தி வெளியிட்டுள்ளது.

அதிசயிக்கக்கூடிய வாறு அல்லாமல், ''ஆக்டிக்'' இடங்களை விடக் கலிபோனியாக் கரை ஓரங்களில் காணப்படும் மிருகங்களில் இத் தன்மை கூடியனவாக இருக்கிறது.

அலஸ்திரேலியா, அலஸ்கா போன்ற இடங்களில் காணப்படும் மிருகங்களின் தன்மை இடைப்பட்டவை.

கடல் சிங்கமும், சீலும், தங்களது கொழுப்பில், இரசாயனப் பொருள்களைக் கொண்டிருப்பதனால், தண்ணீரிலோ, மண்ணிலோ இத் தாக்கங்களை அளப்பதை விட மிருகங்களில் அளப்பது சுலபம்.

எனவே, இப்படியான அபாய்ங்கள் பாலூட்டி மிருகங்களில் தென்படுவதை விடச் சுரங்கங்களில் காணப்படும் களறீகில் மிகவும் இலேசாகக் காணப்பட்டு அவை நச்சு வாயுவினால் இறக்க நேரிடுகிறது. இவை ஒலிபெருக்கி போல மிகவும் துல்லியமாக, ஆய்வாளர்களின் கவனத்திற்கு வருவதனால் அபாயகர நிலை ஏற்படு முன்பே அறிய உதவுகிறது.

சூரியனின் வெப்பத்தை அளவிடல்

பூமியின் மிகவும் வெப்பமான பகுதி உண்மையில் அதன் குழம்பாகக் காணப்படும் உட்பகுதியாகும். அதனைப் போலவே சூரியனுமாகும். ஆனால் பூமி அதன் உட்பகுதியிலிருந்து வெளிப்பகுதி நோக்கி அடைகின்றது. பரிதி மண்டலத்தின் வெளி அந்தலை கொரோனா என்று அழைக்கப்படும். பரிதியின் இதயப் பகுதி போன்று இப்பகுதியும் மிகுந்த வெப்பமுள்ள பகுதியாகும். 1939 இல் விஞ்ஞானிகள் இவ்விடயத்தைப் பற்றி கண்டு பிடித்த பின்னர் இன்று வரை விளக்கம் தெரியாது தடுமாற்றத்துக்குள்ளாகியுள்ளனர். தற்போது அயோவா பல்கலைக்கழகத்தில் விண்வெளி நட்சத்திரங்கள் பற்றி பௌதிக இரசாயன ஆய்வு நிபுணரான ஜாக் ஸ்கடர் அதற்குரிய விளக்கத்தை தான் கண்டு பிடித்து விட்டதாக எண்ணுகிறார்.

சூரியனைப் பொறுத்த வரையில் தூரத்திற்கு ஏற்றவாறு வெப்பம் உள்ள பகுதியிலிருந்து தூரச் செல்ல செல்ல வெப்பம் குறையும் என்ற பாரம்பரிய கருத்து எப்போதும் உண்மை அல்ல. ஸ்கடர் இன்னுமொரு இருக்கக் கூடிய தொழிற்பட்டுக் கொண்டிருக்கும் இயந்திர சாதனத்தை



உயர்மட்ட சக்தி: பூரண கிரகணத்தின் போது கொரோனாவின் தோற்றம்.

ஆராய முற்பட்டார். பரிதியின் பாரமானது பரிதியின் வாய்வு அனைத்தையும் உறிஞ்சு கின்றது. இதனை அது கீழ்நோக்கியே செய்த போதும் மிகவும் கூடுதலான சக்தியை கொண்டுள்ளவை வடி கட்டப்பட்டு மீண்டும் மேலுக்கு கொரோனா பகுதியை சென்றடையும். இந்த உயர்ந்த சக்தி வாய்ந்த பொருட்கள் தவிர்க்க முடியாதளவுக்கு தமது சக்தியை மலை ஏற்றத்தின் போது இழக்கின்றன. கொரோனாவில் கூடுதலாக இவை குவிந்திருப்பதால் கொரோனா 300 மடங்கு கீழே உள்ள காற்று மண்டலத்திலும் பார்க்க வெப்பமடைகின்றது.

இந்த முறையானது உள்ளூர் நாட்டுக்கழகத்தில் ஒரு அங்கத்தவராவதோடு ஒப்பிட முடியும் என ஸ்கடர் கூறுகிறார். இக்கழகத்தில் சேர்வதற்கு மக்கள் (உயர் சக்தியுள்ள பொருட்களுடன் ஒப்பிடவும்) ஓரளவிற்கு தனவந்தராக இருத்தல் வேண்டும். அங்கத்துவம் பெறுவதற்காக அவர்கள் செலவிடும் தொகை அவர்கள் ஒரு போதும் இதனால் செல்வ நிலையை இழக்கமாட்டார்கள், அந்த நாட்டுப்புறக்கழகம் (கொரோனாவுடன் ஒப்பிடலாம்) தனவந்தருக்கு ஒரு தனிப்பட்ட பட்டு உறையாக கருதப்படுகின்றது.

ஸ்கடருடைய நோக்கிற்கு பின்னால் உள்ள உண்மையான திறமை எங்குள்ளது எனில் வெப்பத்திற்கும் ஏனைய பல்வேறு சக்திகளுக்கும் இடையேயுள்ள தொடர்புகள் பற்றிய அறிவியலின் (THE RMODYNAMICS) முக்கிய கொள்கைகளை கைவிட்டமையேயாகும். THE RMODYNAMICS வழமையாக பரிதியை ஒரு இயற்கை வெப்ப அனல் சாதனமாகக் கொண்டு இயங்கும் சகல பொருட்களின் வெப்பமாற்றத்தை விளக்குவதற்கு பயன்படுத்தப்படும் கொள்கையாகும். ஸ்கடர் தனது பிரத்தியேகமான விளக்கத்திற்கு தனது முன்னைய நாசாவின் பரிதி ஆய்வுகள் சம்பந்தமான செயற்திட்டங்களின் அனுபவமே என்று முக்கியத்துவம் அளிக்கின்றார்.



அவருடைய HYPOTHESIS சைப் பரிசோதிப்பதற்கு விண்வெளியே தனது ஆய்வு கூடமாக அமைந்ததெனக் கூறுகிறார். மீண்டும் ஒரு முறை மனிதனின் பொது அறிவிலும் பார்க்க விஞ்ஞான அவதானிப்பு முன்னேற்றம் கண்டுள்ளது.

நியூஸ்வீக்
ஏப்ரல் 26, 1993

* * *



